# சமய சாத்திர அகராதி

A Dictionary of Religion and Philosophy

தொகுப்பு :
தி. கி. நாராயணசாமி

தமிழ்த் தென்றல் திரு. வி. க.
நூற்றாண்டு நினைவு வெளியீடு

2, சீதாராம நகர், கடலூர் - 607 001
(தென்ஆர்க்காடு மாவட்டம்)
1983

# சமய சாத்திர அகராதி

## A Dictionary of Religion and Philosophy

தொகுப்பு :

தி. கி. நாராயணசாமி

தமிழ்த் தென்றல் திரு. வி. க.
*நூற்றாண்டு நினைவு வெளியீடு*

2, சீதாராம நகர், கடலூர் - 607 001
(தென் ஆர்க்காடு மாவட்டம்)
1983

## Bibliographical Data

| | | |
|---|---|---|
| 1. | Title of the Book | Samaya Sathira Agarathy |
| 2. | Compiler & Editor | T. K. Narayana Swamy |
| 3. | Language | Tamil |
| 4. | Edition | First |
| 5. | Date of Publication | 13th May 1983 |
| 6. | Copy Right | R. Subramanyam |
| 7. | Paper used | 16 Kg. D/Demy. |
| 8. | Size of the book | 21 × 14 cms |
| 9. | Printing type used | 10 point |
| 10. | Number of pages | viii + 164 |
| 11. | Number of copies Printed | 1000 |
| 12. | Printer | Metro Printers & Packaging Industry<br>117, Nelson Manickam Rd.<br>Madras-600 029 |
| 13. | Binding | Wrapper |
| 14. | Price | Rs. 12 (Twelve) |
| 15. | Publisher | R. Subramanyam<br>2, Sitaram Nagar<br>Cuddalore-607 001 |
| 16. | Subject | Dictionary of Religion and Philosophy |

---

இராமேச்சரத்தில் 1983 மே 13-ல் நடந்த சைவ சித்தாந்தப் பெருமன்ற (சமாஜ)த்தின் 77-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் வெளியிடப்பட்டது.

# தோரண வாயில்

சமய நூல்கள் தோத்திரம், சாத்திரம் என இருவகைப்படும். இவற்றுள் சாத்திரம் உயிர், உலகம், கடவுள் ஆகிய இவற்றின் இயல்புகளைச் சொல்லும். அவற்றிற்கு பலர் பல காலத்தில் உரை வகுத்திருக்கின்றனர். அவற்றைக் கொண்டு சாத்திரம் படிக்க மட்டற்ற பொறுமையும், ஆழ்ந்த ஆர்வமும் வேண்டும். இன்று இக்காலப் போக்கில் பொறுமையுடன் சாத்திரம் படிப்பார் மிகவும் குறைவு. சாத்திரம் படிப்பதால் அறிவு நுட்பம், கருத்து வளர்ச்சி, தெளிவு பெற முடியும். சாத்திரம் படிக்க விரும்புவோர்க்குப் பயன்பட இந்நூல் தொகுக்கப்பட்டு இப்போது வெளியிடப் பெறுகிறது.

இந்நூல்— அவசியம் கருதி செய்த முதல் முயற்சி ஆகும்; முடிவானது அன்று. இது பல்கலைக் கழகம் செய்ய வேண்டிய ஆக்க வேலை ஆகும். இதை, தென் குரங்காடு துறை ஓய்வு பெற்ற ஆசிரியர் புலவர் வடிவேலனுர் தமிழ் அகராதி (Tamil Lexicon) யில் உள்ள அகர வரிசையையும் டாக்டர் அ. நாகலிங்கம் பி. எச்டி. அவர்கள் காலஞ்சென்ற கொழும்பு மு. திருவிளங்க தேசிகரின் சிவப்பிரகாசப் புதிய உரையில் உள்ள அருஞ்சொல் - பொருள் அட்டவணையில் வேண்டிய பகுதியைச் செப்பம் செய்தும் நூல் முழுமையும் பிழை திருத்தம் செய்தும் உதவினுர்கள்.

இந்நூல் ஆங்கிலக் கல்வியைக் கற்பதில் காலம் மிக கழித்து, முறை சாராத தமிழ்க்கல்வி கற்ற சமய சாத்திர ஈடுபாடு உடையவர்களுக்கு எளிதில் கற்று உணர எளிய நடையில் விளங்கும் தமிழில் எழுதியிருக்கிறது.

வட சொற்கள் தமிழ் வரி வடிவத்தில் மரபு தழுவி எழுதப் பட்டிருக்கிறது. ஜ–ச, ஸ்ரீ–சீ, ஷ–ட, ஸ–ச, ஹ–அ, க்ஷ–ட்ச, இப்படி சமமான எழுத்துக்களைத் தழுவி வட வரிவடிவம் தவிர்க்கப்பட்டிருக்கிறது. இதனுல் வடமொழியிலும், தமிழிலும் சொற்கள் வரிசையில் இரு முறை வருவதைத் தவிர்க்க தமிழ் வரி வடிவம் ஒன்றையே தழுவப்பட்டிருக்கிறது.

சமய சாத்திரக் கல்வியில் தொடக்க நிலையினர்க்குப் பயன் பட பலர் பல நூல்களைச் செய்தனர். அவற்றில் ‘கட்டளை’* நூல்கள் அடங்கும். அவை உண்மைகளைத் தடைவிடைமுறை யில் தெரிவிக்காமல் முடிவுகளை மட்டும் திட்டவட்டமாக தெரிவிப்பன. அவை கொள்கைகளின் பட்டியலே ஆகும். இவ் வகைச் சிறு நூல்கள் செய்த காலத்தில் சிவஞான முனிவர் செய்த சிவஞானப் போதப் பேருரை (பாடியம்) முழுதும் வெளி வரவில்லை. சித்தாந்த நுட்பங்களில் ஆசிரியர்களுக்கு உள்ளேயே சில கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன. எடுத்துக்காட்டாக பூவை-கலியாணசுந்தரமுதலியார் முடிவு கள் பேருரை வந்தபின் திருத்தம் எய்தியதைக் காணலாம். ஏ-டு. ‘சித்தாந்தக் கட்டளை’ முன்னுரை அருணைவடிவேல் முதலியார் பதிப்பு. (தருமை ஆதீன வெளியீடு) பார்க்க. தெளிவுபடாத சில கருத்துகள் இன்னும் இருந்து வருகின்றன. அடிக்கடி நூலில் வரும் சொற்களுக்கு குறியீடுகள் (எதிர்மறை–†, உபசர்க்கம்-*தத்திதம் ‡) பயன்படுத்தப்பட்டிருக் கின்றன.

தமிழ் நாட்டில் தமிழில் சாத்திரப் படிப்பின் பரப்பினை தெரிந்து கொள்ள நடைமுறையில் இருந்த பாட முறைகள் இறுதியில் தரப்பட்டுள்ளன.

அணிந்துரை வழங்கிய நண்பர் திரு. கொ. நீ. சிங்காரவேல் எம். ஏ. அவர்களுக்கும் மேலே குறிப்பிட்ட ஆசிரியர், பேராசிரியர் இருவர்க்கும் என் நன்றி கலந்த வணக்கம் உரிய தாகும்.

**தி. கி. நாராயணசாமி**

---

* ‘கட்டளை’ என்ற சொல் அளவு, உவமை, நிறை அறிகருவி (பிங்கலந்தை), அச்சு (அறநெறி - 56), ஒன்றை ஒட்டி அமைக்கப்பட்ட உருவம் (பெருங் : 33 ; 113), உரைகல் (குறள், 986), விதி (சீவக. 2752), தரம் (பதிற்று : 81–17), முறைமை (தஞ்சை. கோவை 333), கட்டுப்பாடு, எல்லை ஒழுங்கு (ஈடு உரை) என்ற பொருள்களில் வழங்கும். அஃது இங்கு சமயங்களின் மூலக் கொள்கைகளையும் தத்துவங்களையும் தொகுத்து உணர்த்தும் அடிப்படைச் சிறு நூல்களுக்கும் பெயர் ஆயிற்று. கோயிலுக்கு அமைக்கப்படும் அறங்களும் கட்டளை என்ற பெயரால் வழங்கும்.

# அணிந்துரை

## சைவ சித்தாந்தப் பெருமன்றத் துணைத் தலைவர் —
## 'சைவ சித்தாந்தா' ஆங்கில இதழ் இணை ஆசிரியர்
## திரு. கோ. நீ. சிங்கார வேலு, எம். ஏ. அவர்கள்

திரு. தி. கி. நாராயணசாமி நாயடு அவர்கள் தொகுத்த இந்த சமய சாத்திர அகராதி நூல் மெய்ப்பொருள் இயல் துறையில் சிறப்பாக சைவ சித்தாந்தம் பயில்வோர்க்கு உள்ள நீண்ட காலத் தேவையை நிறைவு செய்கிறது. எல்லாத் தத்துவங்களும் தனித்தனியே தமக்கு உரிய குறியீட்டுச் சொற்களை வளர்த்துக் கொள்கின்றன. பல கருத்துகளை இணைத்துச் சுருக்கி ஓர் இரு சொற்களில் சொல்ல வேண்டிய கட்டாயத்தால் உருவானவை குறியீட்டு (பரிபாஷை)ச் சொற்கள். கணிதத்திற்கு எப்படி வாய்பாடுகள் இன்றி யமையாதவையோ அவ்வாறே விஞ்ஞானத்திற்கும் மெய்ஞ் ஞானத்திற்கும் குறியீட்டுச் சொற்கள் தேவைப்படுகின்றன. ஒரு குறியீட்டுச் சொல்லையே ஒரு தத்துவம் ஒரு பொருளிலும் மற்றொரு தத்துவம் வேறு ஒரு பொருளிலும் பயன் படுத்துவது உண்டு. 'அத்து விதம்' என்ற சொல்லை அதற்கு எடுத்துக் காட்டலாம்.

இந்நூல் சமய சாத்திரக் குறியீட்டுச் சொற்களுக்கு, சிறப்பாக சைவ சித்தாந்த சொற்களுக்கு முதல் முயற்சி ஆகும். ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் மிகச் சுருக்கமாக எழுதப் பெற்றுள்ளது. எழுதிய பொருள் எந்த மூல நூலில் இருந்து எடுக்கப்பெற்றுள்ளது என்பதும் காட்டப் பெற்றுள்ளது. சைவ சித்தாந்தம் பயில்வோருக்கு இது ஒரு சிறந்த 'கையேடு' எனலாம். இம் முயற்சியை மேலும் விரிவாக நிறைவேற்ற வேண்டிய கடமை பல்கலைக் கழகங்களுக்கு உண்டு.

நாயடு அவர்கள் காலத்திற்கு ஏற்ற முறையில் இலக் கியத் தொண்டும் சமயத் தொண்டும் செய்வதில் வல்லுநர். சிவ ஞானசித்தியார், சிவப்பிரகாசம் முதலிய மூல நூல்களையும் திரு முறைத் திரட்டுகளையும், சந்தி பிரித்து, பல ஆய்வுக்குறிப்பு களுடன் கற்பதற்கு எளிமை செய்து அச்சிட்டுள்ளார்.

சைவ சித்தாந்த மகா சமாஜ வெளியீடுகளில் அதன் முன்னாள் செயலாளர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களுடன் நாயடு அவர்களின் உழைப்பையும் காணலாம். கிடைத்தற்கு அரிய திருத்தணிகைச் சந்நிதி முறை, திருத் தணிகை வெண்பா (பழைய உரையுடன்) இரண்டையும் அண்மையில் வெளியிட்டுள்ளார். இதுவரை யாரும் செய்யாத சித்தாந்த சாத்திரத் திரட்டையும் வெளியிட்டுள்ளார்.

இந்தச் சமய சாத்திர அகர வரிசை நூலுக்குச் சைவ உலகில் நல்ல வரவேற்பு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

'**சிவ மணம்**', 31, II-வது குறுக்குத் தெரு,
மேற்கு சி. ஐ. டி. நகர், சென்னை-600035.
1—1—1983.

# பயன்பட்ட நூல்களின் சுருக்க விளக்கம்

| நூல் பெயரின் சுருக்கம் | நூலின் முழுப் பெயர் |
|---|---|
| அக. நி. | அகராதி நிகண்டு |
| அணியி. | அணியிலக்கணம் |
| அபி. சிந். | அபிதான சிந்தாமணி |
| அருட்பா. | திரு அருட்பா |
| அஷ்டா தச. | அஷ்டாதச ரகசியம் |
| ஆசார்ய. | ஆசார்ய ஹ்ருதயம் |
| இரகு. | இரகுவமிசம் |
| இராம நா. | இராம நாடகம் |
| இலக். அக. | இலக்கியச் சொல் அகராதி |
| இலக். வி. | இலக்கண விளக்கம் |
| ஈடு. | ஈடு — முப்பத்தாருயிரப்படி |
| உண்மை நெறி. | உண்மைநெறி விளக்கம் |
| உண்மை விளக். | உண்மை விளக்கம் |
| உரி. நி. | உரிச்சொல் நிகண்டு |
| ஒழிவி. | ஒழிவில் ஒடுக்கம் |
| ஔவை. கு | ஔவை குறள் |
| கட்டளைக் | கட்டளைக் கொத்து |
| கந்த பு. | கந்த புராணம் |
| கந்தர் கலி. | கந்தர் கலிவெண்பா |
| கம்ப ரா. | கம்ப ராமாயணம் |
| காஞ்சிப் பு. | காஞ்சிப் புராணம் |
| குமர. பிர. | குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு |
| குருபரம். | குரு பரம்பரா ப்ரபாவம் |
| குருபரம். ஆரு. பன்னீ | குரு பரம்பரா ப்ரபாவம் ஆருயிரப்படி, பன்னீராயிரப்படி |
| குறள். | திருக்குறள் |
| கைவல் | கைவல்ய நவநீதம் |
| கூர்ம பு, | கூர்ம புராணம் |
| சங். அக. | சங்கத் தமிழ் அகராதி |
| சதாசிவ. | சதாசிவ ரூபம் |
| சி. சி. | சிவஞான சித்தியார் சுபக்கம் |
| சி. சி. பர | ,, பரபக்கம் |

| | |
|---|---|
| சி. சி. சிவஞா, | சிவஞான சித்தியார் சிவஞான யோகிகள் உரை |
| சி. சி. சிவாக், | ,, சிவாக்கிர யோகிகள் உரை |
| சி. சி. சுப்பிர. | ,, சுப்பிரமணிய தேசிகர் உரை |
| சி. சி. ஞானப். | ,, ஞானப் பிரகாச தேசிகர் உரை |
| சி. சி. நிரம்ப. | ,, நிரம்ப அழகிய தேசிகர் உரை |
| சி. சி. மறைஞா. | ,, மறைஞான ,, சம்பந்தர் உரை |
| சி. போ. | சிவ ஞான போதம் |
| சி. போ. சிற். | சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் |
| சி. போ. தீ. வ. | ,, தீபாலங்கார வசனம் |
| சி. போ. பா. | சிவஞான போத பாடியம் |
| சித். சிகா. | சித்தாந்த சிகாமணி |
| சித். பிர. | ,, ப் பிரகாசிகை |
| சித். மரபு. கண். | ,, மரபு கண்டனம் |
| சிலப். | சிலப்பதிகாரம் |
| சிவ சம. | சிவ சமவாத உரை மறுப்பு |
| சிவ தரு. | சிவதருமோத்தரம் |
| சிவப். கட். | சிவப்பிரகாச க்கட்டளை |
| சிவப். பிரபந். | ,, சுவாமிகள் பிரபந்தத் திரட்டு |
| சிவப். பிர. | சிவப் பிரகாசம் |
| சிவராத். பு | சிவராத்திரி புராணம் |
| சீவக. | சீவக சிந்தாமணி |
| சூடா. | சூடாமணி நிகண்டு |
| சூத. | சூத சங்கிதை |
| செங்கழு. விநா. பிள். | செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் |
| செந். | செந்தமிழ் (இதழ்) |
| செவ்வந்தி. பு. | செவ்வந்திப் புராணம் |
| சைவ ச. | சைவ சமய நெறி |
| சைவப். | சைவப் பிரகாசனம் |
| சைவ வி. | சைவ வினு விடை |
| ஞான வா. | ஞானவாசிட்டம் |
| ஞானு. | ஞானுமிர்தம் |
| ஞான. கட். | ,, க் கட்டளை |
| த. நி. போ. அல்லது தத்துவ நிஜா | தத்துவ நிஜானுபோக சாரம் |

| | |
|---|---|
| தக்கயாகப். | தக்கயாகப் பரணி |
| தச கா. | தச காரியம் |
| தண்டி. | தண்டி அலங்காரம் |
| தணிகைப் பு. | தணிகைப் புராணம் |
| தத்துவப். | தத்துவப் பிரகாசம் |
| தரு(ர்)க்க சங். | தரு(ர்)க்க சங்கிரகம்.அன்னம் [பட்டீயம் |
| தாயு. | தாயுமானவர் பாடல் |
| திருக்கலம். | திருக் கலம்பகம் |
| திருக்களிற்றுப். | திருக் களிற்றுப்படியார் |
| திருக் கோ. | திருக் கோவையார் |
| திருநூற். | திருநூற்று அந்தாதி |
| திருக்காளத்தி. பு | திருக் காளத்தி புராணம் |
| திரு நெல். பு. | திரு நெல்வேலித் தல புராணம் |
| திருப் பு. | திருப்புகழ் |
| திருப்புகழ்த் தி | ,, த் திரட்டு |
| திருமந். | திருமந்திரம் |
| திரு முரு. | பத்துப்பாட்டு-திருமுருகாற்றுப்படை |
| திரு வாச. | திருவாசகம் |
| திருவாலவா. | திரு ஆலவாயுடையார் திருவிளையாடல் புராணம் |
| திருவால. கட். | திரு ஆலவாய்க் கட்டளை |
| திரு விளை. | திரு விளையாடற் புராணம் |
| திருவுந்தி. | திரு உந்தியார் |
| திரு வேங். சத. | திரு வேங்கட சதகம் |
| திவா. | சேந்தன் திவாகரம் |
| திவ். | நாலாயிர திவ்ய பிரபந்தம் |
| தேவா | தேவாரம் |
| தைல வ. அல்லது தைல. | தைல வருக்கச் சுருக்கம் |
| தொல். பொ. | தொல்காப்பியம்: பொருள் அதிகாரம் |
| நல். பாரத. | நல்லாப்பிள்ளை பாரதம் |
| நாலடி. | நாலடியார் |
| நாஞ சீ. | நாஞ சீவவாதக் கட்டளை |
| நாநா(ஞ)ர்த்த. | நாநா(ஞ)ர்த்த தீபிகை |
| நான்மணி. | நான்மணிக்கடிகை |
| நிகண்டு. | நிகண்டு |
| நுண் பொ. | நுண் பொருள் மாலை |
| பதினெ. | பதினெராந் திருமுறை |
| பவுஷ்கரம். | பௌஷ்கர ஸம்ஹிதை |

| | |
|---|---|
| பாகவ. | பாகவதம் |
| பாரத. | மகாபாரதம் |
| பி. வி. | பிரயோக விவேகம் |
| பிங். | பிங்கல நிகண்டு |
| பிரபுலிங். | பிரபுலிங்க லீலை |
| பிரபோத. | பிரபோத சந்திரோதயம் |
| பு. வெ. | புறப்பொருள் வெண்பா மாலை |
| புட்ப. | புட்ப விதி |
| பெரிய. | பெரிய புராணம் |
| பெருங். | பெருங்கதை |
| மச்ச பு. | மச்ச புராணம் |
| மணி. | மணிமேகலை |
| மதுரைப். | மதுரைப் பதிற்றுப் பத்து அந்தாதி |
| மாறனலங். | மாறன் அலங்காரம் |
| மூ. அ. | வைத்திய மூலிகை விரிவு அகராதி |
| மேரு. மந். | மேருமந்தர புராணம் |
| யாழ். அக. | யாழ்ப்பாண மானிப்பாய் அகராதி |
| வரத. பாகவத. | வரதராச ஐயங்கார் பாகவதம் |
| வாயு சங். | வாயு சங்கிதை |
| விசார சந். | ஸ்ரீ விசார சந்திரோதயம் |
| விநாயக பு. | விநாயக புராணம் |
| வேதா. சூ. | வேதாந்த சூளாமணி |
| வேதா. தச. கட். | வேதாந்த தசகாரியக் கட்டளை |
| ஜீவோற்பத். | ஜீவோற்பத்தி சிந்தாமணி |
| ஸ்ரீ வசன. | ஸ்ரீ வசன பூஷணம் |
| I. M. P. | Inscriptions of the Madras Presidency |
| S. I. I. | South Indian Inscriptions |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 8 | (சூடா [2] தீ;) | (சூடா.)[2] தீ | |
| | 23 | யகங்காரம், | யகங்காரம்; | |
| 2 | 13 | ஐக்கியவாத | ஐக்கவாத; | |
| 3 | 10 | — | அகோரன்-சிவன். (சூத. எக்கி. பூ. 33.-2.) | தனிவரியாக்குக. |
| 4 | 32 | அசுத்த மாயை | அசுத்த மாயை— | |
| 5 | 27 | அட்ட மூர்த்தம் | அட்டமூர்த்தம் | |
| | 28 | மூர்த்தமாம் | மூர்த்தமாம் | |
| 7 | 2 | வாதம் | வாதம்; | |
| 8 | 6 | [5] கழி | [5] கழி; | |
| | 19 | நெறி. அந்தன் | | வரியை ஒன்றுக்குக |
| 10 | 14 | யார்க்கு ஒல்லாது | யார்க்கும் ஒல்லாது | |
| 13 | 20 | மறையூர் | மறைஞா | |
| | 22 | சனத்தென்று | சனத்தொன்று | |
| 15 | 25 | மறை ஞா | மறைஞா | |
| | 29 | முமுக்ஷ | முமுக்ஷு | |
| 17 | 24 | [2] ஜன்ம | [3] ஜன்ம | |
| 19 | 26 | இந்திரியங்க. | இந்திரியங்க | |
| 23 | 30 | ஐக்கிய | ஐக்க | |
| 26 | 10 | கயிற்ற | கயிற்றர | |
| | 13 | 191 வரை | 191 உரை | |
| | 23 | மருத்துவன்; | மருத்துவன் | |
| 27 | 16 | முதலியன | முதலிய | |
| 32 | 20 | கேவல சைதன்யம் | கேவல சைதன்யம்— | |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 34 | 5 | சகம ார்க்கம் | சகமார்க்கம் | |
| 35 | 1 | சங்கிராந்தம | சங்கிராந்த | |
| | 7 | சிவன் சத்? | சிவ சத்தி | |
| 36 | 28 | பஞ்சாக் கிரமே | பஞ்சாக்கரமே | |
| 37 | 8 | இல்லையமாம் | இல்லையுமாம் | |
| | 18 | சபாகு சுமம் | சபாகுசுமம் | |
| 38 | 31 | உயிர் | உயிர்த் | |
| 39 | 23 | எல்லா கூறு | எல்லாக் கூறு | |
| 45 | 19 | சிவபூசையும் | சிவபூசையையும் | |
| 46 | 9 | எள்று | என்று | |
| 52 | 34 | (கி. சி. | (சி. சி | |
| 55 | 10 | நகரங்களுள் | நரகங்களுள் | |
| 56 | 6 | தத்துவான்தா | தத்துவான்மா | |
| | 22 | சைவச | சைவ ச | |
| 60 | 18 | நியாத்தி | நியாயத்தி | |
| 67 | 28 | யாக்கியம் | யக்கியம் | |
| 69 | 16 | பதி புண்ணியம் | | பதிபுண்ணியம்–சிவபிரானுக்குப் புரியும் திருப்பணி. சி. சி. 2. 24. (ஏனையவை வேண்டாம்) |
| | 30 | திருப்பாரோ தேவ. | திருப்பாரே தேவா | |
| 73 | 22 | பிராமணம் | பிரமாணம் | |
| 75 | 6 | யாவற்றுரரோ | யாவருற்றுரோ | |
| | 12 | சுத்தத் | சுத்த | |
| 81 | 10 | பயிர்ச்சி | பயிற்சி | |
| 82 | 1 | வத்தார் | வத்தா | |
| 88 | 14 | சுத்த, விந்து | சுத்த விந்து | |
| | 18, 22, 25 | கொள்வாரும். | கொள்வாரும்; | |
| 91 | 8 | வியப்பு | வியட்டி | |



தமிழ்த் தென்றல்

திரு. வி. கலியாணசுந்தரனார்

தோற்றம் : 26-8-1883

மறைவு : 17-9-1953



சென்னை, இராயப்பேட்டை வெஸ்லி மேல்நிலைப் பள்ளியில்
தமிழக அரசு நடத்திய
**தமிழ்த் தென்றல் திரு. வி. க. நூற்றாண்டுத்**
தொடக்க விழாவில், அவருடைய அணுக்கத் தொண்டர்
இந்நூல் தொகுப்பாளர் : **திரு. தி. கி. நாராயணசாமி** அவர்களுக்கு
முதலமைச்சர் **திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** அவர்கள்
பொன்னாடை அணிவித்துப் பாராட்டல்.
**(29-8-82)**

# அ

**அ**— [1]சிவன் (திருமந். 1751); [2]திருமால் : அவ்வென் சொற் பொருளாவான்(பாகவ. சிசுபா. 20)

அக்க சூத்திரம்—உருத்திராட்சமாலை (சித். சா. கிரியா. 88, தாத்.)

அக்கம்—[1]கண் (திவா.); [2] உருத்திராக்க மணி : "தலையெலும்பப்புக் கொக்கிற கக்கம் (திருப்பு. 416) ; [3] தான்றி.

அக்கரன்—கடவுள் (சங் அக.)

அக்கி—[1]கண். (சூடா[2] தீ;) அக்கி வாய் மடுத்த ஏடு: (திருவிளை. சமண. 38.)

அக்கினிச் சுவத்தர்—தேவ பிதிரருள் ஒரு சாரார்: அக்கினிச் சுவத்தரெனும் தேவர் பிதிரர்களும் (கூர்மபு. பிருகு 13.)

அக்கினி பூ—முருகக் கடவுள். (மச்சபு. குமார. 115)

அக்கினிமண்டலம்—ஒரு யோக நிலை. (ஜீவோற்பத். 30.)

அக்குசை—துறவுபூண்டு தவம்புரியும் சமணவிதவை: நூல்கள் வாங்கும் அக்குசைகள் (திருவிளை சமணரைக். 17)

அகக்கரணம்—மனம் : "சமமகக்கரண தண்டம்" (கைவல் தத். 9.)

அகங்காரக் கிரந்தி—தத்துவங்களைத் தானென்று ஆசை கொள்ளும் உயிர்க்கட்டு (நானுசீ)

அகங்கார சைதன்யவாதி—பிராணன் முதலிய வாயுக்களே ஆன்மா என்னும் கொள்கையன். (சி. சி. 2, 73, மறைஞா.)

அகங்காரத்திரயம்—தைசத வகங்காரம், வைகரி யகங்காரம், பூதாதி யகங்காரம், புறநிலைக் கருவி வகை (சிவப். கட்)

அகங்காரம்—[1]நானெனும் பற்று (நல். பாரத கௌசிக 84) [2]செருக்கு, [3]கோபம். அந்தக்கரணமே உயிர்என்னும் பற்று [4]ஒரு தத்துவம். (குறள், 27, உரை.)

அகங்கார வாதி—மனோமய கோசமே உயிர் என்னும் கொள்கையான். (சி. சி. 4, 23, மறைஞா.)

அகங்காரான்ம வாதி — அகங்காரமே உயிர் என்னும் கொள்கையான். (சி. சி. 4, 1, ஞானப்.)

அகச் சந்தானம் — சைவசித்தாந்தக் கொள்கைகளைக் கைலாய பரம்பரையில் உபதேசித்து வந்தவர்களும் நந்தி தேவர், சனற்குமாரர், சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதி முனிவர் என்று பெயர் பெற்றவர்களுமான நான்கு குரவர்கள்

அகச்சமயம்—பாடாண வாத சைவம், பேத வாத சைவம் சிவ சம வாத சைவம், சிவசங்கிராந்த வாத சைவம், ஈசுவர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம்: அகச் சமயத் தொளியாய் (சிவப்பிர. பாயி. 7.)

அகண்டபரி பூரணன்— எங்கும் நிறைந்தவன்: (திருக்கோ. 197, உரை.)

அகண்டன்—கடவுள்

அகண்டாகண்டன்—[1]பரம்பொருள்; [2]எதற்கும் அஞ்சாதவன்.

அகண்டிதன்—பின்னப்படாத கடவுள் : "அகண்டிதனகம்பன்" (மதுரைப். 70)

அகப்புறச் சமயம்—பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம். (சி. போ. பா. அவைய.)

அகப்பூ—உள்ளத் தாமரை: "அகப்பூ மலைந்து." (சீவக. 1662)

அகப்பிரம வாதி—நானே பரம்பொருள் என்று வாதிப்பவன்

அகம்மியம்—[1]அணுகக் கூடாதது; [2]அறியக் கூடாதது; [3]ஒரு பேரெண்: "பிரத்தியட்சாதி பிரமாண சதுட்டயங்களிலும். அகம்மியமாதலாலே." (சி. சி. அளவை 1 சிவாக்.)

அகமன்—பிள்ளையார். (சங். அக.)

அகமருடணம்—[1]வேதமந்திரச் சிறப்பு. (சூத. எக்கி, பூ. 42, 13.); [2]அகமருடண மந்திரம் ஓதிச் செய்யும் குளியல்.

அகர்த்திருவாதம்—படைப்புக் கடவுள் இல்லை என்னும் வாதம். (சி. சி. பர. சௌத். 1, உரை.)

அகளங்கம்—[1]மாசு இன்மை: "அகளங்க உருவுடையனுகலின்" (செங்கழு. விநா. பிள். அம் 2.); [2]சீதாங்கபாஷாணம் (மூ. அ.)

அகற்பப் பிராணயாமம்—மந்திரத்தியானங்கள் இன்றிச் செய்யப்படும் பிராணயாமம். (சிவதரு. சிவஞானயோ. 66 உரை.)

அகற்பவிபூதி—இயற்கையில் உண்டான விபூதி. (சைவச. பொது. 186. உரை.)

அகாமவினை—விரும்பாமல் செய்யும் செயல்: "கிருகபதி அகாம் வினையினுக்குப் பரிகாரம் பகர்ந்திடுவர்" (சிவதரு பரிகார. 2)

அகாரணன்—கடவுள்

அகோரம்—[1]கொடூரம் (திருநெல் பு.சுவேத. 88.); [2]சிவன் முகத்தொன்று. (சிவதரு. பரிகார. 89);[3]ஒரு சைவமந்திரம். (சைவ. பொது. 324.) [4]ஞானம் (சி. சி. 1,59); [5]உஷ்ணம் (யாழ். அக.) அகோரன்—சிவன். (சூத. எக்கி. பூ. 33,2.)

அகோராத்திரம்—இரவும் பகலும்

அங்கக் களரி—கோயிலில் தருமம்செய்தோர்க்குச் செய்யும் சிறப்பு

அங்கசன்—மன்மதன் (பிங்)

அங்கணன்—சிவன் (தேவா. 989, 4.)

அங்கணி—பார்வதி (சங். அக.)

அங்கநியாசம்—மந்திரத்தோடு உறுப்புக்களைத் தொடுகை (திருக்காளத். பு. 5, 39)

அங்கயோகம்—உதயம், கேந்திரம், மூலத்திரி கோணம் அல்லது உச்சம்; யோகவகை. (சங். அக.)

அங்காங்கிபாவம்—அவயவ அவயவிகளது சம்பந்தம்: "அருவினில் உருவம் தோன்றி அங்காங்கி பாவமாகி." (சி. சி. 1, 27.)

அங்காரம்—மாத்துவர் நெற்றியில் அணியும் கரிக் கோடு "ஆங்கதனிடை அங்காரமும் தீட்டி" (பிரபோத. 11, 17.)

அங்குட்டம்—பெருவிரல்: "தாள் அங்குட்டத்தைத் திகழ் இரதத்தின் ஊன்றி" (வரத. பாகவத. பற்கு. 20.)

அச்சயன்—அழிவில்லாத கடவுள்.

அசங்கம்—பற்றின்மை: "அயற்சங்கமறல் அசங்கமாகும்." (ஞானவா. உற். 47)

அசங்கை—பயமின்மை: "அசங்கையனை" (தேவா. 683,9).

அசடம்—சடம் அல்லாதது: "அசடம் அநாமயம்." (கைவல்ய. சந்தே. 137.)

அசத்தியோ நிர்வாண தீட்சை—நிர்வாண தீட்சை வகை (சி. சி. 8, 4, சிவஞா.)

அசத்து—[1]இல்லாதது: (திருக்காளத். பு. 5, 44.), "பொய்ந் நெறி அசத்தினில் செல்கிலாச் சது முகத்தவற்கு" (கம்பரா. இராவணன் வதை. 117);[2]நிலையில்லாதது. (திருக்காளத். பு. 32, 40.) [3]மாயை (சூத. சிவ. 8, 10.); [4]தீயன்.

அசபை—அசபா. (பிரபோத. 44, 22.)

அசம்பிரஞ்ஞாதசமாதி—நிர்விகற்ப சமாதி.

அசலசலம்—சிவலிங்க பேதம். "மண்டலமும் காணின் அசலசலம்" (சைவச. பொது. 123.)

அசலை—[1]பூமி. அசலைமங்கை (கந்தபு இரணியன்யு. 56); [2]பார்வதி(கூர்மபு. திருக்கல் 20)

அசற்காரியவாதம்—உற்பத்திக்கு முன் இல்லாமலே காரியம் தோன்றும் என்னும் கொள்கை (சித். மர. கண். 11.)

அசனம்—[1]உணவு: "கொடுப்பின் அசனம்கொடுக்க" (நான்மணி81.);[2]சோறு (சூடா) [3]பசி (பிங்);[4]கொழுப்பு (பிங்)

அசாகளத்தனம்—ஆட்டின் கழுத்தில் தொங்கும் சதை. அசாகளத்தனம் போல அதிக சங்கியை கொள்வது எற்றிற்கு? (சிவ சமவா. 39.)

அசித்து—சடப்பொருள். சித்தசித்தொடு ஈசனென்று செப்புகின்ற மூவகைத் தத்துவத்தின் (பாரத. பதினேந். 1.)

அசிதம்—சிவாகமத்துள் ஒன்று. (சைவச. பொது331, உரை)

அசிதர்—தீர்த்தங்கரருள் ஒருவர் (திருக்கலம். காப்பு, உரை.)

அசிதை—பராசத்தி பேதம். (சைவச. பொது 74, உரை.)

அசிந்திதன்—மனத்துக்கெட்டாதவன் (சி.போ.சிற்.12, 3,1.)

அசுத்ததத்துவம்—4அந்தக் கரணம், 5ஞானேந்திரியம், 5கருமேந்திரியம், 5தன்மாத்திரை, 5பூதம்; தத்துவவகை (சிவப். கட்.)

அசுத்தப் பிரபஞ்சம்—கலாதத்துவம் முதல் பிருதிவிதத்துவம் ஈறுகிய தத்துவம்.

அசுத்தமாயை அசுத்தப் பிரபஞ்சத்துக்கு முதல் காரணமான மாயை (சி. சி. 1, 19, மறைஞா.)

அசுத்தாத்துவா—அசுத்தகத்துவம் (ஞானு. கட்.)

அசும லோஷ்டிர நியாயம்—ஒன்ருெடு சீர்தூக்கி ஒன்றற்குச் சிறுமை பெருமை கற்பிக்கும் நெறி.

அசுரசந்தி—அந்திநேரம்.

அசேதனம்—அறிவில்லாதது (சித். சிகா. 21, 3.)

அசோகவனிதா நியாயம்—ஓரிடத்து ஒன்றன் நிகழ்ச்சிக்குக் காரணம் காட்டமுடியாது நிற்கும் நெறி.

அஞ்சலினவர்—பஞ்சராத்திரிகள்: "அஞ்சலினவர் புகழ் அண்ணல்" (கந்தபு. திருவவ. 62.)

அஞ்சுமான்—[1]துவாதச ஆதித்தருள் ஒருவன். (திவா); [2]சிவாகமத்துள் ஒன்று; [3]சகரன் பௌத்திரன் (கூர்மபு.சூரிய.43.)

அஞ்ஞாத சுகிருதம்—தன்னை அறியாமல் வந்த புண்ணியம் (ஸ்ரீவசன. 381, வ்யா.)

அஞ்ஞானகிருதம்—அறியாமல் செய்த பாவம்.

அட்சர ஸ்தாபனம்—யந்திரத்தில் மந்திர எழுத்துக்களை, அடைக்கை.

அட்டபரிசம்—தட்டல், பற்றல், தடவல், தீண்டல், குத்தல் வெட்டல், கட்டல், ஊன்றல் (பிங்) எண்வகை தொடுநிலை.

அட்டபுட்பம்—[1] புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம் நந்தியாவர்த்தம். நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை. (புட்ப. 20); [2]கொல்லாமை, ஐம்பொறி யடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு (ஆசார்ய.)

அட்டமங்கலம்—[1]கவரி, நிறைகுடம், கண்ணடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி (பதாகை) இணைக்கயல்; எண்வகை மங் கலப் பொருள்கள். (பிங்); [2]எட்டுறுப்பில் வெண்மையுடைய குதிரை. (திருவாலவா. 28,68);[3]பிரபந்தவகை(இலக். வி.843]

அட்டமூர்த்தம்—பூமி, நீர், தீ, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா. "வருமட்ட மூர்த்தமாம் வாழ்வே." (கந்தர் கலி. 65)

அட்டவீரட்டம்—கண்டியூர், கடவூர், அதிகை, வழுவூர் பறியலூர், கோவலூர், குறுக்கை, விற்குடி; எட்டு வீரட்டானப் பதிகள்.

அடிஞானம் — பதிஞானம்: "அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்" (சி. சி. 8, 28)

அணிமா—அஷ்டமா சித்தியுள் ஒன்ருகிய அணுப் போலாகை.

அணுகாரணவாதம்—பரமாணுக்களே பிரபஞ்ச காரணம் என்னும் மதம். (சி. சி. 1 ,11 சிவஞா.)

அணுசதாசிவர்—சாதாக்கிய தத்துவத்தில் இன்பம் அனுபவிக்கும் ஆன்மாக்கள்.

அணுசைவம்—சைவம் பதினுறனுள் ஒன்று.

அணுபட்சம்—அசுத்தப் பிரபஞ்சத்தில் தொழில்புரியும் சிவ பேதங்கள். (சி. போ. பா. 2 ,4, பக் 223, புது.)

அணுவிரதம்—ஒரு சைன விரதம்.

அத்தி—தசநாடியில் ஒன்று. (சிவப், கட்.)

அத்திசிங்குவை—தசநாடியில் ஒன்று. (சிலப்.3, 26, உரை.)

அத்தியக்கம்—காண்டல் என்னும் அளவை: "ஆக்கை விதம் பேதமென அத்தியக்கம் அறிவிக்கும்" (சிவதரு. சிவ ஞானயோ 19.)

அத்தியாரோபம்—ஒன்றன் தன்மையை மற்ருென்றில் ஏற்றிக் கூறுகை (வேதா. சூ. 28)

அத்தியான்மிகம் — [1]ஆன்மாவுக்குரியது; [2]சைவ ஆகமங்களுள் ஒரு பகுதி: "வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம்......என நூல்களை ஐவகைப்படுத்து" (சி. போ. பா. சிறப்.17.); [3]ஆன்மா பிறரால் அடையும் துக்கம்.

அத்துவ சுத்தி—தீட்சாகாலத்தில் ஆசாரியன் ஆறு அத்துவாக்களிலும் சஞ்சிதமாயிருந்த கன்மங்களையெல்லாம் நசிப்பிக்கை. (சைவச. ஆசாரி. 64.)

அத்துவரியு—[1]யாக புரோகிதருள் ஒருவன்: "வன்றிறல் வசுக்கள் அத்துவரியு" (மச்சபு சந்திரோ 12) [2]காரியத் தலைமை வகிப்பவன்.

அத்துவலிங்கம்—தத்துவரூபமான இலிங்கம். மண்முதல் சிவம் ஈருன அத்துவலிங்கம். (திருவிளை. இந்திரன் 13.)

அத்துவா—வழி. மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணுத்துவா புவனுத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா; அறுவகை அத்துவாக்கள்.

அத்துவா சைவம்—சைவம் பதினுறனுள் ஒன்று.

அத்துவானம்—பாழிடம்.

அத்துவைதம் — [1]இரண்டன்மை; [2]ஏகாத்ம வாதம் வேறின்மை

அத்துவைதி—ஏகாத்மவாதி.

அத்தோரியாமம்—சோமயாக வகை (திவா.)

அதிகரணம்—[1]ஆதாரம். (சி. சி. 1, 65, சிவஞா.) [2]ஒரு பொருளைக் குறித்தபகுதி (சி. போ. சிற்.1, அவ.)

அதிகார தத்துவம் — கிரியை மிகுந்து ஞானம் குறைந்த ஈச்சுர தத்துவம் (சி. சி. 1, 65, ஞானப்)

அதிகாரமலம்—உலக அதிகாரத்தை விரும்பும் ஆன்ம நாட்டம். (சி. போ. பா. 2, 2, பக் 134, புது.)

அதிட்டித்தல்—நிலைக்களமாகக் கொள்ளுதல். (சி. போ. சிற் 4, 1, பக்.86.)

அதிசூக்குமதேகம் — பூதம் தன் மாத்திரை ஞானேந்திரியம் கன்மேந்திரியம் அந்தக்கரணம் குணம் மூல பகுதி கலாதி என்பவற்றில் ஒவ்வொன்று கொண்ட நுண்ணுடல் (சி. போ. பா. 3, பக். 194.)

அதியாச்சிரமம்—ஆச்சிரமங்களைக் கடந்த நிலை. (சி. சி. 8, 32, சிவாக்.)

அதிமார்க்கம்—[1] அகப்புறச் சமயம் (சித். பிர.14.);[2] சைவ ஆகமப் பிரிவினுள் ஒன்று (சி. போ. பா. 17.)

அதிர்ஷ்ட ஜன்ம போக்கியம்—சுவர்க்கத்திலேயாதல் நரகத்திலேயாதல் மறுசன்மத்திலேயாதல் பலிக்கும் கர்மானுபவம் (சி. சி. 4, 40, சிவாக்.)

அதிருஷ்டபோக்கியம் —மறுமையில் சொர்க்க நரகங்களில் நுகரும் அனுபவம் (சி. சி. 2, 39, ஞானப்.)

அதிருசியம்—[1]காணக் கூடாதது. (சித். மர. கண் .3.);[2] அறுபத்து நாலு கலையுள் தன்னைக்காணுமல் மறைக்கும் வித்தை.

அதிவியாப்தி—இலக்கியம் அல்லாததன் கண்ணும் இலக்கணம் செல்லும் குற்றம்

அதீதாவத்தை—துரியாதீதம். (சி. போ 3 ,6, சிற்.)

அதீந்திரியம்—இந்திரிய அறிவுக்கு எட்டாதது. (மச்சபு பிரமாண்ட. 17.)

அதெந்து—அது என்ன என்று அருளொடு கேட்டல் குறிப்பு: "அதெந்துவே என்றருளாயே" (திருவாச. 29, 1.)

அதோமாயை—அசுத்தமாயை (சி. சி. 2, 80, சிவாக்.)

அதோமுகம்—[1]கீழ் நோக்கிய முகம்: "ஐந்து முகத்தோடு அதோமுகமும்" (கந்தர்கலி. 78.); [2]தலை குனிந்துபார்க்கை; [3]தலைகீழான நிலை; [4]கடல்; [5]கழி முகம் (பிங்)

அந்தக்கரணம்—மனம், புத்தி, சித்தம், அகங்காரம்; உட் கருவி (சி. போ. சிற். 4, 1)

அந்த கஜநியாயம்—ஒன்றை முற்ற ஆராயாது அதன் ஒரு பாகத்தை மாத்திரம் கண்டு நிச்சயிக்கும் நெறி, குருடர் கண்ட யானைபோன்ற நெறி.

அந்த கோலாங்கூல நியாயம் — பிறிதை நம்பித் துன்பம் அடைதலைக் காட்டும் நெறி.

அந்த தரம்—சைவ சித்தாந்தம் (சி. போ. பா. 12, 4 பக். 242.)

அந்த தர மிச்ரம்—நரகவகை. (சி. போ. பா. 2,3, பக்.204(

அந்த பங்கு நியாயம் — குருடன் தோள் மேல் நொண்டி ஏறிக்கொண்டு வழிகாட்டக் குருடன் நடந்து செல்வது போன்ற நெறி.

அந்தன்—குருடன்; பங்கு-நொண்டி.

அந்தபரம்பரை—குருடரைக் குருடர் பின்பற்றும் நெறி.

அந்தர்க்கதம்—உள்ளடங்கியது. (சி. சி. 1, 21, சிவாக்)

அந்தர்ப்பவித்தல்—உள்ளடங்கி இருத்தல்: "ஆன்மா பதி பதார்த்தத்தில் அந்தர்ப்பவிக்கு மெனின்."(சிவசம. 39.)

அந்தர்யாமித்துவம்—திருமால் நிலையுள் ஒன்று.(அஷ்டாதச. தத்வத். 3, 42.)

அந்தரான்மா—[1]கடவுள் (விவேக சூடா. 152.); [2]நான்கு வாக்குக்களோடும் கூடிச் சஞ்சரிக்கும் உயிர். (சி. போ. பா 6, 2, பக். 317)

அந்தரியாகம்—மானச பூசை (சி. சி. 9, 10) மனத்துள் வழி படல்

அந்தரியாமி—கடவுள். (வேதா. சூ. 41)

அந்தாமம்—பரமபதம்; "அந்தாமத் தன்பு செய்து" (திவ். திருவாய். 2, 5, 1)

அந்திம ஸ்மிருதி—சாகுங்காலத்தில் கடவுளை நினைக்கை: "அந்திம ஸ்மிருதி இல்லை யாகில் ஆதிபரதனைப் போல மானுதல் மரையாதலாமித்தனை" (ஈடு, 4, 1, 10)

அந்திய சைவர்—சிவதீட்சை பெற்ற பிரதிலோமர். (சைவச. பொது 435, உரை)

அநாமிகை—மோதிர விரல்: "பெருவிரலை அநாமிகையோடு இயையக் கூட்டி" (கூர்ம பு. சுத்தாசம. 10)

அநிதம்—அளவு கடந்தது: "அனிதகோடி அணிமுடி மாலையும்" (பெரிய பு. திருமலை. 5.)

அநியத போக்கியம்—முதலில் நல்லதாகக் கருதப்பட்டுப் பின் தகாததெனத் தள்ளப்பட்ட கர்மத்தின் பலன். (சி.சி. 2, 39, ஞானப்.)

அநிர்வசனம்—மாயை (சி. சி. 1, 27, சிவஞா)

அநிர்வசனீயம்—[1]சரியாக நிருபிக்க முடியாதது; [2]மாயை

அநிர்வாச்சியம்—அநிர்வசனீயம் (வேதா. சூ. 58)

அநிருத்தம்—நிருபிக்கப்படாதது. (திருக்காளத். பு 32, 40)

அநிருத்தன்–[1]திருமாலின் வியூக மூர்த்தி வகை.(அஷ்டாதச. தத்வத். 3, 48.);[2]கண்ணபிரான் பேரன் (சிலப், 6, 54, உரை)

அப்பிரகாசம் —அசித்து. "அவைதாம்... .. அப்பிரகாச மாய் நிற்றலான்" (சி. போ. 4, 1.)

அப்பிரசித்தம்—வெளிப்படையாகாதது.

அப்பிரசித்த வுபயம்—பக்கப் போலிகளுள் ஒன்று. (மணி. 29, 152)

அப்பிர புத்தன்—கூர்ந்துணர்வில்லாதவன் (திருக்களிற்றுப். 57. உரை.)

அப்பிரமாண ஐதிகம்—காணுததொன்றனை உளதாகக் கூறும் உலகவுரை (சி. சி. அளவை, 1, மறைஞா.)

அப்பிராகிருத சரீரம்—திவ்விய தேகம்.

அப்பிராகிருத லோகம்—பரமபதம் (குருபர. 5)

அப்புவின் கூறு—நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை; புறநிலைக் கருவி வகை. (சிவப், கட்)

அப சித்தாந்தம்—போலி முடிவு: "பன்னு அப சித்தாந்த மாகும்" (பிரபோத. 43, 3)

அபர ஞானம்—சாத்திர ஞானம் (ஒழிவி. கிரியை. 11உரை)

அபர போகம் — இம்மை மறுமைகளில் அனுபவிக்கத் தக்க போகங்கள் (சி. சி. 8, 18.)

அபர முத்தி—[1]பதமுத்தி; [2]சுத்த தத்துவங்களில் பெறு வாழ்வு.

அபர வாகீசுவரி — விந்து சத்தி. (சி. போ. பா. 2, 4, பக். 222)

அபர விந்து—அபர வாகீசுவரி. (சி. போ. பா. 2, 4, பக்.223.

அபரோட்ச ஞானம்—பிரத்தியட்ச ஞானம் (வேதா. சூ 23, உரை.)

அபலாபனம்—மறைக்கை: "இதனை அபலாபனம் செய்தல் யார்க்கு ஒல்லாது."(சிவசம 54)

அபவர்க்கம்—முத்தி:"அபவர்க்கமு மற்றடையான்"(ஞாஞ 3, 10)

அபாவம்—[1]இன்மை; [2]ஒரு பிரமாணம் (சி. சி.அளவை, 1.)

அபி மந்திரம்—செபிக்கை

'அபி மந்திரித்தல்—மந்திரத்தால் (ஸம்ஸ்காரம்) செயல் உண்டாக்குதல் " (சீவக. 2411, உரை.)

அபி வியஞ்சகம்-[1]வெளிப்படுத்துகை: "அது வைகரிவாக் குக்கு அபிவியஞ்சக ஸ்தானம்" (சி. சி. 2, 62, சிவாக்; [2]பிரகாசம்.)

அபின்ன சக்தி—சிவத்தினின்றும் பிரிவுபடாத சக்தி.

அபீசி—நரகவகை. (சி. போ. பா. 2, 3, பக். 204.)

அபுத்தி பூருவம்—அறியாமல் நிகழ்ந்தது: "சிவபுண்ணியம் அபுத்தி பூருவம் புத்தி பூருவம் என்று இருவகைப்படும்." (சி.போ.பா. 8, 1, 2, பக் 169.)

அபூதம்—முன் இல்லாதது.

அபேதவாதி—அத்துவைதி

அபௌருஷேயம் — ஒருவரால் செய்யப்படாதது. ஈடு, (1, 1, 7.)

அம்பகம்—[1]கண் (பிங்);[2]செம்பு (மூ. அ)

அம்பரம்—[1]ஆகாசம்: "அம்பரம் அனல்கால்" (திவ். பெரிய தி. 1, 8, 8.); [2]ஆடை: "அம்பரமே தண்ணீரே சோறே" (திவ் திருப்பா. 17); [3]சித்திரை (சங். அக); [4]திக்கு: "விஞ்ச அம்பர மேவிய போதினும் (ஞானவா. தாமவியாள். 21); [5]கடல்: "எரி கணை ஏவ அம்பரம் உற்றது" (பாரத; பதினான்; 93.); [6]துயிலிடம் (பிங்)

அம்பரிடம்—நரகம் எட்டனுள் ஒன்று. (சி. போ. பா. 2, 3 பக். 203.)

அமரேசம்—குய்யாட்டக புவனத்துள் ஒன்று (சி. போ. பா.2, 3, பக். 213)

அமுத தாரணை—தியான நிலையில் உள்ள மௌன யோகி உயிர் வாழ்ந்து இன்புறுதற்பொருட்டு பிரம கபாலத்தினின்று பெறும் அமிர்த வொழுக்கு.

அமுரி—யோகாப்பியாசத்தால் உடலில் உண்டாகும் அமுதம்.

அமூர்த்தி சாதாக்கியம்—சாதாக்கியம் ஐந்தனுள் தழற்பிழம் பான சிவ வடிவம் (தத்துவப். 191. உரை.)

அர்த்த பஞ்சகம்-ஸ்வஸ்வரூபம், பரஸ்வரூபம், புருஷார்த்த ஸ்வரூபம் உபாயஸ்வரூபம், விரோதிஸ்வரூபம் (அஷ்டாதச அர்த்த.)

அராக தத்துவம்—சுத்தா சுத்த தத்துவங்களுள் ஒன்று (சி. போ. பா. 2, 2, பக் 155, புது.)

அரிஷட்வர்க்கம்—காமம், குரோதம், மோகம், உலோபம் மதம், மாற்சரியம்; அறுபகை.

அருவுருவம்—அருவென்றும் உருவென்றும் சொல்லலாகா தது (சி. போ.7, 3, 1.)

அருபி—[1]கடவுள்; [2]சிவன்(பிங்);[3] அசரீரி (பாரத. புட்ப.78)
அல்ல கண்டம்—துன்பம் (பிங்)

அவ்வியத்தம்—[1]விளங்கக் காணப்படாதது; [2]மூலப் பிரகிருதி (சூத. சிவமான். 8,11); [3]பீடத்தோடு கூடிய சிவலிங்கம் (சைவ ச. பொது. 119); [4]ஒரு பேரெண். (பிங்)

அவ்வியத்தன்—கடவுள் (வேதா. சூ. 42.)

அவ்வியாகிருதம்—[1]தகாதது: "அவ்வியாகிருத வியாபாரம்"; [2]ஈசுரனது காரண சரீரமாகிய மாயை. (கட்டளைக் 159)

அவ்வியாப்தி—இலக்கியத்தின் ஏகதேசத்தில் இலக்கணம் சொல்லாதொழியும் தோஷம். (தருக்கசங். 5)

அவச் சேதகம்—வேறுபடும் தன்மை (சி. சி. 2,54சிவாக்.)

அவ சித்தாந்தம்—தவருன முடிவு. (சி. சி. 1, 26,சிவஞா.)

அவத்தானம்—இருப்பிடம்:"மாயாத் துவய மத்தியே அவத்தானம் சொல்லப்பட்டது." (சி. சி. 8, 2, சிவாக்.)

அவதாரிகை—முன்னுரை

அவதானம்—[1]கவனம்; [2]ஞாபகம்; [3]ஞாபகத் திறமைச் செயல்; [4]சாதுரியம்.

அவதி ஞானம்—தூரத்தில் உள்ளவற்றைப் பொறி உதவி இன்றி உணரும் உணர்ச்சி (சீவக. 951, உரை.)

அவதூதன்—[1]முற்றத் துறந்தவன். (திருவேங். சத. 95.); [2]நிர்வாண சன்னியாசி.

அவலம்பித்தல்—பற்றுதல்: "சாலம்ப சிவ யோகம் அவலம்பித்து." (சி. சி. 9, 10, ஞானப்)

அவலோகனம்—பார்வை: "அனுக்கிரக அவலோகனம்" (சி. சி. 8, 3, சிவாக்.)

அவஸ்தாத் திரயம்—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூன்று நிலைகள்.

அவஸ்தை—[1]நிலை; [2]சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி; [3]கர்ப்பாவஸ்தை, ஜன்மாவஸ்தை, பாலியாவஸ்தை, யௌவனவஸ்தை, ஜராவஸ்தை, மரணவஸ்தை, நரகாவஸ்தை (ஈ.டு.); [4]வேதனை.

அவாந்த காரணம்—இடையில் வந்த காரணம் (சி. போ. சிற். 1, 3.)

அவி—[1]வேள்வித் தீயில் தேவர்க்குக் கொடுக்கும் உணவு. (குறள், 413.); [2]உணவு: "அவி அடுநர்க்குச் சுவை பகர்ந்து ஏவி." (பதினே. திருவிடை. 7); [3]சோறு (சூடா); [4]நெய் (பிங்)

அவிச்சின்னம் — இடைவிடாமை (சிவதரு. சிவஞான யோ. 80.)

அவிநு பாவம்—விட்டு நீங்காது உடன் நிகழும் தன்மை: "அவிநுபாவம் பேசுறும் ஏதுக் கொண்டு." (சி. சி. அளவை 2.)

அவேத்தியன்—அறியப்படாதவன்(சி. சி. 6, 1, சிவாக் )

அவைராக்கியம்—புத்தி குணம் எட்டனுள் ஒன்ருன பிடிவாதமின்மை (சி. போ. பா. 2, 2, பக். 164)

அழிவுபாட்டபாவம்—அழிந்ததனுல் அஃது இல்லை என்னும் அபாவம் (சி. சி. அளவை 1, மறைஞா.)

அற்புதம்—சூனியம் (சி. போ. பா 9, 2, வெண்.1.)

அறி துயில்—யோக நித்திரை: "ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன்" (சிலப். 26, 62.)

அறு சமயம்—சைவம், வைணவம், சாக்தம், சௌரம், கணு பத்தியம், கௌமாரம்.

அனந்த சதுட்டயம்—அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்தவீரியம், அனந்த சுகம் (சீவக. 2846, உரை.)

அனந்த சதுர்த்தசி—விஷ்ணுவைப் பூசித்தற்கு உரிய (புரட்டாதி) பாத்திரபத மாச சுக்கில பட்ச சதுர்த்தசி தினம்.

அனந்த தேவ நாயனுர்--அசுத்த மாயா தத்துவத்தின் உற்பத்திக்குக் காரணமான சிவமூர்த்தி. (சி. சி. 2, 54, மறையூர் )

அனந்தர்— [1]உருத்திரருள் ஒருவர். (சி. போ. பா. 2, 3, பக்.215.); [2]அறுவகைச் சலா சனத்தென்று (சைவச. பொது.523)

அனன்னியம்—வேறு அன்மை: "கடத்தொடு மட்கு அனன்னியம்" (வேதா. சூ. 127.)

அனுகதம்—ஆறு ஆதாரங்களுள் ஒன்று.

அனுதி சித்தன்—அனுதியே சித்தனய் இருப்பவன்: "சீவன் அனுதி சித்தனும், முத்தனும், பெத்தனும் என மூவகைப் படும்." (சி. போ. பா. அவைய. பக். 11)

அனுதி நித்தம்--என்றும் நித்தியமாய் உள்ளது. "மூல கன்மம் ஒன்று அநாதி நித்தமாய் உண்டு" (சி. போ. சிற், 2,2, பக். 65)

அணுதி பெத்த சித்துரு—ஆன்மா. (சி. சி.)

அணுதி பெத்தன்-(அநாதியே மலபந்தமுள்ளது) சீவான்மா

அணுதி போதம்—இயல்பாகவே பாசங்களினின்று நீங்குகை. (சி. போ. பா. 6, 2, பக். 322.)

அனிச்சைப் பிராரத்தம்—விருப்பின்றிச் சுகதுக்கம் அனுபவிப்பிக்கும் பழவினை. (வேதா. சூ. 175, உரை )

அனுகற்பம்-மந்தையினின்று எடுத்த பசுவின் சாணத்தைக் கொண்டு முறைப்படி உண்டாக்கிய விபூதி: "இனி அனுகற்பம் தனையும் ........ கூறுவம்." (சைவ ச. பொது. 179 )

அனுசந்தானம்—[1]சிந்திக்கை. (ஞானவா. உத்தால. 3.); [2]இடையறுது ஓதுகை. (வேதா. சூ. 138·)

அனுசாசனம்—உபதேசம். அனுசாசன பருவம்.

அனுசைவர்—சிவதீட்சை பெற்ற க்ஷத்திரிய வைசியர் (சைவ பொது 435, உரை.)

அனுபந்த சதுட்டயம்—விடயம், சம்பந்தம், பயன், அதிகாரி. (வேதா. சூ. 8.)

அனுபலத்தி யேது—ஒன்றன் இன்மையால் மற்ருென்றன் இன்மையை அறியும் ஏது. (சி. சி. அளவை. 10, மறைஞா.)

அனுபூதி—அனுபவ ஞானம். (வேதா. சூ. 151.)

அனுமானப் பிரமாணம்—கருதல் அளவை.

அனுஷ்டானம்—[1]ஒழுக்கம்; [2]சந்தியாவந்தனம்; [3]வழக்கம்.

அனேகாந்த வாதி—ஆருகதன். (சி. போ. பா. அவை. 12)

அனேகான்ம வாதம்—ஆன்மாக்கள் பல உண்டு என்னும் கொள்கை.

அனேகேசுர வாதி—கடவுளர் பலர் என்னும் கொள்கையோன். (சி. போ .சிற். 1, 3 )

அஜ கஜாந்திரம்—[1]ஆட்டிற்கும் யானைக்கும் உள்ள வேறுபாடு;[2] பெரு வித்தியாசம். (ஒழிவி. பொது. 5, உரை.)

அஷ்ட பந்தனம்—சுக்கான்கல், கொம்பரக்கு, சாதிலிங்கம். செம்பஞ்சு, தேன் மெழுகு, எருமை வெண்ணெய், குங்கிலியம்,

நற்காவி; சிலா விக்கிரகங்கள் அசைவின்றி இருக்கும்படி அடியிடத்துச் சாத்தப்படும் கூட்டுச்சரக்கு.

அஷ்டாங்க யோகம்—இயமம், நியமம், ஆதனம், பிராணு யாமம், பிரத்தியாகாரம், தாரணே, தியானம், சமாதி. (பிங்)

அஸ்திநாஸ்தி வாதம்—உண்டு இல்லை என்னும் சைனக் கொள்கை. (சி. சி. பர. நிகண். 6, உரை.)

## ஆ

ஆக்கிராந்தம் — கைக்கொள்ளப்பட்டது: "அஞ்ஞான ஆக்கிராந்தமாய் இருக்கிற" (சி. சி. 2, 91, சிவாக்)

ஆக்கினேய ஸ்நானம்—விபூதியை உத்தூளனமாகத் தரிக்கை (சித். சிகா. விபூதி. 12, உரை.)

ஆகந்துக மலம் — ஆன்மாவிடத்து இயல்பாகவன்றி இடையே தோன்றும் மாயை கன்மங்களாகிய இரண்டு மலங்கள் (சி. போ. பா. 4, 2, பக். 260.)

ஆகாமியம்—இப்பிறப்பிலே செய்யும் புண்ணிய பாவங்கள்: "மேல் வரும் ஆகாமியமும் நாடாமல்" (திருக்காளத். பு. 12, 28.)

ஆசமனம்—வலக் குடங்கையால் மந்திர பூர்வமாக நீரை மும்முறை உட்கொள்ளுகை. (கூர்ம பு. நித்திய. 11.)

ஆசவுசம்—தீட்டு (சைவ ச. பொது. 252.)

ஆசாடி—குய்யாட்டக புவனத்துள் ஒன்று. (சி. போ. பா. 2, 3, பக். 213.)

ஆசார்யாபிஷேகம் — குரு ஆதற்குச் செய்யப்படும் செயல்முறை (ஸம்ஸ்காரம் )

ஆணவ மலம்—மும்மலங்களுள் ஒன்று. (சி. சி. 2, 80, மறை ஞா.)

ஆத்ம தரிசனம்—ஆன்மாவின் நிலையை அறிகை.

ஆத்மாபகாரம்—ஆத்ம ரூபத்தை வேருக நினைக்கை, பரதந்திரனை ஜீவனை ஸ்வதந்திரனுக நினைக்கை. (அஷ்டாதச. முமுக்ஷு 7.) உரிமையற்ற உயிரை உரிமையுடையதாக நினைக்கை

ஆதி தைவிகம்—தெய்வத்தால் வரும் துன்பம். (சி. போ. 2, 2, 3, சிற்)

ஆதி பௌதிகம்—பஞ்ச பூதங்களாலும் தன்னை யொழிந்த பிராணிகளாலும் உண்டாகும் துன்பம். (ஞானு. 19, 17.)

ஆர்த்தி—சிவசக்தியுள் ஒன்று. (சி. போ. பா. 2, 4 பக். 222.)

ஆரணி—சிவசக்தி பேதம். (சி. போ. பா. 2,4, பக் 222)

ஆரிட லிங்கம்—இருடிகளால் நிறுவப்பட்ட சிவலிங்கம். (சைவ ச. பொது. 431.)

ஆரியாங்கனை—இல்லறத்தினின்று துறவு பூண்ட சைன தவப்பெண்: "கணவனில் துறவின் மன்னும் ஆரியாங்கனைகள்." (திருவிளை. சமணரை. 17)

ஆரோபித்தல்—ஒன்றன்மேல் மற்றொன்றின் தன்மையை ஏற்றிக் கூறுதல்.

ஆவரித்தல்—மறைத்தல். (சி. சி. 4, 19, சிவாக்.)

ஆவாகனம்—எழுந்தருளும்படி மந்திரத்தால் தெய்வத்தை அழைக்கை. (சைவ ச. பொது. 525.)

ஆவிர்ப்பவித்தல்—வெளிப்படுதல்.

ஆவிருதி—ஆணவமலம்: "ஆவிருதி என்றற்றொடக்கத்துக் காரணக் குறிகளும்" (சி. போ. 4, 2. சிற்.)

ஆவுடையாள் — சக்தியைக் குறிக்கும் இலிங்க பீடம்: "ஆவுடையாளும் சிவலிங்கமும் ஒன்றை விட்டு ஒன்று நீங்காமல்." (சி. சி. 1, 69, நிரம்ப.)

ஆவேச வாதி—காபாலிக மதத்தான். (சி. போ. பா. அளவை. 21.)

ஆருதாரம்—மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை.

ஆறுகட்டி—[1]ஆறு பற்களுக்கு மேல் முளையாத மாடு; [2]சைவர் காதில் அணியும் உருத்திராக்க மணிவடம்.

ஆன்ம சுத்தி – [1]தசகாரியத்தொன்று; [2]பஞ்ச சுத்தியுள் ஒன்று; [3]தாந்திரிக பஞ்ச சுத்தியுள் ஒன்று.

ஆன்மார்த்த பூசை—தன் பொருட்டுத் தானே செய்யும் வழிபாடு.

## இ

இகபரம்—இம்மை மறுமை: "இகபரமும் எண்டிசையும்" (தேவா. 48, 3.)

இகா முத்திர பல போக விராகம்—இம்மை மறுமை இன்பங்களில் வைராக்கியம். (வேதா. சூ, பொது, 9 உரை.)

இட்ட லிங்கம்—சீடனுக்கு ஆசாரியனால் கொடுக்கப்படும் நித்திய வழிபாட்டுக்கு உரிய ஆன்மார்த்த லிங்கம். (சைவ ச. பொது. 464.)

இடுக்குத் திருத்துழாய்—திருமால் கோயிலில் மரியாதையாகத் திருவடி நிலையின் இடையில் வைத்துக் கொடுக்கும் துளசி.

இடைகலை—[1] தசநாடியில் ஒன்று; [2] இடது நாசியால் விடும் மூச்சு.

இடைசூரி—உருத்திராட்சம் முதலியவற்றின் இடையில் கோக்கும் மணி.

இந்திரியக் காட்சி—ஆன்மா பொறி பூதங்களுடனே கூடி வேறுபாடின்றி அறியும் அறிவு. (சி. சி. அளவை. 6.)

இயல்பளவை—சொல்லின் பொருளைச் சந்தர்ப்பத்தினால் நிச்சயிக்கும் பிரமாணம். (சி. சி. அளவை 1.)

இரணிய கர்ப்ப மதம்—பிரமாவே முதற் கடவுள் என்னும் மதம்.

இரத்தினப் பிரத்தம்—கைலாயத்தின் தாழ்வரை. (சி. சி. 1, 52, மறை ஞா)

இரந்திரம்—[1] துளை; [2] வெளி. (சி. சி 2, 66, சிவாக்.); [3] ஜன்ம லக்கினம்; [4] இரகசியம்: "உன் இரந்திர மெல்லாம் நான் அறிவேன்."

இரவுத்திரியம்—சிவதீக்கை: "விளங்கும் இரவுத்திரியம் முற்றுவித்து." (பிரமோத். 22, 69.)

இராமடம் ஊட்டுதல்—தாய் தந்தையர், துர்மார்க்கரான தம் பிள்ளைகள் புசிக்கும்படி, இரவில் சத்திரங்களிலே வாஞ்சையால் செய்வித்தல் (ஈடு, 1, 1, 5.)

இருண்மலம்—ஆணவ மலம்: "எண்ணரிதாய் நித்தமாய் இருள் மலத்தின் அழுந்தி" (சிவப்பிர. 2, 1.)

இருதலை மாணிக்கம்—சிவாயவாசி, முத்தி பஞ்சாட்சரம் (சங். அக.)

இருவினை யொப்பு—புண்ணிய பாவங்களில் சமபுத்திசெய்து விடுகை. (சி. போ. பா. 8, 1, பக், 362, புதுப்.)

இரேசகம்—வாயுவை நாசியால் புறத்தே கழிக்கை: "போற்றி ரேசக நன் மூச்சை விடுக்குதல்." (கூர்ம பு. யோகமு. 11.)

இல்லதன் அபாவம்—ஒரு பொருளின் இல்லாமையினாலான இன்மை (சி. சி. அளவை1. மறை ஞா.)

இலய சக்தி—இலய சிவனின் சக்தி. (சி சி. 2, 75, மறைஞா.)

இலய தத்துவம்—மகா சங்கார காலத்துத் தன் காரியங்கள் எல்லாம் ஒடுங்கிக் காரண மாத்திரையாய் நிற்கும் இறைவன் நிலை. (சி. சி. 6, 6, ஞானப்.)

இலய முத்தி-பரம்பொருளொடு இரண்டறக் கலத்தலாகிய முக்தி. (யாழ். அக.)

இலய சிவன்—உருவமற்ற சிவன்

இலிங்க சரீரம்—சூக்கும சரீரம்.

## ஈ

ஈச்சுரம்—சுத்த தத்துவங்களுள் ஒன்று. (சிவப். கட். 3.)

ஈச தத்துவம்—சுத்த தத்துவம் ஐந்தனுள் ஒன்று (சிவப் கட்.)

ஈசானம்—[1]சிவன் ஐம்முகத்துள் ஒன்று. (சிவதரு. பரிகா. 89.); [2]ஒரு சைவ மந்திரம்; [3]வடகீழ்த்திசை.

ஈசானன்—[1]சிவன். (கூர்ம பு. தக்கன் வே 33.); [2]ஏகாதச ருத்திரருள் ஒருவர். (திவா.)

ஈசுவர அவிகார வாத சைவம்—அகச் சமயத்துள் ஒன்று.

ஈசுவரோபாஸ்தி—கடவுள் வழிபாடு. (வேதா. சூ .24, உரை)

## உ

உ—சிவசக்தி. (திருமந். 1751)

உச்சரித்தல்—[1]இதழ் முதலியவற்றின் தொழில்களால் எழுத்துக்களைப் பிறப்பித்தல்; [2]செபித்தல்: "அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க" (சி. சி. 9, 1.)

உச்சலம்—மனம்

உட்கரணம்—அந்தக்கரணம்: "புணரும் உட்கரணம் ஆக்கி." (சி. சி. 4, 1.)

உட்சமயம்—வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம். (பிங்)

உட்பூசை—மானச பூசை. (சி. சி. 2, 28, நிரம்ப.)

உடல் வினை—பிராரத்த கருமம்: "உடல் வினையோடும் ஆண்டுப் பிறந்து" (சி. போ. பா. 8, 1, 1.)

உடலிருந்த வீடு–சீவன் முத்தி. (ஞானவா. ஞான விண். 36.)

உடலிறந்த வீடு—விதேக முத்தி (ஞானவா. ஞான விண். 36.)

உத்தர சைவம்—சித்தாந்த சைவம் (சி. சி. 8, 13, சிவாக்)

உத்துளம்—விபூதியை நீரில் குழையாது உடலில் பூசுகை.

உத்தூளனம்—விபூதியை நீரில் குழையாது வரியின்றிப் பூசுதல் (தணிகைப்பு. இராம. 22.)

உதகம்—நீர்: "வாச நல் உதகம்" (கந்த பு. திருக்கல். 70)

உதானன்—தச வாயுக்களுள் ஒன்று (பிங்)

உபகார ஸ்மிருதி—செய்ந்நன்றியறிகை: "உபகார ஸ்மிருதியினாலே ஆழ்வானைக் கொண்டாடுகிறார்கள்". (திவ். திருப்பல். 7)

உபரதி—[1]செயல் ஒழிகை: "நித்திரை என்றது இந்திரியங்களுடைய உபரதியே" (சி. சி. 3, 4, சிவாக்); [2]பற்று ஒழிகை, (விசார சந். 345.)

உபஸ்தானம்—மந்திரத்தோடு வழிபடுகை.

உபாங்கம்—[1]சார்பு உறுப்பு; [2]மீமாஞ்சை, நியாயம், புராணம், மிருதி; வேதங்களுக்கு அங்கமாயுள்ள சாத்திரங்கள் (சி. சி. 8, 14, மறை ஞா); [3]தோற்கருவி வகை(சிலப். 3,27,உரை); [4]பக்க வாத்தியம்: "தார்கிண்டு வண்டு உபாங்கங் கூட" (இரகு. நாட்டுப். 54)

உபாசனை—வழிபாடு: "இருவேறும் உபாசனை" (விநாயக பு. 83, 67)

உபாம்சு—தனது செவி கேட்க வாய்க்குள் செபிக்கை: "சிவ மந்திரத்தை வாசகமாகத்தான் உபாம் சுவாகத் தான் மானசமாகத் தான்......ஜபிப்பது" (சி. சி. 8. 23, சிவாக்)

உபாய நிட்டை—எளிதில் சித்தியடையும் வழியில் ஊன்றி நிற்கை: "மேலோர் உபாய நிட்டை உணர்த்துகின்றார்" (சி. சி. 9, 8, மறை ஞா. அவ.)

உபச்செபித்தல்—மந்திரத்தைத் திரும்பத் திரும்பக் கணக்கிட்டு அனுசந்தித்தல்.

உருத்திர கணம்—[1]சிவகணம்; [2]சிவனடியார்: "உருத்திர கணப் பெருமக்கள்" (I. M. P.)

உருத்திரை—உமை(பிங்)

உருமேனி—பரமேசுவரன் உயிர்கள் தம் கண்ணுல் காணும்படி எடுக்கும் சகள வடிவம்: "உருமேனி தரித்துக் கொண்டது என்றலும்" (சி. சி. 1, 55.)

உருவுப் பரப்பு-கடவுளது சர்வஞ்ஞாதி அஷ்ட குணங்கள்: "தன்னுருவப் பரப்பை யெல்லாம் கொடு புகுந்து பதிப்பன்" (சி. சி. 9, 12 )

உரை யளவை—ஆகமப் பிரமாணம். (சி. சி. அளவை, 2, சிவஞா.)

உரை யனுமானம்—நூலில் சொல்லியது கொண்டு சொல்லாததையும் ஒப்புமை பற்றி அறியும் உய்த்துணர்வு. (சி. சி. அளவை, 12. சிவஞா.)

உலக வாதம்—ஐதிகம். (சி. சி. அளவை, 1, சுப்பிர.)

உலோகத்தம்பம்— இராசராசேச்சுர நரகங்களுள் ஒன்று. (சி. போ. பா 2, 3, பக். 204.)

உலோக தருமிணி—போககாமிகட்குச் செய்யப்படுவதான சபீச தீட்சை வகை. (சைவ ச. ஆசாரி. 62, உரை.)

உலோகப் பிரதீப்தம்—நரகவகை. சி. போ. பா. 2 ,3 பக். 204.)

உலோகாயதம்—சார்வாக மதம். (திருக்காளத். 4, 30, 25.)

உலோகாயதன்—சார்வாகன்: "உலோகாயதன் எனும் ஒண்திறல் பாம்பின்" (திருவாச. 4, 56.)

உலோச்சு—தம் தலைமயிரைத் தம் கையால் பறிக்கை. (சீவக. 2820, விசேடக் குறிப்பு.)

உவனியம்—உபநயனம்: "ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும்." (திவ். பெரிய தி. 5, 8, 7.)

உள்ளதன பாவம்—ஆனையைப் பந்தியில் கண்டிலம் என்றாற் போலும் இன்மை (சி. சி. அளவை. 1, மறை ஞா.)

உற்பத்தி சம வாதம்—மாவிரதம்.

உற்பிச்சம்—உயிர்த்தோற்றம் நான்கனுள் வித்து, வேர் முதலியவற்றினின்றும் தோன்றுவன.

## ஊ

ஊர்த்த சைவம்—சைவம் பதினாறனுள் ஒன்று. (அபி.சிந்.)
ஊர்த்துவம்—மேல்

ஊர்த்துவ மாயை—சுத்தமாயை: "ஒன்றுதானே ஊர்த்துவ மாயை அதோமாயை என்று இரு வகைப்படும் என்பாரும் (சி. போ. சிற். 2, 2, 3.)

ஊர்த்துவ முகம்—மேல்நோக்கின முகம் (சைவச. பொது. 338, உரை)

ஊர்த்துவ ரேதசு—சுக்கிலம் கேடுறாமல் மேல் முகமாக்குபவன்.

ஊற்றம்—[1]புகழ். [2]அறிவு.

ஊனக்கண்—உயிரறிவு: "ஊனக்கண் பாசம் உணராப் பதியை" (சி. போ. 9, 1.)

எ

எங்கித்தை—எவ்விடத்தில்: "எங்கித்தைக் கன்மம் எலாம் செய்தாலும்" (சி. சி. 10, 6.)

எச்ச அனுமானம்—காரியத்தைக் கொண்டு காரணத்தை அறியும் அனுமானம்.

எட்டுக் கொண்டார்—அட்ட மூர்த்த முடைய சிவ பெருமான். "எட்டுக் கொண்டார் தமை" (திருவுந்தி. 24.)

எண்குணத்தான்—கடவுள்: "எண் குணத்தான் தாளை வணங்காத் தலை." (குறள். 9.)

எண்டோளன்—சிவன். (பிங்)

எண்டோளி—துர்க்கை (திவா.)

ஏ

ஏக சிந்தை—[1]ஒத்தமனம்: தம்பதிகள் இருவரும் ஏகசிந்தை உள்ளவர்கள்; [2]ஒரே நினைவு: "நாடொறும் ஏகசிந்தையனாய்" (திவ். திருவாய். 5, 10, 11)

ஏகத்துவம்—ஒன்றாய் இருக்கும் தன்மை: "ஏகத்துவத்திலே சுழுத்தி இதயமுற்று இன்பமே பெறுவாய்" (ஞானவா.தாசூ.101.)

ஏக தண்டி—ஒற்றைக்கோல் தரிக்கும் சன்னியாசி (குரு பரம். ஆறு. 92.)

ஏக தந்தன்—ஒற்றைத் தந்தத்தை உடையவரான விநாயகர். (பிங்.)

ஏகதேசம்—[1]ஒரு புடை. (திருக்கோ. 70 உரை); [2]சிறுபான்மை: "ஏகதேசம் தமிழாகவும் பிராயிகம் தற்சமம் தற்பவமாகவும் கூறினும்" (பி. வி. 2, உரை.); [3]அருமை: "ஏகதேச

மாக அங்கே அது கிடைக்கும்"; [4]வித்தியாசம்: "அதற்கும் இதற்கும் ஏகதேசம்;" [5]மாறுபாடு; [6]சமமின்மை: "இந்தநிலம் ஏகதேசமாக இருக்கிறது"; [7]நிந்தை: "அவன் என்னை ஏகதேச மாகப் பேசினான்; [8]குறைந்தது: "பகவதானந்தத்தைப் பற்ற இது ஏகதேசமாய் இருக்கையாலே" (ஈடு, 4, 1, 10)

ஏகதேச வறிவு— சிற்றுணர்வு: "ஏகதேசவறிவைச் செய்தல் ஏகதேசப்படும் தகுதியை யுடைய பொருட்கேயன்றி ஏனைய தற்கு உரித்தன்று" (சி.சி. 1, 41, சிவஞா.)

ஏக பாதர்—ஒற்றைத் தாளர் ஆகிய சிவ மூர்த்தம்.

ஏக பிங்கலன்—பசப்படைந்த ஒற்றைக் கண்ணையுடைய குபேரன் (சூடா.)

ஏகாக்கிர சித்தம்—ஒன்றிலே ஊன்றிய மனம்: "ஏகாக்கிர சித்தம் என்னும் விரதம் கெடாத திடவிரதம் (சிவப். பிரபந். அபிஷே. 9.)

ஏகாதச ருத்திரர்—[1]மாதேவன், சிவன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன் (திவா.); [2]அரன்; [3]சிவன் (பிங்.)

ஏகான்ம வாதம்—பிரமம் ஒன்றைத் தவிர வேறொன்றும் இல்லை என வாதிக்கும் மதம். (சி. போ. பா. அவைய. பக். 47.)

ஏகீ பாவம்—ஒன்றுபடுகை. (சி. சி. 6, 1, ஞானப்)

ஏடணைத் திரயம்—அருத்த வேடணை, புத்திரவேடணை, உலக வேடணை என மூவகையான விருப்பம். (திருவால. கட்.)

ஏயம்—தள்ளத் தக்கது: "இது ஏயம், இது உபாதேயம்...... என்று நிச்சயித்து" (சி. சி. 2, 58, சிவாக்.)

ஏஷ்யம்—[1]காரணம்; [2]திருஷ்டாந்தம்.

## ஐ

ஐக்கவாதம்—பரமான்மாவும் சீவான்மாவும் தன்மையால் ஒன்றெனக் கூறும் மதம். (சி. போ. பா. 6, 2)

ஐக்கிய வாத சைவம்—சைவத்தின் அகப்புறச் சமயத்துள் ஒன்று. (சி. போ. பா. அவை.)

**ஐக** கண்டியம்—கருத்து ஒத்திருக்கை: "சிவாகமங்களெல்லாம் ஐக கண்டியமாகச் சொல்வது" (சிவசம. 67)

ஐக மத்தியம்—ஒற்றுமை: "அவர்களும்......ஐக மத்தியம் பண்ணிக் கொண்டு" (குருபரம். 226. பன்னீ.)

ஐங்கரன்—ஐந்து கைகள் உள்ளவனான கணபதி. (திவா.)

ஐந்தவத்தை—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்; உடம்பின் உட்பட்ட ஆன்மா அனுபவிக்கும் ஐவகை நிலை. (திருமந்.)

ஐந்து முகத்தோன்—ஐந்து முகங்களையுடைய சிவன். (உரி. நி.)

## ஒ

**ஒ**ட்டு வட்டில்—ஆராதனை வட்டில் (S. 1. 1. ii, 3.)

## ஓ

**ஓ**காரம்—மயில்: "ஓகார பரியின்மிசை வருவாயே" (திருப் புக. 142.)

ஓங்காரம்–பிரணவம்: "ஓங்காரத் துட்பொருளாய் நின்றான்" (தேவா. 320-10)

ஓம்—பிரணவம். (கம்பரா. இரணி. 76.)

## ஔ

**ஔ**சனம்—உப புராணம் பதினெட்டனுள் ஒன்று. (கூர்மபு. இந்திரத். 10)

ஔத்திரி தீட்சை— (நிர்ப்பீச தீட்சை, சுபீசதீட்சை) சிவ தீட்சை ஏழனுள் ஒன்று (சைவச. ஆசாரி. 62, உரை.)

ஔபாசனம்—காலை மாலைகளில் இல்லறத்தார் ஓமத்தீ ஓம்புகை.

க

கங்காசுதன்—[1]முருகன்; [2]பீஷ்மர்: "கங்காசுதனொடும் வெகுளி மாற்றி" (பாரத.வாசுதே. 2.)

கங்காதரன்—சிவன் (திவா)

கங்காளம்—தசை கழிந்த உடலின் எலும்புக் கூடு. (திவா.)

கங்காள மாலி—சிவன்

கஞ்சுக சரீரம்—அராகம் வித்தை கலை நியதி காலம் என்னும் ஐந்து தத்துவங்களினாலும் ஆகிய ஒரு வகைப் பர சரீரம். (சி. போ. பா. 2, 2.)

கடசடக நியாயம்—ஒன்று மற்றொன்றின் உள்ளிருந்து காரியப்படுத்துவதை விளக்கும் நெறி (சி. சி. 3, 4, ஞானப்.)

கடம்ப கோரக நியாயம்—கடம்ப மரத்தின் அரும்புகள் ஒரே காலத்தில் பூப்பது போலப் பல செயல்களும் ஒரு காலத்தில் நிகழ்வதைக் குறிக்கும் நியாயம்.

கடாட்ச வீட்சணம்—கடைக்கண் பார்வை

கடி சூத்திரம்—அரைஞாண்: "மணிக்கடி சூத்திரம் வீக்கி." (கம்பரா.தேரேறு.5.)

கடிஞை—பிச்சைப் பாத்திரம்: "பிச்சை ஏற்ற பெய்வளை கடிஞையின்" (மணி. பதி. 63.)

கடி யஸ்தம்—இடையில் வைத்த கை.

கண பங்கம்—கணத்தில் தோன்றி அழிவது: "புத்தி கண பங்க மெனப் புத்தி கெட்ட புத்தனுரை" (சிவப். பிரபந். சிவஞா நெஞ்சு. 210.)

கண பங்க வாதி—பிரபஞ்சம் கணந்தோறும் தோன்றி அழியும் என்று வாதிப்பவன் (சி. போ. பா. அவை.)

கணாத மதம்—வைசேடிக மதம்.

கணிகம்—கால நுட்பம்: "காலம் கணிகம் எனும் குறு நிகழ்ச்சியும்" (மணி.27, 191.); கணப் பொழுது இருக்கக் கூடியது; தாற்காலிக பூசைக்குரியதாய் மண் முதலியவற்றால் செய்யப்பெறும் இலிங்கம். (சைவச. பொது. 556, உரை.)

கதம்ப முகுள நியாயம்—மழை பெய்தபோது கதம்ப மொட்டுக்கள் ஒரே காலத்தில் பூப்பது போலக் காரியங்கள் ஒருங்கு தோன்றுவதைக் காட்டும் நெறி (சி. சி. 2, 61, சிவாக்.)

கதானு கதிக நியாயம்—ஒருவர் சென்ற வழியே மற்றவர் செல்லுதலைக் குறிக்கும் நெறி.

கபோணி குள நியாயம்—முழங்கையிலுள்ள வெல்லத்தை நாவால் சுவைக்க இயலாதது போல, அடுத்திருந்தும் தனக்கு அடைய முடியாமையைக் காட்டும் நெறி.

கபோதக நியாயம்—ஒரு புறு ஓர் இடம் சேர அதன் இன மான புறுக்கள் எல்லாம் உடனே அதைப் பின்பற்றி அங்குச் சேர்தல்போல, ஒன்று நிகழ அதன் இனமான பலவும் உடன் நிகழும் நெறி.

கயிற்றரவு—பழுதையில் தோன்றும் பாம்புணர்வு: "கயிற்ற விப்பி வெள்ளி" (சித். சிகா. 23,5.)

கர்த்திரு சாதாக்கியம்—நான்கு முகங்களோடும் எட்டுக் கைகளோடும் கூடிய மகேசுர மூர்த்தம். (தத்துவப் 191, வரை.)

கர்மப் பிரம வாதி—வைதிகச் சடங்குகளையே பிரமமென வாதிக்கும் பூர்வ மீமாஞ்சகன்.

கரண வாதனை—இந்திரியங்களின் பழக்க அறிவு.

கரதலாமலகம்—உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெளி வானது: "மறைகள்......கரதலாமலக மதாக உணர்வில் வைத்த" (செவ்வந்திப் பு. சார. 2.)

கர நியாசம்—தேவர்களை மந்திராட்சர பூர்வமாக விரல்களில் வைக்கும் கிரியை: "அஞ்செழுத்தால் அங்க, கர நியாசம் பண்ணி" (சி சி. 9, 8.)

கருடத் தியானம்—பாம்பு விடத்தை நீக்கும் மருத்துவன்; கருடனாகத் தன்னைப் பாவிக்கை: "கருடத் தியானத்தின் விடம் ஒழியும்." (சி. சி. 9, 7.)

கருணை மறம்—கருணையால் செய்யும் அழிக்கை: "அக் கருணை மறமாகிய செய்கை மாறி"(சி. போ. பா. 8, 1, பக். 174.)

கருத லளவை—அனுமானப் பிரமாணம். (குறள் 930 உரை.)

கரு மேனி—தூல சரீரம். (சி. சி. 1, 55, ஞானப்.)

கலாத்துவா—பஞ்ச கலைகளாகிய அத்துவா வகை. (சி. சி. 8, 6-9, மறைஞா.)

கலா தத்துவம்—சுத்தாசுத்த தத்துவங்களுள் ஒன்று (சி. போ. பா. 2, 2, பக், 151.)

கலே கபோதக நியாயம்—புருக்கள் பல, ஒரே நெற்களத்தில் தானியங்களைப் பொறுக்க மேல் விழுவது போலும் நெறி.

கவுரி சங்கரம்—கவுரி சங்கரர்களது உருவினதாய் இருபிளவு பட்ட ஒற்றை உருத்திராக்கம்.

கற்பனு கௌரவம்—கற்பனை செய்வதில் மிகைப்படுதல் ஆகிய குற்றம்: "பந்தம் ஒன்றினுல் என்னுமல் மூன்றைச் சொன்னது கற்பனு கௌரவம் எனின் அற்றன்று" (சி. சி. 1, 1, சிவாக்.)

கன்ம சாதாக்கியம்—ஈசான மூர்த்தத்தை அடையக் கிரியா சத்தியுடன் சேர்ந்த பரசிவம். (சதாசிவ. 6.) இலிங்கமும் பீடமும் பிரபஞ்சமுமாகப் பிண்டீகரிக்கும் சிவ ரூபம் (தத்துவப். 191, உரை.)

கன்ம சாதாக்கியர்—சுத்தாத்துவாவில் படைத்தல் முதலியன காரியங்களைச் செய்யும் சதாசிவன் (சதாசிவ 42, உரை.)

கன்ம யக்ஞம்—விடிய ஐந்து நாழிகைக்கு முன் எழுந்து விடிவதற்கு முன் ஈச்சுரத் தியானம் முதலிய நித்திய கருமங்களைச் சரிவரச் செய்கை. (சி. சி. 8, 23)

கன்ம யாகம்—பஞ்ச யாகத்துள் வருணச்சிரமங்களுக்கு உரிய நித்தியக் கிரியைகளாகிய யாகம்" (சி. சி. 8, 23, சிவாக்.)

## கா

**கா**கதாலீயம்—காகம் பனையில் வந்து தங்கப் பனம்பழம் விழுந்தது போலத் தற்செயல் குறிக்கும் நெறி: "காகதாலீயம் போல் வாதனையின் வசத்தில் உளங்கலந்து நிற்கும் ஏகமுற" (ஞானவா. உற்ப. 66.)

காகாட்சி கோள நியாயம்—காகத்தின் இரு கண்களுக்கும் ஒன்றே மணியானற் போல, ஒரே சொல் அல்லது தொடர் ஈரிடத்து இயைந்து பொருள் விளக்கும் நெறி

காட்சி யளவை—காட்சிப் பிரமாணம். (சி. போ. சிற். 1, 1, பக். 15)

காட்சி வாதி—பிரத்தியட்சம் தவிர வேறு பிரமாணம் இல்லை என்று வாதிக்கும் உலோகாயதன். (சி. போ. பா. அவை. பக். 40.)

காட்டாக்கி—கட்டையைக் கடைந்து உண்டாக்கும் நெருப்பு: "காட்டாக்கில் தோன்றி" (சி. போ. 9, 3, 2.)

காடாந்தகாரம்—கனத்த இருள். (சி. சி. 2, 58, சிவாக்.)

காமிய கருமம்—வேதம் முதலியவற்றில் விதிக்கப் பெற்ற தாய்ப் பயன் கருதிச் செய்யப்படும் கிரியை. (பிரபோத. 39, 13)

காமியம்—இச்சிக்கும் பொருள்; பயனை விரும்பிச் செய்யும் கிரியை: "காமியம் செய்து காலம் கழியாதே" (தேவா. 432, 8.)

காரண கேவலம்—காரணாவத்தை மூன்றனுள் ஆன்மாக்கள் சர்வ சங்கார காலத்தில் அசுத்த மாயா காரணத்திலே ஒடுங்கி ஆணவமலத்தாலே மறைப்புண்டு சிருட்டி காலமளவும் ஒன்றும் அறியாமல் கிடக்கும் அவத்தை. (சிவப். கட். 15.)

காரண சகலம்—காரணாவத்தை மூன்றனுள் ஆன்மாக்கள் தேகமெடுத்துப் பிறப்பு இறப்புகளுக்கு உட்படும் அவத்தை. (சிவப். கட். 15.)

காரண மாயை—தனு கரண புவன போகங்களுக்கு முதற் காரணமாயுள்ள மாயை. (சி. சி. 2, 50, நிரம்ப.)

காரிடம்—மழை: "கார் காலம் பயில்வித் தெல்லாம் காரிடம் அதனிற்காட்டும்." (சி. சி. 1, 9.)

காரிய கேவலம்—சரீரத்தைப் பெற்ற ஆன்மா ஐம்புல நுகர்ச்சி நீங்கி இளைப்பாறும் பொருட்டு மூலாதாரத்தில் ஒடுங்கிக் கிடக்கும் நிலை.

காரிய சகலம்—உடலைப் பெற்ற ஆன்மா வியாபரித்து ஐம்புலன்களை நுகரும் நிலை.

காரிய சுத்தம்—உடலைப் பெற்ற ஆன்மா ஒடுக்கமும் வியாபரமும் இன்றி இறைவன் திருவடியை நினைந்து செல்லும் நிலை.

காரிய மாயை— மூலப் பிரகிருதி (சி. சி. 2, 57, நிரம்.)

காரிய விலக்கணை—காரணம் காரியத்துக்கு உபசரித்துக் கூறப்படுவது. (சி. சி. 4, 28, சிவஞா.)

காரியாவத்தை—[1]காரிய கேவலம், காரிய சகலம், காரிய சுத்தம் என முத்திறப்பட்டதாய் உடலைப் பெற்ற ஆன்மா விற்கு உரியதாயுள்ள நிலை; [2]காரியாவத்தை மூன்றனுள் ஒவ் வொன்றிலும் ஆன்மாவிற்கு உளவாகிய சாக்கிராதி ஐந்து நிலைகள்.

கால தத்துவம்—ஆன்மபோகங்களை அளக்கும், காலம் என் னும் சுத்தா சுத்த தத்துவம். (சி. போ. பா. 2, 2, பக் 144.)

காலாதீதன்—காலம் கடந்த கடவுள்: "காலாதீதனை ஈசுவரன்" (சி. சி. 2, 54, சிவாக்.)

காலாரி—எமனைச் சங்கரித்தற்காக எடுத்த சிவ மூர்த்தம்.

காலேசுரவாதி—காலத்தையே கடவுள் என வாதிப்பவன். (சி. சி. 8, 12, ஞானப்.)

கான்மியம்—மும்மலத்துள் ஒன்றாய், அநாதியாய் உள்ள கன்ம மலம். (சி. சி. 2, 39, ஞானப்.)

## கி

கிஞ்சிஞ்ஞத்துவம் — சிற்றறிவுடைமை. (சி. சி. 4, 21, ஞானப்.)

கிஞ்சிஞ்ஞன்—[1]சிற்றறிவினன்; [2]சீவான்மா.

கிஞ்சித்துவம்—சிற்றறிவு (யாழ். அக.)

கிரியா சத்தி - பஞ்ச சத்திகளுள் ஒன்றாகி உலகப் படைப்பு முதலியவைகளைச் செய்து கன்மங்களுக்கு ஈடாகத் தனுகரணங் களை ஆன்மாக்களுக்குக் கொடுக்கும் சிவ சத்தி. (சி. சி. 1, 63.)

கிரியாவதி—குண்ட மண்டலாதிகளையும் வேதிகளையும் புறத்தே அமைத்து ஆகமத்திற் கூறியபடி செய்யும் ஔத்திரி தீட்சை வகை. (சி. சி. 8, 3, சிவாக்.)

கிரியையில் ஞானம்—அந்தரியாக உறைப்பின்கண் நிகழும் ஓர் அனுபவ உணர்வு (சி. போ. பா. 8, 1, 2, பக். 358.)

கிரியையில் யோகம்—மானச பூசையாகிய அந்தரியாகம் (சி. போ. பா. 8, 1,2, பக் 358.)

கிரியையிற் கிரியை—சிவாகமத்தில் கூறிய சுத்தி முன்னாக சிவலிங்க வடிவில் செய்யும் பூசனை. (சி. போ. பா. பக். 357)

கிரியையிற் சரியை—சிவ பூசைக்கு வேண்டப்படும் உபகரணங்கள் எல்லாம் செய்து கோடல். (சி. போ. பா. பக். 357.)

கிரீடாப் பிரம வாதி—உலகத்தில் உள்ள தோற்றங்கள் எல்லாம், பிரமத்தின் விளையாட்டு என்று வாதிக்கும் சமயத்தான். (தத்துவ நிஜா. 94.)

கீ

கீழா லவத்தை - சாக்கிரத்தினின்று துரியாதீதம் வரையில் உள்ள ஐந்து நிலையிலும் ஆன்மா கீழ் நோக்கி நெற்றியிலிருந்து மூலாதாரத்திற்குச் செல்லும் நிலை.

கு

குடந்தம் - [1]கைகூப்பி மெய் வளைத்துச் செய்யும் வழிபாடு: "குடந்தம்பட்டுக் கொழு மலர் சிதறி" (திருமுரு. 229; திவா.) [2]நால் விரல் முடக்கிப் பெருவிரல் நிறுத்தி நெஞ்சிடை வைக்கை (திருமுரு. பக். 47, அடிக் குறிப்பு.); [3]குடம். (பிங்.)

குடாகாயம்—குடத்தால் அளவுபடுத்தப்பட்ட ஆகாயம்: "குடாகாய வாகாயக் கூத்து" (சி. போ. 2, 3, 2.)

குடிலை—[1]சுத்தமாயை (சி போ. பா. 2, 2, பக். 133. புதுப்.); [2]பிரணவம்: "குடிலையம் பொருட்கு" (கந்தபு. கடவுள் வாழ். 14.)

குடீசகம்—நால்வகைத் துறவுகளுள் மிக எளிதானதும் தன் மக்கள் அல்லது சுற்றத்தாரால் உண்டி முதலியன பெற்றுப் பர்ணசாலையில் வசித்தற்கு உரியதுமான சன்னியாசம்: "பட்ட துயர் கெடும் குடீசகம்" (கைவல். சந்தே. 158.)

குண்டலி—[1]நாபித்தானம்: "குண்டலியான் அனலை ஓம்பி." (சி. சி. 9, 8); [2]குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவில் இருப்பதாகக் கருதும் மூலாதாரம். (ஔவை. கு. நினைப்புறு 2.)

குண்டலினி—[1]மகாமாயை. (சி. சி. 1, 57, சிவாக்.); [2]மூலாதாரத்தில் உள்ள பாம்பின் வடிவமைந்த ஒரு சத்தி. (பிரபோத. 44, 20.)

குண குணி பாவம்—பண்பும் பண்பியும் போலப் பிரியாமல் இருக்கும் நிலை: "அனல் வெம்மையும் போல்......குண குணி பாவமாகி" (சி. சி. 4, 6.)

குண தத்துவம்—[1]விளங்காமல் நின்ற மூலப் பகுதி முக்குண மாய்ப் பகுப்படைந்து விளங்கிச் சமமாய் நின்ற நிலை (சி. போ. பா. 2, 2, பக். 161.); [2]குண தத்துவத்திற்கு உரிய உலகம்.

குணக்கர நியாயம்—மரம் புத்தகம் முதலியவற்றில் புழுவின் அரிப்பு எழுத்தாதல் போலத் தற்செயலாக நேர்வதைக் குறிக்கும் நெறி. (நுண்பொருள் மாலை.)

கும்பகம்—பூரித்த வாயுவை உள்ளே நிறுத்தும் பிராண யாம வகை: "ஆறுதல் கும்பகம்" (திருமந்.568.)

குய்யதராட்டக புவனம்—கயை, குருக்கேத்திரம், நாகலம், நகலம், விமலம், அட்டகாசம், மகேந்திரம், பீமேசம்; பிரதிட்டாகலையின் பகுதியாய் வாயு அண்டத்திலுள்ள புவனம். (சி. போ பா. 2, 3, 214 )

குராதர்—குண தத்துவ அதிபர் எண்மரில் ஒருவர் (சி. சி.) 8, 2. மறைஞா.)

### கூ

கூடஸ்த சைதன்யம்—நிர் விஞ்ஞான ரூபமாயுள்ள நிர் விகாரப் பிரமம்.

கூஷ்மாண்ட தானம்—கெட்டசாவைப் போக்கச் செய்யும் தானங்களுள் முதலதான பூசனிக்காய் தானம்.

### கெ

கெடலூழ்—தீவினை: "கெடல் ஊழ் ஆதலின் கேட்ட பொழுதே ........ஆருணி தெளிந்து" (பெருங். மகத. 25, 168.)

### கே

கேசரிமுத்திரை—உள்நாக்கைத் தொடும்படி, நாக்கு நுனி யைத் திருப்பிக் கொண்டு செய்யும் யோகம்.

கேசரி யாசனம்-கணைக்கால்கள் பிருட்டத்தைத் தொடவும், விரிந்த கைவிரல்கள் தொடையில் படவும், வாய்மலர்ந்தும், பார்வை மூக்கு நுனியை நோக்கியும் இருக்கும் யோகாசன வகை.

கேட்டு முட்டு—புறச்சமயத்தோரைப் பற்றிக் கேள்விப் பட்டதனல் சைனர் மேற்கொள்ளும் தீட்டு: "கேட்டு முட்டி யானுமென் றியம்பி." (பெரியபு. திருஞான. 684.)

கேத்திரக்கியன்--(சரீரத்தில் உள்ள அறிவுப் பொருள்.) ஆன்மா: "கேத்திரக்கியனைத் தொடர்ந்து" (வாயுசங், பஞ்சப்பி. 2.)

கேவலக் கிடை—ஆணவத்தால் மறைப்புண்டு அமூர்த்தமாய்ச் செயல் அற்றுக் கிடக்கும் ஆன்மாவின் நிலை. (சி. சி. 4, 38.)

கேவல சாக்கிரம்—கேவலக்கிடைக்குச் செல்லும்பொழுதும் அதன் கணின்று மீளும்பொழுதும் ஆன்மா நிற்கும் நிலைகளுள் ஒன்றுகிய சாக்கிரம்.

கேவல சுழுத்தி—கேவலக் கிடைக்குச் செல்லும்பொழுதும் அதன்கணின்று மீளும்பொழுதும் ஆன்மா நிற்கும் நிலைகளுள் ஒன்றுகிய சுழுத்தி.

கேவல சைதன்யம் ஆன்மா ஞான சொருபமாக உள்ள நிலை: "கேவல சைதன்யமாகிய ஆத்மாவினிடம்" (சித். சிகா. 197, 2, உரை.)

கேவல சொப்பனம்—கேவலக் கிடைக்குச் செல்லும் பொழுதும் அதன்கணின்று மீளும்பொழுதும் ஆன்மா நிற்கும் நிலைகளுள் ஒன்றுகிய சொப்பனம்.

கேவல ஞானம்—திரிகால ஞானம்: "கேவல ஞானத்துக்கு முன் காணும் காட்சியை" (சீவக. 3081, உரை.)

கேவல துரியம்—கேவலக் கிடைக்குச் செல்லும்பொழுதும் அதன்கணின்று மீளும்பொழுதும், ஆன்மா நிற்கும் நிலைகளுள் ஒன்றுகிய துரியம்.

கேவல துரியாதீதம்—கேவலக் கிடைக்குச் செல்லும் பொழுதும், அதன்கணின்று மீளும்பொழுதும், ஆன்மா நிற்கும் நிலைகளுள் ஒன்றுகிய துரியாதீதம்.

கேவலப் பொருள்—பரப்பிரமம்: "கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டுதலான்." (குறள். 358, உரை.)

கேவல உணர்வு—பர ஞானம் (குறள். 352, உரை.)

கேவலாவத்தை—[1]கீழாலவத்தை. (சிவப். கட்.); [2]காரண கேவலம். (திருவால. கட்)

## கை

**கை**ங்கரியம்—தொண்டு

கைஞ் ஞானம்—அற்ப அறிவு: "கைஞ்ஞானம் கொண் டொழுகும் காரறிவாளர்" (நாலடி, 311.)

## கொ

**கொ**ண்டிகை—கமண்டலம். (திவா.)

கொம்பாலயம்—தெய்வம் தங்குவதாகக் கொண்டு, பூசிக் கப் பெறும் சில மரக்கிளைகள்.

## கோ

**கோ**யிற் புராணம்—சிதம்பர மான்மியத்தைக் குறித்து உமாபதி சிவாசாரியர் இயற்றிய புராணம்.

## கௌ

**கௌ**ணவதாரம்—ஒரு நிமித்தம் பற்றித் தன் சக்தியை ஒருவர்பால் ஏறிட்டு நிகழ்த்தும் தெய்வ அவதாரம்.

கௌமாரம்—[1]இளம் பருவம்; [2]முருகக் கடவுளே பரம் பொருள் என்று வழிபடும் சமயம்.

## ச

**ச**கசம்—கூட உண்டானது. (சி. சி. 3, 4, சிவாக்.)

சகச மலம்—உயிர்களுக்கு இயல்பாய் உளதாகிய ஆணவ மலம் (சிவப்பிர 2, 20, உரை.)

சக சரிதம்—உடன் நிகழ்வது: "ஆணவ சகசரிதமாக" (சி. சி. 2, 80, சிவாக்.)

சகசவேது—கூறப்பெற்ற பண்பினால் பண்பியை அறியும் ஏது. (சி. சி. அளவை. 10, சிவாக்.)

சகம ார்க்கம்—சாரூப்பியத்தைப் பெறுதற்கு உரிய யோக நெறி: "சகமார்க்கம் ...அட்டாங்க யோக முற்றும் உழத்தல்" (சி. சி. 8, 21.)

சகள தத்துவம்—கிரியை மிகுந்து ஞானம்குறைந்த ஈச்சுர தத்துவம். (சி. சி. 1, 65, ஞானப்.)

சகளத் திருமேனி—சிவனது உருவ வடிவம்.

சகள நிட்களம்—இலிங்கமாகிய சிவனது அருவுருவத் திருமேனி (சி. போ. பா. 8, 1, 359.)

சகளம்—உருவத் திருமேனி: "சகளமாய் வந்ததென்று உந்தீபற" (திருவுந்தி. 1.)

சகளன்—உருவத் திருமேனி கொண்ட சிவன். (சி. சி. 1, 65, ஞானப்.)

சகளீகரணஞ் செய்தல்—செபம் முதலியவற்றில் அங்க நியாசம், கர நியாசங்கள் செய்தல் (சங். அக.)

சகுணத் தியானம்—கடவுளைக் குண உருவங்கள் உடையராகத் தியானிக்கை.

சங்காதம்—[1]கூட்டம் (சி சி. 1, 14, சிவாக்.); [2]சங்காரம்; [3]ஒரு நரகம்; [4]பாதங்களைக் கூட்டி ஐந்தடி எடுத்து வைக்கும் நடிப்பு வகை.

சங்கி—சம்பந்தமுடையது: "விஷயசங்கியாய் இருக்கும் ஆணவ தர்மம்" (சி. சி. 2, 56 சிவாக்.)

சங்கிதம்—சந்தேகிக்கப்பட்டது (சி. சி. 6, 5, சிவாக்.)

சங்கிரகணம்—ஏற்றுக் கொள்ளுகை. (சங். அக.)

சங்கிரகம்—சுருக்கம்: "தர்க்க சங்கிரகம்."

சங்கிராந்த சமவாதம்—பாசுபதம் (சி போ. பா. அவை பக் 50.)

சங்கிராந்தம வாதம்—மலம் நீங்கிய ஆன்மாவின்கண் திருவருள் பிரதிபலித்து, அதனை அருட்சொரூபம் ஆக்கும் என்று கூறும் சமயம்.' (சங்கற்ப. 11.)

சங்கிராந்த வாதி—சங்கிராந்த வாத சமயத்தைச் சார்ந்தவன் (சி. சி. 9, 1, நிரம்ப.)

சங்கிராந்தித்தல் — சம்பந்தப்படுதல்: "முத்தான்மாவில் சிவன் சத்? சங்கிராந்திக்கும் (சி. சி. 10, 1, ஞானப்.)

சங்குசிதம்—சுருக்கமானது (சி, சி. 4, 36, சிவாக்.)

சச்சிதானந்தன்—உண்மை, அறிவு, ஆனந்தம் என்னும் முக்குணங்களையுடைய பரம்பொருள்.

சச்சிதானந்தை—உண்மை,அறிவு,ஆனந்தம் என்னும் முக்குணங்களையுடைய சத்தி சொரூபம்: "அகண்டாகார சச்சிதானந்தையை அறியாதபேர்" (சி. சி. 1, 48, சிவாக்.)

சசியம்—[1] பயிர் (சி. சி. 2, 58, சிவாக்.); [2] தானியம் காய்கனி முதலிய விளைபொருள்.

சஞ்சிதம்—[1] சேர்த்துவைக்கப்பட்டது; [2] அனாதியாய் ஈட்டப்பட்டுள்ள கருமத்தில் அனுபவித்துத் தீர்ந்தது போக எஞ்சியது: "பிராயச் சித்தம் சஞ்சிதம் தவிர்க்குமன்றே" (பிரபோத. 39. 18)

சட்சு தீட்சை—நயன தீட்சை

சத்தப் பிரபஞ்சம்—சுத்தப் பிரபஞ்சத்துள் ஒன்றாகிய சொற் பிரபஞ்சம். (சி. போ. பக். 136 )

சத்தப் பிரம வாதம்—நாதமே பிரமம் என்னும் கொள்கை. (சி. போ. பா. அவை.)

சத்தா மாத்திரம்—கேவலம் உள்ளதாய் இருக்கை: "சுயம் பிரகாசமாய்...........சத்தா மாத்திரமாய் இருக்கும் என்னில்' (சி.சி. 6, 9, ஞானப்.)

சத்தி தத்துவம்—சுத்த தத்துவங்களுள் ஒன்றாய்ச் சிவனது கிரியா சத்திக்கு இடமாய்ச் சுத்த மாயை காரியப்படுவதாயுள்ள விருத்தி. (சி. போ. பா. 2, 2, பக். 139.)

சத்தி நிபாதம்—பக்குவமுடைய ஆன்மாவிலே திரு அருள் பதிகை: "ஒழிப்பன் மலம் சதுர்த்தா சத்திநிபாதத்தால்" (சி. சி. 8, 2.)

சத்தி மத்து—ஞானவதி: "சத்தி மத்தால் ஆதல் அத்துவா சுத்தி பண்ணி" (சி. சி 8, 6.)

சத்திமான்—[1]ஆற்றல் படைத்தவன்: "சத்தி அநேகமாகில் சத்திமானும் அநேகமாய் (சி.சி. 1, 61, சிவாக்.); [2]சிவன் நோக்கி நின்றவழிக் காரியப்படுதற்கு யோக்கிய மாகும் சுத்த மாயையின் பகுதி; [3]காரியத்திற்கு யோக்கியமாகும் படி சுத்த மாயையை நோக்கி நிற்கும் சிவன். (சி போ பா. 2, 2, பக் 139.)

சத்தியோசாதம்—[1]சிவன் ஐம் முகங்களுள் மேற்கு நோக்கியது: "சத்தியோசாதத்தில் காமிகமாதி ஐந்தும்" (சைவ ச. பொது; 331); [2]ஒரு சைவ மந்திரம்: "சத்தியோசாதத்து அபிடேகம் சாதிக்க" (சைவ ச. பொது. 136.)

சத்தியோ நிர்வாண தீட்சை—மாணுக்கனை உடனே வீடு பேறு எய்துவிக்கும் நிர்வாண தீட்சை வகை (சி. சி. 8, 4, சிவஞா.)

சத்தி ரூபம்—சிவனது அருள் வடிவம்.

சதசத்து—[1]உள்ளதும் இல்லதும்: "ஆன்மா நித்தனுய்ச் சதசத் தாகி" (சி. சி. 7, 2.): [2]ஆன்மா: "தத்துவம் ......சதசத்தும் அன்று" (சி. சி. 6, 5.)

சதாசிவம்—[1]பஞ்ச கர்த்தாக்களில் முதல்வராய் உயிர் களுக்கு அருள் செய்யும் பொருட்டுச் சிவன் மேற்கொள்ளும் மூர்த்தம். (சி. சி. 1, 65.); [2]உருவாய் விளங்குதற்கு முன் உயிர் களின் பொருட்டுச் சிவன் மேற்கொள்ளும் அருவுருவாய மூர்த்தம்: "சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவம் திகழும் ஈசன்." (சி. சி. 2, 74.)

சதாசிவ வடிவம்—இலிங்கமாய் அருவுருவத் திருமேனி கொண்ட சிவ வடிவம்.

சதாசிவன்—அநுக்கிரக கிருத்தியம் செய்யும் சிவ மூர்த்தி.

சதா நிருத்த மூர்த்தி—பஞ்சாக்கிரமே திருமேனியாகக் கொண்டு நந்தியாதி பத்தர்கள் தரிசிக்கும்படி பஞ்சகிருத்திய தாண்டவம் செய்யும் சிவ மூர்த்தம் (சங். அக.)

சதேகை—சீவன் முத்தித் தன்மையில் நிட்டையைப் பொருந்தி இருக்கை (சி. சி. 4, 35 மறை.)

சந்தான குரவர்—சைவ சித்தாந்தத்தைப் பரவச் செய்த மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியர் என்ற ஆசிரியர் நால்வர்.

சந்தோ விசிதி—வேதத்தின் சந்தங்களை உணர்த்தும் நூல். (சி. போ. பா. 1, 1, பக். 62.)

சப்த பங்கி—உண்டாம்; இல்லையாம்; உண்டும் இல்லையும் ஆம்; சொல்லொணாததாம்; உண்டுமாம் சொல்லொணாததுமாம்; இல்லையுமாம் சொல்லொணாததுமாம்; உண்டும் இல்லையமாம் சொல்லொணாததுமாம்; எனச் சைனர் கூறும் எழுவகை வாத முறை (சி. போ. பா. பக். 40.)

சப்த பதார்த்தம்—[1] திரவியம், குணம், கிரியை, சாமானியம்; விசேடம், சமவாயம், அபாவம் என்ற எழுவகைப் பொருட்கள்; [2] சைன சம்பிரதாயத்திற்கு உரிய சீவம், நிர்ச் சீவம், சற்சீவம், நிர்ச்சரன், ஆசிரவம், பந்தம், மோட்சம் ஆகிய ஏழு பொருள்கள், (வேதா. சூ. 24, உரை.)

சப்பிரதி பாசாக்கிரம்—விஷயங்களை அனுபவிக்க வல்ல ஆன்மாவின் சாக்கிர நிலை. (சி. சி. 4, 33, சிவாக்).

சபாகு சுமம்—செம்பரத்தை மலர் (சி. சி. 2, 67, சிவாக்.)

சபீச தீட்சை—அறிவு ஒழுக்கங்களில் சிறந்துள்ள உத்தம சீடர்க்குச் சைவ சமயாசார கருமங்களைச் செய்து வரும்படி உபதேசிக்கும் கிரியாவதி தீட்சை வகை. (சி. சி. 8, 3, சிவாக்.)

சம்பு பட்சம்—சுத்த மாயைப் பிரபஞ்சத்தில் தொழில் புரியும் சிவ பேதங்கள். (சி. போ. பா. 2, 4, பக் 223.)

சம்பரம்பம்—பரபரப்பு: "கிரியா சத்தி சம்பரம்பத்தோடு அகங்காரம் கிளம்பி" (சி. சி. 2, 62, ஞானப்.)

சமய தீட்சை—தீட்சை மூன்றனுள் சைவ சமயாசாரத்தை அனுட்டிக்கும்படி முதலாவதாகச் செய்யப் படுவது. (சைவச. மாணுக். 5, உரை.)

சமய பதார்த்தம்—சைவ சமயத்தார் கொள்ளற்குரிய பதி பசு, பாசம், பதி கிருத்தியம், பசு கருமம், பசு போகம் முத்தி சாதனம், முத்தி என்ற எண்வகைப் பொருள்கள் (சைவப். 67.)

சம வாத சைவம்—முத்தி நிலையில் சிவமும் ஆன்மாவும் ஒக்கும் எனக் கொள்ளும் சைவமத பேதம். (சி. சி. 6, 7, சிவஞா.

சமவாயம்—[1] கூட்டம்; [2] சன்னிகரிடம் ஆறனுள் சாதி வியத்திகட்கும், குண குணிகட்கும், அவயவ அவயவிகட்கும், கருத்தா கருமங்கட்கும் உள்ள பிரிவில்லாச் சம்பந்தம்.

சமவாயம் என்னும் வடமொழி தமிழில் நீக்கமின்றி நிற்றல் என மொழி பெயர்த்து வழங்கப்படும். (சி. போ. சிற். 2, 4,)

சம வாயி காரணம்—முதற்காரணம் (சி. சி. 1, 18, ஞானப்.)

சமவேதம்—பிறிதோடு நீக்கம் இன்றி இருக்கும் பொருள்: "முதல்வன்... .....சிற்சத்தியோடு சமவேதமாய் நிற்பன்." (சி போ. சிற். 2, 4.)

சமனை—[1] ஆன்மா பெத்த நிலையில் அடையக் கூடிய உத்தம பதவி. (சிவசம. 35.); [2] சிவ சத்தி (சதாசிவ. 26.)

சமாதி—[1] அட்டாங்க யோகத்துள் மனத்தைப் பரம்பொருளோடு ஐக்கியப்படுத்தி நிறுத்துகை. (சிலப். 14, 11, உரை.) [2] சங்கற்பம்; "பிஞ்ஞகன் சமாதியாலே" (திருவாலவா. 16, 5); [3] சமாதிக்குழி; [4] குட்ட ரோகியை உயிருடன் புதைக்கை; [5] ஒன்றன் வினையை ஒப்புடைப் பொருள் மேல் ஏற்றிச் சொல்லுகை ஆகிய செய்யுட் குணம். (தண்டி. 24.)

சமீப லக்ஷணை—ஒரு பொருளை உணர்த்தும் சொல், அப்பொருளினை அடுத்துள்ள பிறிதொரு பொருளை உணர்த்துவதாகிய இலக்கணை; கங்கைக்கண் இடைச்சேரி. (சி. சி. 4, 28, சிவாக்.)

சமுசயம்—[1] ஐயம்; [2] குற்றம் பற்றிக் கொள்ளும் சந்தேகம்.

சமுத்திர கலச நியாயம் — சமுத்திரத்தில் நிரம்ப நீர் இருப்பினும் முகக்கும் முகவை யளவே நீர் கொள்ளுதல் போலும் நெறி. (சி. சி. 8, 13, சிவாக் )

சர்வஞ்ஞத்துவம்—முற்றும் உணர்ந்தவனாய் இருக்கும் தன்மை.

சர்வந்தர்யாமி — கடவுள். (எங்கும் உள்ளிருந்து நியமிப்பவன்.)

சரம தேகதாரி—முத்திக்கு முன் உள்ள கடைசி சரீரத்தை உடையவன் (ஜைனம்)

சர மூர்த்தி—(நடமாடும் சிவமூர்த்தம்) சிவனடியார். (சி. சி. 2, 28, சிவாக்.)

சராயுசம்—உயிர்தோற்றம் நான்கனுள் கருப்பையினின்று தோன்றுவன. (சி. சி. 2, 89.)

சரியாவான்—சரியை நிலையில் ஒழுகுபவன். (சி. சி. 12, 5, சிவாக்.)

சரியை—[1]ஒழுக்கம்; [2]சிவனைச் சகளத் திருமேனியராகக் கோயிலில் வைத்து வழிபடுகை. (சி. போ. பா. 8, 1, பக் 359.); [3]பிச்சை (பிங்)

சரியையில் ஞானம்—சிவபெருமானைக் குறித்த தியான பாவனையில் உறைப்பான ஓர் அனுபவ உணர்ச்சி. (சி. போ. பா. 8, 1, பக். 357 )

சரியையில் யோகம்—மனத்தின்கண் சிவபெருமானைத் தியானிக்கை (சி. போ. பா. 8, 1, 357.)

சரியையிற் கிரியை—ஆவரண மூர்த்திகளில் ஒருவரைப் பூசிக்கை (சி. போ. பா. 8, 1, பக். 357.)

சரியையிற் சரியை—திருக்கோயிலில் அலகிடல் மெழுகல் முதலிய திருப்பணிச் செயல். (சி. போ. பா. 8, 1, பக். 357.)

சரீர சரீரி பாவம் - சரீரத்திற்கும் சரீரம் உடையானுக்கும் உள்ள சம்பந்தம். (சி. போ. பா. 8, 4; பக். 375)

சரீரத் திரயம்—தூல சூக்கும காரண சரீரங்கள்.

சலாசல லிங்கம்—ஆன்மார்த்த பரார்த்த பூசைகளுக்கு உரிய வாணலிங்கம் இரத்தினலிங்கம் முதலிய சிவலிங்கங்கள். (சைவ ச. பொது. 123.)

சலாசனம்—பூசையில் சிவலிங்கம் அமைத்தற்கு உரிய அனந்தர், தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், பதுமம் என்ற அறுவகை ஆசனம். (சைவ ச. பொது. 523.)

சவிகற்பக் காட்சி—ஒரு பொருளின் பெயர் சாதி குணம் முதலிய எல்லா கூறுகளும் புலப்படும் ஞானம். (சி. சி. அளவை. 3, மறைஞா.)

சவிகற்ப சமாதி—ஞேயம், ஞாதுரு, ஞானம் என்ற வேறு பாட்டு உணர்ச்சியோடு விளங்கும் ஐக்கியபாவனை ஆகிய யோக நிலை.

சவிகற்ப ஞானம்—சவிகற்பக் காட்சி. (சி. சி. அளவை. 3, ஞான.)

சவிகற்பம்—சவிகற்பக் காட்சி.(சி. சி. அளவை. 1, சிவஞா.)

சவிகற்பித்தல்—ஒரு பொருளைப் பெயர் சாதி குணம் முதலியவற்றால் வேறு பிரித்தல்: "சற்றே சவிகற்பித் தறிதல்" (சி. சி. பாயி. சத்தி. ஞானப்.)

சற்காரிய வாதம்—உற்பத்திக்கு முன்னும், காரியப் பொருள் காரணப் பொருளில் உள்ளது என்னும் கொள்கை. (சி. போ. பா. 1, 2, பக். 64.)

சன்னிகரிடம்—காட்சிக்குக் காரணமாய்ப் பொறியும் புலனும் அடுத்து நிற்கும் சையோகம், சையுத்த சமவாயம், சையுத்த சமவேத சமவாயம், சமவாயம், சம வேத சமவாயம், விசேடண விசேடிய பாவமாகிய அறுவகைச் சம்பந்தம். (சி. சி. அளவை. 6, மறைஞா.)

சன்னியாசி—குடீசகன், பகூதகன், ஹம்சன், பரமஹம்சன் என்ற நான்கு வகைத் துறவிகள்.

சன்னிரோதனம்—கடவுளது சான்னித்தியத்தை ஓரிடத்து நிறுத்துகை: "தாவில் ஆவாகன சன்னிதான சன்னிரோதனந் தான் மேவ அமைத்து" (சிவரக. பசாசுமோ. 11.)

சன்னிரோதன முத்திரை—முஷ்டிகளை இணைக்கும் கை முத்திரை வகை. (செந். X, 425.)

சனன வைராக்கியம்—தீரா வியாதி முதலிய துன்பங்களால் வாழ்வில் உண்டாகும் வெறுப்பு. (சி. சி. 4, 2, சிவாக்.)

## சா

சாக்கிரக் கருவி—இந்திரியங்கள் தன்மாத்திரைகள் அந்தக் கரணங்கள் பிராணாதி வாயுக்கள் ஆன்மா என்னும் சாக்கிராவத்தைக்கு உரிய கருவிகள். (சி. சி. 4. 34.)

சாக்கிரத் தானம்—சாக்கிரத்தில் ஆன்மாவின் இடமாகக் கருதும் புருவ மத்தியம்: "ஆன்மாவானவன் சாக்கிரத் தானமாகிய புருவ மத்தியத்தைப் பொருந்தும்போது" (சி. சி. 4, 33, மறைஞா.)

சாக்கிரத்திலதீதம்—ஆன்மா விடயங்களை அனுபவிக்கிற வேளையில் பிராண வாயுவும் இயங்காமல் ஒன்றையும் அறியாமல் மூர்ச்சித்து மயங்கி நிற்கும் நிலை. (ஞானா. கட். 30.)

சாக்கிரத்திற் சாக்கிரம்—ஆன்மா தத்துவ தாத்துவிகங்களோடு கூடி விடயங்களை அனுபவிக்கும் நிலை (ஞானா. கட். 30.)

சாக்கிரத்திற் சுழுத்தி—ஆன்மா சித்தத்துடனும் பிராண வாயுவுடனும் கூடி அறிவுணர்ச்சி முதலியன அடங்கி நிற்கும் நிலை. (ஞானு. கட். 30.)

சாக்கிரத்திற் சொற்பனம் — ஆன்மா சித்தத்துடனும் பிராணுதி வாயுவுடனும் கூடி அறிவுணர்ச்சி முதலியன தெளிவின்றி நிகழும் நிலை (ஞாஞ. கட். 30.)

சாக்கிரத்திற் றுரியம்—ஆன்மா சித்தம் அழிந்து பிராண வாயு சிறிதே இயங்கி நிற்கும் நிலை. (ஞாஞ. கட். 30.)

சாக்கிரத்திற் றுரியாதீதம்—சாக்கிரத்தில் அதீதம். (சி. சி. 4, 35, மறைஞா.)

சாக்கிர பாலன் — [சாக்கிர தசையில் விளங்குபவன்] ஆன்மா (சி. சி. 4, 33, மறைஞா.)

சாக்கிரம்—ஆன்மா புருவ மத்தியிடை நின்று தத்துவங் களுடன் கூடி விடய நுகர்ச்சியில் மெத்தென நிற்கும் நிலை. (சி. போ. பா. 4, 3, பக் 275. புது.)

சாக்கிராதீதம்—சாக்கிரத்தில் துரியாதீதம். (சிவப் பிர.)

சாகபசு நியாயம்—முன்னர்ப் பசு எனப் பொதுப் பெயரால் கூறிப் பின்னர்ச் சாகபசுவெனச் சிறப்புப் பெயரடையோடு பொது நீக்கிக் கூறுதலான் முன்னர்க் கூறிய பசுவும் சாகமே எனப் பொருள் கொள்ள நிற்பதோர் நெறி. (சி. போ. பா. 1, 2, பக். 73.)

சாங்கியம்–[1]கபிலரால் வெளிப்படுத்தப்பட்டதும் தத்துவங் கள் இருபத்தைந்து எனக் கணக்கிடுவதுமான ஒரு சமயம்: "இது சாங்கிய மதம் என்று எடுத்துரைப்போன்" (மணி. 27, 202.); [2]எண் கொண்டது: "அருவமாய்ப் பல சாங்கியமாய்" (சி. போ. பா. அவை.)

சாங்கேதிகம்—அடையாளம் கட்டுப்பாடு முதலியவற்றுல் நிகழ்வது: "லேகனக்ரியை அந்த அட்சரங்களினுடைய சாங்கேதிகத்துக்கு அபிவ்யஞ்சகம்" (சி. சி. 2, 62, சிவாக்.)

சாட்சாத்கரித்தல் — நேரே காணுதல்: "தியானித்துச் சமாதித்துச் சாட்சாத் கரிப்பன்" (சி. சி. 6, 6, ஞானப்.)

சாட்சாத்காரம் — நேரில் உணர்கை: "சாட்சாத்காரக் கிரமத்தில் அறிந்து" (சி. சி. 6, 6, ஞானப்.)

சாட்சுச தீட்சை—நயன தீட்சை: "சாட்சுச தீட்சையினலே ஆணவ மலத்தையும் நீக்கி" (சி. சி. 12, 7,சிவாக்.)

சாத்திர தீட்சை—தீட்சை ஏழனுள் சிவாகமத் தத்துவங்களை ஆசிரியன் மாணவனுக்கு உபதேசிப்பது: "சாத்திர தீட்சை யாவது சைவாகமாதி சிவசாத்திரப் பொருளைப் போதித்தலாம்" (சி. சி. 8, 3, உரை.)

சாதாக்கிய தத்துவம்-சுத்த தத்துவங்கள் ஐந்தனுள் ஒன்று கவும் சாதாக்கியத்துக்கு இடமாகவும் ஞானமும் கிரியையும் ஒத்து நிற்கும் நிலை. (சிவப் கட்.)

சாதாக்கியம்—சிவ சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம் கன்ம சதாக்கியம் என்று ஐவகைப்பட்டதும் சீவன் முத்தன், சாதகன், ஞானி இவர்கள் தியானிப்பதற்காக ஈசானன், தத்புருஷன், அகோரன், வாமதேவன், சத்தியோசாதன் என்ற மூர்த்தத்தை அடையுமாறு சத்தியுடன் சேர்ந்ததுமான பரசிவம்: "நிட்களம் அதனில் சகளம் நிறைந்திடும் அப்பெயர் சாதாக்கியம் எனலாகும்." (சதாசிவ. 5.)

சாதார தீக்கை—ஆசிரியனை அதிட்டித்து நின்று சிவபிரான் செய்யும் தீக்கை. (சி. சி. 8, 2, மறைஞா.)

சாதாரம்—ஆதாரத்தோடு கூடியது (சி. போ. பா. 8, 2, பக். 368)

சாந்தி கலை—சிவ சக்தியின் பஞ்ச கலைகளுள் அனுபவ ஞானம் பெற்ற ஆன்மாக்களுக்கு விருப்பு வெறுப்புச்சங்கற்பம் முதலிய எல்லாத் துன்பங்களும் சாந்தமாகச் செய்யும் கலை. (சி. போ. பா. 2, 2, பக். 143.)

சாந்தி யதீதகலை-சிவ சத்தியின் பஞ்ச கலைகளுள் அனுபவ ஞானம் பெற்று விருப்பு வெறுப்பு முதலிய எல்லாத் துன்பங் களும் சாந்தமாய் நின்ற ஆன்மாக்கட்கு அத் துன்பங்களை முற்றும் ஒழியச் செய்யும் கலை. (சி. போ. பா. 2, 2, பக். 143.)

சாம்பவி தீட்சை—ஆசிரியன் திருநோக்கினல் மாணுக்கனது பாசத்தைச் சேதிக்கும் தீட்சை. (சைவச. ஆசா. 26, உரை)

சாமு சித்தன்—பூர்வசன்ம நற்கன்மத்தால் ஞானத்துடன் பிறந்து சிவனிடத்தில் பத்தி செய்வோன் (சி.சி.பாயி.3,சிவஞா.)

சாயுச்சியம்—[1]சீவேச்சுவரர்களின் ஒப்புமை; [2]பதவி நான்கனுள் சீவான்மா பரமான்மாவுடன் ஐக்கியமாகும் நிலை: "சாரூப்பிய சாயுச்சியமென்று" (சி. சி. 8, 18)

சார்வாகம்—காட்சியே அளவை ஆவதென்றும், நிலம் நீர் தீ வளி எனப் பூதம் நான்கே என்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவால் மாய்வதாய் உடம்பின் கண்ணே அறிவு, மதுவின் கண் களிப்புப்போல வெளிப்பட்டு அழியும் என்றும், மறுமை இல்லை என்றும், சரீரமே ஆன்மா என்றும், கடவுள் இல்லை என்றும், இன்பமும் பொருளுமே புருஷார்த்தங்கள் என்றும் சொல்லும் உலகாயத மதம். (பிரபோத.)

சாரூப்பியம்—பதவி நான்கனுள் கடவுளைப் போல் வடிவம் பெறுகை: "சன்மார்க்க முத்திகள்... சாரூப்பிய சாயுச்சியம் என்று" (சி. சி. 8, 18)

சாலம்பம்—பற்றுக்கோடுள்ளது: "சாலம்ப ரகிதமான...... சாந்த பத வ்யோம நிலை" (தாயு. திருவருள்வி.3)

சாலிகா நாதம்—பூர்வ மீமாஞ்சகருள் சீவான்மாவினின்று பரமான்மா வேறில்லை என்னும் கொள்கையினரின் மதம்: "குருமதம் பாட்டம் சாலிகா நாதக் கொள்கை" (பிரபோத. 11,6.)

சாலோக்கியம்—சாலோகம்: "சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பியம்" (சி. சி. 8, 18)

சாலோகம்—நான்கு பதவிகளுள் கடவுளுடன் ஓரிடத்தில் உறைகை: "சாலோக தொண்டர்" (திருப் பு. 1140.)

சாவயவம்—அங்கங்களோடு கூடியது: "சாவயவம் எல்லாம் நாசத்தை அடையும்" (சி. சி. 4, 15, சிவாக்.)

சாஸ்திர தீட்சை—ஆசிரியன் மாணுக்கனுக்கு ஆகமப் பொருளை அறிவிக்கை (சி. சி. 8, 3, சிவாக்)

சாஷ்டாங்க நமஸ்காரம்—இரு கை, இரு முழங்கால், இரு தோள், மார்பு, நெற்றி ஆகிய எட்டு உறுப்புக்கள் நிலம் தீண்டச் செய்யும் வணக்கம்.

## சி

சிகுவை—[1]நாக்கு; [2]வாக்கு; [3]சிங்ஙுவை.

சிங்காவலோகனம்—சிங்க நோக்கு (சி. சி. 5, 9, சிவாக்)

சித்தம்—[1]மனம்; [2]முடிவான மனக் கொள்கை: "தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி" (திருவாச. 4, 42.); [3]அந்தக் கரணம் நான்கனுள் நிச்சயிக்கும் தொழிலுடைய உட்கருவி: "சிந்தித்தாய்ச் சித்தம்" (சி. போ. சிற். 4, 1, 2.); [4]திடம் (சூடா)

சித்தாந்த சைவம்—பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை மேற்கொண்டு மும் மலங்களும் சக்தி கெட ஆன்மா சத்திநிபாதம் அடைந்து திருஅருளால் முத்தி பெறும் என்று கொள்வதாகிய சைவ சமய பேதம். (சி. சி. 4, 13, உரை)

சித்தின்பம்—ஞானத்தால் விளையும் பேரின்பம்: "நித்திய ஆனந்தமாகிய சித்தின்பம்" (சி. போ. பா 6, 2 பக். 330.)

சிராவசம்—நாலு மாதத்தில் அழியும் கரு (சி. சி. 2, 93 மறைஞா.)

சிரீமத்து—[1]பாக்கியம்; [2]பெருமை தங்கியது (சி. சி. 11, 2, சிவாக். உரை)

சிவ கரணம்—ஆன்மாவின் செயலற்ற நிலையில் நிகழும் பதியின் செயல்.

சிவ கீதை—அகத்தியர் செய்ததாகக் கூறப்படும் ஒரு தமிழ் நூல். (சி. சி. 8, 16, சிவஞா.)

சிவ சங்கிராந்த வாத சைவம்—அகச் சமயம் ஆறனுள் மலங்கள் நீங்கினவழி இறைவன் திருஅருள் சங்கிரமித்தலால் ஆன்மா சிவமேயாய் நிற்கும் என்று கூறும் சைவ சமய வகை (சி. போ. பா. பக். 22, சுவாமிநா.)

சிவ சமவாத சைவம்—அகச் சமயம் ஆறனுள் மலங்கள் நீங்கிய வழி, அறிவு மாத்திரையாய் நிற்கும் ஆன்மாவை, இறைவன் தன் வடிவாக்கித் தனது பஞ்ச கிருத்தியங்களையும் இயற்றும்படி செய்வன் என்று கூறும் சைவ சமய வகை. (சி. போ. பா. பக். 22, சுவாமிநா.)

சிவ சாதாக்கியம்—அருள் சக்தியால் தியான மூர்த்தியாய் நின்ற சிவம். (சதாசிவ. 6, உரை.)

சிவ ஞான சித்தியார்—அருணந்தி சிவாசாரியரால் சிவ ஞான போதத்தை முதல் நூலாகக் கொண்டு விரிவாகச் செய்யப் பெற்றதும் பதினன்கு மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றுமாகிய சைவ சித்தாந்த சாத்திரம்

சிவ ஞான போதம்—மெய்கண்ட தேவரால் இயற்றப் பெற்றதும் மெய்கண்ட சாத்திரம் பதினன்கனுள் முதன்மை யானதும் பன்னிரண்டு சாத்திரங்களுக்கு மூலமாய் உள்ளதும் ஆகிய சைவ சித்தாந்த சாத்திரம்.

சிவ ஞானம்—பதி உணர்வு: "சிவஞானந் தனக்கு மேலாம்" (சி. சி. 2, 2.)

சிவத் துவிசர்—ஆதி சைவர்.

சிவ தத்துவம்—ஞான சத்தியின் இருப்பிடமும் சுத்த தத்துவங்களுள் ஒன்றும் ஆகிய தத்துவம். (சி. போ. பா. 2, 2, பக். 139.)

சிவ தரிசனம்—தச காரியத்துள் தனது சிறுமையையும் தன் முயற்சியால் அன்றித் தனக்கருள் புரிந்த இறைவனது பெருமையையும் தெளிய உணர்ந்து கொள்ளுதலாகிய ஆன்ம அனுபவ நிலை. (சிவப். கட்.)

சிவ தீட்சை—சிவ பூசையையும் சமய ஒழுக்கங்களையும் மேற் கொள்ளுதற்கு முன் சைவன் ஆவானுக்குக் குருவினல் செய்யத் தகும் சமயச் சடங்கு.

சிவ பதம்—சிவ பக்தர்கள் தத்தம் பக்குவத்திற்கு ஏற்ப அடையும் தானுள் உலகிருத்தல், தன்பால் இருத்தல், தானும் பதம் பெறல், தானுகுதல் என்ற நால்வகைச் சிவ பதவி (பிங்): "செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே" (திருவாச. 37, 3.)

சிவ புண்ணியம்—சிவனே முழுமுதற் கடவுள் எனக் கொண்டு அக் கடவுள் உவப்பச் செய்யும் நற்கருமங்கள். (சி. போ. பா. 8, 1, பக். 356.)

சிவ போகம்—தச காரியத்துள் ஒன்றுய்த் தன்னை இழந்து இறைவன் மயமான ஆன்மாவின் ஆனந்தானுபவ நிலை. (உண்மை நெறி. 6)

சிவ மயம்—[1] சிவமாம் தன்மை: "அவர் சிவமயமே ஆகலின்" (சி. போ. பா. அவை. பக். 4.); [2] கடிதம், நூல் முதலியவற்றின்

தொடக்கத்தில் சைவ சமயிகளால் வழங்கப்பெறும் மங்கல மொழி.

சிவ யோகம்—தச காரியத்துள் ஒன்ருய்த் தன்னே இழவாது இறைவனது எல்லாமாம் தன்மையை உணர்ந்து அவனேடு இசைந்து நிற்கும் ஆன்மாவின் அனுபவ நிலே. (உண்மை நெறி. 5. )

சிவ ரூபம்—தச காரியத்துள் ஒன்ருய் 'அருள் மயமான பஞ்ச கிருத்தியத்தால் தன்னேப் பந்தித்த மலங்களே நீக்கி இறைவன் முத்தி அளிப்போன்' என்று உணர்ந்து கொள்ளும் ஆன்மாவின் அனுபவ நிலே. (உண்மை நெறி 3.)

சிவாகமம்—சிவனிடமிருந்து தோன்றிய காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிர பேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், முகவிம்பம், புரோற் கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் ஆகிய இருபத்தெட்டு ஆகமங்கள். (சைவ பொது. 78.)

சிவாத்துவித சைவம்—அகச் சமயம் ஆறனுள் நிமித்த காரணனுகிய இறைவனே உலகிற்கு முதற் காரணம் ஆவன் என்று கூறும் சைவ சமய பேதம். (சி. போ. பா. 7, 1, பக். 337.)

சிவாய நம—சைவர்களால் போற்றப்படும் பஞ்சாட்சரம்: "சிவாய நம என்று சிந்தித்திருப் போர்க்கு" (நல்வழி, 15.)

சிவார்ப்பணம்—கிரியை முடிவில் அதனேச் சிவபிரானுக்கு அர்ப்பிக்கும் தொடர்: "சிவார்ப்பணம் எனக் கருதாத வழிக் குற்றம் என்று ஆகமங்கள் கூறியதூஉம்" (சி. போ. பா, 11, 1, பக். 224.)

சிவானுபூதி—சிவனேடு இரண்டறக் கலக்கும் அனுபவம்: "சிவானுபூதிச் செல்வர்."

சிவோகம் பாவனே—சிவன் நான் என்று பாவிக்கை: "சிவோகம் பாவனேயைத் தலேப்பட்டோன் ஆதல் அறிக" (சி. போ. சிற். 2, 1, 4, பக். 39.)

சின்மயன்—ஞான ரூபியான ஆன்மா: "மலினமறு சின் மயன்" (கைவல். சந். 120.)

சின்முத்திரை—உபதேசக் குறியாகச் சுட்டு விரல் நுனியைப் பெருவிரல் நுனியுடன் சேர்த்துக் காட்டும் ஞான முத்திரை: "மோன ஞானம் அமைத்த சின்முத்திரைக் கடலே" (தாயு. பன்மாலை. 1.)

## சீ

சீ கண்டர் —(விடத்தால் கரிய கழுத்தை உடையவர்) சிவ மூர்த்த வகையுள் ஒன்று: "அனந்தர் சீகண்டர் செய்யும் தொழிலும்" (சி. சி. 1, 19, சிவஞான.)

## சு

சுத்த சிவ பதம்—பரமுத்தி: "சத்திக்கு மேலே பராசத்தி தன்னுள்ளே சுத்த சிவபதம்" (திருமந். 1768)

சுத்த சைவம்—சைவம் பதினறனுள் பதி பசு பாசங்கள் அநாதி நித்தியம் என்றறிந்து பதி நிச்சயம் பிறந்து மௌனமே பொருளாய் நிட்டை கூடிச் சிவத்துடன் கூடுவதாக் கூறும் கொள்கை. (சி. போ. பா. அவையடக். 35.)

சுத்தப் பிரபஞ்சம் — சுத்த மாயையினின்று தோன்றிய பிரபஞ்சம்.

சுத்த மாயை—துக்கமின்றிச் சுகமே அளிப்பதும் சுத்தப் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமானதுமான மாயை. (ஞாஞ. கட். 11.)

சுத்த வித்தியா தத்துவம்—சுத்த தத்துவங்கள் ஐந்தனுள் கிரியை குறைந்து ஞானம் ஏறி ஈசன் அதிட்டித்து நிற்கும் தத்துவம். (திருவால. கட்)

சுத்தா சுத்த தத்துவம் —கால தத்துவம், நியதி தத்துவம், கலா தத்துவம், வித்தியா தத்துவம், அராக தத்துவம், புருட தத்துவம், மூலப் பகுதி என ஏழு பிரிவினதாய்ச் சுத்தமும் அசுத் தமும் கலந்த தத்துவ பேதம். (சிவப். கட், 4.)

சுத்தாத்துவா—விந்துவில் உண்டான பிரபஞ்சம் (சி. சி. 1, 57, சிவாக்.)

சுத்தாத்துவைதம்—சீவான்மா பரமான்மாவுடன் இரண் டறக் கலந்து அனுபவிக்கும் நிலை.

சுத்தாவத்தை—[1] நின்மல சாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதம் என ஐவகையினதாய் மலம் நீங்கிப் பிறவி அற்று ஆன்மா சுத்தமாய் இருக்கும் நிலை (சி. சி. 4, 37.); [2] காரண சுத்தம். (திருவால. கட். 35.)

சுத்தீகரணக் கிரியை—பரிசுத்தம் உண்டாக்குதற்கு உரிய சோடணம், தகனம், பிலாவனம் என்னும் மூவகைக் கிரியை.

சுந்தோபசுந்த நியாயம்—சுந்தன் உபசுந்தன் என்ற சகோதரர் இருவரும் திலோத்தமையை விரும்பி அவள் பொருட்டுப் போரிட்டு மாய்ந்தாற் போல ஒன்றனை ஒன்று கெடுக்கும் நெறி: "அவை தம்முள் ஒன்முன் ஒன்று அடிக்கப் பட்டுச் சுந்தோபசுந்த நியாயமாய்க் கெட்டு ஒழியும்" (சி. போ. பா. பக். 17, சுவாமி.)

சுப்பிர தீபம் — [1] மிக்க ஒளி; [2] கூர்மையான அறிவு.

சுரோத்திரம்—காது: "வாக்காதி சுரோத்திராதியும்" (தாயு கருணாகர. 2.)

சுவச்சம்—[1] தெளிவு: "ஆகாசம் சுவச்சமாகியும்" (சி. சி. 2, 67, சிவாக்); [2] சுத்தம்; [3] நல்லெண்ணெய். (தைலவ. தைல. 35.)

சுவ சா தீயம்—ஓரினத்தைத் சார்ந்த பொருள்: "தேஜோற் பந்நமான சப்தம் சுவசாதீயமாய் இருக்கிற உத்தரோத்தர சத்தங்களை உற்பாதித்து" (சி. சி. 2, 61, சிவாக்.)

சுவாகா—[1] ஆகுதி செய்யும் பொழுது தேவதையின் பெயர்க் குப் பின் கூறும் மொழி: 'வேட்கோக் குயக்கோடன் ஆனந்தஞ் சேர்க சுவாகா." (தொல். பொ. 490 உரை); [2] சுவாகாதேவி.

சுவாகா தேவி—ஓமத்துக்கு அதி தேவதையான அக்கினி தேவன் மனைவி. (பிங்.)

சவாதிட்டானம்—ஆறு ஆதாரங்களுள் மூலாதாரத்திற்கும் நாபிக்கும் இடையே ஆறு இதழ்த் தாமரை வடிவாயுள்ள தானம்.

சுவாதீனம்—[1] சுவாதந்திரியம்; [2] உரிமை; [3] தன் வசமானது. (சி. சி. 11, 7, ஞானப்.)

சுவாபாவிகம்—இயல்பாயுள்ளது: "இதனுல் சுவாபாவிகம் அன்று ஜகத்ஹேதுகம் என்றது" (சி. சி. 1, 3, சிவாக்.)

சுவாமி பிருத்திய நியாயம்—ஆண்டான் அடிமைத் திறம் போல உரிமை கூறும் நெறி.

சுவார்த்தானுமானம்—தன் காட்சியினின்று தான் ஒன்றை உணருமாறு கொள்ளும் அனுமானம் (சி. சி. அளவை, 8, மறைஞா.)

சுவானுபூதிகம்—தன் அனுபவத்தால் உண்டாகும் ஞானம்: "சிவானுபவம் சுவானுபூதிகமாம்" (சி. சி. 8, 34.)

சுவேதசம்—நால்வகை உயிர்த் தோற்றங்களுள் வியர்வையினின்றும் தோன்றுவன: "அண்டசம் சுவேதசங்கள்" (சி. சி. 2, 89.)

சுழுத்தி—புலன்கள் செயலற்று உறங்கும் நிலை. (சி. போ. பா. 4, 3, பக். 278, புதுப்.)

சுழு முனை—தச நாடியுள் இடைகலைக்கும் பிங்கலைக்கும் இடையிலுள்ளது.

## சூ

சூக்கும பஞ்சாட்சரம்—அகார உகார மகார நாத விந்துக்களாகிய பிரணவ மந்திரம். (சி. போ. பா 4, 1, பக். 258 )

சூக்குமை—நால்வகை வாக்குக்களில் எழுத்தினை உச்சரிக்கத் தொடங்கும்போது நாபியிலிருந்து எழுவதாகக் கருதப்படும் பரை என்னும் ஒலி (சி. போ. பா. 2, 2, பக். 135.)

சூட்சும சரீரம்—பிராணன் ஐந்து, மனம் ஒன்று, ஞானேந்திரியம் ஐந்து, கருமேந்திரியம் ஐந்து ஆகிய இவற்ருல் ஆனதும், சீவான்மாவின் முத்தி நிலைவரை அதனோடு இருப்பதும் ஆகிய சரீரம்.

சூத்திரதாரி—பதுமையைக் கயிறு கொண்டு ஆட்டுவோன். (சி. சி. 4, 4, சிவாக்.)

சூர்ணிகை—செய்யுட் கருத்தை விளக்கி நிற்கும் இனிய சொற்ருெடர். இங்ஙனம் சூர்ணிகையை அனுசரித்து வார்த்திகமும் வார்த்திகத்தை அனுசரித்து அதிகாரணங்களும் பகுத்திருக்கின்றன (சி. போ. பா.)

சூரிய கலை—[1] பிங்கலை; [2] நாசியின் வலப்பக்கத்துத் துவாரம்.

## செ

சென்ம சாபல்யம்—பிறவிப் பயனை அடைகை.

சென்ம பீசம்—ஆணவ மலம் (த நி. போ. 182.)

## சே

சேசுவர சாங்கியன்—கடவுள் உண்மையை ஒப்புக் கொள்ளும் சாங்கிய மதவாதி. (சி. சி. 2, 57. சிவாக்.)

சேட்டன்—[1]பெரியோன்: "சேட்டராம் முனிவோர்களும்" (விநாயகபு. 75, 79.); உருத்திரருள் ஒருவர். (சி. போ. பா. 2, 3, பக். 212.)

சேட்டிதன்—தொழிற்படுத்துவோன்: "சித்துடன் அசித்துக் கெல்லாம் சேட்டிதன் ஆதலானும்." (சி. சி. 1, 56, பக். 637.)

சேட சேடி பாவம்—[1]ஆண்டான் அடிமைத் திறம்: "முதல் வனுக்குச் சேட சேடி பாவத்தால் ஆகற்பாலதாகிய அடிமை யாம் என்க." (சி. போ. பா. 9, 3, பக். 201, சுவாமி. பதிப்.); [2]நியாமகனும் நியமிக்கப்படுபவனுமாய் இருக்கும் தன்மை.

## சை

சைகத லிங்கம்—மணலால் ஆகிய சிவலிங்கம்.

சைதனியம்—[1]அறிவு: "சுத்தான்ம சைதனியமே தனக்குச் சொரூபமாகக் கொண்டு" (சி. போ. 8, 2.); [2]சீவான்மா: [3]பரமான்மா. (சி. போ. சிற். 2, 4.)

சையுத்த சமவாயம்—காட்சியில் ஏற்படும் அறுவகைச் சன்னிகரிடத்துள் இந்திரியத்திற்கும் ஒரு பொருளின் குணம் முதலியவற்றிற்கும் உள்ள சம்பந்தம். (தருக்கசங். 31.)

சையுத்த சம வேத சமவாயம்—காட்சியில் அறுவகைச் சன்னிகரிடத்துள் இந்திரியத்திற்கும் ஒரு பொருளின் உருவத் தன்மையாகிய சாதிக்கும் உள்ள சம்பந்தம். (தருக்க சங். 31.)

சையோகம்—[1]கலக்கை; [2]சையோக சம்பந்தம். (சி. சி.); [3]புணர்ச்சி: "இரவு பகல் ஏழையர்கள் சையோகம் ஆயினோம்." (தாயு. எங்குநிறை. 9.)

சைவ சித்தாந்தம்—சித்தாந்த சைவம்: "இலகு சைவ சித்தாந்தம்." (திருவாலவா. 38, 6)

சைவ தீட்சை—சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை என்ற முப்பகுதி உடையதாய்ச் சைவ சமயத்திற்கு உரிய சடங்கு.

சைவம்—[1]ஊர்த்த சைவம், அனுதி சைவம், ஆதி சைவம், மகா சைவம், பேத சைவம், அபேத சைவம், அந்தர சைவம், குண சைவம், நிர்க்குண சைவம், அத்துவா சைவம், யோக சைவம், ஞான சைவம், அணு சைவம், கிரியா சைவம், நாலுபாத சைவம், சுத்த சைவம் என்று பதினறு வகைப்பட்டதாய்ச் சிவனைப் பரதெய்வமாகக் கொண்டு வழிபடும் சமயம்; [2]சிவ மகா புராணம்: "எதிரில் சைவமே பவிடியம்" (கந்தபு பாயி. 54.); [3]ஆகமம். (அக. நி.); [4]புலால் உண்ணமை.

சைவர்—அனுதி சைவர், ஆதி சைவர், மகா சைவர், அணு சைவர், அவாந்தர சைவர், பிரவர சைவர், அந்திய சைவர் என்ற எழுவகைச் சைவ சமயிகள். (சைவச. பொது. 435, உரை.)

சைவன்—[1]சிவனை வழி படுவோன்; [2]சிவன்: "தழலிலங்கு திருவுருச் சைவனே" (தேவா. 866, 7.); [3]புலால் உண்ணதவன்.

## சொ

**சொப்பனத் தானம்**—சொப்பனுவத்தையில் ஆன்மாவின் இருப்பிடமாய் உள்ள கழுத்து: "சொப்பனத் தானம் எனப் படும் கண்டத்தின்" (சி. போ. சிற். 4, 3, பக். 99.)

சொப்பனுவத்தை—ஆன்மா கண்டத்தில் நிற்க, மனம் வேலை செய்து கொண்டும், இந்திரியங்கள் பத்தும் தொழில் இன்றியும் உள்ள நிலை. (சி. சி. 4, 33, நிரம்ப.)

சொரூப லட்சணம்—பரப் பிரமத்தின் சச்சிதானந்த ரூபமான உண்மை இயல்பு (வேதா. சூ. 29, உரை.); [2]சிறப்பியல்பு. (சி. சி. 1, 70, சிவஞா.)

## சோ

**சோகம் பாவனை**—சீவான்மாவும் பரமான்மாவும் ஒன்றெனப் பாவிக்கை: "நீ சோகம் பாவனை கொண்டு நிற்பையாயின்" (பிரபுலிங். கோரக்கர். 62.)

சோகம் பாவித்தல்—தன்னைப் பரமான்மாவாகப் பாவித்தல். (சி. சி. 9, 7.)

சோடச கலை—மேதை, அர்க்கீசம், விஷம், விந்து, அர்த்த சந்திரன், நிரோதி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபினி, வியோம ரூபி, அனந்தை, அனாதை, அனாசிருதை, சமனை, உன்மனை என்று உடலில் சக்தி பரிணமித்திருக்கும் பதினாறு யோக இருப்பிடங்கள். (செந்.IX, 248.)

சோடச சைவம்—ஊர்த்த சைவம், அனாதி சைவம், ஆதி சைவம், சைவம், பேத சைவம், அபேத சைவம், அந்தர சைவம், குண சைவம், நிர்க்குண சைவம், அத்துவா சைவம், யோக சைவம், ஞான சைவம், அணு சைவம், கிரியா சைவம், நாலு பாத சைவம், சுத்த சைவம் என்று பதினாறு வகைப்பட்ட சைவம். (சங். அக.)

சோடசோபசாரம்—ஆசனம், சுவாகதம், பாத்தியம், அர்க்கியம், ஆசமனீயம், மதுபர்க்கம், ஆசமனம், ஸ்நானம், ஆடை, ஆபரணம், கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம், வந்தனம்; அல்லது மஞ்சனம், பூ, கந்தம், தூபம், தீபம், நீர், அமுது, தாசு, அடைக்காய், ஆடி, குடை, கவரி, ஆலவட்டம், விசிறி, ஆடல், வாச்சியம் என்ற பதினாறு வகை உபசாரங்கள்.

சோத்திரம்—[1]காது (பிங்.), "வாக்காதி சோத்திராதியும்" (தாயு. கருணா. 2.); [2]கேள்வி.

சோதிசு—பிரகாசம் (சி. சி. 8, 21, சிவாக்.)

சோபானம்—[1]படிக்கட்டு: "பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி" (பெரிய பு. கண்ணப்ப. 103.) [2]தாழ்வாரம்

சோபான முறை—படிக்கிரமம். "ஆன்மாக்கள் சோபான முறையின் அறிந்து வரும் தன்மைக்கு ஏற்ப" (சி. போ. பா சிறப், 5.)

## சௌ

**சௌத்திராந்திகம்**—சூத்திர பிடகத்தை மட்டும் பிரமாண மாகக் கொள்ளும் பௌத்த மதப் பிரிவு.

சௌத்திராந்திகன்—புத்த மதத்தில் சௌத்திராந்திகப் பிரிவைச் சேர்ந்தவன். (சி. போ. பா. அவை. பக். 37.)

சௌரசனம்—சூரசேனி என்னும் பாகத மொழி (சி. சி. பாயி 2, மறைஞா. பக். 61)

## ஞா

**ஞா**தா—[1]ஞாதுரு: "சிவன் ஞேயமும் ஆன்மா ஞாதாவும் என்னும் பொழுது" (சி. சி. 4, 29, சிவாக்.); [2]ஞானவான்.

ஞாதுரு—[1]அறிபவன்: "ஞான மென ஞேய ஞாதுருவாகும்" (திருமந். 2381.); [2]திரிபுடியில் ஒன்றாய் அறிதற் கருத்தாவாகிய ஆன்மா: "ஞாதுருவின் ஞானமற்று" (தாயு. சின்மயா. 8.)

ஞான சத்தி—பஞ்ச சத்திகளுள் ஒன்றாய் ஆன்மாக்கள் இருவினைப் பயன்களை நுகர்ந்து தொலைத்து முத்தி எய்துமாறு செய்யும் சிவபிரானது சத்தி: "ஞான சத்தியால் நயந்தறி வாளுதல்" (சி. சி. 1, 63.)

ஞான சாதகன்—மோட்ச சாதன முறையில் ஞான நெறி அடைதற்கு வேண்டும் பயிற்சி.

ஞான சித்தன்—மோட்ச சாதனத்தில் ஞானம் கைவரப் பெற்றோன். (சி. சி. 8, 32, சிவாக்.)

ஞானத்தில் ஞானம்—ஞான நிட்டை கூடுகை (சி. போ. பா. 8, 1, பக். 358.)

ஞானத்தில் யோகம்—ஞானத்தைச் சிந்தித்துத் தெளிகை (சி. போ. பா. 8, 1, பக். 358.)

ஞானத்திற் கிரியை—கேட்ட ஞான நூற் பொருளைச் சிந்திக்கை (சி. போ. பா. 8, 1, பக். 358.)

ஞானத்திற் சரியை—ஞான நூற்பொருளைக் கேட்கை. (சி. போ. பா. 8, 1, பக். 358.)

ஞான தீட்சை—[1]ஞானவதி (சி. சி, 8, 3, சிவாக். உரை.); [2]ஞானஸ்நானக் கிரியை.

ஞான மார்க்கம்—[1]ஞான நெறி; [2]முத்தி எய்துதற்கு உரிய; நால்வகை மார்க்கங்களுள் தலைசிறந்த ஞானபாதம் (சி. சி. 8, 22, சிவாக்.)

ஞான யாகம்—ஓதல், ஓதுவித்தல், தெளிதல், தெளிவித்தல், மனத்தில் தரித்தல் என்ற ஞான மார்க்கத்திற்கு உரிய யாகம். (சிவதரு. ஐவகை. 7, உரை.)

ஞானரக்கை—வாசனையற்ற மனம் தத்துவ ஞானத்தில் அழுந்தி நிற்கை: "ஞானரக்கை தவம்" (வேதா. சூ. 169.)

ஞானவதி—[1]வேண்டும் சாதனங்களையும் கிரியைகளையும் குரு தனது பாவனையால் செய்து கொள்ளும் ஔத்திரி தீட்சை வகை. (சி. சி. 8, 3, சிவஞா.); [2]அறிவுள்ளவள்

ஞானவுத்தரி—ஞானவதி (சி. சி. 8, 3, ஞானப்.)

ஞான வேள்வி—ஞான யாகம் (சி. சி 8, 23, சிவஞா.)

ஞானேந்திரியம்—உணர்தற்கு உரிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள். (பு. வெ. 8, 33, உரை.)

## த

தகரம்—இருதயத்தின் உள்ளிடம்: "தகரத் தந்தச் சிகரத் தொன்றி" (திருப்பு. 86.)

தகர வித்தை—இறைவனைத் தகராகாசத்தில் (இருதயத்தின் உள்ளிடத்தில்) வைத்துத் தியானம் செய்யும் முறையை உணர்த்தும் வித்தை: "ஏய்ந்த சீர்த்தகர வித்தை முறைப்படி" (காஞ்சிப்பு. நகர. 119.)

தசகாரியம்—தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்ற ஆன்மானுபவ நிலைகள்; [2]பண்டார சாத்திரத்துள் அம்பலவாண தேசிகர், தட்சிணாமூர்த்தி தேசிகர், சுவாமிநாத தேசிகர் என்ற மூவரால் இயற்றப்பட்ட மூன்று சைவ சித்தாந்த நூல்கள்; [3]சிதம்பரநாத தேசிகர் இயற்றிய சைவ சித்தாந்த நூல்; [4]மாயாரூபம், மாயா தரிசனம், மாயாசுத்தி, சிவரூபம், சீவதரிசனம், சீவ சுத்தி, பிரம ரூபம், பிரமதரிசனம், தேக கைவல்லியம், விதேக கைவல்லியம் என்ற ஆன்மானுபவ நிலைகள் (வேதா. தச. கட்.)

தச நாடி—இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி சிங்குவை, சங்கினி, பூடா, குகு, கன்னி, அலம்புடை எனப் பத்து வகைப்பட்டுப் பிராண வாயு இயங்குவதற்கு உரிய வழியாகிய நாடிகள் (சிலப். 3, 26, உரை, பக். 84.)

தசப் பிரசாபதி—மரீசி, அத்திரி, அங்கிரசு, புலஸ்தியர், புலகர், கிரது, வசிஷ்டர், தக்ஷர், பிருகு, நாரதர் என்ற பத்து உபப் பிரமர்கள். (சி. சி. 2, 29, சிவாக்.)

தச வாயு - பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்ற பத்து வாயுக்கள். (பிங்.)

தட்டம்—[1] நிலத்தில் விழுந்து வணங்குகை: "கும்பிட்டுத் தட்ட மிட்டுத் கூத்தாடித் திரியே" (சி. சி. 12, 2 மறைஞா.); [2] யானை செல்லும் வழி (சங். அக.)

தண்டா பூபிகா நியாயம்—தண்டத்தைத் தின்ற எலி அதிலேயுள்ள அப்பம் முதலியவற்றையும் தின்றிருப்பது பெறப் படுதல் போல வெளிப்படையான செய்தியை உணர்த்தும் ஒரு வகை நியாயம்: "ஒரு பொருளைச் சொல்லத் தண்டா பூபிகா நியாயத்தினன் மற்றொரு பொருள் தோன்றுதலாம்." (அணியி. 59.)

தத்தாங்காரம்—மா நகரங்களுள் ஒன்று. (சி. போ. பா. 2, 3, பக். 203)

தத்துவ சுத்தி—தச காரியத்துள் ஒன்றாய் முப்பத்தாறு தத்துவங்கட்கும் ஆன்மா அதீதமாய் நிற்கும் பொழுதுள்ள அனுபவ நிலை. (தசகா.)

தத்துவத் திரயம்—[1] சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூவகை உண்மைப் பொருள்கள்; [2] ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம் சிவ தத்துவம் என்ற மூவகைத் தத்துவங்கள்.

தத்துவ தரிசனம்—தத்துவங்கள் முப்பத்தாறும் மாயையின் காரிய மென்றும் சடபதார்த்தங்கள் என்றும் ஆன்மா தன்னறி விலே விளங்கக் காணும் அனுபவ நிலையாகிய தசகாரிய வகை.

தத்துவம்—[1] உண்மை: "தத்துவமான நெறிபடரும்" (நான் மணி. 29.); [2] பொருள்களின் குணம்; [3] இயல்பான அமைப்பு: "தத்துவம் அன்று" (திவ். திருப்பா. 19.); [4] மகாபூதம் 5, தன் மாத்திரை 5, கன்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5, மனம், அகங்காரம், மகத்து, மூலப் பிரகிருதி, ஆன்மா ஆகிய 25 மூலப் பொருள்கள். (குறள், 27, உரை.); [5] அசுத்த தத்துவம், 24ம், சுத்தா சுத்த தத்துவம் 7-ம் சுத்த தத்துவம் 5-ம் ஆகிய 36 மூலப் பொருள்கள்; அல்லது மேற் கூறிய 36-ம், புற நிலைக் கருவி 60-ம் ஆகிய 96 மூலப் பொருள்கள்; [6] பரமான்மா (சி. சி. 6, 5.)

தத்துவ மசி—'அது நீ யாயிருக்கிறாய்' என்று பொருள் கொண்ட வேத வாக்கியம்: "தத்துவ மசி அறிஞர் கொள்வார்" (பிரபுலிங். முனிவர். 20.)

தத்துவ ரூபம்-தத்துவங்களின் குணங்களை ஆன்மா காணும் நிலையாகிய தச காரிய வகை.(சிவப். கட்.)

தத்துவாத்துவா—ஆறு அத்துவாக்களுள் முப்பத்தாறு தத்துவங்களாகிய அத்துவா வகை: "தத்துவாதுத்வா முதலான தெல்லாம்" (சி. சி. 8, 6, மறைஞா.)

தத்துவா தீதன்—தத்துவம் கடந்த பரம் பொருள். (சி. சி. 2, 73, சிவாக்.)

தத்துவான்தா—சூக்கும தேகத்தைப் பற்றி நிற்கும் ஆன்மா (சி. போ. பா. 6, 2, பக், 317)

ததாஸ்து—'அங்ஙனமே ஆகுக' எனப் பொருள்படும் ஒரு வட மொழி வாழ்த்துத் தொடர்.

தம்பித்தல்—[1]அசையாது இருத்தல்: "தம்பித்து உயர் திசை யானைகள் தளர" (கம்பரா. பரசுராம. 8.);[2]மந்திர சக்தி முதலிய வற்றால் தடுத்தல்: "உச்சுவாச நிச்சுவாசம் ஆகிய வாயு இரண் டனையும் தம்பித்து" (சி. சி. 8, 21, சுப்பிர.)

தமோ குணம்—முக் குணங்களுள் காமம், வெகுளி, மயக் கம் முதலிய தீக் குணங்களுக்குக் காரணமாய் இருப்பது.

தற் பதம்—[1]பிரம சொரூபம்: "தற்பதத்தைத் தெளியு மட்டும்" (ஞானவா. முமுட். 4.); [2]'தத்' என்னும் பதம் (சி. போ. பா. 9, 3, பக் 393.)

தற் பரன்—பரம் பொருள்: "தணித்தலும் அளித்தலும் தடிந்தோன் தற்பரன்" (ஞானு: 48, 20.)

தற் புருடம்—சிவன் ஐம் முகத்துள் கிழக்கு நோக்கி இருப் பது. (சைவச. பொது. 334.)

தற் போதம்—[1]தன்னையும் கடவுளையும் அறியும் அறிவு; [2]இயற்கையிலே உள்ள முற்றுணர்வு: [3]அகங்காரம் "தற் போதம் முனையாதவாறு பரிகரித்து" (சி. போ. பா. 12, 1, பக் 432.); [4]தன் நினைவு.

தன் வேதனை—சுவானுபவம்; "காண்டல் வாயின் மனம் தன்வேதனையோடு" (சி. சி. அளவை. 4.)

தன் வேதனைக் காட்சி—அராகாதி தத்துவங்களால் உண் டாகும் இன்பத் துன்பங்களை ஆன்ம அறிவால் அறிகை: "அருந்து இன்பத் துன்ப முள்ளத்து அறிவினுக்கு அராக மாதி தரும் தன் வேதனையாம் காட்சி" (சி. சி. அளவை. 7.)

தன்னுண்மை—சொருப லட்சணம் (சி. சி. 1, 70, சிவஞா.)

## தா

**தா**த்துவிகம்—தத்துவ சம்பந்தம் உடையது: "தாத்துவிக சகலப் பிரபஞ்சத்தையும்" (சி. சி. 1, 30, ஞானப்.)

தாதான்மிய சக்தி—சிவ பெருமானை ஒரு போதும் விட்டு நீங்காத கிரியா சக்தி.

தாதான்மியம்—ஒன்றுபட்டு இருக்கை: "தாதான்மியம் ஒன்று உறும் பரிசு" (பிரபுலிங். விமலை. 47.)

தாபத பக்கம்—நீராடல், நிலக்கிடைகோடல், தோல் உடுத்தல், எரி ஓம்பல், ஊர் அடையாமை, சடை புனைதல், காட்டில் உணவு, கடவுள் பூசை என்னும் தாபதற்கு உரிய எண் வகை ஒழுக்கங்களைக் கூறும் புறத் துறை: "நாலிரு வழக்கில் தாபத பக்கமும்" (தொல். பொ. 74.)

தாரகம்—[1]கடப்பதற்கு உதவுவது: "தாரகமாம் அத்தன் தாள்" (சி. போ. பா. 2, 2.); [2]பிரணவம்: "மெய்த்தொளிர் தாரகம் விள்ளுவதாகும்." (தணிகைப் பு. அகத்தி. 10.); [3]நட்சத்திரம்; [4]உச்ச விசை; [5]ஆதாரம்.

தாரணை—[1]தரிக்கை; [2]ஞாபகத்தில் வைக்கை; [3]உறுதி; [4]மனத்தை ஒருவழி நிறுத்துகையான அட்டாங்க யோகத்துள் ஒன்று; [5]ஒழுங்கு; [6]நவ தாரணை.

தாலீ பாகம்—ஸ்மிருதியில் விதிக்கப்பட்டதும் கிருகஸ்தனால் சுக்கில கிருஷ்ண பிரதமைகளில் செய்யப்படுவதுமான சடங்கு வகை: "தாலீ பாகம் பண்ணவும்" (சி. சி. 8, 3, மறை.)

தாலீ புலாக நியாயம்—ஒரு பானைச் சோற்றுக்கு ஓர் அவிழைப் பதம் பார்ப்பது போல ஒன்றன் ஒரு புடைத் தன்மையிலிருந்து அதன் முழு நிலையையும் அறியும் நெறி. (சிவ சம. 24.)

## தி

**தி**யான யக்கியம்—பஞ்ச யாகத்துள் ஒன்று (சி. சி. 8, 23, சிவாக்.)

தியான வேள்வி—[1]ஐவகை யாகத்துள் தியானம் செய்தல் ஆகிய வேள்வி; [2]தியான யாகம் (சி. சி. 8, 23, சிவஞா.)

திரயம்பகன்—[முக்கண்ணன்] சிவபிரான்: "தாதை எனும் திரயம்பகன்" (கந்த பு. உபதேசப். 20.)

திரவிய சுத்தி—[1]பஞ்ச சுத்தியுள் ஒன்றாய், தன்னை மறந்து கரும பலனாகிய எல்லாச் செயல்களும் கடவுளின் அருளால் உண்டாவன என்று நோக்குகை (கட்டளைக். 228.); [2]பஞ்ச சுத்தியுள் மந்திர நீரைத் தெளித்துப் பொருள்களைச் சுத்தி செய்வது. (சைவ ச. 502. உரை.)

திராசனம்—அசையா இருக்கை. (சி. சி. 10, 5, சிவாக்.)

திரி கரணம்—மனம்,வாக்கு, காயம் என்ற மூன்று கருவிகள்.

திரித கர்மம்—கண்ணில் இருந்து நீர் வடியும்வரை நாசி நுனியைப் பார்த்துக் கொண்டிருக்கை (யோக ஞான. 34.)

திரி பதார்த்தம்—பதி, பசு, பாசம் என்ற மூவகை நித்தியப் பொருள்கள். (சி. சி. 8, 27, ஞானப்.)

திரிபாத் விபூதி—[இறைவன் அருளும் இன்பத்தில் முக்கால் கூறுவது] பரம பதம் (ஈடு.)

திரி பிடகம்—சூத்திர பிடகம், வினய பிடகம், அபிதர்ம பிடகம் என்ற மூன்று வகைப்பட்ட பௌத்த ஆகமத் தொகுதி. (மணி. 26, 66, அரும்.)

திரியம்பகம்—சிவன் வில்: "சுடர்க்கடவுள்தன் பல் இறுத்தவன் வலிக்கமை திரியம்பகம் எனும் வில்" (கம்ப ரா. நட்புக். 7.)

திருடம்—[1]வலி: "வஞ்சனையையும் திருடத்தையும்........ பண்ணுவிக்கும்." (சி. சி. 2, 57, சிவாக். பக். 1085.); [2]இரும்பு. (யாழ். அக.)

திருவடி தீட்சை—சீடன் தலையில் குரு தன் பாதத்தை வைத்து அருள் புரியும் தீட்சை வகை.

திருஷ்ட போக்கியம்—இம்மையில் செய்த கருமங்களின் பலனை அனுபவிக்கை. (சி. சி. 2, 39, ஞானப்.)

திருஷ்ட ஜன்மம்—இம்மை: "திருஷ்ட ஜன்ம போக்கியம்" (சி. சி. 4, 40, சிவாக்.)

திரோகிதம்—[1]மறைக்கப்பட்டது. (சி. சி. 2, 91, சிவாக்.); [2]மறைவு. (யாழ். அக.)

திரோதகம்—மறைத்தலைச் செய்வது: "அது தான் ஞான திரோதகமாய் மறைத்துக்கொடு நிற்றலான்." (சி. போ. பா. 4, 2.)

திரோத சத்தி—திரோதான சத்தி: "நவ்வாகிய திரோத சத்தியும்" (சிவப்பிர. உண்மை. 42, உரை.)

திரோபவித்தல்—[1]மறைத்தல்; [2]ஆன்மாவை மயக்கம் செய்தல்: "என்றும் திரோபவிப்பர் ஈசர்" (உண்மை விளக். 9.)

## தீ

தீட்சா நாமம்—தீட்சை பெறும் பொழுது கொள்ளும் பெயர்.

தீட்சை -[1]விரதம்; [2]சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை என்று முத்திறப்பட்ட சைவ சமயச் சடங்குகள்; [3]நயன தீட்சை, பரிச தீட்சை, மானச தீட்சை, வாசக தீட்சை, சாத்திர தீட்சை, யோக தீட்சை, ஔத்திரி தீட்சை என்ற ஏழு வகையான சைவ சமயச் சடங்குகள் (சைவ ச. ஆசாரி. 65, உரை.); [4]குறித்த காலத்தின் முடிவு வரை மயிர் வளர்க்கை.

## து

துரியத் தானம்—ஆன்மா துரிய நிலையில் அடங்குதற்கு உரிய உந்திப் பிரதேசம்: "துரியத் தானம் எனப்படும் உந்தியில்" (சி. போ. சிற். 4, 3, பக். 99.)

துரியம்—[1]நான்காவது; [2]ஆன்மா உந்திப் பிரதேசத்தில் பிராணனோடு இலயித்து நிற்கத் தன்னையே விஷயீகரிக்கும் நான்காம் ஆன்ம நிலை. (சி. போ. பா. 4, 3. பக். 278, புதுப்.); [3]யோகியர் தன் மயமாய் நிற்கும் உயர்நிலை: "பாவனை தீர் துரிய மதின் இளைப்பு நீங்கி" (ஞானவா. முமு. 26.); [4]சப்தபங்கியில் நான்காவது: "ஓர் சொல் சொலாமையைத் துரியம் காட்டும்" (மேரு மந். 709.)

துரியாதீதத் தானம்—ஆன்மா துரியாதீத நிலையில் ஒடுங்குதற்கு உரிய மூலாதாரத் தானம் (சி. போ. சிற். 4, 3, பக். 99.)

துரியாதீதம்—[1]மூலாதாரத்தில் ஆன்மா தங்கி அவிச்சை மாத்திரையை விஷயீகரிக்கும் ஐந்தாம் ஆன்மநிலை. (சி. போ. பா. 4, 3, பக். 278. புதுப்); [2]நூற்றெட்டு உபநிடதங்களுள் ஒன்று.

துவந்தித்தல்—தொடர்புறுதல்: "அவிரோதமாக ஒன்றை ஒன்று துவந்தித்துத் தோன்றும் என்று சொன்னது" (சி. சி. 2, 65, சிவாக்.)

துவாதச கலை—மேதை, அருக்கீசம், விடம், விந்து, அர்த்த சந்திரன், நிரோதி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபினி, சமனை, உன்மனை என்ற பன்னிரண்டு யோகத் தானங்கள்.

துவாத சாட்சரி—'ஓம் நமோ பகவதே வாசு தேவாய' என்ற பன்னிரண்டு அட்சரங்களை உடைய வைணவ மந்திரம்.

துவாத சாந்தம்—[1]உச்சிக்கு மேல் பன்னிரண்டு அங்குலத்தில் உள்ளதாகக் கருதப்படும் யோகத் தானம்: "துவாத சாந்தப் பெருவெளி" (குமர. பிர. மீனாட். பிள்ளை. 42.); [2]யோகத்தில் பன்னிரண்டாம் அவத்தை.

துவாரா—மூலமாய்: "ஞானேந்திரியத் துவாரா வஸ்துக்களை அறிவது." (சி. சி. 1, அளவை. சிவாக்.)

துவைதம்—மத்துவாசாரியரால் பிரசாரம் செய்யப் பெற்றதும் சீவான்மாவும் பரமான்மாவும் வேறு வேறு எனக் கொள்ளப்படுவதுமாகிய சமயம்.

## தூ

**தூ**ணு நிகனன நியாயம்—தூணை நடும்போது ஆட்டி ஆட்டி உறுதிப்படுத்துவது போல் ஒரு விஷயத்தைப் பலபடியாக அசைத்து நிலை நாட்டும் நெறி: "தூணு நிகனன நியாத்தினால் நன்கு வலியுறுத்தப்பட்டதாயிற்று" (சி. போ. தீ. வ. 25.)

தூரியன்—தூரத்துள்ளவன்: "தூரியனும் சிவன் தோன்றும்" (சி. சி. 8, 28.)

தூல கன்மம்—மனம், வாக்கு, காயங்களால் செய்யப்படும் கன்மம். (சி. சி. 2, 13, மறைஞா.)

தூல சகளத்துவம்—வித்தியா தத்துவம். (சி. சி. 1, 65, 30, ஞானப்.)

தூல சரீரம்—சூட்சும சரீரத்தைப் போர்த்திருக்கும் பஞ்ச பூத பரிணாமத்தால் உண்டான சரீரம். (சைவ வி.7.); [2]பருத்த உடல்.

தூல சித்து—சீவான்மா: "உயிர் தூலசித்தாதலின் (சி. சி. 7, 3, சிவஞா.)

தூல சிவ தத்துவம்—தூலமாகிய சிவ தத்துவம். (சி. சி. 8, ஞானப்.)

தூல பஞ்ச கிருத்தியம்—இறைவன் சராசரங்களிடம் பஞ்ச மூர்த்திகளைக் கொண்டு செய்விக்கும் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்கிற ஐந்து தொழில்கள். (சி. சி. 1, 65, ஞானப்.)

தூல பஞ்சாக்கரம்—தூல பஞ்சாட்சரம்: "சூக்கும பஞ்சாக் கரமே தூல பஞ்சாக்கர ரூபமாக நிற்பன" (சி. போ. பா. 4, 1, பக். 258.)

தூல லிங்கம்—[1]கோபுரம்: "தூல லிங்கமாம் தூபி" (சைவச. பொது. 127.); [2]சிவாலயம்: "தூல லிங்கமாகிய ஆலயம் எனவே சூக்குமம் ஆகிய சிவலிங்கம் எனப்பெறும்." (சி. சி. 12, 1, மறைஞா.)

தூல அருந்ததி நியாயம் - நுண்மையான அருந்ததி நட்சத் திரத்தைக் காட்ட அதன் அருகில் உள்ள பெரிய நட்சத்திரத் தைக் கொண்டு குறிப்பிடுதல் போல நுண்பொருளை விளக்கு தற்கு அதன் சம்பந்தமான பருப் பொருளைக் கொண்டு குறிப் பிட்டு உணர்த்தும் நெறி: "சுபக்கத்தைச் சிறப்பு வகையான் அறியலுறுவார்க்குத் தூல அருந்ததி நியாயம் பற்றி அதனைச் சிறந்தெடுத்து ஓதுதல்" (சி. போ. பா. 6, 2, பக். 318.)

தூளனம்—விபூதியை நீரில் குழையாது பூசுகை.

## தெ

**தெ**ண்ட பங்கி—சிவ பூசையில் பதுமத்து எழுந்தருளிஇருக் கும் சிவ பெருமானை அக்கினித் தம்பமாகத் தியானித்து மந்திரத் தால் பூசிக்கை: "சோதிலிங்கமாக்கல் தெண்டபங்கி" (தத்து. 64.)

## தே

**தே**காத்தும வாதம்—உடலே ஆன்மா என்று கூறும் சாருவாக மதம்.

## தை

தைசத அகங்காரம்—[1]இராசத குணம் மேலிட்ட அகங் காரம்; [2]அகங்காரத் திரயத்துள் சத்துவ குணம் மேலிட்டது. (சி. போ. பா. 2, 2.)

தைசதம்—[1]தேயு சம்பந்தமானது. (சி. சி. 2, 58, சிவாக்.); [2]பலம். (யாழ். அக.); [3]தைசத அகங்காரம்: "மனமது தைசதத் தின் வந்து" (சி. சி. 2, 60.); [4]நெய். (சங். அக.)

தைசதன்—சூக்கும உடலை யான் என்று அன்புகொள்ளும் சீவன்: "இவ்வுடல் மருவும் சீவர்க்கு இலங்கு தைசதன் என்ரு கும்" (கைவல். தத். 39.)

## தொ

**தொ**ம்பதம்—தத்வமஸி என்ற வேத வாக்கியத்தில் த்வம் என்னும் சொல்: "தொம்பதத்துப் பண்புரைத்து" (திருப் பு. 348.)

## தோ

**தோ**ன்ருத் துணை—பிறர் அறியாமல் உதவுவோன்: "தோன் ருத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே." (தேவா. 1011, 1.)

## ந

**ந**யன தீட்சை—தீட்சை ஏழனுள் குரு சீடனைத் தனது அருள் பார்வையால் ஞானம் உண்டாகும்படி செய்வது.

நயன மோட்சம்—சிற்பிகள் விக்கிரகம் முதலியவற்றிற்குக் கண்ணைத் திறந்துவிடுகை.

## நா

**நா**த்திகம்—[1]கடவுள் இல்லை என்னும் மதம்: "நாத்திகம் பேசி நாத் தழும்பு ஏறினர்" (திருவா. 4, 47,); [2]தெய்வ நிந்தனை: "நாத்திகச் சொற்கொரு கரி போய் இழிந்தேனை" (காஞ்சிப் பு. கழுவா. 208.)

நாலு பாத சைவம்—சைவம் பதினாறனுள் சரியை கிரியை யோகங்களால் ஞானம் அடைந்து பின் ஆன்மா வீடு பெறும் என்று கூறும் மத பேதம்.

## நி

**நி**கரில் பக்கம்—விபக்கம்; "பக்கநிகர் பக்க நிகரில் பக்கம் என" (சி. சி. அளவை 9.)

நிச் சாயகம்—நிச்சயிப்பது: "புத்தி நிச்சாயகம் ஆகையி னலும்" (சி. சி. 2, 60. சிவாக்.)

நிச் சுவாசம்—[1]மூச்சு வெளிவிடுகை. (தக்க யாகப். 674. உரை.); [2]மூச்சு; [3]மூச்சடக்குகை (சி. சி. 4, 8, ஞானப்.); [4]சிவா கமம் இருபத்தெட்டனுள் ஒன்று (சைவ ச. பொது. 333, உரை.)

நிட்கள சிவம்—அருவமான சிவம். (சதாசிவ. 3, உரை.)

நித்திய சகலம்—பசுத்துவ சம்பந்தத்தால் ஆன்மா ஞானம் முதலானவை அற்று நிற்கை. (சி. சி. 4, 39, சிவாக்.)

நிதலம்—கீழ் ஏழ் உலகங்களுள் ஒன்று. (சி. போ. பா பக். 204.)

நிபாதம்—[1]இறங்குகை; [2]செயல் ஒழிகை; [3]மரணம், (யாழ் அக.); [4]உடம்பொடு புணர்த்தல் (பி. வி. 50, உரை.)

நிமித்த காரணம்—காரணம் மூன்றனுள் குடத்துக்குக் குயவன் போலக்காரியத்தோடு அனுவிருத்திஇல்லாத காரணம்: "அதற்கு நிமித்த காரணம் கேவலப்பொருள் என்பதூஉம்" (குறள், 352, உரை, தருக்க சங். பக்.24.)

நியசித்தல்—[1]வைத்தல்; [2]பதித்தல்.

நியதி தத்துவம்—சுத்தா சுத்த தத்துவத்துள் ஒவ்வோர் ஆன்மாவும் தன் கன்ம பலனை அனுபவிக்கச் செய்வது. (சி. போ. பா. 2, 2, பக் 150)

நியாசம்—[1]வைக்கை; [2]கடவுளே புகல் என்று அவரிடம் ஆத்தும பாரத்தை வைக்கை: "கைவிடா நன்னியாசத்து அருநியதி(இரகு. இரகுக 18.); [3]மந்திரஅட்சரங்களால் தேவதைகளை உறுப்புக்களில் வைக்கும் கிரியை: "நியாசமும் தியானமும் மாற்றி" (காஞ்சிப் பு. சனற் 13.); [4]ஈடு வைத்த பொருள்.

நியூனம்—[1]குறைவு: "நியூனதிகங்களும் இம்சையும் அசுசியும்" (சி. சி.2, 28, சிவாக்.); [2]தோல்வித்தான வகை (சி. சி அளவை, 14, நிரம்ப.)

நிர்க் குண சைவம்—சைவம் பதினறனுள் சிவனைக்குணம் அற்றவனுகத் தியானிக்க வேண்டும் என்று கூறும் சமயம்.

நிர்க் குணன்—[1](குணமற்றவன்) கடவுள்; [2]குணதீதன் (சி. போ. பா. 9, 2, பக்.195)

நிர்ச் சரம்—சுடுபாறையில் கிடத்தல், தலைமயிர் பறித்தல் முதலிய சைன விரதம் (சி. போ. பா. அவைய.12.)

நிர்ச் சலம்—அசைவின்மை: "நிர்ச்சல நிஸ்தரங்க போதப் பிரவாக சமாதியிலும்" (சி. சி. 8,22, ஞானப்.)

நிர்ச் சலை—சலனம் அற்ற சிவ சத்தி: "நிர்ச்சலைகளாய் இருக்கின்ற ஈசான்னியாதி மூர்த்தியந்த பஞ்ச சத்தி" (சி. சி. 1, 47, ஞானப்)

நிர்ப்பீச தீட்சை—சமய அனுட்டானங்கள் செய்ய முடியாதவர்களுக்கு அவற்றைச் செய்வதற்குப் பிரதியாகச் செய்யும் ஔத்திரி தீட்சை வகை. (சைவ ச. ஆசாரி. 62, உரை.)

நிர்மலதை—மலம் அற்றிருக்கும் தன்மை: "சமல நிர்மலதையினாலே" (சி. சி, 2, 1, சிவர்க்.)

நிர்வாண தீட்சை—தீட்சையில் மூன்றுவதும் செய்துகொண்டவரின் முன்செய்த வினைகளைப் போக்க வல்லதுமான தீட்சை. (சைவ ச. ஆசாரி, 20, உரை.)

நிர்விகற்பக் காட்சி—பொருளின் உண்மை மாத்திரம் உணரும் உணர்வு (சி. சி. அளவை, 3, மறை)

நிர்விகற்ப சமாதி—தான் வேறு கடவுள் வேறு என்ற விகற்ப உணர்வு அற்ற யோக நிலை. (சி. சி. 10, 4, ஞானப்.)

நிர்விகற்பம்—[1]வேறுபாடு இன்மை; [2]சந்தேகம் இன்மை.

நிரதிகரண தீட்சை—சைவ தீட்சை வகை: "சத்தி சங்கற்ப மாத்திரமாய் இருக்கின்ற நிரதிகரண தீட்சையினாலே". (சி. சி. பாயி. 3, ஞானப்.)

நிரபேட்சம்—ஒன்றை விரும்பாது இருப்பது: "இந்திரிய அந்தக் கரண நிரபேட்சம்" (சி. சி. அளவை 1, சிவாக், பக். 109.)

நிரபேட்சை—விருப்பம் இன்மை

நிராதார யோகம்—ஆன்மா தற்போதம் இழந்து ஞான சொரூபமாகிய சிவனை அடைந்து பற்றற நிற்கும் நிலை: "ஆதார யோக நிராதார யோகம் என" (திருக்களிற்றுப். 22, உரை)

நிராலம்ப யோகம்—நிஷ்களத்தைப் பற்றிச் செய்யும் யோகம். (சி. போ. 8, 1.)

நிரீக்கணம்—[1]பார்வை; [2]இடக் கண்ணிலே அமுதம் கொண்டு நனைத்துச் சுத்தி செய்வதாகப் பாவிக்கும் கிரியை (சைவ ச. பொது. 354.)

நிரீச்சுவர வாதி—கடவுள் இல்லை என்போன். (சி. சி. 1, 1, சிவாக்.)

நிருச்சுவாச உச்சுவாசம்—இராச நரகம் எட்டனுள் ஒன்று (சி. போ. பா. 2, 3, பக். 204.)

நிருபாதான வாதி—முதல் காரணத்தினின்றும் பிரபஞ்சம் தோன்றவில்லை என்ற கொள்கை உடையோன்: "நீ நிருபாதான வாதி யன்றோ?" (சி. சி. 1, 5, ஞானப்.)

நிருவிகற்பம்—[1]நிர்விகற்பக் காட்சி. (சி. சி. 11, சிவாக்.); [2]நிர்விகற்ப சமாதி: "விரைந்தே நிருவிகற்பம் எய்த" (தாயு. உடல் பொய். 39)

நிருவேதுகம்—நிரேதுகம். (சி. சி. 8, 2, சிவாக்.)

நிரூபணம்—[1]ஆராய்ச்சி; [2]உருசுப்படுத்துகை: "சிவபாவநா நிரூபணம்" (சி. சி. 6, 7, சிவாக்.)

நிரூபிதம்—நிச்சயிக்கப்பட்டது: "நிரூபிதமான வஸ்துவை நான் அறிந்தேன்." (சி. சி.4, 5, சிவாக்.)

நிரேதுகம்—ஏது அற்றது: "ஜகத்து நிரேதுகம் என்றது தள்ளப்பட்டது" (சி. சி. 1, 1, சிவாக்.)

நிவிர்த்தி—[1]விடுதலை: "பந்தத்தினின்றும் நிவிர்த்தி பெற்ற ஆன்மாக்கள்" (சி. போ. பா. பக் 143, புதுப்.); [2]நிவாரணம்; [3]துறவு. (பிங்): "பரிபக்குவர் நிட்டை நிவிர்த்தியினில் "(திருப் பு. 310.); [4]நிவிர்த்தி கலை (சி. சி. 2, 74, ஞானப்.); [5]போக்கு: "அப்படிச் செய்யாமல் வேறு நிவிர்த்தி இல்லை."

நிவிர்த்தி கலை—பஞ்ச கலையுள் ஆன்மாக்களைப் பாசத் தினின்றும் விடுவிப்பதாய கலை. (சி. போ. பா. 2, 2, பக். 143, புதுப்.)

நிவிருத்தி மார்க்கம்—துறவு நெறி.

நின்மல சாக்கிரம்—ஆன்மா சிவபிரானது அருளால் சத்தாதி விஷயங்களைச் சிவாகாரமாகவும், விஷய சுகங்களைச் சிவானந்த மாகவும் அனுபவிக்கும் சுத்தாவத்தை வகை.(சி. சி. 4, 34, சிவாக்.)

நின்மல சுழுத்தி—ஆன்மா ஞாதுரு, ஞானம், ஞேயம் என்ற வேறுபட்ட அறிவுடன் அருள் மயமாகிச் சுகத்தை அனுபவிக்கும் சுத்தாவத்தை வகை (சி. சி. 4, 34, சிவாக்.)

நின்மல சொப்பனம்—ஆன்மா அருளிடத்தே நின்று அதனை உணரும் சுத்தாவத்தை வகை. (சி. சி. 4, 34, சிவாக்.)

நின்மல துரியம்—ஆன்மாவின் மலம் கழல அதற்கு ஆனந்த ஒளி தோன்றுதலாகிய சுத்தாவத்தை வகை. (சி. சி. 4, 34, சிவாக்.)

நின்மல துரியாதீதம்—ஞாதுரு, ஞேயம் என்ற வேறுபாடு அற்று ஆன்மா ஆனந்த மயமாகி விளங்கும் சுத்தாவத்தை வகை. (சி. சி. 4, 34, சிவாக்.)

## நீ

**நீ**ற்றுக் கோயில்—விபூதிப்பை :"நீற்றுக் கோயிலுள் நீற்றை மென்கரத்து அள்ளி" (திருஆலவா. 37, 57.)

## நு

**நு**ண்ணுக்கை—சூட்சும சரீரம்: "பாசமடங்கு நுண்ணுக்கை நீங்க" (சிவதரு. சிவயோ. 107.)

## நூ

**நூ**ன் மடந்தை—சரசுவதி (பிங்)

## நெ

**நெ**ற்றிக் குறி—நெற்றியில் இடும் திலகம் முதலியன (சூடா)

## நே

**நே**மம்—[1] நியமனம்; [2] நித்திய கரும அனுஷ்டானங்கள்; [3] விதி முறை; [4] ஊழ்.

## நை

**நை**ட்டிகம்—ஆயுள்முழுதும் பிரமசரியம் பூண்டு ஒழுகும் நிலை. (சி. சி. 8, 32, சிவாக்.)

நைட்டிக ஆசிரியன்—அக்கினி காரியாதி கருமங்களால் இன்றி யாவையும் ஞானத்தாலே பண்ணும் ஆசிரியன். (சி. சி. 8, 5, சிவாக்.)

நைட்டிகப் பிரமசாரி—ஆசாரியர்க்கும் பெற்றோர்க்கும் பணிவிடை செய்து கொண்டு மரணம்வரை பிரமசரியம் பூண்டு இருப்பவன். (சிவதரு. பரிகா. 2, உரை.)

நையாயிகம்—கௌதமர் இயற்றிய நியாய நூல் கொள்கை: "சாங்கிய நையாயிகம் வைசேடிகம்" (மணி. 27, 79.)

## நொ

**நொ**ந்துதல்—*அழிதல்:* "நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்" (தேவா. 1218, 3.)

## நோ

**நோ**க்குபதேசம்—நயன தீட்சை: "நோக்குப தேசந்தான் ...........உபதேசித்து" (திரு ஆலவா. 27, 46.)

## நௌ

**நௌ**கா தானம்—இறந்த பதினோராம் நாள் இறந்தவர் பொருட்டுப் படகு வடிவமாகக் கரும்பால் செய்து பிராமணர்க் குக் கொடுக்கும் தானம்.

## ப

பசு ஞானம்—[1]பதி ஞானம், பாச ஞானங்களின் வேறுபட்ட ஆன்ம சொரூப ஞானம்: "தருமிது பசு ஞானம் பின் சிவஞானம் தனக்கு மேலாம்" (சி. சி. 4. 2.); [2]சிற்றறிவு; [3]சித்துருவாய் அசித் தோடு கலந்து கிடக்கும் ஆன்மநிலை.

பசு புண்ணியம்—பிராணிகளின் பொருட்டுச் செய்யும் அறச்செயல்: "சிவ புண்ணியம் என்றும் பசு புண்ணியம் என்றும்" (சி. சி. 2, 23, நிரம்ப.)

பசு போதம்—ஆன்ம அறிவு: "கள்ளவினைப் பசு போதக் கவளமிட" (திருவிளை. கடவுள். 10.)

பஞ்ச மகா யக்கியம்—கன்ம யக்கியம், தபோ யக்கியம், சப யக்கியம், தியான யக்கியம், ஞான யாக்கியம் என்ற ஐவகை யக்கியங்கள் (சி. சி. 8, 23, சிவாக்.)

பஞ்சக் கிலேசம்—அவிச்சை, ஆங்காரம், அவா, ஆசை, கோபம் என்பனவும் ஆன்மாவை வருத்துவனவும் ஆன ஐவகைத் துன்பங்கள். (சி. போ. பா. 2, 2, பக். 158. புதுப்.)

பஞ்ச கஞ்சுகம்—காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்ற ஐந்து ஆன்ம தத்துவச் சட்டைகள். (சி. போ. 2, 2, பக். 158.)

பஞ்ச கலை—அர்த்தப் பிரபஞ்சம் இரண்டனுள் ஒன்றும்; நிவிர்த்தி கலை, பிரதிட்டா கலை, வித்தியா கலை, சாந்தி கலை, சாந்தியதீத கலை என்று ஐவகைப்பட்டதும்ஆன சிவசத்தி நிலை (சி. போ. பா, 2, 2, பக். 142, புதுப்.)

பஞ்ச கோசம்—அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம் விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என ஆன்மாவை மூடிக்கொண்டுள்ள ஐவகைக் கோசங்கள் (சி.சி. ப்ர. மாயா. 8.)

பஞ்ச சாதனம்—யோகிகளுக்கு உரிய ஆசனம், யோக பட்டம், தண்டம், கமண்டலம், செப மாலை ஆகிய ஐந்து சாதனங்கள். ( சி. சி. ப்ர. மாயா. 15.)

பஞ்ச சீலம்—காமம், கொலை, கள், பொய், களவு என்னும், ஐந்தனையும் முற்றத் துறத்தலாகிய பௌத்தர் ஒழுக்கம். (மணி. 21, 57, உரை.)

பஞ்ச சுத்தி—[1]மானச பூசையில் பூத சுத்தி, ஆன்ம சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்க சுத்தி என்ற ஐவகைச் சுத்தக் கிரியை. (சி. சி. 8, 20, நிரம்ப.); [2]பூசைக்கு இன்றியமையாத ஆத்ம சுத்தி, இட சுத்தி, மந்திர சுத்தி, பொருள் சுத்தி, தேவ சுத்தி என்ற ஐவகைச் சுத்தக் கிரியை: "பஞ்ச சுத்தி செய்து நின்னைப் பாவித்துப் பூசை செய்தால்." (தாயு. பராபர. 154.)

பஞ்ச தசாட்சரி—சிவ மந்திர விசேடம். (சி. சி . பாயி ஞானப். பக்.35.)

பஞ்ச தன்மாத்திரை—பஞ்ச பூதங்களின் சூக்கும நிலைகள் ஆகிய ஐந்து தத்துவங்கள். (சி. சி. 2, 64, சிவாக்.)

பஞ்ச பல்லவம்—பூசனைக்குஉரிய ஆத்தி, மா, முட்கிளுவை, முல்லை, வில்வம் என்ற ஐந்து தளிர்கள். (யாழ். அக.)

பஞ்ச வில்வம்—வில்வம், நொச்சி, மாவிலிங்கை, முட்கிளுவை, விளா என்ற ஐம்மரங்கள்: "வில்வ நொச்சி மாவி லிங்கை முட்கிளுவை வெள்ளில் பஞ்சவில்வம் என்பார்" (சிவராத். பு. சிவமான். 37.)

பஞ்சாக்கினி வித்தை—ஆன்மா சுவர்க்கத்தினின்று பூமியில் பிறத்தற்காக முறையே செல்லுதற்குஉரிய துறக்கம், மேக மண்டலம், நிலம், தந்தை, தாய் என்னும் ஐந்து இடத்தையும் அக்கினியாகவும் தன்னை ஆகுதியாகவும் வைத்துப் புரியும் தியானம் (சி. போ. பா. பக். 200.)

பஞ்சேந்திரியம்—மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகள்.

பதாத்துவா—அறுவகை அத்துவாக்களுள் பத ரூபமானது. (சி. சி. 8, 6–9, மறைஞா.)

பதி ஞானம்—இறைவனைப் பற்றிய அறிவு. (சி. சி. 9, 2, மறை.)

பதி புண்ணியம்—[1] முழு முதற்கடவுள் (சி. சி. 12, 7. மறைஞா.); [2] உலக அனுபவம் அற்றவன்; [3] நூற்றெட்டு உப நிடதங்களுள் ஒன்று.

பரமாணு—சூரிய கிரணத்தில் படரும் துகளில் முப்பதில்ஒரு பாகமாகிய மிகச் சிறிய அளவு. (சி. போ. பா. அவை. பக். 41.)

பர முத்தி—பாசங்களினின்று முற்றும் நீங்கிய பின் அனுபவிக்கும் பேரின்பம்.

பரமேட்டி—[1] பரம் பொருள்; [2] பிரமன். (பிங்.); [3] திருமால்: "பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியை" (திவ். திருப் பல். 12.) (பிங்); [4] சிவன் (பிங்): "சாய்க்காட்டெம்பர மேட்டி பாதமே" (தேவா. 41, 4.); [5] அருகன். (பிங்); [6] பரமபதத்திலுள்ள ஐம் பூதங்களுள் ஒன்று: "உற்றபரமேட்டி முதல் ஓங்கிய ஐம் பூதநிலை" (மாறனலங். 91, 129.)

பர லோகம்-[1] மேலுலகம்; [2] மோட்ச உலகு: "பாவின் தமிழ் வல்லார் பரலோகத்திருப்பாரே" (தேவ. 1155, 10.)

பர விந்து—சிவத்தோடு ஒன்றிய சக்தி. (சி. போ. பா. 223.)

பர வாகீசுவரி—சிவ சக்தி. (சி. போ. வ. தீ. 47.)

பர வெளி—[1] பரமன் உறையும் ஞானகாசம்; [2] கடவுள்.

பர ஸ்வரூபம்—அர்த்த பஞ்சகத்துள் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் என்ற ஐவகை யான கடவுள் தன்மை.

பரா சத்தி—[1]ஞான மயமான சிவ சத்தி. (சி. சி. 1, 61, சிவஞா ); [2]பஞ்ச சத்திகளுள் இரத்தை, சுக்கிலே, அசிதை, கிருஷ்ணே என்ற நாற் பிரிவுள்ள சிவ சத்தி. (சைவ ச. பொது. 74, உரை.)

பரிக்கிரக சத்தி—கிரியா சத்தி. (சி. போ. சிற். 2, 2, பக் 65.)

பரிச தீட்சை—தீட்சை ஏழனுள் ஆசிரியன் தன் பரிசத்தால் மாணவற்குச் செய்யும் தீட்சை. (சைவ ச. ஆசாரி. 65, உரை.)

பரிணமித்தல்—நிலேமாறுதல்: "காமம் பரிணமித்து உயர்ந்து பொங்கி" (கம்பரா. திருவடி. 82.)

பரியன்—[1]பெரியோன்; [2]சொரூபத்தால் பெரியவன்: "நேரியனைப் பரியனுமாம்" (சி. சி 8, 28.)

## பா

பாச ஞானம்—[1]வாக்குக்களாலும் கலாதி ஞானத்தாலும் அறியும் அறிவு: "பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும்" (சி. சி. 9, 1.); [2]அஞ்ஞானம்.

பாசண்ட சாத்தன்—சமய நூல்களில் வல்லவரான ஐயனுர் (சிலப். 9, 15.)

பாசண்டம்—[1]புறச் சமயக் கொள்கை; [2]தொண்ணூற்றறு வகைச் சமய சாத்திரக் கோவை. (சிலப். 9, 15.)

பாசண்டன்—புறச் சமயி: "பாசண்டர் நவிற்று வாக்கியத் தில்" (விநாயக பு. 83, 77.);[2]துர்ஆசாரம் உள்ளவன்.

பாச மோசனம்—பாச விமோசனம்: "பலவிதம் ஆசான் பாச மோசனம்தான் பண்ணும்படி." (சி. சி. 8, 3 )

பாச வீடு—பாச நீக்கம்: "பாச வீடும் சிவப்பேறும் என" (சி. போ. பா. 10, பக் 399.)

பாசு பதம்—ஆணவ மலம் இல்லே என்றும் ஈசன் பக்குவம் அடைந்த ஆன்மாக்களிடம் தன் குணங்களேப் பற்றுவித்துத் தான் அதிகாரத்தின் ஒழிவு பெற்றிருப்பன் என்றும் கூறும் அகப் புறச் சமய வகை. (சி. போ. பா. அவை.); [2]நூற்றெட்டு

உபநிடதங்களுள் ஒன்று; [3]பாசுபதாத்திரம்: "பாசுபதம் பார்த்தர்க்கு அளித்தார் போலும்" (தேவா. 720, 2.); [4]சிவ மல்லி. (நாநார்த்த. 152.)

பாசுபதன்—[1]சிவபெருமான்: "பார்த்தனுக்கு அருள் செய்த பாசுபதன்" (தேவா. 389, 6.); [2]சைவர்களுக்குள் பாசுபத முறையை அனுசரிப்போன் (திவா.); [3]சிவனை வழிபடுவோன். (சூடா.)

பாசு பதாத்திரம் — சிவ பெருமானைத் தேவதையாகக் கொண்ட அஸ்திரம்.

பாஞ்சராத்திரம்—வைணவ ஆகமங்களுள் ஒன்று (சி. போ. பா.)

பாஞ்சராத்திரி—வைணவ சமயத்தில் பாஞ்சராத்திரத்தை அனுசரிப்பவன். (சி. போ. பா. அவை. 4, சாமிநா.)

பாடாண முத்தி—ஆன்மா கல்போலக் கிடப்பதாகக் கருதப்படும் முத்தி நிலை.

பாடாண வாத சைவம்--பாடாண வாதக் கொள்கையை உடைய சைவ சமய வகை. (சி. போ. பா. அவை. பக். 22. சுவாமிநா.)

பாடாண வாதம்—ஆன்மாவுக்கு முத்தி நிலையிலும் ஆணவ மலம் உண்டு என்றும் அந்நிலையில் கல் போல் அது கிடக்கும் என்றும் கூறும் கொள்கை. (சி. போ. பா. அவை. பக். 22, சுவாமிநா.)

பாடாண வாதி—பாடாண வாதக் கொள்கையை உடையோன் (சிவப்பிர. அவை. 7, உரை.)

பாடியம்—பேருரை.

பாத தீட்சை—திருவடி தீட்சை.

பாதோதகம்—பாத தீர்த்தம்.

பார பூதி—குய்யாட்டக புவனத்துள் ஒன்று. (சி. போ. பா. 2, 3, பக். 213.)

பாரிசேடப் பிரமாணம்—எஞ்சுவதைக் கொள்ளுகை ஆகிய பிரமாணம். (சி. போ. பா. 110, புதுப்.)

## பி

பிட்ட பேடண நியாயம்—பிசைந்து தீர்ந்த மாவைப் பின்னும் பிசைதல் போல முற் கூறப்பட்டதனையே பின்னும் கூறும் நெறி. (சித். மரபு கண். பக். 2.)

பிட்டம்—பிசைந்த மா.

பித்திகா மார்ச்சால நியாயம்—மதில் மேல் பூனை எப்பக்கத்துக் குதிக்கும் என்பது அறியப்படாமை போல ஒரு விஷயம் எவ்வாறு தீர்மானிக்கப்படும் என்பதை அறியலாகா நெறி.

பிந்து—[1]துளி; [2]சுக்கிலம்; [3]சக்தி தத்துவம் (சி. சி. 2, 50, சிவாக்.); [4]புள்ளி.

பிரஞ்ஞை—[1]அறிவு; [2]ஞான நிறைவு; [3]முன் நிகழ்ந்ததை அறியும் அறிவு. (சி. சி. 4, 28, மறைஞா.)

பிரணவம்—ஓங்காரம்.

பிரதிஞ்ஞா சன்னியாசம்—தன்னால் கூறப்பட்ட மேற்கோள் பிரதிவாதியால் மறுக்கப்பட்டபோது தான் அவ்வாறு கூறவில்லை என்னும் தோல்வித் தானம் (சி. சி. அளவை,14, மறைஞா.)

பிரதிஞ்ஞாந்தரம்—தான் விசேடியாது கூறிய பிரதிஞ்ஞை பிரதிவாதியால் மறுக்கப்படும்போது அதனை விசேடணத்துடன் கூட்டிச் சொல்லும் தோல்வித் தானம் (சி. சி. அளவை, 14, மறைஞா.)

பிரதிஞ்ஞா விரோதம்—தன்னால் சொல்லப்பட்ட மேற்கோளுக்கு மாறுபாடானவற்றைக் கூறும் தோல்வித் தானம். (சி. சி. அளவை, 14, மறைஞா.)

பிரதிஞ்ஞா ஹானி—தான் சொல்லிய மேற்கோளைச் சாதிக்க முடியாது தன்கொள்கையை விடுதலாகிய தோல்வித் தானம். (சி. சி. அளவை, 14, மறைஞா.)

பிரதிட்டாகலை—சிவசத்தியின் பஞ்சகலையுள் சீவான்மாவை முத்தியில் உய்க்கும் கலை. (சி. போ. பா. 5, 2, பக். 143, புதுப்.)

பிரதியோகி—எதிராளி (சி. சி. 3, 4, சிவாக்)

பிரதிஷ்டை—[1]தெய்வத்தைப் புதுக் கோயில் முதலியவற்றில் தாபிக்கை; [2]நிலைபெறுத்துகை: "பிராண பிரதிஷ்டை" (இராமநா. உயுத். 5); [3]கீர்த்தி; [4]பிரதிஷ்டா கலை.

பிரதீதி—[1]அறிவு. (சி. சி. 2, 54, சிவாக்.); [2]கீர்த்தி (யாழ். அக.); [3]மகிழ்ச்சி; [4]விருப்பம் (யாழ். அக.); [5]தோன்றுகை.

பிரதேசம்—இடம்: "ஆன்மா சரீரத்திலே ஒரு பிரதேசத்திலே இருப்பன்". (சி. சி. 4, 16, மறைஞா.)

பிரபஞ்சி—பிரபஞ்சத்தினை உடையது. (சி. சி. 2, 50, ஞானப்.)

பிரபோதிகை—கற்பிப்பது: "விதிநிஷேதப் பிரபோதிகையாய் இருக்கின்ற". (சி.சி. 2, ஞானப்.)

பிரமக் கொலை—பிரமகத்தி (பார்ப்பனக் கொலை). (சி. போ. பா. 8, 1, பக், 174, சுவாமிநா.)

பிரம காண்டம்—ஞான காண்டம். (சி. போ. பா. 1, 1, பக். 32, சுவாமிநா.)

பிரம ஞானம்—[1]கடவுளைப்பற்றிய அறிவு; [2]எல்லாவற்றையும் பிரமமாகக் காணும் அறிவு;[3]சமய சமரசம் அமைந்த ஒரு நவீன மதம்.

பிரமரந்திரம்—உச்சித் துவாரம்: "ஆவியைப் பிரமரந்திரத்து ஒடுக்கிய பின்னர்." (காஞ்சி பு. சனற்குமார. 16.)

பிரம வரிஷ்டர்—நால்வகைச் சீவன் முத்தருள் தன்னாலும் பிறராலும் சமாதியினின்றும் கலைக்கப்படாதவராகிய ஞானிகள் (கைவல்ய. தத்துவ. 99, உரை)

பிரமா—ஞானம் (சி. சி. அளவை 1, சிவாக். பக். 100.)

பிரமாண ஐதிகம்—சான்றோர் வாக்கியம் ஆகிய பிராமணம். (சி. சி. அளவை. 1. மறைஞா.)

பிரவர்த்தகம்—[1]முயற்சி; [2]பிரவர்த்தனம். (சி. சி. 2, 57, சிவாக்.)

பிரவர்த்தனம்—[1]செய்கை; [2]செல்லுகை: "பகிர்ப் பிரவர்த்தனத்தையும் பண்ணுவர்." (சி. சி. 5, 9, சிவாக்.)

பிரவர்த்தித்தல்—[1]முயற்சி: ஒன்றை அறிந்து அதை இச்சித்து அதிலே பிரவர்த்திக்கிறது" (சி. சி. 1, 67, சிவாக்.); [2]மலக்கழிவு.

பிரவாகேசுவர வாதம்—ஓர் ஆன்மா முத்தனானல் ஈசுவரன் அவனிடத்தில் தன் அதிகாரத்தை வைத்துத் தன் பாரம் நீங்க அவன் பின் வேறொருவன் முத்தனானல் அவனிடத்து அம்முதன் முத்தன் தன் அதிகாரத்தை வைத்துத் தான் பாரம் அறுவன் என்று கூறும் வாதம். (த. நி. போ. பக். 191.)

பிரவிர்த்தி தத்துவம்—அதிகார தத்துவம். (சி. சி. 1, 65, ஞானப்.)

பிரளய கைவல்லியம்—பிரளய காலத்தில் ஆன்மாக்கள் செயலற்றுக் கிடக்கை. (சி. சி, 4, 40, ஞானப்.)

பிரளயாகலர்—மும் மலங்களுள் ஆணவம், கன்மம் என்னும் இரண்டினையுடைய ஆன்மாக்கள். (சி. சி. 8, 2.)

பிரக்ஷிப்தம்—இடைச் செருகல்.

பிராக்ஞன்—சுழுத்தி நிலையில் காரண சரீரத்தை விரும்புகிற சிவன். (வாசுதேவ மனனம். பக். 7.)

பிராகிருதர்—[1]பிரகிருதியில் தோற்றிய பொருள்களையே உண்மை என்று எண்ணுவோர் (சி.சி.); [2]சாமானியர்: "ஆற்றலும் அறிவும் காதலும் இல்லாத பிராகிருதரை" (சி. சி. பாயி. 3, சிவஞா.)

பிராந்தி ஞானம்—விபரீத உணர்வு. (சி. போ. பா. 4, 2, பக். 98.)

பிராரத்தம்—கருமம் மூன்றனுள் இம்மையில் பலனளிக்கும் பழவினை: "தனுவின் எடுக்கும் பிராரத்தம்." (விநாயக பு. 83, 19.)

பிரேரகம்—தூண்டுவது. (சி. சி. 2, 50, ஞானப்.)

பிரேரியம்—செலுத்தப்படுவது. (சி. சி. 8, 30, ஞானப்.)

பிரேரியர்—செலுத்தப்பட்டவர். (சி. சி. 2, 3, ஞானப்.)

## பீ

பீசாங்குர நியாயம்—வித்தும் முளையும் போல எது முந்தையது என்று கூற முடியாத நெறி.

பீபற்சம்—மாநரகங்களுள் ஒன்று (சி. போ. பா. 2, 3, பக். 203, புதுப்,)

## பு

புக்தம்—[1]உணவு (சங். அக.); [2]அனுபவிக்கப்பட்டது (சி. சி. 2, 56, சிவாக்.); [3]லக்கினம் முதலியவற்றில் செல்லான பாகம்.

புத்தி தத்துவம்—முப்பத்தாறு தத்துவங்களுள் ஒன்று. (சிவப். கட்.)

புத்தி யட்டகர்—அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏக நேத்திரர், ஏக ருத்திரர், திரி மூர்த்தி, சீகண்டர், சிகண்டி எனப் புத்தி தத்துவத்திலுள்ள எண் வகை உருத்திரர். (திருவிளை. திருமணப். 82.)

புபுக்ஷு—போகத்தில் இச்சை உள்ளவன்: "புபுக்ஷுவும் அல்லாமல் முத்தனும் அல்லாமல்" (சி. சி. 2, 56, சிவாக்.)

பும்ஸ்துவமலம்—பஞ்சக்கிலேசம். (சி. போ. பா. 2, 2, பக். 158, புதுப்.)

பும்ஸத்துவம்—[1]ஆண்மை; [2]புருட தத்துவம். (சங். அக.)

புமான்—[1]ஆண்மகன்: "அப் புமானுற்றது யாவற்குரரோ" (கம்பரா. இராவணன் சோ, 31.); [2]கணவன் (நிகண்டு); [3]ஆன்மா (நிகண்டு); [4]அசுத்த தத்துவம்: "தந்திடும் புமான்கீழ் எண்மூன்ருய தத்துவம்" (சி. சி. 2, 70.)

புரத் திரயம்—திரிபுரம்: "திண்சிலையால் புரத் திரயங்களையும் பொடியாக்கிலன்......எங்கள்பண்ணவனே." (திருநூற், 24.)

புருட தத்துவம்—சுத்தா சுத்தத் தத்துவம் ஏழனுள் ஒன்ரு கியதும், மும்மலங்களோடு கூடியதுமான தத்துவம்: "ஐவகை யால் உறுபயன்கள் நுகரவருங் காலமது புருட தத்துவம் என்று அறைந்திடுவர்" (சிவப்பிர. 23, புதுப்.)

புவனுத்துவா—அத்துவா ஆறனுள் ஒன்று. (சி. சி. 8, 6–9, மறைஞா.)

## பூ

பூசரி முத்திரை—பதும ஆசனத்தில் இருந்துகொண்டு நாசி நுனியைப் பார்த்திருக்கும் யோக நிலை.

பூதசார உடம்பு—சுவர்க்க இன்பத்தை அனுபவிக்க ஆன்மா எடுக்கும் தெய்விக உடல். (சி. சி. 2, 36, மறைஞா.)

பூத சுத்தி—அன்று செய்த பாவங்களை நீக்குவதாகிய ஆன்ம சுத்தியின் அங்கம். (சைவ ச. பொது. 502, உரை.)

பூதனு சரீரம்—தூல சரீரம்: "பூதனு சரீரம் போனுல்". (சி. சி. 2, 36.)

பூதான்மா—பஞ்ச பூதங்களோடு கூடி இருக்கும் ஆன்ம நிலை (சி. போ. பா. 6, 2, பக். 317.)

பூர்வக் காட்சி அனுமானம்—முன்பு அனுபவித்து அறிந்ததை அடிப்படையாகக் கொண்டு அறுதியிடும் அனு மானம்: "போது நாற்றத்தால் அறிதல் பூர்வக் காட்சி அனுமானம்". (சி. சி. அளவை. 12.)

பூர்வ சைவன்—தீட்சா கருமத்தால் மோட்சம் அடைய லாகும் என்ற கொள்கையுள்ள சைவ மதப் பிரிவினன். (சி. சி. 8, 27, சிவாக்.)

பூர்வ தனம்—முன்பே அமைந்துள்ளது. (சி. சி. 2, 33. சிவாக்.)

பூர்வ மீமாஞ்சை—வேதத்தில் கரும காண்ட ஆராய்ச்சி பற்றிச் சைமினி முனிவர் இயற்றிய சாத்திரம்.

## பெ

**பெத்த** காலம்—ஆன்மா பாச பந்தத்திற்கு உட்பட்ட காலம்: "மலத்தின் மறைப்புண்டு கிடக்கும் அப் பெத்த காலத்து". (சி. போ. பா. 2, 2, பக். 63, சுவாமிநா)

பெத்தம்—[1]கட்டு; [2]ஆன்மாவின் பாச பந்தம்: "பெத்த மொடு முத்தியும்" (தாயு. ஆனந்த. 5.); [3]சேர்மானம். (யாழ். அக.)

பெத்த முத்தி—[1]பந்தமும் வீடும்; [2]இலய முத்தி. (யாழ். அக.)

பெத்தான்மா—பாச பந்தமுள்ள ஆன்மா: "முத்தியின்கண் பெத்தான்மாவை". (சி. சி. 11, 6.)

## பே

**பேத** சித்தாந்தம்—இருளும் ஒளியும் போல ஆன்மாவும் சிவமும் இரண்டாய் இருக்கும் என்ற சித்தாந்தம். (சங். அக.)

பேத சைவம்—சைவம் பதினாறனுள் குரு லிங்க சங்கம பத்தி பூண்டு சிவனை உருவமாகவும் அருவமாகவும் அருவுருவ மாகவும் தியானித்தலால் முத்தி சித்திக்கும் எனக் கூறும் சமயம் (த. நி. போ. பக். 254.)

பேத வாத சைவம்—அகச் சமயம் ஆறனுள் இறைவன் அருளால் மலம் நீங்கும் என்றும், முத்தி நிலையில் இறைவனும் ஆன்மாவும் தலைவன் தலைவி போல்வர் என்றும் கூறும் சமயம். (சி. சி. 11, 5, சிவஞா.)

## பை

**பைசந்தி**—நால்வகை வாக்குக்களுள் ஒன்றாய் நாபி யினின்று தோன்றி இதயத்தை அடைந்த நாத ரூபமான ஒலி வடிவெழுத்து: "பைசந்தி அமர்ந்து நிற்கும்". (சி. சி. 1, 22.)

## பொ

**பொருட்** பிரபஞ்சம்—பிருதிவி முதல் நாதம் ஈறாக உள்ள தத்துவங்கள். (சி. போ. வ. தீ. 92.)

## போ

**போக்கிய** தத்துவம்—அசுத்த தத்துவம். (சி. சி. 1, 19, சிவஞா.)

போக்தவ்வியம் — அனுபவிக்கப்படுவது: "போக்தவ்வியங்களாயிருக்கிற சத்தாதிகளினலும்". (சி. சி. 4, 8, சிவாக்.)

போக்தா—புசிப்பவன். (சி. சி. 2, 2, சிவாக்.)

போக காண்டம்—சுத்தா சுத்த தத்துவம். (சி. சி. 2, 70, மறைஞா.)

போக சத்தி—போகசிவனதுசத்தி. (சி. சி. 2, 75, மறைஞா.)

போக சயித்துரு காண்டம்—போக்கிய காண்டம் (சி. சி. 2, 70.)

போக சிவன்—சதாசிவன். (சி. சி. 1, 64, சிவஞா.)

போகாந்தராயம்—துய்த்தற்குரிய போகங்களை விலக்குகை. (சீவக. 3081, உரை.)

போத்திருத்துவம்—[1]நுகர்ச்சிக்கு வினை முதலாதல் தன்மை (சி. சி. 2, 80, சிவஞா.); [2]அனுபவிக்கும் தன்மை. (சி. சி. 2, 80.)

போதாந்தம்—ஞான முடிவு: "போதாந்தமான பிரணவத்துள்". (திருமந். 225.)

## பௌ

பௌட்டிகம்—பூமியில் விழுமுன் தாமரை இலையில் ஏந்திய பசுஞ்சாணம். (சைவ ச. பொது. 169, உரை.)

## ம

மகா சதாசிவன்—இருபத்தைந்து திருமுகத்தை உடையனும் சதாசிவ மூர்த்திக்கு மேற்பட்டவனும் உள்ள சிவ பேதம். (அபி. சிந்.)

மகா சைவம்—சைவம் பதினறனுள் விபூதி உருத்திராக்கம் தரித்துச் சடைவளர்த்துச் சிவனைச் சகுணனகவும் நிர்க்குணன் ஆகவும் தியானிக்க வேண்டும் எனக் கூறும் சமயம்.

மகா சைவன்—சிவ தீக்கை பெற்ற பிராமணன். (சைவ ச. பொது. 475.)

மத்திமை—[1]நடுவிரல்; [2]மத்திமம்; [3]பிறர் செவியில் கேட்கப் பெருத மெல்லோசையாய், சொல்லுவான் தன்னுள் உணர்தற்கு ஏதுவாய், வைகரிக்கும் பைசந்திக்கும் இடைப்பட்டதாய் இதயத்தினின்று எழும் நாத ரூபமான ஒலி: "உள்ளுணர் ஓசையாகி மத்திமை வேறதாயே" (சி. சி.1,21.)

மத்தியாலவத்தை—மேலாலவத்தை(சி. சி. 4, 35, மறைஞா.)

மதி மண்டலம்—[1]புருவ மத்தியம்: "அலர் மதி மண்டலத்தின் முக மார்க்க அமுது" (சி. சி. 8, 21, ஞானப்.); [2]நாபித் தானம் (சி. சி 8, 21, மறைஞா.); [3]பிரமரந்திரத்தின் நுனிப் பகுதி. (சி. சி. 8, 21, சிவாக்.)

மந்ததரம்—அதிக மந்தம். (சி. போ. பா. 8, 1, பக். 361.)

மந்த பிராரத்வம்—முற்பிறப்பில் செய்த வினை ஆன்மாவை மெதுவாகப் பற்றுகை. (சி. சி. 10, 3, சிவாக்.)

மந்திர யோனி—சுத்த மாயை. (சி. சி. 1, 58, மறைஞா.)

மந்திராத்துவா—அத்துவா ஆறனுள் மந்திர வடிவமானது. (சி. சி. 8, 6, மறைஞா.)

மலத் தீர்வு—மும்மலம் நீங்குகை. (சி. போ. பா. பக். 2.)

மா

மாசோப வாசி—மாசப் பட்டினி இருப்பவன். (சி. போ. பா, 1, 1, சிவாக்.)

மாஞ்சாதம்—நரக வகை. (சி. போ. பா. 2, 3, பக். 204.)

மாமோகம்—ஐம்புல நுகர்ச்சியில் பற்று. (சி. போ. பா. 2, 2, பக். 169.)

மாயா காரியம்—[1]மாயையின் தோற்றமாகிய பிரபஞ்சம் முதலியன: "தோன்றிக் கெடும் மாயா காரியத்தை மெய்யென நீ கண்டனையே" (அருட்பா, 1, நெஞ்சறி. 527.); [2]தனுகரண புவன போகங்களாகிய மாயையின் விளைவுகள் (சி. சி. 2, 87, உரை )

மாயா விகற்ப ஞானம்—ஒரே பொருள் வெவ்வேறு வஸ்துக்களாகக் காண வரும் ஞானம். (சி. சி. 11, 2, சிவாக்.)

மாயேயம்—பஞ்ச மலத்துள் ஒன்றும் அசுத்த மாயையின் காரியமுமான காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை என்னும் ஏழு தத்துவங்கள்: "மாயையின் காரியத்தை மாயேய மலமதென்று". (சி. சி. 2, 87.)

மானச தீட்சை—தீட்சை ஏழனுள் சீடனது மனத்துள் யோக சித்தியால் குரு பிரவேசித்து அவனுக்குச் சுத்தி செய்விக்கும் தீட்சை வகை. (சைவ ச. ஆசாரி. 65, உரை.)

மானதக் காட்சி—ஆன்மா புத்தி தத்துவத்தில் நின்று சவிகற்பமாய் அறியும் அறிவு. (சி. சி. அளவை. 6.)

## மி

மிசிரப் பிரபஞ்சம்—சுத்தா சுத்த மாயாப் பிரபஞ்சம். (சி. போ. பா. 2, 4, பக். 223.)

மிசிரம்—[1]கலப்பு; [2]கலப்பானது; [3]மிசிர சாதி.

மிருத்தியு—[1]மரணம்; [2]இயமன்; [3]தீராப் பகைவன்; [4]ஆணவ மலம். (சி. போ, 4, 2, சிற். பக். 96.)

## மீ

மீனாட்சி—[1]மதுரைத் தெய்வமாகிய உமாதேவி; [2]பொன்னாங்காணி.

## மு

முடிவினை—பிராரத்தம்: "ஆகாமிய வினையும் முடிவினையும் ஒத்தல் வேண்டும்." (சி. போ. பா. 8, 1, பக். 175, சுவாமிநா.)

முண்ட பங்கி—ஆன்மார்த்த பூசையில் இலிங்க உருவமாயுள்ள சிவபெருமானை ஐந்து முகங்களோடு கூடியவராகத் தியானிக்கை. (தத்துவப். 64. உரை.)

முமுட்சு—[1]மோட்சஇச்சை யுள்ளவன்: "முத்தனும்அவனே நாடறிய முமுட்சு" (வேதா. சூ. 14.); [2]துறவு. (யாழ். அக.)

## மூ

மூர்த்தி சாதாக்கியம்—ஒரு முகமும் மூன்று கண்களும் இரண்டு கையும் இரண்டு காலும் உடையராய்ப் படிக நிறத்தோடு தோன்றும் சிவபிரானது திருவுருவம். (தத்துவப், 191, உரை)

மூல கன்மம்—அனாதியே ஆன்மாவைப் பற்றியுள்ள கன்மம். (சி. சி. 2,39, சிவஞா)

மூலப் பகுதி—[1]முக்குணங்களும் சமநிலை அடையப் பெற்றதும் எல்லாவற்றுக்கும் மூல காரணமும் நித்தியமுமான பிரகிருதி தத்துவம் :"எல்லாப் பொருளும் தோன்றுதற்கிடமெனச் சொல்லுதல் மூலப் பகுதி" (மணி. 27, 205-6); [2]சுத்தா சுத்த தத்துவம் ஏழனுள் போக்கிய ரூபமாய் நின்ற தத்துவப் பிரபஞ்சங்கட்கெல்லாம் மூல காரணமாவதும் கலா தத்துவத்தின் விகுதியாவதுமான பிரகிருதி. (சி. போ. பா. 2, 2, பக். 160)

மூல பஞ்சாட்சரம்—நமசிவாய என்ற ஐந்து எழுத்தால் ஆகிய மந்திரம்.

மூலாதாரம்—ஆறு ஆதாரங்களுள் குய்யத்துக்கும் குதத்துக்கும் மத்தியில் நான்கு இதழ்த் தாமரை போல் உள்ள சக்கரம் (சிலப். 3, 26, உரை.)

### மெ

மெய்கண்ட சந்தானம்—மெய்கண்ட தேவரது சித்தாந்தத்தைப் பின்பற்றுவோர். (அபி. சிந்.)

### மே

மேலாலவத்தை—லலாடத்தில் ஆன்மா தங்கி நிற்கும் நிலைகளாகிய சாக்கிரத்தில் சாக்கிரம், சாக்கிரத்தில் சொப்பனம், சாக்கிரத்தில் சுழுத்தி, சாக்கிரத்தில் துரியம், சாக்கிரத்தில் துரியாதீதம் என்ற ஐந்து அவத்தைகள். (சி. சி. 4,35 நிரம்ப)

### மை

மைத்திரீ பாவனை—எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டி அவற்றின் நல்வாழ்வைக் கருதி பௌத்த பிட்சு புரியும் தியான வகை. (மணி. பக், 387.)

### மொ

மொசுப்பு—செருக்கு.

### மோ

மோக்கம்—[1]மோட்சம்; [2]விடுபடுகை.

மோசனம்—விடுபடுகை: "பாச மோசனந்தான் பண்ணும் படி". (சி. சி. 8, 3.) (சூடா.)

### மௌ

மௌன மந்திரம்—மனத்துள் செபிக்கும் மந்திர வகை.

### ய

யக்கியாரி—(தக்கன் யாகத்தை அழித்தவன்) சிவன்.

### யா

யாதனா சரீரம்—நரக அனுபவத்திற்கு உரிய தேகம்: "பாவம் யாதனாசரீரம் நல்குமாறு". (ஞானவா. சித். 18.)

### யூ

யூபத் தம்பம்—வேள்வித் தூண். (தக்கயாகப். 505, உரை.)

## யோ

**யோ**கக் காட்சி—ஆன்மா, யோக சமாதியால் கால இடங்களால் கட்டுக்கு உட்படாது அறியும் அறிவு. (சி. சி. அளவை. 4.)

யோக சமாதி—ஆன்மா உடலையும் மனத்தையும் விட்டுப் பிரிந்து நிற்கும் யோக நிலை. (திருப் பு. 341.)

யோகசாரன்—யோகாசாரன். (சி. சி. பர. யோகா. 1, உரை.)

யோக தீக்கை—[1]யோக தீட்சை; [2]யோக மார்க்கத்தால் குரு சீடனது உடலுள் நுழைந்து அவனது ஆன்மாவைக் கிரகித்துச் சிவன் திருவடியில் சேர்ப்பிக்கும் தீட்சை வகை; [3]தீட்சை ஏழனுள் நிராதார யோகத்தை பயிர்ச்சி பண்ணு விக்கை (சைவ ச. ஆசாரி. 95. உரை.)

யோக நிட்டை—யோக முறையில் தியானத்தில் ஆழ்ந்து இருக்கை,

யோகம்—[1]சேர்க்கை; [2]ஆழ்ந்த தியான நிஷ்டை; [3]அதி சூட்சும வடிவினையுடைய கடவுளை அகத்தான் வழிபடுகை ஆகிய மார்க்கம் (சி. போ. பா. 8, 1, பக். 359, புதுப்.)

## ரூ

**ரூ**பா ரூபம்—சகள நிட்களம்: "ரூபா ரூபமானதோ". (சி. சி. 1, 38.)

## ரோ

**ரோ**தயித்திரி—காத்தலும் மறைத்தலும் செய்யும் சிவ சக்தி. (சி. சி. 1, 60. ஞானப். உரை.)

## வ

**வ**ச்சிர தாரணை—அகங்காரத்தையும் சீவ தத்துவத்தையும் நீக்கிப் பர தத்துவமே தியானம் செய்யத் தக்கது என்றுஅறிந்து தியானிக்கை. (யாழ். அக.)

வசவ புராணம்—வசவ தேவர் முதலிய வீரசைவப் பெரியார்களைப் பற்றிக் கூறும் ஒரு வீரசைவ நூல்.

*

வத்தா—[1]சொல்பவன்: "அறிந்து சொல்பவனுகிய வத்தார்" (சி. சி. 6, 9, ஞானப்.); [2]நூலாசிரியன்: "வத்தாவுக்குத் தோஷம் எய்துவிக்கும்". (சிவசம. பக். 67.)

வத்திர பங்கி—ஆன்மார்த்த பூசையில் சிவனது ஐந்து திரு முகங்களையும் பூசிக்கை: "முடி முகங்களுடுப வத்திர பங்கி". (தத்துவப். 64.)

வயிந்தவம்—மாயை: "வயிந்தவத்தின் கலக்கம்தரு ஞானம்." (சி. சி. 11, 2.)

வர்ணுத்துவா—அத்துவா ஆறனுள் ஒன்ருகிய அக்கரங்கள் வடிவிலுள்ள மோட்ச கதி. (சி. சி. 8, 6. மறைஞா.)

வர கோஷ்டி நியாயம்—ஒரு சங்கத்துள் ஒருவர் தாம் அறியாதவற்றை மற்றவருடைய உதவியால் அறிந்து கொள்ளுதல் போலும் நெறி. (சி. சி. 3, 4, சிவாக்.)

வன்னித் தூம நியாயம்—'புகையுள்ள விடத்துத் தீயுண்டு' என்பது போல, பொருள்களின் பிரிவின்மையைக் குறிக்கும் நியாயம். (அபி. சிந்.)

## வா

**வா**க்கிய சேடம்—புறனடைச் சூத்திரம்: "புறனடையை வட நூலார் வாக்கிய சேடம் என்ப." (சி. போ. பா. 8, பக். 152.)

வாசக தீட்சை—தீட்சை ஏழனுள் பஞ்சாட்சரத்தைப் பதினெரு மந்திரங்களுடன் உச்சரிக்கும் முறையைக் குரு சீடனுக்கு உபதேசிக்கும் தீட்சை. (சி. சி. 8, 3, சிவாக்.)

வாசனு மலம்—வாசனை மாத்திரையாய் மெல்லிதாய் வந்து தாக்கும் பிராரத்தம்: "பஞ்சாட்சர செபம் பண்ணினுல் வாசனு மலம் போம்." (சி. போ. 9, சூர்ணி, 3.)

வாசா மகோசரம்—வாக்கிற்கு எட்டாதது: "நின் அருளாம் வாசா மகோசரம் தான் வாய்க்கும்." (தாயு. பராபர. 284.)

வாமம்—அழகு, ஒளி, இடப்பக்கம், நேர்மை, இன்மை எதிரிடை, தீமை; அகப்புறச் சமயம் ஆறனுள், அனைத்துலகும் சத்தியின் பரிணுமமே என்றும், சத்தியுடன் இலயித்தலே முத்தி என்றும் கூறும் மதம். (சி. போ. பா. அவையடக். பக். 50); பாம்பு வகை, முலை, செல்வம்.

## வி

விசர்ச்சனம்—[1]நீக்குகை: "கங்கண விசர்ச்சனம்"; [2]வெளிப் போக்குகை; [3]இஷ்டப்படி திரியவிடுகை; [4]நன்கொடை. (யாழ். அக.)

விசிஷ்டாத்துவைதம்—தத்துவத் திரயங்களுள் சித்து அசித்து என்னும் இரண்டும் ஈசுவரனுக்கு உடலாதலால் அவ் இரண்டும் ஈசுவரனும் ஒன்றே என்று கூறும் ராமாநுஜ மதம்.

விசுத்தி—[1]ஆருதாரங்களுள் அநாகதத்துக்கு மேல் பதினறு இதழ்த் தாமரை வடிவினதாகக் கருதப்படும் அடிநாத் தானம்; [2]பந்த நீக்கம்; [3]ஐயம்; [4]திருத்தம்; [5]தூய்மை; [6]ஒப்பு.

விசேட தீட்சை—தீட்சை மூன்றனுள் மாணுக்கனைச் சிவ பூசை செய்தற்கு யோக்கியனுக்கும் இரண்டாவது தீட்சை. (சைவ ச. மாணுக். 25, உரை.)

விஞ்ஞான கேவலி—விஞ்ஞானகலருள் ஆணவ மிகுதியால் நெடுங்காலமாகப் பரமுத்தியை அடையாமல் கேவல நிலையைப் பொருந்திக் கிடப்பவர். (சி. சி. 8, 2, மறைஞா.)

விஞ்ஞான மய கோசம்—பஞ்ச கோசத்துள் ஒன்ருய் அறிவு மயமாய் உள்ள கோசம். (சி. சி. பர. மாயா. 8.)

விஞ்ஞான வாதி—அறிவு மாத்திரமே உள்ளது என்று கூறும் யோகாசாரன். (சி. போ. பா. அவையடக். பக். 12.)

விஞ்ஞானகலர்—ஆணவ மலம் ஒன்றே உடைய ஆன்மாக்கள். (பவுஷ்கரம், 224.)

விஞ்ஞானன்மவாதி—பிரமமே ஆன்மா என்று வாதிக்கும் மதத்தினன். (சி. போ. வ. தீ. 362 )

வித்தியா கலை—பஞ்ச கலையுள் ஒன்றும், காலம் நியதி கலை வித்தை அராகம் புருடன் மாயை என்ற ஏழு தத்துவங்கள் அடங்கியதும் பந்தநிலை நீங்கிய ஆன்மாக்களுக்கு அனுபவ ஞானத்தைத் தருவதும் ஆகிய சிவ சத்தி. (சி. போ. பா. 2, 2, பக். 143, புதுப்.)

வித்தியா தத்துவம்—சுத்தா சுத்த தத்துவம் ஏழனுள் ஆன்மாக்களுக்குப் பகுத்தறிவைத் தரும் தத்துவம். (சி. போ. பா. 2, 2, பக். 152)

விந்து ஞானம்—சுத்த மாயாக் காரியமான நால்வகை வாக்குகளால் உண்டாம் சவிகற்ப ஞானம்: "மூவகை அணுக்களுக்கு விந்து ஞானம் மேவினது இல்லையாகில்". (சி. சி. 1, 26)

விந்து தத்துவம்—சத்தி தத்துவம். (சி. போ. பா. 2, 2, பக் 139. புதுப்.)

வியத்த லிங்கம்—உருவத் திருமேனி. (சி. சி. 12,4, மறைஞா )

வியத்தா வியத்த லிங்கம்—அருவுருவத் திருமேனி. (சி. சி. 12, 4, மறைஞா.)

வியாபகன்—[1] கடவுள் (எங்கும் இருப்பவன்); [2] எங்கும் அறியப்படும் தன்மை படைத்தவன்.

வியானன்—தச வாயுவில் ஒன்ருனதும் இரத்த ஓட்டத்தை உண்டாக்குவதுமான வாயு.

விஷாதம்—துக்கம். (சி. சி. 2, 80, மறைஞா.)

## வீ

வீசி தரங்க நியாயம்—அலைகள் போல ஒன்றன் பின் ஒன்று தொடர்ந்து வருதலைக் கூறும் நெறி. (இலக். அக.)

## வெ

வெட்ட வெளி—[1] திறந்த வெளியிடம்; [2] சூனியமான இடம்.

## வே

வேசறவு—[1] மனச் சோர்வு; [2] துக்கம்: "வேசற வொழிதி". (காஞ்சிப் பு. தழுவக். 214.)

வேத்தியம்—[1] அறியப்படுவது: "அனுபலத்தி வேத்தியம்". (சி. சி. அளவை, 1, சிவாக். பக். 113); [2] அடையாளம். (யாழ். அக.)

வேதகம்—வெளிப்படுத்துகை.

## வை

வைகரி—வாக்கு நான்கனுள் தெளிவாகச் செவிக்குக் கேட்கும் அட்சர வடிவான ஒலி. (சி. சி. 1, 20.)

வைகரி யகங்காரம்—அகங்காரம் மூன்றில் சத்துவ குண மேனும் இராசத குணமேனும் மேலிட்டிருப்பது. (சி. போ. பா. 2, 2.)

வைவைச்சுத புரம்—யமனுடைய நகரம்.

இணைப்பு :

**அசுத்த மாயை**—உயிரின் பிணிப்பு நீங்க,இறைவன் இதனை உயிரோடு சேர்க்கிறான். இது உடம்பு, பொறிகள், உலகம், இன்ப துன்ப நுகர்ச்சிகளாக உருப் பெறுகிறது.

**அட்ட மூர்த்தம்**— நிலம், நீர், தீ, காற்று, வான், ஞாயிறு திங்கள், உயிர் ஆகிய 8 உருவாய் இறைவன் விளங்குதல்.

**அத்துவா**—எழுத்து, சொல், மந்திரம் என்னும் உலகம் 3-ம் தத்துவம், புவனம், கலை என்னும் பொருள் வடிவ உலகம் 3-ம் ஆக 6—ம் அத்துவா எனப்படும். உயிர்கள், முதல்வனை அடைவதற்குப் படிவழி போல இருத்தலால் அத்துவா (வட மொழி) எனப்பட்டது.

**அத் துவிதம்**— இருதிறன் அன்மை; கடவுளும் உயிர்களும் பிரிவு இன்றி உள்ளன என்னும் தொடர்பைக் குறிக்கும் சொல்.

**அவத்தை**—நிலை: (1) காரண அவத்தை. (2) காரிய அவத்தை.

**ஆணவம்**—தொடக்கம் இன்றி உயிரோடு இணைந்து இருப்பது. அறியாமையை விளைவிப்பது. சகஜ மலம், மூல மலம் என்றும் வழங்கும்.

**ஆன்மா**—உயிர். சிறப்புச் சொல் ஆத்மா (வடமொழி) என்பது. இதன் விரிவே பரமாத்மா (இறைவன்), சீவாத்மா (உயிர்) என்பன.

**இரு வினை ஒப்பு**—நல்வினை, தீவினைகளையும் அவற்றின் பயன்களாகிய இன்ப துன்பங்களையும் ஒப்பக் கருதி விடுத்தல்.

**இறை, இறைவன்**—எங்கும் விரவி நிற்கும் பொருள்.

**உயிர்**— உடலில் விரவி இருந்து உடலை இயக்குவது; பொதுச் சொல்.

**ஐந்து மலங்கள்**— ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம்.

**ஐந்து எழுத்து**—நமசிவய (மந்திரம்).

**ஐந்து தொழில்** — படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல். பஞ்ச கிருத்தியங்கள் —(வட மொழி).

**கடவுள்**—எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பொருள்.

**கன்மம்**— வினை. உயிரின் செயல்களுக்கு ஏற்ற பயன்களை நல்லவை, தீயவை இரண்டையும் ஊட்டுவிப்பது.

**காரண அவத்தை**—(1) கேவலம் (2) சகலம் (3) சுத்தம்

**காரிய அவத்தை**— 5 வகைப்படும். அவை நனவு, கனவு, உறக்கம், பேர்-உறக்கம், உயிர்ப்பு-அடக்கம். சா(ஜா)க்கிரம், சொப்பனம் (ஸ்வப்பனம்), சுழுத்தி (ஸுஷுப்தி), துரியம், துரியாதீதம்— (வடமொழி). ஒவ்வொரு காரண அவத்தையிலும் இவை 5-ம் காணப்படும்

**கேவலம்**— காரண அவத்தைகள் 3-ல் ஆன்மா ஆணவத்தோடு மட்டும் கலந்திருந்து,செயல்அற்று நிற்கும் நிலை.

**சதாசிவன்**— முழு முதற் கடவுள்; சிவன்.

**சத்தி நிபாதம்**— (சத்தி இறங்கி வருதல்) அருள் மலர்தல். ஆணவத்தின் பிடியிலிருந்து விலகும் பக்குவம் பெற்ற ஆன்மாவுக்கு இறைவன் அருள் புரிதல்.

**சீவன், சீவாத்மா**— ஆன்மா, உயிர்.

**சுத்த மாயை**— இறைவனின் அருள் (சக்தி); ஆணவம் கன்மம் என்பவற்றோடு கலவாது, இன்பம் மட்டும் கொடுக்கும் மாயை. இறைவன் இடம் கொண்டு, தன் செயல் நடத்துவதற்குச் சார்பாக உள்ளது.

**சுத்தம்** — காரண அவத்தைகள் 3-ல் 1. ஆன்மா, ஆணவம், மாயை இவற்றிலிருந்து பாசம் நீங்கி, இறை அனுபவத்தில் திளைக்கும் வீட்டு நிலை.

**ஞானம்**—உண்மை அறிவு.

**தச காரியம்** — 10 செயல்கள்: (1)தத்துவ ரூபம் (2)தத்துவ தரிசனம் (3) தத்துவ சுத்தி (4) ஆன்ம ரூபம் (5)ஆன்ம தரிசனம் (6) ஆன்ம சுத்தி (7) சிவ ரூபம் (8)சிவ தரிசனம் (9)சிவ யோகம் (10) சிவ போகம்.

**தத்துவம்**—படைப்புக் காலம் முதல், உயிர் முத்தி அடையும் வரை, தன் தன்மை மாறாது இருக்கும் கருவிகள். இவை 36.

**துரியம்** — 3 வகை; அவை (1) கேவலத்தில் துரியம்: பிராண வாயுவின் செயல் ஒன்றே உள்ள பேர்உறக்க நிலை. (2)சகலத்தில் துரியம்: உலகப் பொருள்களில் அழுந்தி, இது இன்பம், இது துன்பம், இது மயக்கம் என நிற்கும் நிலை. (3)சுத்தத்தில் துரியம்: இறைவன் திருஅருளோடு ஒன்றி அதன் வழி நிற்றல்

**துரியாதீதம்**— (1)கேவலத்தில் துரியாதீதம்: உயிர்ப்பும் அடங்கி, உணர்வும் செயலும் அற்று இருத்தல். (2)சகலத்தில் துரியாதீதம்: இன்ப துன்ப மயக்கம் இவற்றுள் ஒன்றில் அதுவேயாக அழுந்தி நிற்றல். (3) சுத்தத்தில் துரியாதீதம்: பேரின்ப மயமாகிய பரம்பொருளில் அழுந்தி அதுவேயாக நிற்றல்.

**பசு**—பாசத்தால் பிணிக்கப்பட்டது; உயிர்;(பச்-வடமொழி)

**பதி**—பசுபதி என்பதன் சுருக்கம்: உயிர்களின் தலைவன்.

**பத்தி**—பக்தி.

**பந்தம்**— கட்டு.

**பாசம்** —(உயிரைப் பிணிப்பது); மலம் என வழங்கப்படும்.

**பூதங்கள்** 5 — நிலம், நீர், தீ, காற்று, வான்.

**மலம்**— அழுக்கு; பாசம்; கட்டு; தளை.

**மல பரிபாகம்** — ஆணவம் பழுத்து உதிர்தல்; ஆன்மாவைக் கட்டிய பாசம் தன் பிடிப்பு நீங்கல்.

**மாயேயம்**— மாயையின் திரிபுகள்; உடல் (தநு), பொறிகள் (கரணம்), உலகம் (புவனம்), நுகர்ச்சி (போகம்).

**மாயை**— 2 வகை (1) சுத்த மாயை (2) அசுத்த மாயை.

**மும்மலம்**—3 மலங்கள் (1) ஆணவம் (2) கன்மம்(3) மாயை.

**சைவ சித்தாந்தத் தத்துவங்கள் (36) வரிசைஎண்களுடன்**

**பூதங்கள் : 5** (1)பிருதிவி (நிலம், மண்). (2) அப்பு (நீர்) (3)தேயு(தீ). (4) வாயு (காற்று). (5) ஆகாயம் (வான்வெளி). **தன்மாத்திரைகள் : 5.** (6) கந்தம் (நாற்றம்) (7) ரசம் (சுவை). (8) ரூபம் (ஒளி). (9) பரிசம் (ஊறு). (10) சத்தம் (ஓசை). **ஞானேந்திரியங்கள்: 6.** (11) கிராணம் (மூக்கு). (12) சிங்நுவை (நாக்கு). (13) சட்சு (கண்). (14) துவக்கு (உடம்பு). (15) சுரோத்திரம் (செவி). (16) மனம் (சித்தம்). **கன்மேந்திரியங்கள் : 5.** (17) உபத்தம் (குறி). (18) பாயு (அபானம்). (19) பாணி (கை). (20) பாதம் (கால்). (21)வாக்கு (வாய்). (22) **அகங்காரம்.** இதன் கிளைகள் 3. (i) பூதாதி (தாமதம்); இதில் தன்மாத்திரைகள் 5-ம் தோன்றும்; (ii) வைகாரிகம் (ராஜசம்); இதில் கன்மேந்திரியங்கள் 5-ம் தோன்றும் (iii) தைசதம் (சாத்விகம்); இதில் ஞானேந்திரியம் 6-ம் தோன்றும். (23) புத்தி. (24) பிரகிருதி (மூலப்பகுதி, பிரதானம், மான்) (25) புருடன். (26) அராகம். (27) வித்தை.

(28) கலை. இதில். 1 முதல் 24 ஒரு கிளையாகவும், தோன்றிய 25, 26, 27 ஒரு கிளையாகவும் தோன்றும் (29) நியதி. (30) காலம். 28, 29, 30-ம் மாயையில் அசுத்த மாயா தத்துவம் (31) தோன்றுவன. மாயையின் மற்றொரு பிரிவான சுத்த மாயை (மாமாயை, குடிலை, குண்டலி, விந்து) யில் (36) நாதம் (சிவம்) (35) விந்து (34) சாதாக்கியம் (சதாசிவம்) (33) ஈசுரம் (32) சுத்தவித்தை தோன்றுவன.

பதி, பசு, பாசம் 3-ல் பாசத்தின் கிளைகள் *ஆணவம், கன்மம்,* மாயை; மாயையில் தோன்றுவன 1-36 தத்துவங்கள்.

(1) ஆன்ம (பாச, பிரகிருதி) தத்துவம் 1 முதல் 24. வரை. (24).

(2) வித்யா (பசு, மோகினி, அசுத்தமாயா, அதோ மாயை, மாயை) தத்துவம் 25-31 (7).

(3) சிவ (சுத்த, விந்து, சுத்த மாயா) தத்துவம் 32-36 (5)
**(அடைப்பில் உள்ளன ஒரு பொருட் சொற்கள்.)**

† (1) அந்தக் கரணம் 3 எனக்கொண்டு, குணதத்துவத்தை மூலப்பகுதியின் வேறு வைத்து எண்ணி, மூலப் பகுதிக்குக் கீழ், தத்துவம் 24 எனத் தொகை கொள்வாரும்.

(2) குண தத்துவத்தை மூலப் பகுதியுள் அடக்கி, உபகரித்தற் சிறப்புப் பற்றி, சித்தத்தை மனத்தின் வேறு வைத்து எண்ணி, அந்தக்கரணம் 4 எனக் கொண்டு, மூலப் பகுதிக்குக் கீழ், தத்துவம் 24 எனத் தொகை கொள்வாரும்.

(3) சித்தமும் மனமும் ஒன்றுக வைத்து, மூலப் பகுதியையும் குணதத்துவத்தையும் ஒன்றுக வைத்து எண்ணி, 24-ஆம் தத்துவம் மூலப் பகுதி எனத்தொகை கொள்வாரும்.

எனப் பல திறத்தார் ஆசிரியர். அவை எல்லாம் பொருளால் வேறுபாடு இன்மையின் தம்-உள் முரணுமை அறிக. இஃது அறியாதவர் அந்தக் கரணம் 3 எனக்கொண்டு, சித்தம் என்பது ஒன்றும் இல்லைஎன்பர்.

—†சிவஞானபாடியம், சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பு, (1936): பக்கம் 233-4.

---

குறிப்பு : *தமிழ்ச் சொல்

## சொல்- பொருள் விளக்கம்

**அகலர்**— கலை இல்லாதவர்; விஞ்ஞானகலர், பிரளயாகலர் இவ்இரு வகை உயிர்களுக்கும் பொதுப் பெயர்: இதன் எதிர்ச் சொல் சகலர். இங்குக் கலை, பந்தம் அல்லது தடை என்ற பொருளில் ஆளப்படுகிறது.

**அசத்து**— மாறுதல் உள்ளது; இல்லது.

**அசற்காரியம்**— காரியம், காரணத்தில் முன் இல்லாமல் புதிதாக உண்டாகிறது என்ற கொள்கை.

**அசித்து**— அறிவு இல்லாதது.

**அசுத்த மாயை**— மலம், கன்மம் இரண்டோடும் கலந்து உள்ள மாயை.

**அத்துவிதம்**— இரு திறன் இன்மை; வேறுதல் இன்மை; பிரிவு இன்மை. துவி- இரண்டு. துவிதா -இரு திறன்: அ(= ந) —மறுக்கும் இடைச் சொல்.

**அநாதி**— தோற்றம் இல்லாதது: அந்(= ந)- மறுக்கும் இடைச்சொல். ஆதி- தோற்றம்.

**அபாவம்**— இன்மை; உண்மையின் மறுதலை.

**அபேதம்**— பேதம் இல்லாதது; வேறுபாடு இன்மை.

**அவத்தை**— உணர்வு நிலை; கேவலம், சகலம், சுத்தம் 3-ம் **காரண அவத்தைகள்**— நனவு, கனவு, உறக்கம், பேர்-உறக்கம், உயிர்ப்பு- அடக்கம் 5-ம் **காரிய அவத்தைகள்**.

**அளவை**— அளக்கும் கருவி: அளத்தல்- உண்மையாக அறிதல்: மெய் அறிவிற்குக் கருவி. இது தமிழ்ச் சொல். இதற்கு நேரான வட சொல்- பிரமாணம்.

**ஆகந்துகம்**— செயற்கை; பின் வந்து கூடியது; மாயை, கன்மம் வந்து கூடும் மலங்கள். ஆணவம் சகசமலம்.

**ஆக்கம்**—காரியம்; செயற்கை.

**ஆதி**—முதல்; தோற்றம்.

**ஆதி-ஆன்மிகம்** — வினைப்பயன் வெளிப்படும் வழி (வாயில்)கள் 3-(1) தன்னால் வருவது. (ஆதி ஆன்மிகம்) (2) தெய்வத்தால் வருவது (ஆதி தெய்விகம்) (3) மழை, புயல் முதலாகப் பூதங்களால் வருவது (ஆதி பௌதிகம்).

☆

**உப இலக்கணம்**—தனக்கு இனமாக உள்ள பிற சொல்; பொருளையும் குறிக்கும் ஒரு சொல்.

**உபநிடதம்**— ஆசிரியன் பக்கத்தில் இருந்து கேட்பது (சொல்லின் பொருள்); வேதத்தின் முடிந்த மெய்- உணர்வு இயல் உணர்த்தும் பகுதி. (1) இசாவசியம், (2) கேனம், (3) சுவேதாசுவதரம், (4) கடம், (5) பிரச்சினம், (6) தைத்திரீயம், (7) சாந்தோக்கியம், (8) பிருகதாரணியகம் என்பன சில உபநிடதங்கள்.

**உபாதானம்**—முதல்-காரணம்.

**உயிர்**—உயிர்த்தற்குக் காரணமாக உள்ள அறிவுடைப் பொருள்; ஆன்மா. சில இடங்களில் உயிர்ப்பையும் குறிக்கும்.

**உய்த்து-உணர்தல்**—பொருந்துமாறு பற்றி அறிவைச் செலுத்தி உணர்தல். இந்நிலம் விளைந்தது என்றால் இந்நிலம் அதனிடத்தில் இட்ட விதைகள் முளைக்கத் தகுதியாய் இருந்தது என நுணுகி உணர்தல் போன்றது.

**கரணம்**— கருவி; சிறந்த காரணம் (தனு, கரண, புவன, போகம். இதில் கரணம், தத்துவம் எனப் பொருள்படும்).

**காண்டம்**— தொகுதி; (1) பிரேரக- (2) போசயித்துரு- (3) போக்கிய காண்டங்கள்.

**காரணம்**— முதல் நிலை; தோன்றும் பொருளுக்கு இன்றி அமையாததாய் முன் உள்ளது.

**கேவலாத்துவிதம்**—'ஒரு பொருள்' கொள்கை; ஏகான்ம வாதம். 'அத்துவிதம்' என்ற சொல்லின் பொருள் ஒன்று எனக் கூறி, அதன் கருத்தைத் தெரிவிக்கும்போது, 'கேவலம் ஒன்று, ஒன்றே என்னும்படி இருத்தல்' என விளக்கும் கொள்கை.

**கோசரம்**— உணர்வுக்கு விளக்கம் ஆவது; பொருள் ஆவது; புலன் ஆவது.

**சகலர்**— கலையினால் பிணிப்புப் பட்டவர். இதன் எதிர் சொல் அகலர்.

**சங்கற்பம்**— பொருளை நோக்கும் திரு அருள், நினைவு, கருத்து.

**சதசத்து**— ஆன்மா, அசத்தைச் சார்ந்து அசத்தாயும், சத்தைச் சார்ந்து அசத்தின் நீங்கி, சத்தாயும் விளங்குவது.

**சத்தி**— ஆற்றல், வல்லமை: அறிதல், விழைதல், இயற்று தல் என நிகழ்தற்கு உரிய ஆற்றல்.

**சத்தி நிபாதம்**— திருஅருளின் வீழச்சி. சத்தி- திருஅருள். நி- ஏற்றமாக, பாதம்- வீழ்ச்சி.

**சத்து**— மாறுபடாத செம்பொருள்; முதல்- பொருள்; சிவம்; பரம்பொருள்.

**சமட்டி**— கூடிய நிலே: அ, உ, ம் இவற்றின் கூடிய நிலே ஓம் என்பது. எதிர்ச் சொல் வியப்பு.

**சற்காரியம்**— காரியம் வெளிப்படுவதற்கு முன், காரணத் தில் வெளிப்படாது உள்ளது என்ற கொள்கை; சத்தி- காரணம், வியத்தி- காரியம் (ஆற்றல் உருவே காரணநிலே, புலப்படு நிலே காரிய நிலே) என்ற கொள்கை. சத்- உள்ளது; காரியம்- ஆக்கப்பாடு எய்துவது.

**சாதனம் (சாதகம்)**— குறித்த பயனே எய்துவிப்பது; ஒழுக்க முறை; கருவி.

**சாமுசித்தர்**— முன் பிறவிகளில் தவத்தை முடித்து மெய் யுணர்வு விளங்குதற்கு உரிய பக்குவ முதிர்ச்சி உடையவர். சம் (நன்ருக)- சித்தம் (கூடப் பெறுதல்) உடையவர்.

**சிறப்பு இயல்பு**- பொதுவாக- குறித்த பொருளில் இருக்கும் இயல்பு என்பது சாத்திரமுறை—பிறபொருள்—சார்பு பற்ருது குறித்த பொருளில் உள்ளதாக அறியப்படும் இயல்பு. இதை உண்மை இயல்பு, சொரூப இலக்கணம் எனவும் கூறுப.

**சுழல்**— காரண காரியமாகச் சுழன்று வரும் வட்டம்: புத்தி யின் குணங்களாகிய அறம், அறிவு, வெறுப்பு, செல்வம்பாவம், அறியாமை, விருப்பு, வறுமை என்ற 8-ம் 'புத்தி பாவகச் சுழல்' எனப்படும். இவை தன்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதன்மம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநை சுவரியம் என்றும் குறிப்பர்.

**சூத்திரம்**—சில சொற்களில் கருதிய பொருளேக் குறிக்கும் சொல்தொடர்: (எ-டு) பிரம சூத்திரம். நூற்பா; கருதிய பொருளேச் செம்மையாகச் செறித்து நுண்-உணர்விஞற் கொள்ள வைப்பது. (எ-டு) சிவஞான போத சூத்திரம்.

**ஞாதுரு**—அறிவு அடிப்படை 3-றனுள் ஒன்று; அறிவோன்.

**ஞானம்** -- அறிவு. (அறிவோனேயும், அறியப்படும் பொருளேயும் உடன் கொண்டு வருவது)

**ஞேயம்**—அறிவு அடிப்படை 3-றனுள் ஒன்று; அறியப் படும் பொருள்.

**தடத்த இயல்பு**—பிற பொருள் சார்பு பற்றி ஒரு பொருளுக் குக் கூறப்படும் இலக்கணம். தடம்-அணிமை; தம்- உள்ளது. பொது இயல்பு என்பதும் இதுவே.

**தத்துவம்**—உண்மை; படைப்புக் காலம் முதலாக ஒடுக்க காலம் வரை தன் தன்மை மாறாது உள்ள பொருள். தத்-அதனது, த்வம்-தன்மை. சித்தாந்த சைவத்தில் தத்துவம் 36; சாங்கியத்தில் 25.

**தனு**—உடம்பு. தனு, கரணம், புவனம், போகம் என் பவற்றுடன் எண்ணப்படும். இவை மாயையின் காரியங்கள்.

**தாதான்மியம்**—அது தான் ஆதற்கு ஏது ஆகிய சம்பந்தம்; இஃது 2 வகைப்படும். (1) ஒரு பொருளே குணம், குணி எனவோ, அவயம், அவயவி எனவோ ஒரு வகையால் 2 என வழங்குவதற்கு ஏது ஆயது; இது தாதான்மிய சம்பந்தம். தற்கிழமை, சமவாயம் என வழங்கும். (2) பொருள்கள் 2 ஒரு வகையால் ஒன்று என்று சொல்லும்படி செயற்பட ஏதுவாய் உள்ளது; இஃது அத்துவிதம் எனப்படும். இது ஒரு பொருளைக் காணும்போது, கண்ணுக்கும் அதை விளக்கிச் செலுத்தும் ஆன்ம அறிவுக்கும் உள்ள சம்பந்தம்.

**தாரகம்**—சார்பு, ஆதாரம். முதல்வன் உலகிற்குத் தராகம்: முதற் பொருளைக் குறிக்கும் பிரணவமும் தாரகம் எனப்படும்.

**தாற்பரியம்**—சொல்லின் பொருளுக்கு மூலமாக உள்ள கருத்து. தத்-அது. பரம்-மூலம். சொல்வேறு-பொருள்வேறு என்று வேறுபடுத்தி உணர்தல் வேண்டும். ஏகம் என்ற சொல் வேதங்களில் வருவது. ஒன்று என்பது அதன் பொருள். தாற் பரியம், பதிப் பொருள் ஒன்று என்பது. பதார்த்தம் ஒன்று என்பது அன்று.

**தீக்கை**—ஆகமச் சார்புள்ள நெறிகளில் செய்யப்படும் ஒரு தொடக்கச் சடங்கு. அது திரு நோக்கம் (ஆசிரியன் மாணுக்கனை நோக்கி அவனது அறியாமைப் பிணிப்பை நீக்குவது) முதலாகவும், சமயம், விசேடம், நிருவாணம் என பல வகைப்படும். தீ—கொடுத்தல். க்ஷா—கெடுத்தல். மலப் பிணிப்பைக் கெடுத்து, மெய்உணர்வைக் கொடுப்பது தீக்கை (தீக்ஷா)எனப்படும். சமய தீக்கை-சமய நுழைவும் திரு 'ஐந்து எழுத்து' ஓதவும் செய்வது. விசேட தீக்கை-சிவலிங்க பூசை மேற்கொள்ளச் செய்வது. நிருவாண தீக்கை-வினையை நீக்கி

ஞான உபதேசம் மேற்கொள்ளச் செய்வது. சிவபூசையே, சிவயோகமாக முற்றும்.

**துணைக் காரணம்** — ஒரு காரியத்திற்கு வேண்டிய முதல், துணை, நிமித்தம் என்னும் 3 காரணங்களுள் ஒன்று. **முதல்—காரணம்,** காரியம் ஆகும்வரை உடன் நிகழ்ந்து பின்பிரிவது. குடமாகிய காரியத்திற்கு மண்முதல்-காரணம். தண்டு, திரிகை குயவன்கை என்பவை துணைக் காரணம். உலகமாகிய காரியத்திற்கு மாயை முதல்-காரணம். இறைவனது வல்லமையும் அதன் வழிப்படும் இருவினைகளும் துணைக் காரணம்.

**நிமித்த காரணம்**—தொழிலில் சுதந்திரம் உடையோன் ஒரு காரிய நிகழ்ச்சியில் முதல்-காரணம் முதலியவற்றின் இயல்பு அறிந்து செய்வோன், வினைமுதல். செய்தொழிலில் தன் வயம் உடைய அறிவுடையோன்.

**நியாயம்**—தரிசனங்களில் 6 ல்ஒன்றுநியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், பூருவ மீமாஞ்சை, உத்தர மீமாஞ்சை (வேதாந்தம்) என்பவை அவை. பொருள் விளக்கத்திற்கு எடுத்துக் காட்டாகக் கூறப்பட்டு வரும் சில உவமைகள். (எ-டு.) பிரமரகீட நியாயம். தூல அருந்ததி நியாயம்.

**பக்குவம்**—குறித்த பயனைத் தருதற்கு உரிய வளர்ச்சி உடைமை. ஒருவன் செய்த வினை, தன்பயனை விளைவிக்க உரிய செவ்வி; உயிரைப் பற்றியுள்ள மலப் பிணிப்பு நீங்குதற்கு உரிய செவ்வி (மலபரி பாகம்). மலரும் பருவத்தை எய்தியுள்ள மொட்டு போல், உயிர் திருஅருளைத் தலைப்பட்டு உணர்ந்து இன்புறுவதற்கு உரியநிலை.

**பசு ஞானம்**—ஆன்மா தான் உடல் முதலிய புறப்பொருள்களின் வேறு என்று உணரும் நிலையில் திரு அருளின் உண்மையை உணராமையால் தானே முதல்வன், தன்னின் வேருய பொருள் ஒன்றும் இல்லை எனச் செருக்கி நிற்கும் உணர்வு. இது **பரா அகந்தை** எனப் பிற நெறியினரால் குறிக்கப் படுகிறது.

**பதார்த்தம்**—சொல்லுக்குப் பொருள்; பதம்-சொல் அர்த்தம்-பொருள். சொல்லாற் பெயரிட்டு வழங்கப்படும் பொருள். "குணம், செயல், பொதுமை, சிறப்பு, ஒற்றுமைச் சம்பந்தம், இன்மை" எனப் பிரித்து உணர்வன அனைத்திற்கும் பொதுவாக வழங்கும் பெயர்.

**பதி ஞானம்**—முதல்-பொருளை அதன் அருள்- ஒளி வாயிலாகத் தலைப்பட்டு உணரும் மெய்-உணர்வு. சிவஞானம் எனவும் வழங்குப.

**பத்ததி**—முறைமை: சிவநெறியிற் கூறப்படும் வழிபாடு தீக்கை முதலியவற்றை நடைமுறையிற் கடைப்பிடித்தற்கு உரிய விதிகளை ஒழுங்கு செய்து தரும் நூல். (எ-டு) சோமசம்பு பத்ததி, அகோரசிவபத்ததி. இவை கிரியாக்கிரமாவளி (செயல் முறை வரிசை) என வழங்கும்.

**பரிசம்**—தொடுதல்; தீக்கை வகை. ஆசிரியன் தன் கையைச் சிவமாக எண்ணி, மாணவன் நெஞ்சிலும் தலையிலும் வைத்தல்; ஆசிரியன் தன் அடிகளை மாணவன் முடிமேல் வைத்தலும் பரிச தீக்கையே ஆம்.

**பாவம்**—சமய நூல்களில் விலக்கியவற்றைச் செய்தல்; பின் துன்பத்தைத் தருவது.

**பாவனை**—(ஒருவன் தன் உள்ளத்தில்) எண்ணுதல். ஆசிரியன் மாணுக்கனை 'இவன் சிவம்' என எண்ணுதல் அருள் உருவப் பாவனை; 'நீ சிவம்' என அறிவுறுத்தப்பட்ட மாணவன் 'சிவம் நான்' எனப்பாவித்தல், **சிவோகம் பாவனை** எனப்படும்: சோகம் (அது நான்) என உன்னுதல், சோகம் பாவனை. இவை உபாசனை (இறைவனை அணுகும் முறை) வடிவில் உள்ளவை.

**பிரமரகீட நியாயம்**—வண்டு புழுவைத் தன்வண்ணமாக்கு வதுபோன்றமுறை. பிரமரம்-வண்டு (குளவி); கீடம்-புழு குளவிதான் இடும் முட்டையிலிருந்து வெளிப்படும் புழு வடிவமே பின் குளவி வடிவத்தைப் பெறும் : வெளியிலிருந்து எடுத்து வரும் புழு, குளவியின் குட்டிக்கு உணவு ஆகின்றது. வேறு வகையாகச் சொல்லி வருவது தவறு ஆகும்.

**பிரமாணம்**—அளவை. மெய் அறிவு (பிரமா)க்குக் கருவி-பிரமாகரணம் பிரமாணம்.

**பிரளயாகலர்**—உயிர்வகை 3-றனுள் ஒன்று: ஆணவம் கன்மம் இவற்றுல் கட்டு(பிணிப்பு)ப்பட்டு இருப்போர். பிரளயத்தில் கட்டு நீங்குவோர்.

**புத்தி குணம்**—பொருளை இன்னது என, மனிதன் துணி வதற்குக் கருவியாக உள்ள அக (உள்) உறுப்பு புத்தி எனப் படும். புத்தியில் தோன்றும் குணங்கள் அறம், அறிவு, வெறுப்பு, செல்வம் முறையே இவற்றின் எதிர்மறையான பாவம், அறியாமை, விருப்பு, வறுமை என 8ஆகக் கூறப்படும். இவற்றை அமைதி(சத்துவம்), அடர்ச்சி (இராசதம்), மந்தம் (தாமதம்) என்னும் 3-ல் அடக்குவர். இவை முறையே இன்பம், துன்பம் என நுகரப்படும்.

**பூருவ மீமாஞ்சை**—வேதத்தின் கன்ம (முன்) காண்டப் பொருளை ஆராயும் ஆராய்ச்சி நூல்.

**பேத வாதம்**—உலகமும் உயிர்களும் முதல்-பொருளின் வேறு எனப் பேசும் வாதம் (பேச்சு).

**பேதாபேதம்**—காரண காரியங்கள் தமக்குள் வேறுபட்டும் (பேதம்) வேறுபடாமலும் (அபேதம்) உள்ளன என, கொள்ளும் கொள்கை.

**மகா வாக்கியம்**— பெருமொழி; சோயமஸ்தி; தத்துவமசி; போகமஸ்மி; பிரஞ்ஞானம் பிரம்ம என்பவை வேதங்களில் உள்ள முடிந்த உண்மையைக் காட்டும் பெருமொழிகள் என்ப. பெரும் பெயர், ஒரு வார்த்தை எனவும் தமிழில் வழங்குவர். சைவ சித்தாந்தத்தில் 'சிவாயநம' என்ற திரு எழுத்து ஐந்தே பெருமொழிகளில்- பெருமொழி என, குறிக்கப்படும்.

**மாயை**—காணப்படும் உலகப் பொருள்களின் முடிந்த முதல்-காரணம். வடசொல்-மாயா, தமிழில் மாயை என வழங்குப. ஆனால் பொருள் வேறுபாடு உண்டு. மா-ஒடுங்குதல். யா-வருதல்; எல்லாப் பொருள்களும் எதனில் ஒடுங்கி, எதிலிருந்து தோன்றுமோ அதை மாயை என்பர் சைவ சித்தாந்திகள். ஒரு பொருள் கொள்கையினர் 'யமாச' என, சொல்-பொருள் காரணங்காட்டி, எது ஆராயும் போது இல்லை என முடிக்கப்படுகிறதோ அது மாயை என்பர்.

**வாக்கு மனாதீதம்**— சொல், நினைவு இரண்டையும் கடந்து நிற்றல். பாச அறிவு, பசு அறிவு இவற்றிற்கு அப்பால்- பட்டு இருத்தல்.

**விசிட்டம்**— விசேடணம்- அடைமொழி. அதனோடு கூடியது.

**விசிட்டாத்துவிதம்**— பரம்பொருள் விசிட்ட (விசேட)த்தினால் ஒன்று என்ற கொள்கை. அத்துவிதம்- ஒன்று; அறிவு இல்லாத உலகமும், அறிவு உள்ள உயிர்களும் பரம் பொருளுக்கு வேறாக உள்ளன: பரம் பொருள் அளவற்ற உயர்ந்த குணங்களையும் உடையது. அவை பரம்பொருளுக்கு குணமாகவும் உடைமை அடிமைகளாகவும் விசேடணங்களாக இருத்தலின், அவ்விசேடணங்களால் அடுக்கப்பட்டுத் தலைமைப் பொருளாக உள்ள பரம் பொருள் ஒன்றுதான்;அத்து

விதம் (ஒன்று) என்னும் கருத்து, (1)பரம் பொருளுக்கு குணங்கள் இல்லை; (2)உலகு உயிர்கள் இல்லை என்று குறிக்கவில்லை என்னும் கொள்கை.

**விஞ்ஞா(ண-ஞ)கலர்**—விஞ்ஞானத்தினுல் கலையை நீங்குவோர். மூல (ஆணவ) மலம் ஒன்ருல் மட்டும் தளை (கட்டு) பட்டு இருப்போர்.

**வியஞ்சகம்**— விளக்குவது; காட்டு; இருளில் உள்ள பொருளை விளக்கிக் காட்டுவது ஒளி; பழுதுபட்ட பார்வையினருக்கும் பொருள்களை விளக்கிக் காட்டுவது மூக்குக் கண்ணுடி; சுவை, ஒளி முதலிய புலன்களை ஆன்மாவிற்கு விளக்கிக் காட்டுபவை நா, கண் முதலிய பொறிகள்-ஒளி, கண்ணுடி, பொறி முதலியவை வியஞ்சகம் காட்டு எனப்படும்.

**வியட்டி**— பிரிந்து நிற்பது; அ, உ, ம் என்பவை (நாதம், விந்து உள்பட) )வியட்டிப் பிரணவம் எனப்படும். எதிர்ச் சொல் ச**மட்டி**, இவ்எழுத்துக்களைக் கூட்டி மொழிந்தால் ஓம் என ஆகும்: அது சமட்டிப் பிரணவம். தோப்பு- சமட்டி, தனிமரங்கள் வியட்டி.

**வியத்தி**— விளங்கி நிற்பது; அரும்பில் அடங்கி உள்ள மணம், மலரில் வியத்தமாய்த் தோன்றுகிறது.

**விருத்தி**— ஒரு காரணத்திலிருந்து காரியந்தோன்றும் முறைகள் பலவற்றுள் ஒன்று; ஒரு துணியையே கூடாரமாக, குடையாக, சட்டையாக அமைக்கின்ருேம்: இம்முறை **விருத்தி** எனப்படுகிறது. பாலில் பிரை சேர்த்தால் அது தயிராகித் திரிகிறது: இது **பரிணுமம்** எனப்படும். பலர் ஒன்று சேர்ந்தால் கூட்டம் உண்டாகிறது: இது சமூகம் எனப்படும்: நூலை ஒழுங்குபடப் பின்னிச் சேர்த்தால் ஆடை உண்டாகிறது; இது **ஆரம்பம்** எனப்படும்; இப்பி வெள்ளியாகக் காணப்படுவது போல ஒன்றன் வேறுபடு தோற்றத்தை **விவர்த்தம்** என்பர்.

**விவர்த்தம்**— வேறுபடு தோற்றம்: கயிறு பாம்பாகக் காணப்படுவது.

## அருஞ்சொல் பொருள் வரிசை

(**குறியீடுகளின் விளக்கம் :** * உபசர்க்கம். † எதிர்மறை. ‡ தத்திதம்)

**அ**கங்காரம்—அந்தக்கரணம் 4-ல் ஒன்று. அகம்-நான், காரம்-செய்தல்.

அகச் சமுதாயம்—உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்பன. அகம்-உள். சமுதாய : சம்-ஒருங்கு. தாய-சேர்ந்திருப்பது.

அகண்டிதம்—கண்டிக்கப் படாதது, கூறு செய்யப் படாதது. அ—†. கண்டிதம்-கண்டிக்கப்பட்டது, கூறு செய்யப் பட்டது.

அகம் பிரமஞானம்—நான் பிரமம் என்னும் ஞானம். அது பசுஞானம். அகம்-நான்.

அகிதம்—தீமை. அ-†. ஹிதம்-நன்மை.

அகோரம்—அகோர முகம், சதாசிவ மூர்த்தியின் 5 முகங்களில் ஒன்று. அது கர்த்திரு சாதாக்கிய தத்துவமும் ஈசுவர மூர்த்தியும் பொருந்தி உள்ளது. கோரம்-அஞ்ஞானம், அகோரம்-அஞ்ஞானம் இன்மை. ஞானம்.

அக்கபாத முனிவர்—நையாயிக நூல் செய்த கௌதமர். அக்ஷ-தர்க்கம். பாதர்-சென்றவர்.

அங்கம்—வேதாங்கம். பகுதி, உபகரணம், துணைக் காரணம்.

அங்குலி—விரல்.

அசத்தி—வலி இன்மை. அ – †. சக்தி-வலி.

அசத்தியோ நிருவாணம்—நிர்வாண தீக்கை வகை 2-ல் ஒன்று. அது, தேக அந்தத்தில் முத்தியைப் பயப்பது. அ – †. சத்ய-உடனே. நிர்வாணம்-மோட்சம். உடனே மோட்சம் கொடுத்தல் இல்லாதது.

அசத்து — உள்ளது அல்லாதது, உண்மை அல்லாதது. அ – †. ஸத்-உள்ளது.

அசலம்—வேறொரு பொருளானுஞ் சலிக்கப்படாது என்றும் ஒரு படித்தாய்ச் சுவதந்திரங் கொண்டு நிற்பது, அசைவற்றது. அ – †. சல்-அசைதல்.

அசித்து—அறிவு இல்லாதது, சடப்பொருள். அ-†. சித்து-அறிவுடையது.

அசீவன்—போக்கியப் பொருள். அ - †. சீவன்- சீவித்தல் உடையது.

அசேதனம்—அறிவு இல்லாதது, சடம். தானாய் இயங்குந் தன்மை இல்லாதது. அ-†. சேதனம்- அறிவு உள்ளது, அசையும் பொருள்.

அஞர்—துன்பம்.

அஞ்ஞானம்—அவிச்சை, விபரீத உணர்வு. மயக்கம், ஆணவ மலம். அ - †. ஞானம்-அறிவு.

அடர்ச்சி—நெருக்குதல். இராசதமானது மற்ற இரு குணங்களையும் அடக்கித் தான் மேலிட்டபோது தோன்றுங் குணங்களுள் ஒன்று. அது, கொடுமை ஆகிய மனத்தாலும் சொல்லாலும் நெருக்குதலால் அடர்ச்சி எனப்பட்டது.

அடைவு—முறை.

அட்ட சித்திகள்—அணிமா முதலிய 8 வகைச் சித்திகள். அட்ட-எட்டு. சித்தி-செல்வம்.

அட்ட வித்தியேசுரர்—விஞ்ஞானாகலரில் இருந்து மலபரிபாகம் எய்தப் பெற்றும், அதிகாரம் செய்ய வேண்டும் என்னும் இச்சையால் ஈசுவர தத்துவத்தில் அதிகாரம் செய்து கொண்டிருக்கும் 8 வகை வித்தியேசுரர். (அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தர், ஸ்ரீகண்டர், சிகண்டி).

அணிமா—அட்ட சித்திகளில் ஒன்று. அது, அணுவினும் நுண்மை ஆதல். அணு + இமா = அணிமா. இமா-ஒரு விகுதி.

அணு—ஆன்மா, உயிர், மிகச் சிறியது.

அணுசதாசிவர்—சாதாக்கிய தத்துவத்தில் சதாசிவ மூர்த்தியைச் சூழச் சேவித்துக் கொண்டிருந்து போகங்களைப் புசிக்கும் அபரமுத்தர். இவர்கள் பிரணவர், சாதாக்கியர், தீர்த்தர், காரணர், சுசீலர், ஈசர், சூக்குமர், காலர், தேகேசுவரர், அங்சு என 10 பேர் ஆவர்.

அணைந்தோர் தன்மை—சீவன் முத்தர் இயல்பு.

அண்டசம்—முட்டையில் பிறப்பன. அண்ட-முட்டை. ஜம்-பிறந்தது.

அதர்மம்—தருமம் அல்லாதது, பாவம். அது, வேதத்தில் விதிக்கப்பட்டன செய்யாமையும், விலக்கப்பட்டன செய்த லும் ஆம். அ – †. தர்ம–நற்செயல்.

அதர்வணம்—4ஆம் வேதம். 50 சாகைகள் உள்ளது. இது முன் 3 வேதமும் போல் அல்லாது இடையாய வேதம் என்றும், வேள்வி முதலிய ஒழுக்கங் கூறாது பெரும்பான்மையும் உயிர் கட்கு ஆக்கமே அன்றிக் கேடு சூழும் மந்திரங்களையும் கூறும்.–நச்சினார்க்கினியர்.

அதிகார சிவன்—மகேசுவரர். இவர் சுத்த மாயையிலே உற்பந்ந காரியத்தைச் செய்வதினால் அதிகார சிவன் எனப் படுவர்.

அதிகாரம்—உரிமை. யோக்கியம், தலைமை. அதி–மேல். காரம்–செயல்.

அதி சூக்கும சித்து—தூல சித்துப் போல் அல்லாது மிக நுண்ணியதான சித்துப் பொருள் .

அதி சூக்குமம்—மிக நுண்மை. அதி–அதிகம். சூக்குமம்–நுண்மை.

அதிட்டானம்—இடம், நிலையம். அதிஷ்டாந : அதி–மேல், ஸ்தாநம்–இடம்.

அதிட்டான வாயில்—நிலைக்களம்.

அதிட்டித்தல்—நிலைக்களமாகக் கொண்டு செலுத்துதல்.

அதி தீவிரம்—மிக்க தீவிரம். அதி–மிகுதி. தீவிரம்–வேகம்.

அதி மார்க்க நூல்—உருத்திரர்களால் செய்யப்பட்ட பாசு பதம், காபாலம், மாவிரதம் என்பன.

அதி மார்க்கம்—பர சமயங்களுக்கு அப்பாற்பட்டு உட் சமயமாய்ச் சித்தாந்தம் அல்லாததாய் உள்ள சமயம். அதி–கடந்த. மார்க்கம்–சமயம், வழி.

அதி மார்க்க வினை—யோகஞ் செய்தல். அதி–கடந்த. மார்க்கம்–வழி. வினை–செயல்.

அதிருஷ்ட சன்மம்—காணப்படாத சன்மம். அ – †. திருஷ்டம்–காணப்பட்டது. சன்மம்–பிறப்பு.

அதிருஷ்ட ஜன்மோப போக்கிய கன்மம்—காணப்படாத பிறவியில் அனுபவிக்கப்படும் கன்மம். ஜன்மம்–பிறப்பு. உபபோக்கியம்–அனுபவிக்கப்படுவது.

அது அதுவாய் நின்று அறிதல்—சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறிதல்.

அதோ மாயை—அசுத்த மாயை. சுத்த மாயைக்கு அதோ பாகம் ஆதலால், அதோ மாயை எனப்படும். அதஸ்-கீழ்.

அத்தியாசம்—ஒன்றை மற்று ஒன்றாகக் கொள்ளும் விபரீத ஞானம். அதி-முன். அஸ்-இருத்தல்.

அத்தியாச—விபரீத.

அ(ஆ)த்தியான்மிக நூல் — சாங்கியம், பாதஞ்சலம், வேதாந்தம் என்பன. அவை உபநிடதங்களை எடுத்துக் காட்டி இருடிகளால் செய்யப்படுவனவாய், ஆன்ம ஞானத்தைத் தரும் நூல்கள்.

அத்தியான்மிக வினை—சிவபூசை முதலிய செயல். அதி-மேலான. ஆன்மிகம்-தனக்கு உரியது.

அத்துவ சுத்தி—அத்துவாக்கள் 6லும் சஞ்சிதமாய் இருந்த அனைத்து கன்மங்களை எல்லாம் ஒரே காலத்திலே புசிப்பித்துத் தொலைத்து முத்தி கொடுத்தல்.

அத்துவா—வழி. ஆன்மாக்களுக்குக் கன்மம் ஏறுதற்கும், பரகதி அடைதற்கும் காரணம் ஆகிய வழி.

அத்துவித நிலை—சிவமும் ஆன்மாவும் தம்முள் வேறு அற ஒற்றுமைப்பட்டு நிற்றல்.

அத்துவிதம் — பேதப்பொருள்கள் 2 தம்முள் அபேதம் ஆதற்கு உரிய சம்பந்தச் சிறப்பு. அஃதாவது, பொருள் 2 ஆக இருந்தும், வேறு அறக் கலந்து நிற்கும் தன்மை. அ – †. த்விதம்-2 வகை.

அநந்த சத்தி— அளவில் ஆற்றல் உடைமை. இது, பரம சிவனது குணங்கள் 8ல் ஒன்று. அநந்த-அளவற்ற. சக்தி-வல்லமை.

அநந்நியம்—அந்நியம் அல்லாதது, ஒற்றுமை. அந – †. அந்யம்-வேறு.

அநாகதம்—ஆதாரங்கள் 6-ல் 4-ஆவது. இது, மணிபூரகத்துக்கு 10 விரல் பிரமாணத்துக்கு மேலே இருதய கமலத்தில் முக்கோண வடிவினதாய் 12 இதழ் உடையதாய் இருக்கும். அதிதேவதை உருத்திரன். அநாஹத: அந்—†. ஆஹதம்-விளங்கினது.

அநாதி கேவலம்— 5வகைக் கேவலங்களுள் ஒன்று. அது, அறிவை மறைத்து மயக்கத்தைச் செய்யும் ஆணவமலத்தோடு ஆன்மா அனாதியே கூடி அறிவு இன்றிக் கிடக்கும் நிலை, மருட்கேவலம்.

அநாதி போதம்—இயல்பாகவே ஞானம் உடைமை. இயல்பாகவே பாசங்களில் நீங்குதல். இது, பரமசிவனது 8 குணங்களுள் ஒன்று.

அநாதி முத்த சித்துரு—அநாதியே மலபந்தம் இன்றி இருக்கும் அறிவு உரு ஆகிய சிவம், இயல்பாகவே பாசங்களில் நீங்கின கடவுள். அநாதி முத்த— இயல்பாகப் பாசங்களில் நீங்கிய. சித்து-அறிவு. உரு-வடிவம்.

அநியத காலோப போக்கிய கன்மம்— இன்ன வேளை புசிக்கப்படும் என்று அறியப்படாத கன்மம். அநியத-நியமம் அல்லாத. காலம்-சமயம். உபபோக்கிய-புசிக்கப்படுவது.

அநியமம்—தகாத காரியத்தைச் செய்ய வேண்டும் என்னுஞ் சங்கற்பம். அ-†. நியமம்-ஒழுக்க நிலை.

அநிருத்தன்—பிரத்தியுமிநன் உடைய ஒரு மகன்.

அநிநவசனம்—வசனித்தற்கு இபலாத இல் பொருள். சொல்லொணாதது. அ-†. வசநம்- பேச்சு.

அநிருவசனீயம்—பேசப்படக் கூடாதது. அ-†. நிர் வசநீயம்- இலக்கணம் முதலியவைகளால் நிச்சயித்துச் சொல்லப்படுவது.

அநிர்த்தேசியம் — சுட்டி அறியப்படாதது. அ-.† நிர்த் தேசியம்: நிர்-நிச்சயம். திச்-விளக்குதல்.

அநுக்கிரகம் — அருள். அநு-பின். க்ரஹ்- எடுத்தல், பற்றுதல்.

அநுபவம் — அநுபோகம், புசிப்பு, அனுபூதி, அறிந்த பொருளில் அழுந்துதல். அநு-பின். பவ-உண்டாவது. பூ- ஆதல்.

அநுபலத்தி—அறியாமை, இல்லை என்றறியும் அறிவு. அந்-†. உபலத்தி-அறிதல். உப—கிட்ட, சமீபம். லப்தி— பெறுதல், அடைதல்.

அநுபூதி—பிறபொருளின் துணை வேண்டாது இயற்கை யாக பொருள்களை அளந்து அறியும் அறிவு. அநு—பின் · பூதி—ஆனது. பூ—ஆதல்.

அநுமானம்— கருதல் அளவை. இது நேரே அறியப்படாது சாதித்துப் பெறற்பாலதாய் மறைந்து நின்ற பொருளை அதனை விட்டு நீங்காது யாண்டும் உடனாய் நிகழும் ஏதுவைக் கொண்டு உணர்வதாகிய ஆன்மாவின் ஞானசத்தி. அது, புகையைக் கண்டு, காணப்படாத நெருப்பை உண்டு என்று உணர்தல் போல்வது, ஏதுக்களைக் கொண்டு மறைந்த பொருள்களை அறிதல். அநு—பின். மாநம்—அளவை. மா—அளத்தல்.

அநுமான அளவை—அநுமானப் பிரமாணம்.

அநுவாதம்—முன் கூறிய ஒரு பொருளை ஒரு நிமித்தத்தால் பின்னும் எடுத்துக் கூறுதல். வாதி கூறிய பொருளை நீ இவ்வாறு கூறினை எனக் கண்டனஞ் செய்தற் பொருட்டுப் பிரதிவாதியும் கூறுதல். அநு—பின். வாத— சொல்லுதல்.

அநேகாந்த வாதம்—ஆருகத சமயம். அது பல முடிவைச் சொல்லுவது. அந்த—முடிவு. வாதம்— சொல்லுவது.

அநைசுவரியம் — ஐசுவரியம் இன்மை. அந்—†. ஈச்—செல்வம், உடைமை.

அந்தக்கரண ஆன்ம வாதிகள்—அந்தக் கரணங்களுள் ஒன்றே ஆன்மா என்று சாதிக்கும் மதத்தினர். இவர் உலோகாயதருள் ஒரு சாரார். அந்த—உள். கரணம்—கருவி.

அந்தராயம்—தீக்குணங்கள் 8-ல் ஒன்று. அது இடையூறு. தீமை, துக்கம். அந்தர—இடை. அயம்—போதல்.

அந்தரி யாகம்—உட்பூசை. அந்தர்—உள். யாஹம்—பூசை

அந்தரியாமி—உள்ளீடாய் இருப்பவன், கடவுள். அந்தர்-உள். யாமி-நடத்துபவன். யா-போதல்.

அபர ஞானம்— கீழ்ப்பட்ட ஞானம், சாத்திரம் கற்றலால் வரும் ஞானம், சிவாகமங்கள். அபர- சிறப்பு அல்லாத.

அபர நாதம்— அபரசிவ தத்துவம். அது பரநாதம் எனப்படும். ஞானசத்தி சுத்தமாயையைப் பொருந்துதலால் உண்டாவது. அபர-கீழான. நாத-ஓசை. நத்-அசைதல், ஓசை உண்டாதல். இலய சிவம்.

அபர முத்தி— பரமுத்தி அல்லாதது, பதமுத்தி.

அபரம்— பிந்தினது, பின்வருவது.

அபர வாகீசுவரி-அபரமான வாக்குக்கு அதிபதியான சத்தி.

அபர விந்து—அபர சத்தி தத்துவம். அது பரவிந்து எனப்படும் கிரியா சத்தி, சுத்தமாயையைப் பொருந்துதலால் உண்டாவது. அபர-கீழான. பிந்த்-கூறுபடுதல். இலய சத்தி.

அபாவம் — இன்மை. தருக்க நூலில் கூறும் அளவை களில் ஒன்று. அ-†. பாவம்-உண்மை.

அபான வாயு — 10 வாயுக்களுள் ஒன்று. அது குதத் தானத்திலிருந்து மலசலங்களைப் பிரித்து வெளியே விடும் வாயு. அப-கீழ். அந்- சுவாசித்தல்.

அபுத்தி பூருவம்—அறிவுடன் கூடாதது. அ-†. புத்தி-அறிவு. பூர்வம்- ஆதி, முதன்மை, முன்.

அபேதம்—பேதம் இன்மை. அ-†. பேதம்-பிரிக்கப் பட்டது. பித்-பிரித்தல்.

அபேத வாதம்—சிவமும் ஆன்மாவும் ஒன்று என வாதிக்கும் மாயா வாதம்.

அப்பிரகாசம்— அசித்து. பிரகாசம் இன்மை. வெளிப் படை அல்லாதது. மறைவில் இருப்பது. அ—†. ப்ரகாச-ஒளி. காச்-விளங்குதல். ப்ர—.*

அப்பிரமேயம்—அளவையால் அளக்கப்படாதது. அ-†. பிரமேயம்- அளக்கப்பட்டது. மா- அளத்தல். ப்ர—.*

அப்பு—நீர், 5 பூதங்களுள் ஒன்று. ஆப்-பரம்புதல்.

அமூர்த்தி சாதாக்கியம்— 5 சாதாக்கியங்களுள் ஒன்று. அது சாந்தி என்னும் பெயரை உடைய ஆதிசத்தியின் இடமாகத் தோன்றுவது. ஆதிசத்தி அரூபி; ஆதலால் அது அமூர்த்தி என்னும் பெயரை உடைத்தாய், வடிவ உறுதியாத லால் விகற்பமான கலைகளுக்கு அப்பாற்பட்டுத் தூண் வடிவமான ஒப்பற்ற இலிங்கமாய்க் கோடி சூரியப் பிரகாசத்தை உடைய இலிங்கத்தின் நடுவே காண்டற்கு அரிய வடிவைக் கற்பித்து இருப்பது. இது திவ்விய லிங்கம் என்றும், மூலத் தம்பம் என்றும் சொல்லப்படும். இவ் இலிங்கத்திலேயே சிருட்டி சங்கார காலத்தில் தோற்றமும் ஒடுக்கமும் உண்டாவது. இலிங்-லயம். கம்-தோற்றம்.

அயர்வு— துயர், கண்டதை மறந்து, மயங்கி வருந்தல்.

அராகம்— வித்தியா தத்துவம் 7ல் ஒன்று. ராக-விருப்பு. ரஞ்ஜ்-விரும்பல்.

அருட்கண்— ஞானக் கண்.

அருத்தா பத்தி— பொருட்பேறு, 6 அளவைகளில் ஒன்று. அது, பகலுண்ணான் பருத்து இருந்தான் என்றவழி, இரவு உண்டான் என்னும் பொருள் பெறுவது போல்வது. அர்த்த- பொருள். ஆபத்தி-பெறுதல். ஆ-.* பத்- பெறுதல். தி-விகுதி.

அருத்தி — விருப்பம், ஆசை. அர்த்- விரும்புதல்.

அலுப்த சத்தி—பரமசிவனது 8 குணங்களுள் ஒன்று. அது பொருளுடைமை. அ-†. லுப்த- குறைவான, லுப்-குறைத்தல்.

அவ சித்தாந்தம்—தருக்க நூலில் கூறப்பட்ட ஏதுப் போலி களுள் ஒன்று. அது, சித்தாந்தத்திற்கு இணங்காதவைகளைச் சொல்லி, சித்தாந்தம் சாதிப்பது.

அவத்தை— ஆன்மாவினது சாக்கிரம் முதலாகிய 5 வகை நிலை. அவஸ்தா : அவ—.* ஸ்தா-நிற்றல்.

அவாந்தர சிருட்டி— இடையிலே நிகழும் சிருட்டி.

அவாந்தரம்—இடையிலுள்ள காலம், இடையிலுள்ள இடம், இடையில் நிற்பது. அவ—.* அந்தரம்-இடை.

அவிகார வாதி— ஈசுவர அவிகாரவாதி (பார்க்க).

அவிச்சை — அஞ்ஞானம். அவித்தை, அறியாமை, ஆணவ மலம். வித்தை விச்சை எனப் போலி ஆயிற்று.

அவித்தை—அஞ்ஞானம், அறியாமை, ஆணவ மலம். அவித்யா: அ-†. வித்யா- அறிவு. வித்- அறிதல்.

அவிநாபாவம்—விட்டு நீங்காமை. நீக்கம் இன்றி இருப்பது, பிரிவு இலதாய் உடன் நிகழ்வது. அ- இன்மை. விநா- நீக்கம். பாவம்- இருத்தல்.

அவுத்திரி — ஓமத்தோடு கூடச் செய்யும் தீட்சை, ஹோத்திர சம்பந்தம் உடையது. ஹோத்திரம்-ஓமம். ஹு- அக்கினியில் நெய் முதலியவற்றை விடுதல்.

அவை— கற்றோர், சபை.

அவை அடக்கம்—ஒருவர் தாம் செய்த நூலிலே குற்றம் ஏற்றாதபடி கற்றோரை வழிமொழிந்து அடக்குதல், சபையை அடக்குதல்.

அவைராக்கியம்— வைராக்கியம் இன்மை. அ-†. வைராக்ய -விராசம் என்னும் பெயர் அடியாகப் பிறந்த தத்திதம் ‡வி-†. ராக-விருப்பு. ரஞ்ஜ்- விரும்புதல்.

அவ்வியத்தம்—பிரகிருதி மாயை, பிரிந்து தெரியாதது, வெளிப்படாதது. அ-†. வ்யக்த- வெளிப்பட்டது. வ்யஞ்ஜ்- வெளிப்படுதல்.

அவ்வியாப்பியம்— வியாபிக்கப்படாதது. அ-†. வியாப் பியம் - வியாபிக்கப்படுவது. வ்யாப் - எங்கும் நிறைந்து இருத்தல். ய- விகுதி.

அழகு— இனிய தன்மை.

அழுக்காறு— பொறாமை.

அளவில் ஆற்றல்— பரமசிவனது 8 குணங்களுள் ஒன்று. அது அளவு இடப்படாத வலிமை.

அளவை—உலகத்துப் பொருள்களை எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்னும் 4 வகை அளவினால் அளந்து அறியுமாறு போல, பதி முதலிய பொருள்களை அளந்து அறி தற்குக் கருவி ஆகிய பிரமாணம்.

அளவை நூல்—தருக்க சாத்திரம்.

அளாவுதல்—தழுவுதல், கொண்டாடல்.

அறிவு—பேரறிவு, சிவம். அறியப்படும் பொருள். சுட்டறிவு பாச ஞானம்.

அனந்தர்—சுத்த தத்துவங்களுள் ஒன்றாகிய ஈசுர தத்து வத்தில் இருக்கும் அட்ட வித்தியேசுரர்களுள்ளே தலைமை பெற்றவர் ஆகி, அசுத்தாத்துவ கர்த்தாவாய் இருப்பவர். இவர், அசுத்த மாயைக்கு மேல் சுத்த வித்தைக்குக் கீழ் இருந்த விஞ் ஞானகலருள் நின்று மலபரிபாகத்துக்குத் தக்கபடி ஈசுவர தத்துவத்தில் போகப் பெற்றவர். இவர் அசுத்த மாயையின் ஏகதேசத்தைக் கலக்கிக் கலை முதலியவற்றைத் தோற் றுவிப் பர் : அழிவு இல்லாதவர். அந் - †. அந்தம்-முடிவு.

அனர்த்தம்—பயன் அற்றது, பொல்லாங்கு, கேடு. அந் - † அர்த்தம்-பயன், பொருள்.

ஆகந்துகம்—இடையில் வந்தது, வந்து கூடியது. ஆகந்து : ஆ- மறுதலைப் பொருளைக் காட்டும். கம்-போதல்.

ஆகமப் பிரமாணம்—ஆகம அளவை, காட்சிப் பிரமாணத் தினாலும் அநுமானப் பிரமாணத்தினாலும் அறியப்படாத பொருளை அறிவிக்கும் ஆப்த வாக்கியம் ஆகிய சாத்திரப் பிரமாணம்.

ஆகமம்—கடவுள் இடத்திருந்து வந்த நூல். ஆ + கம் + அ = வருதலை உடையது. ஆ-மறுதலைப் பொருள்படும். கம்-போதல். அ-விகுதி. இது, மந்திரகலை, தந்திரகலை, உபதேசகலை என 3 வகைப்படும். மந்திரகலை கிரியை கட்கு உரிய மந்திரங்களைக் கூறுவது. தந்திரகலை குண்ட மண்டல வேதிகைகளைக் கூறுவது. உபதேசகலை ஆன்மா வின் மலச் சார்பு அறும்படி கூறும் ஞானோபதேசத்தை உடையது. ஆ-சிவஞானம், க-மோட்ச சாதனம், ம-மல நாசம் எனப் பொருள் கொண்டுஆகமம் ஆன்மாக்களுக்கு மலத்தை நாசஞ்செய்து ஞானத்தை தோற்றுவித்து மோட்சம் (வீடு) கொடுத்தற்காக உபதேசிக்கப்பட்ட நூல். ஆ-பசு, கம்-பதி, ம-பாசம் எனப் பொருள் கொண்டு, பதி பசு பாசம் என்பவற்றின் இலக்கணங்களை விரித்து உணர்த்தும் நூல்.

ஆகம அளவை—ஆகமப் பிரமாணம்.

ஆகாமியம்—3 வகைக் கன்மங்களுள் ஒன்று. அது, பிராரத் தத்திற்கு இசைய எடுத்த தேகத்திலே அதன் பலத்தைப் புசிக்கையில் விருப்பு வெறுப்புக்களால் உண்டான நல்வினை தீவினைகள். ஆகாம்ய-வருகை உடையது. ஆ-மறுதலைப் பொருள்படும். கம்-போதல்,

ஆகாய(ச)ம்—பஞ்சபூதங்களுள் ஒன்று. ஆ-.* காஸ்-பிரகாசித்தல்.

ஆகுதி—ஓம அக்கினியில் நெய் முதலியவற்றைப் பெய்கை. ஆ-.* ஹுத-ஓமம்.

ஆக்கிராணம் — ஞானேந்திரியம் 5துள் ஒன்று. ஆக்ராணம்-மணத்தற் கருவி. ஆக்ரா-மணத்தல். நம்-விகுதி.

ஆசங்கை—சந்தேகம், ஆட்சேபம், ஆ-.* சங்கா-ஐயம், சந்தேகம்.

ஆசங்கித்தல்—ஆட்சேபித்தல், தடை நிகழ்த்தல்.

ஆசனம்—அங்கயோகம் 8-ல் ஒன்றாகிய இருக்கை. அது, சுவத்திகம் முதலாக 9 வகைப்படும். அஸ்-இருத்தல்.

ஆசாரம்—ஒழுக்கம். சர்-போதல், நடை. ஆ-.*

ஆச்சிரவம்—பொறிவழிச் செல்லுதல். ஆஸ்ரவ : ஆஸ்ரு + அ. ஆஸ்ரு-போதல். அ-விகுதி.

ஆஞ்ஞை—6 ஆதாரங்களுள் 6 ஆவது. இது விசுத்திக்கு 10 விரல் பிரமாணத்துக்கு மேலே புருவ மத்தியிலே வட்ட வடிவமாய் 2 இதழ் உடையதாய் இருக்கும். அதில் இ க்ஷ என இரண்டு அக்கரங்கள் இருக்கும். அதிதேவதை சதாசிவன். ஆ.–.* ஜ்ஞா–அறிதல்.

ஆணவ மலம்—மூம் மலங்களுள் ஒன்று. அநாதி, உண்டு என்பதற்குப் பிரமாணம். நித்தம், அதன் சத்தி அழியும். பரிபாகப்படும் வகை.

ஆணை—சிற்சத்தி. ஆஞ்ஞை–ஆணை என மருவிற்று.

ஆதி தைவிகம்—3 வகைத் துக்கங்களுள் ஒன்று. அது, தெய்வத்தால் வருவது. அதி–மேல். தைவிக–தைவத்தால் ஆயது. இக–விகுதி.

ஆதி பௌதிகம்—3 வகைத் துக்கங்களுள் ஒன்று. அது மண் முதலிய பூதங்களால் வருவது. அதி–மேல். பௌதிகம்–பூத சம்பந்தம். இக–விகுதி.

ஆத்த வாக்கியம்—உள்ள பொருளைக் கூறுவோன் வாக்கியம். ஆப்தன்–நம்பத் தக்கவன். வாக்கியம்–வசனம். ஆப்–பெறுதல்.

ஆத்தி யான்மிகம்—3 வகைத் துக்கங்களுள் ஒன்று. அது தன்னாலும் பிற ஆன்மாக்களாலும் வருவது. அதி–மேல். ஆன்மா–ஆத்மா. இக–ஒரு விகுதி.

ஆத்தி யான்மிக நூல்–அத்தியான்மிக நூல் (பார்க்க).

ஆயுஷ்யம்—சமண நூலில் சொல்லப்பட்ட தீய குணங்களுள் ஒன்று. அது சீவத்துவம், வாழ்நாள் உடைமை ஆயுஸ்–வாழ்நாள். ய–விகுதி. அய்–போதல்.

ஆய்தல்—ஆராய்ந்து அறிதல்.

ஆரிணி—சிவனுடைய பரிக்கிரக சத்தி 3ல் ஒன்று. அது 5 தொழில்களுள் சங்காரம் அனுக்கிரகம் 2–ம் செய்வது. ஹாரிணீ : ஹ்ரு–அழித்தல்.

ஆருகதம்—3 வகை நாத்திக மதங்களுள் ஒன்றாகிய அருக சமயம். அருகனைக் கடவுளாக உடையது.‡

ஆர்த்தி— கிரியா சத்தியின் புற உரு 5 சத்திகளில் ஒன்று. அழிப்பது. இறு– அழித்தல்.

ஆலய விஞ்ஞானம்— உருவ கந்தத்தை நிருவிகற்பமாக உணரும் உணர்வு. ஆ - முழுதும். லயம்—ஒடுங்கல். விஞ் ஞானம்- மேலான ஞானம். வி- விசேடம், ஞானம் - அறிவு.

ஆவரணம்—ஆணவ மலம், மூடுதல், மறைத்தல். ஆ—.* வரு- மறைப்பு.

ஆவாரம்—மயக்குவது, மறைத்தல். ஆ-* வரு-மறைப்பு.

ஆவேசம்—உட்புகுதல். ஆ-.* விஸ்- உட்புகுதல்.

ஆவேச வாதி— காபால மதத்தன்.

ஆவேசித்தல்— உட்புகுதல்.

ஆறாதாரம்— உடம்பிலுள்ள 6 ஆதாரங்கள். அவை, மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆஞ்ஞை என்பன.

ஆற்றல்— வல்லமை, அறிவு முயற்சி.

ஆன்ம போதம்— உயிர் உணர்வு, அது இது என்று சுட்டி அறியும் அறிவு.

ஆன்ம லாபம்— ஆன்மாவால் அடையப்படுவது.

ஆன்மிகம்— ஆன்ம சம்பந்தம் உடையது. ஆன்ம+ இக. இக- விகுதி.

இகலல்— எதிர்த்தல்.

இடத் திரிவு— இடவேறுபாடு.

இடையீடு— இடைவிடல்.

இ(ஷ்)ட்டி— ஒன்றை விரும்பிச் செய்வது, யாகம். இஷ- விரும்புதல்.

இதம்— நன்மை செய்தல். ஹித- நன்மை. தா- தாங்குதல்.

இந்திரியக் காட்சி— ஞானேந்திரியம் கருவியாக உருவம் முதலிய விடயங்களை அறியும் அறிவு.

இந்திரிய ஆன்ம வாதி— ஞானேந்திரியமே ஆன்மா என்பவன். உலோகாயதருள் ஒருவன்.

இயமம்—அட்டாங்கயோகத்து ஒன்று. அது, கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர் மனைவியரையும் பொது மகளிரை யும் விரும்பாமை ஆகிய ஆண்தகைமை, இரக்கம், வஞ்சனை இல்லாமை, பொறை உடைமை, மனம் கலங்காமை, அற்ப

ஆகாரம், சுசி உடைமை என்னும் 10 வகை உடையது. யம்- அடக்குதல்.

இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்— பரமசிவனது 8 குணங்களுள் ஒன்று. அது அநாதி போதம். அநாதி முத்தத் தன்மை.

இயல்பு— இயற்கை வடிவம், தன்மை முறைமை, பொருட்குப் பின் தோன்றாது உடன் நிகழும் தன்மை. அது, நீரினது தண்மைத் தன்மையும் தீயினது வெம்மைத் தன்மையும் போல்வது.

இயல்பு ஏது— அநுமான அளவைக்கு உபகார கருவிகளான 3 ஏதுக்களில் ஒன்று.

இயற்கை உணர்வினன் ஆதல்— பரமசிவனது 8 குணங்களுள் ஒன்று. அது நிராமய ஆன்மா.

இரங்கல்— ஒலித்தல், சொல்லல்.

இரட்டு உறக் காண்டல்— அதுவோ இதுவோ என இரண்டுபடக் காணும் ஐயக் காட்சி.

இரணிய கருப்ப (பிரமா) மதம்— பிரமாவையே பரம் என்று கூறும் மதம்.

இராகம்— ஆசை, மோகம், அராகம் (பார்க்க.)

இராசத குணம்— பிரகிருதியிலிருந்து தோன்றிய 3 குணங்களுள் ஒன்று. அது கௌரவம் முதலிய குணங்களை உடையது. இரஜஸ்-மன எழுச்சி. ரஜ்- எழுப்புதல், ஊக்குதல்.

இருக்கு— 4 வேதங்களில் முதல் வேதம். ருக்-புகழ்தல்.

இரேசகம்— நாசியில் அகத்துள்ள அசுத்த வாயுவைப் புறத்தே கழித்தல். ரேசகம்-மூச்சை வெளியே விடுதல். ரிச்- கழித்தல்.

இரௌகிணேயன்— குண தத்துவத்துக்கு மேலே 25ஆம் தத்துவம் ஆகிய வாசுதேவனினின்றும் சகத்தை உண்டாக்கும். நிமித்தமாகத் தோன்றிய நால்வருள் ஒருவன். இரௌகிணேயன் - உரோகிணி மகன்.‡

இலகுதை— நொய்ம்மை, மெத்தெனவு. இலகு- நொய்து, இலேசு. தா- தன்மை.

இலய சிவன்— இலய இடம் ஆகிய சிவ தத்துவததில் நிற்கின்ற சிவன். இவர் சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம் என்னும் 3 தத்துவங்களையும் ஒடுக்குவர்.

இலய தத்துவ ம்— சிவ தத்துவம் சத்தி தத்துவம் என்பன.

இலவம்— கால 10 பிரமாணங்களுள் ஒன்று.

இலாடம்— நெற்றி.

இலிங்கம்— சுத்த சிவம் ஆன்மாக்களின் தியான பாவனா நிமித்தம் நிட்கள சகளத் திரு உருக்கொண்ட நிலை. லிங்க- சித்திரித்தல், படைத்தல், காத்தல் முதலியவைகளினாலே உலகத்தைச் சித்திரிப்பது என்றபடி. லிங்—லயம். கம்- தோற்றம் எனினும் அமையும்.

இறையெழுத்து— மகாமனு.

இனைய— இத்தன்மையானவைகள்.

ஈசத்துவம்— 8 சித்திகளில் ஒன்று.

ஈஷத்—அற்பம்.

ஈசானம்— சதாசிவ மூர்த்தியின் 5 முகங்களுள் ஒன்று. சிவ சாதாக்கிய தத்துவமும் சதாசிவ மூர்த்தியும் பொருந்தினது.

ஈசானி— சிவனுடைய கிரியா சத்தியின் புற உருப் பஞ்ச சத்திகளில் ஒன்று.

ஈசுவர அவிகார வாதம்—அகச்சமயம் 6னுள் ஒன்று.

உடல்வினை— பிராரத்தம்.

உடல்திரிவு— சரீரம் வேறுபடுதல்.

உணர்வு—அறிவு, ஞானம். திருஅருள்.

உணர்த்தும் தன்மை- அறிவிக்கும் முறை.

உண்மை-உள்ளது, சிறப்பு இயல்பு, தத்துவம்.

உண்மை நிட்டை— சகச நிட்டை.

உதானன்— உதான வாயு, உத்+அந். உத்-மேல்.அந்- மூச்சு விடுதல்.

உத்தை— ஒரு சந்தம்.

உத்தியுத்தர்— ருபாருபர், சகள நிட்களர், சதாசிவன். உத்யுக்த- முயற்சியுள்ள. உத்- மேல். யுஜ்- கூடுதல். தா- விகுதி.

உத்தியுத்தன் — விந்துவின் காரியங்களில் முயன்றவன், சதாசிவன்.

உபகரித்தல்— உதவுதல், துணைசெய்தல். ‡ உப-கிட்ட. க்ரு-செய்தல்

உபசாரம்— ஆசாரம், முகமன் வார்த்தை. ‡ உப- கிட்ட. சாரப் போதல்.

உபதேச கலை— ஆகமம் (பார்க்க).

உபத்தம்— 5 கன்மேந்திரியங்களுள் ஒன்று. அது, நீர் (சல) வாயில்.

உபநிடதம்— வேதத்தின் உட்பொருளைக் கூறும் நூல். குருவின் திரு அடியிலிருந்து கேட்கப்பட்ட நூல். ‡ உப- கிட்ட. நிஷத்-கீழே இருத்தல். நி-கீழ்(பொருள்)* பிரமப் பொருளை அடையப் பண்ணும் நூல். ‡ உப-கிட்ட. நி- கொண்டு போதல். ஸத்- உள்ளது.

உப(வ) மானம்— தருக்க நூல் பிரமாணங்களுள் ஒன்று. அது, யாதேனும் ஒரு பொருளுக்கு ஒப்பாகச் சொல்லப்படுவது உவமிக்கும் பொருள். ‡ உப - கிட்ட. மா- அளத்தல். நம்- கருவிப் பொருள் விகுதி.

உப(வ)மேயம் — உவமிக்கப்படும் பொருள். உபமா-ஒப்பு. உப- கிட்ட. மா-அளத்தல்.

உபலக்கணம்— 4 வகைச் சொற்களுள் ஒரு சொல் நின்று தன்னை உணர்த்துவதோடு தனக்கு இனமாகிய சொற்களையும் தழுவிக் கொள்ளுதல். உபலக்ஷ- இனமாகச் சேர்த்து அறிதல். ‡ உப- சமீபம். லக்ஷ- குறித்தல். நம்-தொழிற் பெயர் விகுதி. இதனை நன்னூலார், "ஒரு மொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்பர்.

உபலத்தி— உள்ளதுஎன்று அறியும் அறிவு. ‡உப- சமீபம். லப்தி- பெறுதல், அடைதல். லப்- அறிதல்.

உபாதானம்— முதற்காரணம், படைப்புக்குத் துணைக் கருவி. ‡ உப-கிட்ட. ஆ—.* தா (மா)-தோற்றுவித்தல். ஆக்குதல். நம்- கருவிப்பொருள். விகுதி.

உபாதி— காரியம்- உபாயா- காரியப்படுத்தல், (உப+ ஆ+ ப்ர).

உபாய நிட்டை— இலகுவிற் சித்தி அடையும் வழியைக் காட்டும் நிட்டை.

உபாயம்— கிட்ட வருதல், சித்தி அடையும் வழி. ‡ உப- கிட்ட. ஆய- வருதல்.

உயிர்த்தல்— மோத்தல், முகத்தல், மணத்தல்.

உய்த்தறிதல்-உய்த்து உணர்தல்.

உருத்திரன்— பிரம விட்டுணுக்களோடுங் கூடக் குண தத்துவத்தில் வைகிப் பிரகிருதி புவனம் ஈறாகச் சங்கரிக்கும் கர்த்தா ஆகிய குணிருத்திரன். இவர் பிரகிருதியின் மேற்பட்ட புவனங்கட்குச் சங்கார காரணர் அல்லர்; அஞ்சச் செய்பவர். ருத்ர- பயங்கரமான. ர- விகுதி. ருத்- அழுதல், அஞ்சுதல்.

உருவம்— உடம்பு, தூல சரீரம். ரூப்- வடிவம் ஆக்குதல்.

உரை அளவை— ஆகமப் பிரமாணம், காட்சி கருதல் அளவைகளான் அறியப்படாத பொருள்களை ஆத்த வாக்கியம் கொண்டு உரை செய்வதாகிய ஆன்மாவினது ஞான சத்தி. இந்த உரைஅளவை, தந்திரகலை மந்திரகலை உப தேசகலை என 3 வகைப்படும்.

உரோதயித்தரி— சிவனுடைய பரிக்கிரகசத்தி 3-ல் ஒன்று. அது 5 தொழில்களுள்ளே திதியும் திரோதானமும் செய்வது. ரோய (த)-தடை செய்தல், மறைத்தல். ருத்- தடை செய்தல், ரோதகத்தைச் செய்பவள் ரோதயித்திரி. ஈ-பெண் பால் விகுதி.

உலக வினை— உலகிற்கு உரிய வினை. அது கூவல் (கிணறு), தண்ணீர்ப் பந்தல் முதலியன அமைத்தல்.

உலோகாயதம்— புறப்புறச் சமயம் 6-ல் ஒன்று. உலோக, ஆயதம்- பற்றுடைமை, ஆ- யத: ஆ-* முற்றாக (பொருள்). யத்— ஆசை கூர்தல், அவாக் கொள்ளுதல்.

உவகை— களிப்பு. யாக்கையின் 18 குற்றங்களுள் ஒன்று.

உவமானம்— உவமிக்கும் பொருள், உபமானம் (பார்க்க).

உவமை— ஓர் அலங்காரம். அது வினை, பயன், மெய், உரு என்பன காரணமாகப் பொருளோடு பொருள் இயைய வைத்து ஒப்புமை புலப்படச் சொல்வது.

உவமேயம்— உவமிக்கப்படும் பொருள்.

உள் அந்தக்கரணம்— காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் 5 வித்தியா தத்துவங்கள்.

உறழல்— உறழ்தல், உவமை ஆதல்.

உற்பத்தி வாதி— அகப்புறச் சமயம் 6-னுள் ஒன்றாகிய மா விரத சமயத்தோன், சிவனுடைய குணங்கள் முத்தான்மா இடத்திலே தோன்றும் என்று சொல்லுபவன், உற்பத்தி-தோற் றம், வாதி- வாதிப்பவன்.

உற்பந்நம்—அதிகப்பட்டது, உண்டானது, காரியப் பட்டது. உத்-மேலே. பத்-போதல்.

உற்பவுதிகம்—ஆதி பௌதிகம். உத்- மேல். பவுதிகம்- பூத சம்பந்தம் உடையது. பூத+இக=பவுதிகம்-‡.

உற்பிச்சம்— பூமியைப் பிளந்து தோன்றும் மரம், கொடி முதலியன. உத்-மேல். பித்-பிளத்தல். ஜம்-பிறந்தது. ஜந்-தோன்றல்.

உற்பூதம்—இந்திரியங்களால் அறியப்படத் தக்கது, காணப்படுவது, தோன்றியது. உத்- மேல், முன். பூத- தோன்றினது. பூ- உண்டாதல்.

உற்று அறிதல்— பரிசித்து அறிதல்.

உற்று உணர்தல்— பொருந்தி அறிதல்.

உன்மத்தர்—மயக்கம் உடையோர். உத்-அதிகம். மத்தம்- வெறித்தது. மத்-மயங்கி இருத்தல்.

ஊர்த்துவ மாயை— மேலே நோக்கிய மாயை, சுத்தமாயை. ஊர்த்துவம்- மேல், மேல் நோக்கியது.

ஊழ்வினை—பழைய வினை, சஞ்சித வினை.

ஊறு— பரிசம். உறுதலால் ஊறு எனப்பட்டது. உறுதல்- பொருந்துதல்.

ஊற்றம்— அசைவு இன்றி நிற்றல். ஊன்று-பகுதி. அம்- விகுதி.

ஊனக்கண்— பசு அறிவு.

எண் குணங்கள்—இறைவனுடைய 8 குணங்கள். அவை' தன் வயத்தன்ஆதல், தூய உடம்பினன்ஆதல், இயற்கை உணர்வினன்ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேர்அருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்பன. இவை, முறையே சுவதந்திரத்துவம், விசுத்ததேகம், நிராமய ஆன்மா, சருவஞ் ஞத்துவம், அநாதிபோதம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, திருப்தி எனவும்படும்.

எதிர் நிரல்நிறை— பொருள்கோள்களுள் ஒன்று. அது முறை பிறழ்ந்து வரும் நிரல் நிறை.

எரிசேர்வித்து— வறுத்த வித்து. எரி- நெருப்பு.

ஏகதேச அறிவு— ஏகதேச உணர்வு, சிலவற்றை மாத்திரம் அறியும் அறிவு, சிற்றறிவு.

ஏகதேசப் பொருள்— ஒரு பகுதி ஆகிய பொருள்.

ஏகதேசம்— சிறுபான்மை, ஒருசார். ஏகதேஸ்— ஓரிடம். ஏகம்- ஒன்று.

ஏகனாகி நிற்றல்— ஒற்றுமைப்பட்டு நிற்றல்.

ஏகான்ம வாதம்— புறச் சமயம் 6-னுள் ஒன்று. அது ஆன்மா எனப் பொருள் ஒன்றே உளது என வாதிக்கும் மதம்.

ஏதிலர்—அந்நியர்.

ஏது—காரணம்.

ஏலுதல்—பொருந்துதல்.

ஏன்ற—ஏற்றுக்கொண்ட.

ஐக்கிய வாதம்—அகப் புறச் சமயம் 6-னுள் ஒன்று. ஐக்கியம்—ஒற்றுமை. வாதம்-சொல்வது.

ஐசுவரியம்—வல்லபம், அதிகாரம், ஆளும் தன்மை. ஆண்மை. ஈசுவரன் என்பதினின்று வந்தது ‡. ஈஸ்-ஆளுதல்.

ஐந்து கந்தம்—பஞ்ச கந்தம் (பார்க்க).

ஐந்தெழுத்து உண்மை—பஞ்சாக்கரத்தின் இயல்பு.

ஐயக் காட்சி—காட்சி அளவையின் ஒரு வகை. அது கண்ட பொருளை அஃதோ இஃதோ என ஒன்றில் துணிவு பிறவாது இரு விதமாக ஆராயும் ஞான சத்தி.

ஐவகைச் சுத்தி—5 விதமான சுத்தி. அவை பூத, தான, திரவிய, மந்திர, இலிங்க சுத்தி என்பன.

ஒருங்கு—ஒரு சேர, முழுமையும்.

ஒருசாரான—ஒரு பகுதியான, சில.

ஓத்து—வேதம், ஓதப்படுவது. ஓது என்னும் பகுதியில் உள்ள தகரம் இரட்டித்தது.

கஞ்சுக சரீரம்—மாயையினின்றுந் தோன்றும் கலை முதலிய தத்துவங்களோடு ஆன்மா கூடித் தன் இச்சா ஞானக் கிரியைகள் வியட்டி வடிவாய்ப் பிரிந்து தோன்றிச் சிறப்பு வகையால் விளங்கும் நிலை.

கஞ்சுகம்—சட்டை. கம்ச- கட்டுதல், பிரகாசித்தல்.

கடந்தை—பெண்ணாகடம் (ஊர்).

கடன்—காரணம், முறை.

கணநாதர்—கணத் தலைவர், பூதத் தலைவர். கண-பூதம், கூட்டம். கண்-கணக்கிடுதல்.

கணபங்கம்—கணந்தோறும் தோன்றி அழிதல். க்ஷணம்-கண்ணிமைப் பொழுதில் 4-லில் ஒன்று. பங்க- அழிவு, வேறுபடுதல். பம்ஜ்-துண்டு ஆக்குதல், அழித்தல்.

கணபங்க வாதி—பிரபஞ்சம் கணந்தோறுந் தோன்றி அழியும் என்று சொல்லும் பௌத்தன்.

கணம்—சிவனைச் சேவிக்கும் பூதம். கண-கூட்டம், கண்ணிமைப் பொழுதில் 4-லில் ஒன்று. க்ஷண-இமைப் பொழுது. க்ஷண்-துண்டாக்குதல், நொடித்தல்.

கணாத முனிவர்— வைசேடிக நூல் செய்தவர். கண-நொய் அரிசி. அத-உண்பவன்.

கண்ணன்—கண்ணபிரான். கிருஷ்ணன் என்னும் வடசொல்லின் திரிபு. க்ருஷ்ணம்-கருமை.

கந்தம்—கூட்டம், பௌத்த மதத்திற் சொல்லப்பட்ட உருவம் முதலிய பஞ்ச கந்தம். ஸ்கந்த-கூட்டம். ஸ்கம்த்(ய)-சேர்த்தல்.

கபில முனிவர்—சாங்கிய நூல் செய்த முனிவர்.

கமண்டலம்—பிரமசாரிகளும் சந்நியாசிகளும் வைத்திருக்கும் ஒருவகை நீர்க்கலம்.

கமனம்—நடை, போதல். கம்-போதல். அந-விகுதி.

கரணம்—அந்தக்கரணம், ஐம்பொறி, கருவி, தத்துவம். க்ரு+அந. க்ரு-செய்தல். அந-விகுதி.

கரிமா—8 சித்திகளுள் ஒன்று. அது, பாரமாய் இருக்கை. குரு-பாரம். இமா-விகுதி. குரு கர் என வேறுபட்டது.

கருணை மறம்—கருணை பற்றிச் செய்யும் தண்டனை.

கரும காண்டம்—கிரியைகளைக் கூறும் பாகம். கருமம்-கிரியை.

கருவம்—அகங்காரம், செருக்கு. கர்வ-செருக்கு.

கருவி—உபகரணம், துணைக்காரணம்.

கருவியறிவு—சுட்டறிவு, பாச ஞானம்.

கர்த்திரு—கர்த்தா. க்ரு-செய்தல், த்ரு-விகுதி.

கர்த்திரு சாதாக்கியம்—சாதாக்கியங்கள் 5-ல் ஒன்று. அது பிரதிட்டை என்னும் பெயரையுடைய ஞானசத்தி கருத்தாவுக்குக் குணம் எனும் சுபாவம் ஆதலாலும், அந்த ஞான சத்தியிலே தோற்றுவதாலும், கர்த்திரு என்னும் பெயரை உடைத்தாய்ச் சுத்தமாகையால் துய்ய படிகப் பிரகாசமான திவ்விய லிங்கமுமாய், தன் உச்சியிலே திருமுகங்களும் 12 திருக்கண்களும் உடைத்தாய், வலத்திலே சூலமும் மழுவும் வாளும் அபயமும், இடத்திலே பாம்பு விளங்கிய பாசம் உண்டாக்கப்பட்ட மணியும் வரதமும் என்னும் ஆயுதங்களைத் தரித்துக் குறைவு இல்லாத இலக்கணங்கள் கூடி இருப்பது. இதற்கு ஞானலிங்கம் என்றும் பெயர்.

கர்த்திருத்துவம்—செய்பவன் தன்மை, தொழில் உடைமை. கர்த்திரு-செய்பவன். த்வம்-தன்மை.

கர்வம்—கருவம் (பார்க்க).

கலவிகரணி—அவயவம் இல்லாதவன், ஆகாச மூர்த்தி. கலா-அவயவம். விகரணி - சூனியம். விஹ்று-அழித்தல். ஆகாயம் அவயவ சூனியம் ஆதலால், கலவி கரணி ஆகாய மூர்த்தி எனப்பட்டது.

கலா தத்துவம்—வித்தியா தத்துவம் 7-ல் ஒன்று. கலா: கல—நீக்குதல், அறிதல், செலுத்துதல். ஆ-விகுதி. கலாதிகள் ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளை எழுப்பும் வகை. கலா + ஆதிகள். கலை முதலியன.

கலைகள் பஞ்ச—சத்தி வடிவாகிய நிவிர்த்தி முதலிய 5.

கவலை—ஒரு பொருளின் பிரிவினால் உண்டாகிய துயர்.

கவளீகரித்தல்—முற்று மூடுதல், விழுங்கல், 96 கவள-வாய் கொண்ட அளவு, வல்-மூடுதல்.

களபம்—கலப்பு, கலவைச் சாந்து.

களி—களிப்பு, மகிழ்ச்சி.

களிம்பு—செம்பு முதலியவற்றில் இருக்கும் கறை.

களைகண்—ஆதாரம், பற்றுக்கோடு.

கற்பம்—சங்கற்பம், நிண்ணயம்.

கன்ம சாதாக்கியம்—நிவிர்த்தி என்னும் பெயரையுடைய தொழில் ஆகையாலும், இந்தச் சத்தியிலே தோற்றுகையாலும், தொழில் என்னும் காரணப் பெயரை உடைத்தாய், நாதமயம் என்று சொல்லப்பட்ட ஞானலிங்கமும் விந்து மயமான கிரியா

பீடமும் ஏறாமல் குறையாமல் கூடி 5 தொழில் உடையது. இது கிரியாலிங்கம், அதிகாரத்தானம் என்றும் சொல்லப்படும்.

கன்மம்—செயல். க்ரு–செய்தல். ம–விகுதி.

கன்மம்—அதிருஷ்ட ஜன்மோப போக்கிய, அநாதி, அநிய தகா லோப போக்கிய, ஆதி தைவிகம், ஆதி பௌதிகம், ஆத்தியான்மிகம், இயல்பு. திருஷ்–ஜன்மோப போக்கிய. பயன்தரும் முறை, பிறப்பிற்குக் காரணம்.

காட்சி அளவை—காட்சிப் பிரமாணம், பிரத்தியட்சப் பிரமாணம்.

காட்சிப்பொருள்—காணப்படும் பொருள்.

காட்சி வாதி—உலோகாயதன்.

காண்டம்—கூட்டம், திரள், கொத்து.

காபாலம்—அகப்புறச் சமயம் 6–ல் ஒன்று. காபாலம்‡ கபாலம்—தலை ஓடு.

காப்பு—நூல்களிலே தெய்வ வணக்கங் கூறும் பாட்டு. கா–காத்தல். பு–விகுதி.

காமிகம்—சைவ ஆகமம் 28–ல் ஒன்று.

காமியம்—மூல கன்மத்தின் சம்பந்தமாய் நிகழும் இரு வினைகள். மூல கன்மமாவது ஆன்மாவின் இச்சா சத்தியின் காரியம் ஆகிய விருப்பு வெறுப்புக்கள். கான்மியம்–காமியம் என மரீஇயிற்று. கன்ம+இய=கன்ம சம்பந்தம் உடையது.

காரண சரீரம்—அசுத்த மாயையிலே அனந்த தேவரால் கலக்குண்ட பாகமாகிய சரீரம். இச்சரீரத்தைக் கேவலப்படு கின்ற ஆன்மா பொருந்தியபோது, அறிவு இச்சை செயல்கள் பொதுவகையால் சமஷ்டி வடிவாய் விளங்கப் பெறும். கஞ்சுகம் முதலிய சரீரங்களைப பிறப்பிக்கின்றபடியால் காரண சரீரம் எனப்பட்டது.

காரண சுத்தம்—கேவல சகலப்பட்டுப் பிறந்து இறந்து திரியும் அவதரத்து ஆணவ மலபாகம் வந்து ஆன்மாக்களுக்கு இருவினை ஒப்பும் சத்திநிபாதமும் உண்டான அவதாரத்துச் சிவன் ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளி வந்து கேவல சகலங் கள் நிகழாதபடி அருளில் நிறுத்தும் நிலை.

காரணாவத்தை—ஆன்மா காரிய அவத்தைகளை உறு தற்குக் காரணமாய் இருக்கும் நிலை,

காரிய கேவலம்—கீழால் அவத்தை.

காரியம்—ஆக்கப்படுவது. க்று-செய்தல். ய-விகுதி.

கான்மியம்—காமியம் (பார்க்க).

கிஞ்சிஞ்ஞுத்துவம்—சிற்றறிவு உடைமை. கிஞ்சித்-அற்பம். ஞு-அறிந்தவன். த்வம்-தன்மை.

கிஞ்சிஞ்ஞும்—சிற்றறிவு.

கிஞ்சிஞ்ஞன்—சிற்றறிவு உடையோன். கிஞ்சித்-அற்பம். ஞன்-அறிவோன்.

கிஞ்சித் கர்த்திருத்துவம்—சிறு தொழிலுடைமை. கிஞ்சித்-அற்பம். கர்த்திரு-செய்வோன். த்வம்-தன்மை.

கிஞ்சித்து—அற்பம், சிறுமை.

கிஞ்சித்துவம்—சிறுமை. கிஞ்சித்-அற்பம். த்வம்-தன்மை.

கிரியா சத்தி—தொழில் வடிவாகிய சத்தி. அது, 5 சத்திகளுள் ஒன்று.

கிரியாவதி—இருவகை ஔத்திரி தீட்சைகளுள் ஒன்று. அது, கிரியை உடையது. கிரியா-கிரியை. வதி-உடையது.

கிரீடாப் பிரமவாதம்—ஏகான்ம வாதம் 4 வகையுள் ஒன்று.

கிரீடை—விளையாட்டு. கிரீட்-விளையாடல்.

கிருகரன்—வாயுக்கள் 10-ல் ஒன்று. அது, தும்மலை உண்டாக்குவது. க்று-ஒலித்தல். கரம்-செய்வது.

கீழாலவத்தை — கேவல அவத்தையின் காரியமாக ஆன்மாப்பெறும் நிலை.

குடிலை—சுத்த மாயை. குடிலம்-வளைவு. குட்-வளைதல். சுத்த மாயை ஓங்கார வடிவமாய் இருத்தலால் குடிலை எனப்பட்டது.

குண சரீரம்—அந்தக்கரணம் முதலியவற்றைத் தம்முள் அடக்கி நிற்கும் முக்குணங்கள் ஆகிய சரீரம்.

குண தத்துவம்—பிரகிருதியிலிருந்து 3 குணங்களும் பிரிந்து தோன்றிய தத்துவம்.

குணம்—சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் 3 குணம். தத்துவம், திரவியத்தன்மை. அது, உருவம் முதல் 24 வேறுபாடு ஆகும்.

குணி—குணம் உடையது. குண+இ.

குண்டம்—ஓமாக்கினி வளர்க்க நிலத்திலே தோண்டப்பட்ட கிடங்கு.

குண்டலி, குண்டலிநி—சுத்த மாயை, மூலாதாரம். குண்டலி-வளைந்தது.

குதம்– மல வாயில்.

குரோதம்—கோபம். க்ரோத (ய)க்ருத்-கோபித்தல்.

குலம்—கூட்டம்.

குறி—சூக்கும சரீரம்.

குறிக் கந்தம்—கந்தங்கள் 5-ல் ஒன்று.

கூர்மன்-வாயுக்கள் 10-ல் ஒன்று. அது, இமைத்தலைச் செய்வது.

கூவல்—கிணறு.

**கேசரி**—அங்க யோக ஆசனத்து ஒன்று. அது, பீசத்தின் கீழ்ச் சீவனியிடத்துப் பரட்டை வைத்து, இட முழங்கையை முழந்தாளில் வைத்து, அங்குலியை விரித்து மூக்கைப் பார்த்திருத்தல். இது சிங்காசனம் எனவும்படும்.

கேட்டல்— உண்மை ஞானம் 4–ல் ஒன்று. அது, குரு முகமாக ஆகமப் பொருள்களைச் செவிமடுத்தல்.

கேதம்—கிலேசம். துன்பம்.

கேவலம்—கேவலநிலை, ஆன்மா அறிவு செயல் குறி குணம் ஒன்றும் இன்றித் தனியே ஆணவ மலத்தால் மறைப்புண்டு நிற்கும் நிலை. ஆணவ மலம். கேவல--தனித்த. கேவ்—தனித்திருத்தல்.

கேவலாவத்தை—கேவலம் (பார்க்க).

**கை**க்கொள்ளுதல்—அங்கீகரித்தல்.

**கொ**த்து—கூட்டம்.

**கோ**சரம் ஆதல்—அறியத் தக்கதாய் இருத்தல்.

கோத்திரம்—குடி, வம்சம்.

கோமுகம்—அட்டாங்க யோகாசனத்து ஒன்று. அது, சகனப் பக்கத்தில் இருகாற் பரட்டையும் மாறி வைத்து அவ் இருகாற் பெருவிரலையும் கையிற் பிடித்திருத்தல்.

**கௌ**ரவம்—பாரம் உடைமை, மமதை. இது தாமத குணத்தில் வெளிப்படும் ஒரு குணம். குரு-பாரம், கனம்.

சகச நிட்டை—உண்மை நிட்டை. அது மவுனத்தோடே அருள் நிலையிலே நிற்பது.

சகச மலம்—ஆன்மாவில் தொன்மையே கூடியிருக்கும் ஆணவ மலம்.

சகசம்—உண்மை; உடன்பிறந்தது. ஸக-கூட. ஜம்-பிறப்பு.

சக மார்க்கம்—தோழ உரிமைக்கு உரிய நெறி ஆகிய யோகமார்க்கம். சகன்-தோழன். மார்க்கம்-வழி.

சகலம்—பகுதி, சகலா அவத்தை.

சகலர்—கலாதிகளோடு கூடினவர். ஸ-கூட. கலர்-கலை உடையவர்.

சகள சிவன்—உருவத்தோடு கூடிய சிவன், மகேசுவரர்.

சகள நிட்களம்—அருவுருவம்.

சகளம்—உருவத்தோடு கூடியது, வடிவம். ஸ-கூட. கல-வடிவம்.

சகனம்—தொடையின் உட்பக்கம்.

சங்கமம்—இயங்கியல் பொருள். ஸம்-கூட. கம்-போதல்.

சங்கற்பம்—நினைவு, எண்ணம். ஸம்-* . கல்ப்-எண்ணல்.

சங்கிரமித்தல்—கலத்தல், ஸம்—* . க்ரம்—போதல்.

சங்கிராந்த சமவாதி—பாசுபத மதத்தோன்.

சங்கிராந்தம்—ஒன்றிலிருந்து வேறொன்றுக்குப் போதல். ஸம்—* . க்ரம்-போதல்.

சங்கிராந்த வாதி—சிவ சங்கிராந்த வாதி (பார்க்க).

சச்சிதாநந்தம்—உண்மை அறிவு ஆநந்தம்; சத் + சித் + ஆநந்தம்.

சஞ்சிதம்—ஸம்-நன்கு. சித்-கூட்டப்பட்ட. சி-கூட்டுதல்.

சடம்—அசேதனப் பொருள், அசித்து, ஆணவ மலம்.

சட்சு—கண்ணில் இருக்கும் இந்திரியம். அது ஞானேந்திரியங்களில் ஒன்று. சக்ஷுஃ-பார்ப்பது, கண். சக்ஷ்-பார்த்தல்.

சதாகதி—ஓயாது அசைதல். சதா—என்றும். கதி—போதல்.

சதாசிவம்—சத்தி காரியத்துடனே கூடிய வடிவம். வடிவு அறுதி (முடிவு)யுமாய் இருப்பவர். சதா - என்றும், சிவம்-நன்மை, மங்களம்.

சத்த கோடி மகா மந்திரர்—சுத்த வித்தியா தத்துவத்தில் இருக்கும் 7 கோடி (முடிவு) மந்திரேசுரர்.

சத்தப் பிரம வாதம்—ஏகான்ம வாதத்தில் ஒருவகை. அது சத்தமே பிரமம் என்று சொல்வது. சத்தம்-ஒலி, பிரமம்-கடவுள்.

சத்தர் — பிரயத்தனம் முதலான கிரியைகள் எல்லாம் தம்மிடத்து அடங்கியிருக்கும் அவதரத்துச் சிவன். சத்திகள் தம்முடைய வியாபாரங்களை விட்டுச், சிவனிடத்து இருப்பதனால் சிவனுக்குச் சத்தர் என்று பெயர்.

சத்தன்—வித்துவின் காரியங்களை ஒடுக்கி இருப்பவன். சத்தி-வலி.

சத்தி—வல்லமை, சத்-வலிமை உடையதாதல். தி-விகுதி. இச்சா ஞானக் கிரியைகள். இயல்பு. சொரூபம்.

சத்தி மடங்கல்—சத்தி வலி குன்றல்.

சத்தியோ சாதானம்—சதாசிவ மூர்த்தியின் 5 முகங்களுள் ஒன்று. அது அமூர்த்தி சாதாக்கியம் என்னும் தத்துவமும், ஈசானம் என்னும் மூர்த்தியும் பொருந்தியுள்ளது.

சத்தியோ நிருவாணம் — நிர்வாண தீக்கை வகை 2-னுள் ஒன்று. அது உடனே முத்தியைப் பயப்பது. சத்ய—உடனே. நிர்வாணம்-மோட்சம்.

சத்து—உண்மை. உள்ளது. ஸத்-உள்ளது.

சந்ததி—இடைவிடாத தொடர்ச்சி.

சந்த பேதம்—இசை வேறுபாடு.

சந்தானம்—தொடர்ச்சி. சம்—.*தாந-விரிவு. தந்-விரிதல், பரத்தல்.

சந்தோபிசிதம் — வேதாங்கம் 6-னுள் ஒன்று. அது வேதத்தில் சொல்லிய மந்திரங்களினது எழுத்துக்களுடைய கணக்கினையும் மாத்திரா விருத்தமாகிய உத்தை முதலிய 26 சந்தபேதங்களையும் சொல்லுவது. சந்தஸ்+விசிதம். சந்தஸ்-இன்பம், யாப்பு. சம்த் (பம்த)-இன்பஞ்செய்தல். விசிதம்-ஆராய்ந்து சொல்லிய நூல். விச்-ஆராய்தல்.

சந்நிதி—முன்னிலை. சம்+நிதி. சம்-கிட்ட. தா-வைத்தல். நி—* .

சப்தம்—ஏழு, சொல். ஸப்த-ஏழு. சப்த-ஒலி, சத்தமிடுதல், பேசுதல்,

சமக்காரம், சமஸ்காரம்—மறைந்திருத்தல். ஸம்—நன்றாக. க்ரு-செய்தல், ஆக்கல், அடங்கி இருத்தல், மறைந்து இருத்தல்.

சமட்டி—எல்லாம், தொகுதி, தொகுத்து இருப்பது. ஸம்-நன்கு. அச்-கூட்டுதல், சேர்த்தல். தி-விகுதி.

சமணம்—ஆருகதம்(பார்க்க).

சமத்துவம்—சமமாம் தன்மை. ஸம+த்வம்.

சமய தீக்கை—சமய நுழைவைத் தரும் தீக்கை.

சமயம்—ஸம்-4. அயம்-போதல்.

சமவாயம்—ஒற்றுமை, நீக்கம் இன்றி நிற்றல். ஸம-கூட. வாய-சேர்ந்தது. வே-சேர்த்தல்.

சம வேதம்—சமவாயத்தோடு கூடியது. ஸம+வேத.

சமாதி—தியானிக்கப்படும் கடவுளிடத்தே மனத்தை ஒரு வழிப்படுத்தி நன்கு நிலைபெறுத்திச் செய்யும் தியானம். ஸம்+ஆ+தா இ-சமாதி. ஸம்-நன்கு. ஆ-. *தா (யா)-பற்றுதல் .

சமானன்—வாயுக்கள் 10-ல் ஒன்று; அது அன்னசாரத்தை நாடிதோறும் செலுத்துவது. ஸம்-கூட. அந்-சுவாசித்தல், போதல்.

சமூக ஆன்ம வாதம்—சமுதாய வாதம் (பார்க்க). சமூகம்-கூட்டம்.

சமுதாயம்—கூட்டம். ஸம்-கூட. உத்-மேல் எழுதல், வருதல். இ—விகுதி.

சமுதாய வாதம்—புறச் சமுதாயமும் அகச் சமுதாயமுமே சகம் என்று சொல்லும் சௌத்திராந்திகர், வைபாடிகர் ஆகிய இருவர் மதம். புறச்சமுதாயம், பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்பன. அகச்சமுதாயம் உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானம் என்பன. இது சமுகான்மவாதம் எனவும்படும்.

சமுவரம்—ஆருகதம் கூறும் 7 வகைப் பொருள்களுள் ஒன்று. அது, பொறிவழிச் செல்லாது தடுத்து முத்திக்குக் காரணம் ஆவது. ஸம்-முற்றாக. வரம்-அடக்கம். வ்ரு-அடக்குதல்.

சமூகம்—கூட்டம்.

சராயிசம்—கருப்பையிலே தோன்றுவது. சராயு-கருப்பா சையப்பை. ஜம்-பிறந்தது.

சர்வ கர்த்திருத்துவம்—எல்லாவற்றையும் செய்பவன் தன்மை, எல்லாத் தொழிலும் உடைமை. சர்வ-எல்லாம். கர்த் திரு-செய்பவன். துவத்-தன்மை.

சர்வஞ்ஞத்துவம்—எல்லாவற்றையும் அறியும் தன்மை. சர்வ-எல்லாம். ஞ-அறிந்தவன். த்வம்-தன்மை.

சர்வ பூத தமனி—வாமை முதலிய 8 சத்திகளுள் ஒன்று. அது ஆன்மா உடைய புண்ணிய பாவங்களை அடக்குவது. பூத-ஆன்மா. தமநம்-அடக்குதல்.

சலனம்—அசைவு. சல்-அசைதல்.

சலித்தல்—சலனமுறுதல், அசைவு கொள்ளுதல்.

சவிகற்பம்—விகற்பத்தோடு கூடியது. (1) பெயர் (2) சாதி (3) குணம் (4) கன்மம் (5) பொருள் என்னும் 5-ம் விளங்க உணரும் உணர்வு. ஸ-கூட. விகற்பம்-வேறுபாடு.

சற்காரிய வாதம்—உள்ள பொருளினின்று காரியம் தோன் றும் என்று வாதித்தல். சத்-உள்ளது.

சனகம்—3 வகைக் கன்மங்களுள் ஒன்று. அது காரணமாய் நின்று சரீரம் முதலியவைகளைப் பிறப்பிப்பது. சந்-பிறத்தல். க-விகுதி, தாரகம், போக்கியம் (பார்க்க).

சன்மார்க்கம்—ஞானநெறி, சிவபெருமானிடம் நிருவிகற்ப ஞானத்தால் செய்யும் வழிபாடு. இவ்வழிபாடு புறத்தொழில், அகத்தொழில் 2-ம் இன்றி அறிவுத் தொழில் மாத்திரையானே சிவபெருமானுடைய உருவம் அருவம் அருவுருவம் என்னும் 3 திருமேனிக்கு மேல் ஆகிய சொரூபத் திருமேனியின் இடத்து நிகழ்வது. சத்-நன்மை. மார்க்கம்-வழி.

சாக்கிரம்—5 அவத்தை (நிலை) களில் ஒன்று. சாக்கிரு (ஜாகரு)- விழித்து இருத்தல்.

சாகாரம்—வடிவோடு கூடியது. ச-கூட. ஆகாரம்-வடிவு.

சாங்கியம்—ஆத்தி ஆன்மிக நூல் 3-னுள் ஒன்று. பிருதிவி முதல் பிரகிருதி வரை உள்ள தத்துவங்களைக் கணக்கிடுதலால் சாங்கியம் எனப்பட்டது. ஸம் க்யா—கணக்கிடுதல். பகுத் தறிதல். தத்துவங்களின் உண்மை நிலையை ஆராய்ந்து அறிதற் கருவியாதல் பற்றி இச்சொல்லுக்குப் பகுத்தறிதலை உடையது எனவும் பொருள் கூறுவர்.

சாதனம்—ஏது, கருவி, பயிற்சி,

சாதாக்கியம்—அவிகாரமான நிட்களத்திலே சத்தி விகற்ப மான கலைகளாலே தியான மூர்த்தியாக நிரம்புவது. அது, சிவ சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம் என்று 5 வகைப் படும். சிவ சாதாக்கியம் பராசக்தியிலும், அமூர்த்தி சாதாக்கியம் ஆதிசத்தியிலும், மூர்த்தி சாதாக்கியம் இச்சா சக்தியிலும், கர்த் திரு சாதாக்கியம் ஞான சத்தியிலும், கன்ம சாதாக்கியம் கிரியா சத்தியிலும் தோன்றும். என்றும் இருப்பது என்று சொல்லப் படுவதால் சாதாக்கியம் எனப்பட்டது. சதா-என்றும். ஆக் கியம்-சொல்லப்பட்டது. ஆக்யா-சொல்லுதல். சாதாக்கியம்‡.

சாதி—ஒரு நிகரனவாகிய பல பொருளுக்கு உள்ள பொதுவாம் தன்மை, குலம்.

சாதித்தல்—சாதனத்தால் நிறுத்துதல்.

சாக்கிர தீக்கை—அத்துவா மார்க்கம் குறியாது குறித்து, ஆகமப் பொருளைச் சுருக்கி உபதேசித்தல்.

சாத்திரம் 5—லௌகிகம், வைதிகம், ஆத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திரம் என்பன.

சாத்துவிக குணம்—பிரகிருதியிலிருந்து தோன்றிய 3 வகைக் குணங்களுள் ஒன்று. அது பிரகாசம் முதலிய குணங்களை உடையது. இயற்கை நிறமாகிய வெண்மை உடைமையால் சாத்துவிகம் எனப் பெயர் ஆயிற்று. ஸத்வம்-நன்மை. ஸத்-நல்லது. த்வம்-தன்மை. இக-விகுதி.

சாநு—முழந்தாள்.

சாந்தி—பிராயச்சித்தம். கழுவாய்.

சாந்தி—சத்தி வடிவாகிய 5 கலைகளுள் ஒன்று. அது, சுவானுபூதி ஞானம் பெற்ற ஆன்மாக்களுக்கு விருப்பு வெறுப் புச் சங்கற்பம் விகற்பம் முதலிய எல்லாத் துன்பங்களையும் சாந்தமாகச் செய்வது. சம்-அமைதி.

சாந்தி கலை—கலைகள் 5-ல் ஒன்று.

சாந்தியாதீதை—சத்தி வடிவாகிய 5 கலைகளுள் ஒன்று. அது, விருப்பு வெறுப்புச் சங்கற்பம் விகற்பம் முதலிய எல்லாத் துன்பங்களும் சாந்தமாகச் செய்யப்பட்ட ஆன்மாக்களுக்கு அவற்றை ஒழியச் செய்வது. சாந்தி+அதீதை.

சாந்தியாதீத கலை—5 கலைகளுள் ஒன்று.

சாமம் — வேதங்கள் 4-ல் ஒன்று. இது, சதாசிவ மூர்த்தியுடைய அதோமுகங்கள் 4-கனுள் ஒன்றாகிய வாமதேவ முகத்தினின்றும் தோன்றியது. இதனை வியாச முனிவர் சைமினி முனிவருக்கு உபதேசிக்க, அவர் வழியாகச் சுமந்து முதலானவர்க்குப் பலவகைப்பட மொழியப்பட்டமையால், 1000 சாகைகள் ஆயிற்று. ஸாமந்-மனத்திற்கு அமைதியை உண்டாக்குதல்.

சாமுசித்தர்—முற்பிறப்பிலே சரியை கிரியை யோகங்களைச் செய்து நிருமல அந்தக்கரணர் ஆகி, மீளப் பிறக்கும் பொழுதும், அந்த ஞானத்தோடு பிறந்து சிவபாவனை பண்ணுவோர். இது சஞ்சித்தம் என்பதினின்று சாஞ்சித்தர் எனத் தத்திதமாய்த் தமிழில் சாமுசித்தர் என்றாயிற்று. ஸம்-முற்றாக. சித்த-முடிவு பெற்ற. ஸிய (சித்)-முடிவு பெற்றிருத்தல், அநுகூலம் அடைந்திருத்தல்.

சாருவாக மதம்—உலோகாயத மதம். சாருவாகன் காட்சி ஒன்றே பிரமாணம் என்று அழகு பெறக் கூறலால், அவன் மதம் சாருவாகம் எனப்பட்டது. சாரு-அழகிய, இணக்கமான. வாக்-வார்த்தை.

சார்ந்ததன் வண்ணமாய் ஆன்மா அறிதல்—தன்னால் சாரப்பட்ட பொருளின் தன்மையையே தன் தன்மையாகக் கொண்டு அது அதுவாய் நின்று ஆன்மா அறிதல்.

சார்பு நூல்—முதல் நூல், வழிநூல்களுக்குச் சிறுபான்மை ஒத்துப் பெரும்பாலும் வேறுபட்டு இருக்கும் நூல்.

சிங்குவை—நாக்கில் இருக்கும் இந்திரியம். அது, ஞானேந்திரியங்களில் ஒன்று. ஜிஹ்வா-நாக்கு.

சித்த அசித்து—புருட தத்துவம் சித்தும் அசித்தும்.

சித்த புருடர்—வாம நூல் செய்தவர்.

சித்தப் பகுதி—வேதனை ஞானம் குறி வாசனை என்பன.

சித்தம்—அந்தக்கரணங்களுள் ஒன்று, உருவ கந்தம்.

சித்தாந்த மகா வாக்கியம்—சிவத்துவமசி என்பது. சிவ-சிவன். த்வம்-நீ. அசி-ஆனாய்.

சித்தாந்தம்—நிச்சயமான முடிபு. சித்தம்+அந்தம். சித்தம்-நிச்சயம். சித்திக்கப்பட்டது, பெறப்பட்டது. அந்தம்-முடிபு.

சித்து—அறிவு, ஞானம்.

சித்தி—அறிவு.

சிந்தனை—கவலை. அது யாக்கையின் 18 குற்றங்களில் ஒன்று.

சிந்தித்தல்—உண்மை ஞானம் 4-கனுள் ஒன்று. அது குரு முகமாகக் கேட்ட பொருளை மனனஞ் செய்து இழுக்கு நீங்கு மாறு ஆராய்தல்.

சிருட்டி—படைத்தல். மத்திம சிருட்டி, அவாந்தர சிருட்டி, மகா சிருட்டி (பார்க்க).

சிவ சங்கிராந்த வாதம்—அகச் சமயம் 6-னுள் ஒன்று.

சிவசத்து—சிவம் ஆகிய சத்து. சித்தாகிய உள்பொருள். சிவம்-சித்து, சத்து-உள்ளது.

சிவசமவாதம்—அகச்சமயம் 6-னுள் ஒன்று.

சிவசமவாதி—முத்தியிலே சிவமும் ஆன்மாவும் சமம் என்று வாதிப்போன்.

சிவ சாதாக்கியம் — 5 சாதாக்கியங்களுள் ஒன்று. அது பராசத்தியிடமாகத் தோன்றுவது. சாந்தியாதீதை என்னும் பெயரையுடைய பராசத்தி சுத்தம் ஆதலால், சுத்தமான சிவம் என்னும் பெயரையுடைத்தாய் அதிசூக்குமமாய் அளவிலாத பிரகாசமாய் ஆகாயத்தில் மின்னல் போல அரூபத்திலே தியானத்தால் விளக்கப்பட்டுச் சர்வ வியாபியாய் இருப்பது. இது இலயத்தானம் என்றும் சொல்லப்படும்.

சிவ தத்துவம்—சுத்த தத்துவம் 5-னுள் ஒன்று.

சிவத்துவமசி—சிவன் நீயாகின்றாய், சித்தாந்த மகாவாக்கியம். சிவ + த்வம் + அசி.

சிவத்துவம்—சிவமாம் தன்மை. த்வம்-தன்மை.

சிவப் பேறு—சிவமாம் தன்மையைப் பெறுதல், ஆன்ம லாபம்.

சிவமயம்—சிவமாம் தன்மை. சிவம் + மயம். மயம்-விகுதி.

சிவரூபம்—ஞான தரிசனம், அருள் தரிசனம்.

சிவலிங்கம்—ஆன்மாக்களின் தியானம் பூசை முதலிய வற்றின் பொருட்டுச் சிவபெருமான் கொண்ட ஒரு திருவுரு. இலிங்கம் (பார்க்க).

சிவன்—அதிகார சிவன், இலய சிவன், போக சிவன். சிவ—மங்கலமான, நன்மையான. சி-கூர்மையாக்குதல்.

சிவாநுபவம்—சிவாநந்தத்தை அனுபவித்தல். சிவ+அநு பவம்.

சிவானந்த இன்பம் — சிவனிடத்துள்ள 8 குணங்களும் ஆன்மாவிடத்து மேம்பட்டு விளங்கும் விளக்கம்.

சிவோகம்—சிவன் நான். சிவ-சிவன். அஹம்-நான்.

சிவோயம்—சிவன் இவன். சிவ-சிவன். அயம்-இவன்.

சிறப்பு இலக்கணம்—ஒரு பொருட்கு வேற்றுச் சாதிப் பொருளிலும் தன்சாதிப் பொருளிலும் செல்லாது, தனக்கு மாத்திரமே உரித்தாய் நிலைபெறும் தன்மை.

சிற்சங்க சித்து—கலை முதலியன. அவை சித்தாகிய ஆன்மாவுடன் சேர்ந்தமையால் சிற்சங்கசித்து என்னும் பெயர் பெற்றன. சித்+சங்க+சித்து.

சிற்சத்தி—சிவனுக்கு அபின்னமாய் உள்ள சத்தி, ஞான சத்தி, அருட்சத்தி. சித்-ஞானம்.

**சீ**கண்ட உருத்திரர், ஸ்ரீகண்ட ருத்திரர்—பிரளயாகல ருள்ளே பக்குவமுடையோராய்ப் பாசம் நீங்கிச் சிவனுக்கு உரியபெயர்களைப் பெற்றுச் சைவாகமங்களை அறிவுறுத்தும் குரவர். சீ-நஞ்சு. கண்டம்-கழுத்து.

சீலம்—விலக்கியவற்றை ஒழித்து, விதித்தனவற்றையே செய்தலாகிய நல்லொழுக்கம்.

சீவனம்—5 வாயுக்களை இயக்கும் அகங்காரம். ஜீவ்-சீவித்தல்.

சீவனி—சீவ நாடி, பிராண வாயு உலாவும் நரம்பு.

சீவன்முத்தர்—சீவிக்கும் பொழுதே பாசத்தினின்றும் விடப்பட்டவர், தநுவாதிகளோடு கூடியும் கூடாமை நின்று ஞேயத்து அழுந்தினோர். சீவன்+முத்தர். முத்தர்-விடப் பட்டவர்.

சீவன்முத்தி—சீவத் தன்மை விட்டிருத்தல், ஞானம் அடைந்து, பிறப்பு அறுத்து இருத்தல்.

சீவான்மா—தேகத்தை அபிமானிக்கும் உயிர்.

**சு**கப் பிரபை—இன்பச்சுடர், ஆனந்த ஒளி.

சுகம்—சுகாதனம், இயல்பாக இருக்கை, கால்கள் இரண்டும் மடித்து அட்டணைக் கால் ஏறிட்டிருத்தல்.

சுட்டி அறிதல்—ஏகதேசமாய் அறிதல்.

சுட்டி அறியப்படுவது—இது பொன் இது மண் என்றாற் போல, ஆன்ம போதத்தால் ஒவ்வொன்றாகக் குறித்து அறியப் படுவது.

சுதந்திரம்—உரிமை, தன்வயம் உடைமை.

சுதந்திர வடிவம்—சுவாதீன சரீரம்.

சுத்த மாயை—சுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமான மாயை.

சுத்த வித்தை—சுத்தவித்தியா தத்துவம்.

சுத்தாத்துவா — சுத்த மாயையிலே தோன்றிய மந்திரம் முதலிய 6 அத்துவாக்கள்.

சுத்தாவத்தை—பாசம் நீங்கிய நிலை, கன்மஒப்பும் மலபரி பாகமும் உண்டான அவதரத்திலே ஞானாசாரியராலே ஞான தீபத்தைப் பெற்றுச் சிவனையும் ஆன்மாவையும் பாசத்தையும் உணர்ந்து அருள் பெறும்நிலை. சுத்த + அவத்தை.

சுத்தி—பரிசுத்தம்.

சுருதி—மந்திரம், வேதம். ச்ரு-கேட்டல். தி-கருவிப் பொருளுஞ் செயப்படுபொருளும் உணர்த்தும் விகுதி.

சுரோத்திரம்—ஞானேந்திரியங்களுள் ஒன்று. அது செவி இந்திரியம். ச்ரு-கேட்டல். திர-கருவிப் பொருள் விகுதி.

சுவதந்திரத்துவம் — பரமசிவனது 8 குணங்களுள் ஒன்று. அது தன்வயத்தனாதல். ஸ்வ-தனது. தந்திர-உபாயம், வழி. த்வம்-தன்மை. தந்-இயற்றுதல், செய்தல்,

சிவதந்திரம்—தன் சொந்தத் தொழில், தன்கருத்துப்படி செய்யும் செயல்.

சுவதந்திரன்—தன்வயமுடையவன், தனது தலைமைஉடை யோன், பிறருக்கு அமைதலின்றித் தன் இட்டமாயிருக்கிறவன்.

சுவத்திகம், சுவத்திகாதனம் — ஆசனவேறுபாடு 9-ல் ஒன்று. அது, வலப்பக்கத்துக் கணைக்காலுக்கும் தொடைக்கும் நடுவே இடப்புறங்காலையும், இடப்பக்கத்துச் சானுவுக்கும் தொடைக்கும் நடுவே வலக்காலையுஞ் சேர்த்துச் சமதேகத் தோடிருத்தல்.

சுவாதிட்டானம்—ஆதாரங்கள் 6ல் 2ஆவது இது மூலா தாரத்துக்குமேலே இருவிரற் பரிமாணத்திலே இலிங்கபீடமாய்

இருப்பது. இதற்கு வடிவு நாற்கோணம், பல காந்தி உடைய 6 இதழ்த் தாமரை. செம்பொன்னிறம். தேவதை பிரமதேவர் நகாரத்தைக் கொண்டு தியானஞ் செய்வது ஸ்வ+அதிஷ்டாநம். ஸ்வ-தனது. அதிஷ்டாந-இடம். அதி-மேல். ஸ்தா-நிற்றல்.

சுவாதீனம்—சொந்தம். ஸ்வ-தன்னுடைய. அதீனம்-தலைமை உடையது.

சுவேதசம்—வேர்வையில் பிறந்தது. ஸ்வேதம்-வேர்வை.

சுழுத்தி — அவத்தை 5-ள் 3ஆவது.

சூக்கும சித்து — நுண்ணிய அறிவு.

சூக்கும தேகம் — புரியட்டக சரீரம்.

சூக்கும தேகான்ம வாதி — உலோகாயதருள் ஒருவன்.

சூக்கும பூதம் — தன்மாத்திரை.

சூக்குமம் — நுண்மை, நுண்ணிய அறிவு; ஸூச்+ம; ஸூச்-குறித்துக் காட்டுதல். ம - விகுதி. ஸூ - பிறப்பித்தல், தோற்றுதல்.

சூனியம்—பாழ். ஸூக்ய (சூந்ய)-வெறுமையான, பாழான.

சூனிய வாதம் — எல்லாம் சூனியம் என்று சொல்லும் சமயவாதம், பௌத்த மதத்தில் ஒரு பிரிவாகிய மாத்தியமிகம்.

சூனிய வாதி — நிரீச்சுர வாதி, மாத்தியமிகன்.

செநநி — இறைவனுடைய பரிக்கிரக சத்தி மூன்றனுள் ஒன்று. அது பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பது. ஜந் — பிறப்பித்தல்.

செயல் — காரியம்.

செவ்வே — செவ்வண், செவ்வை, நேரே.

சேட்டை — வாமை முதலிய 8 வகைச் சத்திகளுள் ஒன்று. சேஷ்டா - தொழில். சேஷ்ட் - அசைதல், கலக்குதல்.

சேதனப் பிரபஞ்சம் — சித்துப் பிரபஞ்சம். அது உயிர் வர்க்கம்.

சேதனம் — அறிவுள்ளது. சித் - அறிவு, அசையும்பொருள்.

சைதன்னியம் — அறிவுடைமை, ஆன்மா, கடவுள். சேதனம் என்பதிலிருந்து வந்த ‡.

சைவ சித்தாந்தம் — வேதாந்தத் தெளிவாம் சிவாகமத்தின் கருத்தாகி வந்தது.

சைவர் — சிவ சம்பந்தம் உடையவர், சிவ தீக்கை பெற்றுச் சிவனை வழிபடுவோர். இவர் ஆதி சைவர், மகா சைவர், அநு சைவர், அவாந்தர சைவர், பிரவர சைவர், அந்திய சைவர் என 6 வகைப்படுவர். சிவன் என்பதினின்று வந்த ‡.

**சொ**ப்பனம் — 5 அவத்தைகளுள் ஒன்று. சுவப்பனம் என்பது சொப்பனம் என்று ஆயிற்று. ஸ்வப்நம் — நித்திரை. ஸ்வப் – நித்திரை செய்தல்.

சொரூப இலக்கணம் — சிறப்பு இயல்பு, சிறப்பு இலக்கணம். அஃதாவது, இயற்கையான இலக்கணம். சுவரூபம் சொரூபம் என்றாயிற்று. ஸ்வ – தனது. ரூபம் – வடிவம்.

சொல்லொணாதது — உளதும் இலதும் அல்லாதது.

**சோ**கமஸ்மி—அது நான்ஆகின்றேன். சோகம்: ஸ: – அது. அஹம் – நான்.

சோதிடம் — கலை ஞானம் 64 -ள் ஒன்று. அது லௌகிக வைதிக கன்மங்களுக்கு உபயோகமாகிய துடி, இலவம் முதலிய கால விசேடங்களை இதற்கு இது என்று அறுதியிட்டு விதிப்பது. ஜ்யோதி - ஒளியுள்ளவை. அவை கிரகங்கள், நட்சத்திரங்கள். ஷம் – விகுதி.

சோத்திரம் — ஞானேந்திரியங்களுள் ஒன்று. அது கேட்டல் கருவி. ச்ரு – கேட்டல். த்ர – கருவிப் பொருள் விகுதி.

சோபானம் — படி.

**சௌ**த்திராந்திகர் — 4 வகைப் பௌத்தருள் ஒருவர். இவர் சூத்திரத்தின் முடிவு வரைக்கும் வினாவியபடியால் சௌத்திராந்திகர் எனப்பட்டார். இது சூத்திராந்தம் என்பதினின்று வந்த ‡.

**ஞா**ன காண்டம் — ஞானத்தைக் கூறும் பாகம்.

ஞானக் கண் — அருட்கண், திருஅடி ஞானம்.

ஞான சத்தி — அறிவு வடிவு ஆகிய சத்தி.

ஞான தரிசனம் — அருள் காட்சி.

ஞான நிட்டை — உண்மை ஞானம் 4-ள் ஒன்று. அது கேட்டுச் சிந்தித்துத் துணிந்த பொருளுடன் பிரிவு இன்றி உறுதியாக நிற்றல்.

ஞானம் — திரு அருள், சிவ சத்தி. ஞா — அறுதல். நம் - விகுதி.

ஞானாவரணீயம் — ஆருகத மதத்தில் சொல்லப்பட்ட தீக்குணங்கள் 8-ல் ஒன்று. அது ஞானத்தை மறைப்பது. ஞானம் - அறிவு. ஆவரணீயம் - மறைப்பது. ஆ—*. வ்று- மறைத்தல்.

ஞான வாய்மை—ஞானத்தின் உண்மை. ஞானத்தின் இயல்பு.

ஞானேந்திரியம் — சத்தாதி விடயங்களைக் கிரகிக்கும் இந்திரியங்கள். அவை சோத்திரம் முதலியன. ஞானம் + இந்திரியம்.

**ஞே**யம் — அறியப்படும் பொருள், சிவம். ஞா - அறிதல்.

**த**கவு — தகுதி, நன்மை.

தடத்த இலக்கணம் — பொது இயல்பு. பிறிதோர் பொருளின் சார்புபற்றி இலக்கியப் பொருளில் இருக்கும் இலக்கணம். தடம் - பக்கம். ஸ்தா - இருத்தல். பசுவின், பதியின், மலத்தின் கருவிகளோடு கூடி விபரீத உணர்வைச் செய்யும் சகலத்தில் நிகழும் இயல்பு,

தத்திதம் ‡ — வடமொழியில் சொல்லப்பட்ட சொல் பாகுபாடுகளுள் ஒன்று. அது பெயர்ப் பகுதியும் தத்தித விகுதியும் கூடி வருவது. தத்தித விகுதிகள், அவ்வப் பகுதிகளுக்கு உரிய பொருள்களுக்குச் சம்பந்தமான பலவகைப் பொருள்களையும் அறிவிக்கும். (எ-டு) மாயேயம். தாத்துவிகம். இவற்றுள், மாயேயம் என்பதின் பகுதி மாயா என்பது. தத்தித விகுதி ஏயம் என்பது. இவ்விகுதி சேர்ந்து மாயையின் சம்பந்தமாகிய பொருள்களை உணர்த்திற்று. தத்துவ + இக = தாத்துவிகம்.

தத்துவ ஞானம் — தத்துவங்களை அறியும் ஞானம், விபரீத ஐயங்களான் அன்றி உண்மையான் உணர்தல். மெய்யுணர்வு. தத்துவம் - உண்மை. ஞானம் - உணர்வு.

தத்துவ ஞானி — தத்துவங்களைப் பிரித்து அறிந்தோன், உண்மை அறிந்தோன்.

தத்துவமசி — மகா வாக்கியத்துள் ஒன்று. பொருள் - 'அது நீ ஆனாய்'.

தத்துவம்—பிருதிவி முதலிய 36 தத்துவம். இம் 36-ம் உடல் முதலியவை போல் அல்லாது பிரளய பரியந்தம் அழியாது

நிற்றலால் தத்துவம் எனப் பெயர் ஆயிற்று; உள்ளதன் தன்மை உண்மை. தத் - அது, உள்ளது. த்வம் - தன்மை.

தந்திர கலை — ஆகமம் (பார்க்க).

தமசு — ஆணவ மலம்.

தமம் — அஞ்ஞானம்.

தமோ குணம் — தாமசம் (பார்க்க).

தரம் — அதிகம் என்பதை உணர்த்தும் ஒரு விகுதி.

தரிசன ஆவரணீயம் — ஆருகத மதத்தில் சொல்லப்பட்ட தீக்குணங்கள் 8-ள் ஒன்று. அது காட்சியை மறைப்பது. தரிசனம் - காட்சி. ஆவரணீயம் - மறைப்பது.

தரித்தல் — தாங்குதல்.

தருக்கம் — தருக்க சாத்திரம், நியாய நூல்.

தலைப்படுதல் — கூடுதல்.

தவ மனம் — மனம் பொறிவழிப் போகாமல் நிற்றல் பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கலும், கோடையில் நீர் நிலையில் நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றாலே தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிற உயிர்களை ஓம்புதல். தப் - வாட்டுதல். பகரம் வகரம் ஆயிற்று.

தற்பதம் — அது என்னும் பொருளை உணர்த்தும் சொல். தத் — அது, சிவம். பதம் - சொல்.

தற்பரம் — ஆன்மாவுக்கு அதீதமாகிய சிவம். தன் - ஆன்மா. பரம் - மேலாயது.

தற் புருடம் — சதாசிவ மூர்த்தியின் 5 முகங்களுள் ஒன்று. அது, கன்ம சாதாக்கியம் என்னும் தத்துவமும் ஈசானம் என்னும் மூர்த்தியும் பொருந்தினது.

தற்போதம் — ஆன்ம போதம். யான் எனது என்னும் முனைப்பு. தன் — ஆன்மா. போதம் - அறிவு.

தனஞ்சயன் — 10 வாயுக்களுள் ஒன்று. இது உடம்பை விட்டுப் பிராணன் போன பின்னும் தான் உடம்பைப் பிரியாது நின்று வீங்குவித்தும் விரிவித்தும் புழுப்பித்தும் பழுது செய்து 3 ஆம் நாள் கபாலத்தைப் பிளந்து போம். இதனால் சரீரத்திற்குக் காயமுண்டாகும்.

தனு — (தநு) உடம்பு. தந் - விரிதல். உ - விகுதி.

தன் பொருட்டனுமானம் - தானாக விடயங்களை அனுமித்து உணரும் உணர்வு.

தன்மாத்திரை — சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்பன. இவை 5-ம் முறையே சத்தம் முதலிய குணங்களில் ஒவ்வொன்றை ஏற்றமாகப் பொருந்தியிருக்கும். மரத்தின் வடிவெல்லாம் சத்தி ரூபமாக வித்தில் அடங்கி இருப்பது போல, அக்குணங்கள் எல்லாம் சத்தி ரூபமாக வெளியிலே தெரியாது. அதன் அதன் அளவில் அடங்கியிருப்பதால் தன்மாத்திரை எனப்பட்டது. தத் + மாத்திரை = தன்மாத்திரை. தத்—அது. மாத்திரை - அளவு.

தன்வயத்தன் ஆதல்— பரமசிவனது 8 குணங்களுள் ஒன்று அது சுவந்திரத்துவம். வயம் - வசம்.

தன்வயம்— பிற துணை வேண்டாது தானாக எல்லாம் செய்யும் தலைமை.

தன்வேதனைக் காட்சி— அராகம் முதலிய 5 வித்தியா தத்துவங்களாலும் செலுத்தப்படும் இன்பத் துன்பங்களை அறியும் ஞான சத்தி. தானாகிய ஆன்மா சுக துக்கமாகிய வேதனையில் அழுந்துதலால் தன்வேதனைக் காட்சி எனப் பட்டது.

தன் இயல்பு— சிறப்பு இலக்கணம்.

தாடலை— ஈறும் முதலும் விகாரப்பட்டுப் புணர்ந்து ஒரு சொல்போல நிற்கும் இருசொல்தொடர். தாள் + தலை = தாடலை. இருசொல் கூடி ஒன்றுபோல நிற்றலால், இரு பொருள் கலந்து ஒன்று போல நிற்றற்கு உவமையாக இதனைக் கொள்வர்.

தாத மார்க்கம்— அடிமை மார்க்கம் ஆகிய சரியை நெறி தாதன்— அடியவன். மார்க்கம் - வழி.

தாத்துவிகம்— தத்துவ சம்பந்தங்கள். அவை உடம்பு முதலியன. தத்துவ + இக.

தாபத் திரயம்— துக்கம் 3. அவை ஆதி தைவிகம், ஆத்தியான்மிகம், ஆதி பௌதிகம் என்பன. தாபம்-துக்கம். திரயம்-மூன்று.

தாபம்— துக்கம், சுற்றத்தைவிட்டுப் பிரிந்ததற்கும் பிரிவதற்கும் ஆற்றாமை. தப் - வெம்மை.

தாமசம், தாமதம்— 3 வகைக் குணங்களுள் ஒன்று. தமஸ் உடைமையால் தாமசம் எனத் ‡ ஆயிற்று. தமஸ்— கருநிறம். ச - விகுதி.

தாரகம்— ஆதாரம், சரீர ரூபமாய் நின்று ஆன்மாவைத் தரித்திருக்கும் கன்மம். த்ரு - தரித்தல். அகம் — ஒரு விகுதி.

தாரணை — 8 வகை யோகத்துள் ஒன்று. அது மனத்தை ஓர் இடத்தில் நிறுத்தல்.

தாரதம்மியம்— உயர்வு தாழ்வு. இது தரதமம் என்னும் இருமொழியினின்றும் வந்த ‡ . தரம் - உயர்ந்தது. தமம் — தாழ்ந்தது. ய - விகுதி.

தார்க்கிகர்— தருக்கநூல் கொள்கை உடையோர். தர்க்கம் வல்லவர் - தருக்க சம்பந்தம் உடையோர். தர்க்க - ஆராய்வு. இக - விகுதி.

தாலம்— பனை. தல் - நிற்றல். ஆல - விகுதி.

தானம்— கன்ம இந்திரியங்களுள் ஒன்றான பாணியின் தொழில். அது கொடை. தா - கொடை. நம்- தொழிற் பெயர் விகுதி.

தான்பணி நீத்தல்—தனக்கு ஒரு செயல் உண்டு என்பதை நீக்குதல், எல்லாம் சிவன் செயல் எனக் கொள்ளுதல்.

திக்குபாலகர்— 8 திசைக் காவலர். அவர், இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர். பாலகர் - காப்பவர்.

திப்பியம்— திவ்வியம், தெய்விகமானது. திவ் - மேன்மை ஒளி. ய - விகுதி.

தியானம்—8 வகை யோகத்துள் ஒன்று. அது மூர்த்தியின் சொரூபத்தை மனத்தால் பாவித்துச் சிந்தித்தல். தியை - சிந்தித்தல்.

திரவியம்— பொருள். த்ரு - அடைதல், வருதல். யம் — விகுதி.

திரியக் காண்டல்— விபரீதக் காட்சி.

திரிவு— விபரீத உணர்வு, வேறுபாடு.

திருஷ்ட சன்மம்— காணப்பட்ட சன்மம். திரிஸ் + த + ஜந் + ம. திருஸ்ட - பார்த்தல். ஜன் - பிறத்தல். ம - விகுதி.

திருஷ்ட ஜன்மோப போக்கிய கன்மம்— காணப்படுகின்ற சன்மத்தில் அனுபவிக்கப்படும் கன்மம். திருஸ்ட - காணப் பட்ட, ஜன் ஜந்ம - பிறப்பு. உபபோக்கியம் - அனுபவிக்கப் படுவது. உப - கிட்ட. போக்கிய - அனுபவிக்கப்படுவது. புஜ் (புச்) - அனுபவித்தல்.

திருப்தி— பரமசிவனுடைய 8 குணங்களுள் ஒன்று. அது வரம்பில் இன்பம் உடைமை. த்ருப் - நிறைவு. தி - ஒரு விகுதி.

திரோதாயி, திரோத (னா) சத்தி — மறைக்கும் சத்தி.

திரோதானம்— மறைப்பு. த்று - குறுக்கு, இடை. தா (யா) - பற்றல்.

திவ்வியம் — தெய்வத் தன்மை. திவ் (திவ்)-ஒளி.மேன்மை. யம் - விகுதி.

தீக்கை— மந்திர உபதேசம், குரு உபதேசம், பாசத்தைக் கெடுத்து மோட்சத்தைக் கொடுத்தல். தீ - கொடுத்தல். க்ஷா - கெடுத்தல்.

தீவகம்— பார்வை மிருகம்.

தீவிரதரம்— அதிக தீவிரம்.

தீவிரம்— உறைப்பு, கூர்மை.

துடி— நொடிப் பொழுது.

துணைக் காரணம்— முதல் காரணத்துக்குத் துணையாய், அது காரியப்படும் வரை உடன் நிகழ்வது.

துண்டம்— மூக்கு.

துரியம்— 4 ஆம் அவத்தை.

துரியாதீதம்— 5 ஆம் அவத்தை.

துவக்கு — துவக்கு இந்திரியம், உடம்பு, தோல். த்வச் - தோல்.

துவம்பதம்— வேதாந்தத்தில் சொல்லப்பட்ட "தத்துவமசி" மகா வாக்கியத்துள்ள 2 ஆம் பதம் "துவம்" என்பது. த்வம்— நீ. பதம் - சொல்.

துவாதசாந்தம்— பிரமரந்திரத்திலிருந்து 12 அங்குலத்தின் மேலுள்ள இடம். துவாதச+ அந்தம். துவாதசம் - 12. த்வா - 2. தச - 10.

தூய உடம்பினன் ஆதல் — பரமசிவனுடைய 8 குணங்களுள் ஒன்று. அது விசுத்த தேகம் உடைமை.

தூல சித்து— ஆன்மா தூலம் ஆகிய பிற பொருள்களின் துணையால் அறியப்படுதலாலே, தூல சித்து எனப்பட்டது.

தூல பூதம் — மண் முதலிய 5 பெரும் பூதம்.

தூலம்— பெரியது. ஸ்தூல - பெருத்தல்.

**தூலவுடம்பு**— சாதி, குலம், பிறப்பு முதலியவைகளினாலே அபிமானம் செய்தற்கு இடமாய் நிலம் நீர் தீ காற்று ஆகாயம் என்னும் 5 பூதங்களும் கூடிப் பரிணமித்த உரு உடம்பு.

**தூலாருந்ததி நியாயம்**— பெரிதான ஒரு நட்சத்திரத்தை முன்னர்க் காட்டி, அது வாயிலாகச் சிறிதான அருந்ததியைக் காட்டுதல் போலக் கொள்ளப்படும் ஒரு நெறி.

**தெய்விகம், தைவிகம்**— தெய்வத்தால் ஆயது, தேவ சம்பந்தம் உடையது. தேவ + இகம் = தைவிகம். திவ்— பிரகாசித்தல்.

**தெளிதல்** — உண்மை ஞானம் 4-ள் ஒன்று. அது, கேட்டபின் ஆராய்ந்து இதுவே கொள்ளற்பாலது என்று நிச்சயித்தல்.

**தெளியக் காண்டல்**— நிச்சயக் காட்சி.

**தேகான்ம வாதிகள்**— உலோகாயதரில் ஒரு சாரார்.

**தேயு**— ஒளியுடையது, அக்கினி. தேஜஸ் - ஒளி. உ - விகுதி.

**தேவதத்தன்**— 10 வாயுக்களில் ஒன்று. அது, கொட்டாவியைச் செய்விப்பது.

**தைசதம்**— சாத்துவித சம்பந்தம் உடையது, அக்கினி சம்பந்தம் உடையது, தேஜஸ் சம்பந்தம் உடையது. தைசதம் என ‡ ஆயிற்று. தேஜஸ் - ஒளி.

**தைரியம்**— உறுதியான நிலை, மனம் வேறுபடாமை. தீரம் என்பதிலிருந்து வந்த ‡. தீ - புத்தி.

**தொக்கு**— ஞானேந்திரியம் 5- ள் ஒன்று. அது, தோல். துவக்கு, தொக்கு என்று ஆயிற்று. த்வச் - மூடுதல்.

**தொன்றுதொட்டு வருதல்**— முன் தொடங்கி வருதல். தொன்று— பழமை.

**நயனம்**— கண். நீ - நடத்துதல். நம் - கருவிப்பொருள் விகுதி.

**நவை**— குற்றம்.

**நாகன்**— 10 வாயுக்களில் ஒன்று. அது இருமல் தும்மல்களை உண்டாக்குவது.

**நாசோற்பத்தி**— அழிதல், தோன்றல்; நாச + உற்பத்தி.

நாதம்— சுத்த மாயா தத்துவம் 5–ல் ஒன்று. அது சிவ தத்துவம், சூக்குமை வாக்கு. நாத – ஓசை. நத் – அசைதல், ஓசை உண்டாதல்.

நாத்திகர்—கடவுள், சுவர்க்கம், நரகம், மறுபிறப்பு இல்லை என்பவர். ந + ஆத்திகர். ந – இன்மை. ஆத்திகர் – உண்டு என்போர்.

நாபி— கொப்பூழ்.

நிகண்ட வாதிகள்— சமணரில் ஒரு சாரார். நி – இன்மை. கண்டம் – உடை.

நிகண்டு— வேதாங்கம் 6 – ல் ஒன்று. அது, சொல்லின் பொருள் அறிவிப்பது.

நிக்கிரகம்— தண்டனை, நாசம்.

நிஷ்கள சகளம்— அருவுருவம்.

நிஷ்களம்— அருவம். நிஸ் – இன்மை. களம் – உருவம், அவயம்.

நிட்டை— உண்மை ஞானம் 4 – ல் ஒன்று. அது, கேட்டுச் சிந்தித்துத் துணிந்த பொருளுடன் பிரிவு இன்றி உறுதியாக நிற்றல். நி – நிச்சயம். ஸ்தா – நிற்றல்.

நிமித்த காரண பரிணாம வாத சைவர்— நிமித்த காரணத்துக்குப் பரிணாமம் கூறும் சிவாத்துவித சைவர்.

நிமித்த காரணம்— வினை முதற்காரணம், கருத்தா.

நியதி தத்துவம்— வித்தியா தத்துவம்7– ல் ஒன்று. நியமனம் செய்வதால் நியதி எனப்பட்டது.

நியமம்— அட்டாங்க யோகத்துள் ஒன்று. அது, தவம், சந்தோஷம், தேவ பத்தி, தானம், ஈசுவர பூசை, ஞான சாத்திரத்தைக் கேட்டல், இலச்சை, புத்தி, செபம், விரதம் என 10 விதம். நி – * . யம் – அடக்குதல்.

நியாய வைசேடிகர்— நியாயம், வைசேடிகம் என்னும் நூல்களை அனுசரிப்போர். அந்நூல்களைச் செய்தவர் கௌதமர், கணாதர் என்போர்.

நிரந்தரம் — வெளி, இடையீடு இல்லாதது. நிர் – இன்மை. அந்தரம் – இடையீடு.

நிரதிசயம்— மிக மேலானது. நிர் – அதிகம். அதிசயம் – மேன்மை.

*நிரனிறை* — நிரல் + நிறை = நிரனிறை. அலங்காரம் 35-ல் ஒன்று. அது முன், முறையாகச் சொல்லப்பட்ட பொருள் கட்குச் சம்பந்தம் உள்ளவைகளைப் பின் முறையே சொல்லுதல். நிரல் — நேர், முறை. நிறை - வைப்பது. (எ-டு) பவளமும் முத்தும் போலும் இதழும் பல்லும்.

*நிராகாரம்*— வடிவு இன்மை, உரு இன்மை. நிர் - †. ஆகாரம் - வடிவம்.

*நிராதாரம்*— ஆதாரம் இல்லாதது.

*நிராமய ஆன்மா*— பரமசிவனது 8 குணங்களுள் ஒன்று அது இயற்கை உணர்வினன் ஆதல். நிர் - இன்மை. ஆமயம் - நோய். ஆ - *. மீ - வருத்துதல். அ - விகுதி.

*நிரீச்சுர சாங்கியன்*— கடவுள் இல்லை என்று சொல்லும் சாங்கிய நூல் செய்த கபில முனிவன். அந்நூலை அநுசரிப்போன். நிர் - இன்மை. ஈச்சுரன் - கடவுள். சாங்கியன் - பகுத்தறிவோன்.

*நிருத்தம்*— வேதாங்கம் 6 - ல் ஒன்று. அது வேதத்தில் வரும்சொற்களில் உள்ள தோன்றல் முதலிய விகாரங்களையும், பகுதி விகுதி முதலியவைகளையும் காட்டிப் பொருள் கூறிப் பதங்களை முடிப்பது. நிர்— நிச்சயம். உத்தம் - சொல்லப்பட்டது.

*நிருவாணம்*— மோட்சம், ஓய்வு. நிர் - முற்றாக. வா- கெடுதல். நம் - விகுதி.

*நிருவிகற்பம்*— விகற்பம் இன்மை. பெயர், சாதி, குணம், கன்மம், பொருள் இவற்றால் பகுத்தறிதல் இன்றி, இஃது ஒன்று தோன்றா நின்றது எனப் பொருள் உண்மை மாத்திரையே அறிதல்.

*நிருவிகாரி*— விகாரம் இல்லாதவன். நிர் - இன்மை. விகாரம் - வேறுபாடு.

*நிர்*— நிச்சயம், தடை முதலிய பொருள்களைக் காட்டும் ஓர் அவ்வியயம்.

*நிர்ச்சரம்*— ஆருகத மதத்தில் சொல்லப்பட்ட 7 வகைப் பதார்த்தங்களுள் ஒன்று. அது சுடுபாறையில் கிடத்தல், தலைமயிர் பறித்தல் முதலிய தவம். நிர் + ஜா. ஜா, ஜ்று - தேய்த்தல், வாட்டுதல்.

*நிலைக்களம்*— நிற்றற்கு உரிய இடம்.

நிலையில்படும் அவத்தை— மத்தியால் அவத்தை.

நிவிர்த்தி— ஆன்மாக்களைப் பிரபஞ்சப் பற்றுகளினின்றும் நிவிர்த்தி செய்யும் சத்தி. நி - இன்மை. விர்த்தி - வளர்தல்.

நிவிர்த்தி கலை— 5 கலைகளுள் ஒன்று.

நின்மலன்— மல கன்மம் இல்லாதவன், சுத்தன். நிர் - இன்மை. மலம் - அழுக்கு.

நுதலிய பொருள்— கருதிய பொருள்.

நுதலுதல்— கருதல், சொல்லல்.

நூல்— சாத்திரம் (பார்க்க). பஞ்சு நூல் போல நிற்றலின் நூல் எனப்பட்டது.

நேயம்— அறியப்படும் பொருள், சிவன். ஞேயம், நேயம் எனப் போலி ஆயிற்று.

நையாயிகம் — புறச் சமயம் ஆகிய தருக்க மதத்தின் ஒரு பிரிவு. நியாய + இக = நையாயிக.

நையாயிகர்— நியாயம் வல்லவர், நியாய நூல் செய்தவர்.

நோக்கு— கண்.

பக்குவ விசேடம்— சிறந்த பக்குவம்.

பக்குவம்— பருவம், முதிர்ச்சி. பச் - பாகம் ஆதல். வ - விகுதி.

பக்குவர்— மந்ததரம், மந்தம். தீவிரம், தீவிரதரம் (பார்க்க).

பசாசம்— இரும்பு.

பசு— பாசத்தால் பந்திக்கப்பட்ட ஆன்மா. பச்+உ = பசு. பச் - கட்டல், பந்தித்தல். உ - விகுதி.

பசு ஞானம்— நான் பிரமம் என்னும் ஞானம். பசு—ஆன்மா. ஞானம் - அறிவு.

பசுத்துவம்— பசுவின் தன்மை. துவம் - தன்மை.

பசு வர்க்கம்— விஞ்ஞானாகலர், பிரளயாகலர், சகலர். என்னும் உயிர் வகுப்பு.

பஞ்ச கஞ்சுகன் — புருடன். கலை முதலிய 5 தையும் சட்டையாகக் கொள்ளலிற் பஞ்ச கஞ்சுகன் எனப்பட்டான். பஞ்ச—ஐந்து. கஞ்சுகம் - சட்டை.

பஞ்ச கந்தம்— உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் 5ன் கூட்டம். கந்தம் - சமூகம், கூட்டம்.

பஞ்சக் கிலேசம்— 5 துக்கங்கள். அவை. அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, கோபம் என்பன. கிலேசம் — துயர். கிலேச-துன்பம். கிலிச் – வருத்தல்.

பஞ்சாசத்— 50.

படர்தல்— செறிதல், செல்லுதல்.

பட்டாசாரியம்—மீமாஞ்ச மதத்தின் ஒரு பிரிவு. ஆசாரியன், பட்டன் செய்ததால் பட்டாசாரியம் எனப்பட்டது.

பதஞ்சலி— யோக நூல் செய்தவர்.

பத முத்தி— சாலோகம், சாமீபம், சாரூபம் என்பன.

பதம்— மொழி, சொல், ஈரம்.

பதி— பா - காத்தல். தி – விகுதி.

பதி ஞானம்— திரு அருள்.

பதுமம், பதும ஆசனம்— 8 வகை யோக ஆசனத்துள் ஒன்று. அது 2 தொடை மேலும் 2 உள்ளங்காலையும் மாறித் தோன்ற வைத்து இருத்தல்.

பத்திரம், பத்திராசனம்— 8 வகை யோக ஆசனத்துள் ஒன்று. அது பீசத்தின் கீழ் சீவனியிடத்து இருகால் பரட்டையும் வைத்து, அவ் இரு பதத்தையும் இரு கையால் இறுகப் பிடித்து அசையாது இருத்தல்.

பயப்பித்தல்— பெறுவித்தல்.

பயிலல்— நிகழ்தல், தழைத்தல்.

பயிற்சி— பழக்கம், வாசனை.

பயிற்றுதல்— பழக்குதல்.

பர காயம்— பிறனுடைய சரீரம்.

பர சரீரம் — காரணசரீரம், கஞ்சுகசரீரம், குணசரீரம் என்னும் மூவகைச் சரீரம்.

பரடு— கரடு, கணுக்கால்.

பர தந்திரம்— பிறர் வயம் உடைமை, சுதந்திரம் இன்மை. பர – பிறர். தந்திர – உபாயம், வழி.

பர நாதம்— ஞான சத்தி.

பர நிந்தை— பிறரைத் தூற்றுதல்.

பரமசிவன்— பரம – மேலான. (பார்க்க) சிவன், பதி.

பரமாணு—மிக நுண்மையான அணு, பஞ்சபூத அணு. பரம + அணு = பரமாணு.

பரமாணு காரண வாதம்— சௌத்திராந்திகமும் வைபாடிகமும்.

பரமார்த்தம் — மிக மேலான பொருள். பரம + அர்த்தம் = பரமார்த்தம்.

பரமான்மா— பரம்பொருள்,

பரமுத்தி— மேலான முத்தி, சாயுச்சியம்.

பரம் — மிக மேலானது, பெரியது, கடந்தது. ப்றா - பரிபூரணமாய் இருத்தல், எங்கும் நிறைந்து இருத்தல்.

பர வாகீசுவரி— 7 வகைச் சிவ பேதங்களுக்கும் உள்ள 7 வகைச் சத்திகளுள் ஒன்று.

பரவிந்து — கிரியா சத்தி.

பரவுடம்பு— காரண சரீரம், கஞ்சுக சரீரம், குண சரீரம் என்பன.

பரிகரித்தல்— மறுத்தல், நீக்குதல், முற்றாய்க் களைதல். பரி - முற்றாக என்னும் பொருள்படும்.* ஹர்- எடுத்தல், நீக்குதல்.

பரிக்கிரக சத்தி — தொழிற்குக் காரணமாய் நிற்கும் கிரியா சத்தி. அது வேண்டும் இடத்து உபகாரம் ஆவது. பரி—. *ஹர்– எடுத்தல்.

பரிசம்— தீண்டுதல், தொடுதலை அறியும் அறிவு, ஊறு.

பரிசித்தல்— தொட்டு அறிதல். ஸ்பர்ஸ் - தொடுதல்.

பரிணமித்தல் — ஒன்று, பிறிதுஒன்றாதல். பரி —. * நம் - வளைதல்.

பரிணாமம்— இயற்கையினின்றும் திரிதல்.

பரிணாம வாதம்— மாயை என்பது ஒன்றில்லை, பிரமமே உலகமாகத் தோன்றும் என்னும் மதம்.

பரிபாகம் அடைதல்— பக்குவம் அடைதல்.

பரிபாகம்— உத்தமமான பக்குவம். பரி - முற்றாக.பாகம் -பக்குவம். பச் - சமைத்தல், பாகம் பண்ணுதல்.

பரியாயம்— ஒத்த பொருள் உடையது. பரி - திரும்ப.அய - வருதல்.

பரை — சுத்த ஞானம். பரா, தமிழில் பரை ஆயிற்று. பர என்பதின் பெண்பால். பரம் (பார்க்க).

பலப்பிரமதனி— வாமை முதலிய 8 சத்திகளுள் ஒன்று. அது பலப்பிரமதனர் என்னும் ஈசுவரருடைய சத்தி.

பலவிகரணி— வாமை முதலிய 8 சத்திகளுள் ஒன்று. பலவி கரணருடைய சத்தி. விகரணம் - விசேடமாகச் செய்தல்.

பற்றுக்கோடு — கொழுகொம்பு. பற்று — ஆதாரம். கோடு - கொம்பு.

பாகம் அடைதல் — பக்குவம் அடைதல்.

பாங்கு— அழகு, தகைமை, உரிமை.

பாச ஞானம்— பாசம் வாயிலாக ஆன்மாவின்கண் நிகழும் ஞானம்.

பாசக்ஷயம்— பாசத்தைக் குறைத்தல், பாசநீக்கம். பாசம்- மலம். க்ஷயம் - குறைவு. க்ஷி - குறைத்தல்.

பாசம்— மலபந்தம், கட்டு. பச் - கட்டுதல். அ - விகுதி. ஆணவ மலம்.

பாசுபதம்— அகப்புறச் சமயம் 6 -ல் ஒன்று. பசுபதி ஆகிய சிவனைக் கடவுளாக உடையது எனப் பொருள்படும்.

பாஞ்சராத்திரம்— புறச் சமயம் 6 - ல் ஒன்று. பாஞ்ச ராத்திரம் என்பதினின்று வந்த ‡.

பாஞ்சராத்திரி— விட்டுணுவே 3 தொழிற்கும் கருத்தா எனக் கூறும் பாஞ்சராத்திர நூலை அநுசரிப்போன். அந்நூல் 5 இரவில் செய்யப்பட்டமையால் பாஞ்சராத்திரம் எனப் பெயர் ஆயிற்று.

பாடாணம்— கல்லான பொருள்களைப் பொடியாக்கலால் பாஷாணம். பிஷ் - பொடி ஆக்கல்.

பாடாண வாதம்— அகச்சமயம் 6 ல் ஒன்று. பாணி - கன் மேந்திரியம் 5-ல் ஒன்று. கை. பண்-கொடுக்கல் வாங்கல் செய்தல்.

பாதம் — கன்மேந்திரியம் 5-ல் ஒன்று, கால். பத் - போதல்.

பாயு— கன்மேந்திரியம் 5 ல் ஒன்று, குதம். பா - காத்தல் யு - விகுதி.

பாரிசேடம்— ஒழிபு, எஞ்சியது. மிஞ்சியது. பரி–. * சேடம் எஞ்சியது.

பாவகம்— பாவம், குணம், பாவனை, மனம் முதலிய வற்றோடு கூடி நின்று பாவிப்பது.

பாவம்— குணம். பூ - தோன்றல்.

பாவனை— வாதனை, அனுபவத்தால் தோன்றி நினை வுக்குக் காரணமாய் உள்ளது.

பாவனாதீதம்— பாவனையைக் கடந்தது. பாவனா + அதீதம்.

பாவுதல்— பரம்புதல்.

பாற்கரிய வாதம்— ஏகான்ம வாதத்தில் ஒரு பிரிவு.

பிடக நூல்—பௌத்த மத சாத்திரம். இவை 3 வகையாகச் சேர்க்கப் பட்டமையால் பிடகம் எனப்பட்டது. பிடக– கூடை. பிட் – ஒருங்கு சேர்த்தல்.

பிரகாசம்— ஞானம். பிர—* . காஸ் – ஒளி.

பிரகிருதி— மூல காரணம்; (பார்க்க) மூலப்பிரகிருதி.

பிரக்ஞானம் பிரமம்— மகா வாக்கியம் (பார்க்க).

பிரணவம்— வேதங்களின் முதலில் சொல்லப்படும் ஒரு மகா மந்திரம். பிர – அதிகம். நவம் – துதிக்கப்படுவது. நம் – வணங்குதல், வளைதல்.

பிரஞ்ஞை— மெஞ்ஞானம். பிர —* . ஞா – அறிதல்.

பிரதிட்டாகலை— 5 கலைகளுள் ஒன்று.

பிரதிட்டை— சத்தி வடிவாகிய 5 கலைகளுள் ஒன்று. அது பிரபஞ்சப் பற்றுக்களினின்றும் நிவிர்த்தி செய்யப் பெற்ற ஆன்மாக்கள், வாசனை பற்றி மீளப் பிரபஞ்சத்தை நோக்காத வண்ணம் பிரதிட்டை செய்தலால் பிரதிட்டாகலை எனப்படும். பிரதி – நேரே. ஸ்தா – நிற்றல்.

பிரதிட்டை செய்தல்— நிலைபெறுத்தல்.

பிரதி பிம்பம் — பிரதி ரூபம், சம வடிவம். பிரதி – எதிர். பிம்பம் – நிழல், வடிவம்.

பிரத்தியட்சம்— எதிரே காண்டல். பிரதி – எதிர். அட்சம் – கண், இந்திரியம்.

பிரத்தியட்சப் பிரமாணம்— காட்சிப் பிரமாணம்.

பிரத்தியயம்— அறிவு. பிரதி – எதிர். அய – பெறப்படுவது; இ – பெறுதல், அடைதல்.

பிரத்தியாகாரம் — 8 வகை யோகத்துள் ஒன்று. அது, மனத்தை இந்திரிய விடயங்களில் செல்லஒட்டாதுஅடக்குதல். பிரதி— மாறாக. ஆகாரம் – எடுத்தல், அனுபவித்தல். ஆ — மறுதலைப் பொருள் காட்டும்*. ஹாரம், ஹ்று– நீக்குதல்.

பிரபஞ்சம்— உலகம். பிர —* . பஞ்ச் – விரிதல்.

பிரபாகரம்— மீமாஞ்ச மதத்தின் ஒரு பிரிவு. பிரபாகர முனிவர் செய்தமையால் பிரபாகரம் எனப்பட்டது.

பிரமாகம்— பிரமம் நான். பிரம + அஹம்.

பிரமிதி— பிரமாணத்தால் உணர்ந்த மெய் உணர்வு. பிர —* . மா – அளத்தல், அளந்தறிதல். தி – விகுதி.

பிரமேயம்— பிரமாணத்தால் அளக்கப்பட்டது. பிர—*. மேயம் – அளக்கப்பட்டது. மா + இய. மா + அளத்தல்.

பிரவர்த்தித்தல்— முயற்சி செய்தல்.

பிரவாகம் — நீர் ஓட்டம். பிர —* . வாகம் – கொண்டு போவது. வஹ் – கொண்டு போதல்.

பிரவிருத்தன்— விந்துவின் காரியங்களைத் தொடங்கினவன்.

பிரவிருத்தர்— மகேசுவரர்.

பிரவிரு(ர்)த்தி —தொழிற்படுதல், முயற்சி, வளர்ச்சி, அதிகப்படுகை. பிர – மிக, முன். வருய – வளர்தல், பெருகுதல்.

பிரவிருத்தி விஞ்ஞானம் — சங்கற்பமாய் விரியும் ஞானம்.

பிரளயாகலர்— பிரளயத்தில் கலை அற்றவர். பிரளயம் – ஒடுக்கம். அகலர் – கலை நீங்கினவர்,

பிரகாமியம் — 8 சித்திகளுள் ஒன்று. பிர, ஆ–* . காம்யம்– விரும் படுவது. கம்–விரும்புதல்.

பிராகிருதம் — பிரகிருதி சம்பந்தமானது.

பிராணவாயு — 10 வாயுக்களுள் ஒன்று.

பிராணாயாமம் — 8 வகை யோகத்துள் ஒன்று. அது பிராண வாயுவைத் தடுத்தல். இது மந்திர செபத்துடன் அடக்கலும் மந்திர செபம் இன்றி அடக்கலும் என 2 வகைப்படும். பிராண + ஆயாமம். ஆயாமம்-தடுத்தல். ஆ-* . யாம-தடுப்பது. யம்-தடுத்தல். பிராண : பிர-முன்னாக* . அந்-மூச்சுவிடுதல்.

பிராணான்ம வாதம் — உலோகாயத மதத்தில் ஒரு பிரிவு. அது, பிராண வாயுவே ஆன்மா என்பது.

பிராந்தி ஞானம் — விபரீத உணர்வு. பிராந்தி-மயக்கம். ஞானம்-உணர்வு.

பிராப்தி — 8 சித்திகளுள் ஒன்று. பிர + ஆப் + தி; பிர-மிக * . ஆப்-பெறுதல். தி-விகுதி.

பிராயச்சித்தம் — சுத்தக்கிரியை. பிராயஸ்-பெரும்பாலும் கூடிய அளவு. சித்தம் - மனத்தில் அமைத்துச் செய்தல்.

பிராரத்தம் — 3 வகைக் கன்மங்களுள் ஒன்று. பிர- * ஆரத்தம்-தொடக்கம். ஆ - * . ரப்- தொடங்கல், ஆரம்பித்தல்

பிருகற்பதி — தேவ குரு, உலோகாயத நூல் செய்தவர். பிருகத்-தேவதை, மந்திரம். பதி-தலைவர்.

பிருதிவி — மண், 5 பூதங்களில் ஒன்று. ப்ருத்(த்)-விஸ் தாரம். இ-விகுதி.

பிரேரக காண்டம் — சிவ தத்துவம் முதலிய சுத்த தத்து வங்கள் 5. இவை அசுத்த மாயா தத்துவங்களைப் பிரேரகம் செய்தலால் பிரேரக காண்டம் எனப்பட்டன. பிரேரம்-ஏவுதல். காண்டம்-திரள்.

பிரேரகம் — ஏவுதல். பிர + ஈர் + அக = பிரேரக. ஈர்-செலுத்தல்.

பிரேரித்தல் — ஏவுதல், காரியப்படுத்தல், செலுத்துதல்.

பிறர்பொருட்டு அனுமானம் — தான் அறிந்ததனைப் பிறர் அறியும்படி போதித்தலை அறியும் அறிவு.

பிறழ்தல் — வேறாதல், மாறுதல்.

பீசம் — வித்து. வீச்-சிதறல். அ-விகுதி.

புடை நூல் — சார்பு நூல். புடை-பக்கம்.

புத்தி பூருவம் — அறியப்பட்டது. புத்தி-அறிவு. பூர்வம்-முன்னாகக் கொண்டுள்ளது.

புத்திர மார்க்கம் — புத்திர உரிமைக்கு உரிய வழி, கிரியை நெறி.

பும்ஸ்த்துவ மலம் — பிரகிருதி சம்பந்தமாகப் புருடனை அடைந்திருக்கும் அவித்தை முதலியன (பௌஷ். 405). பும்+ஸ்+த்வம் = பும்ஸ்த்வம். பும்-புருடன். த்வம்-தன்மை.

புரியட்டகம், புரியட்டகாயம் — சூக்கும தேகம். புரி-சரீரம் அட்டகம் — 8-ன் கூட்டம்.

புருட தத்துவம் — ஆன்மா.

புருடன் — உடம்போடு கூடிய ஆன்மா. புர்-உடம்பு. ப்ரு-தாங்குதல்.

புரைதல் — ஒப்பிடல்.

புற்கலம் — உடம்பு, சரீரம்.

புனிதன் நாமம் — 5 எழுத்து. புனிதன்-சிவன். நாமம்-பெயர்.

பூசை — வழிபாடு. பூச்-வழிபடுதல். ஆ-விகுதி.

பூத சார உடம்பு — 5 பூதங்களின் சாரங்களால் ஆக்கப்பட்ட சரீரம், தேவ சரீரம்.

பூத பரிணாமம் — பூதங்களின் உருத் திரிவு.

பூத பரிணாம உடம்பு — ஆன்மாக்கள் பூமியில் எடுக்கும் சரீரம்.

பூதம் — பிருதிவி முதலிய 5 பூதம். பூ-இருத்தல், தோன்று தல். த-விகுதி.

பூத உடம்பு — ஆன்மாக்கள் நரகத்தில் எடுக்கும் சரீரம், யாதனா சரீரம்.

பூதாதி அகங்காரம் — தமோ குண சம்பந்த அகங்காரம்.

பூரண நிலை — எங்கும் நிறைந்த நிலை.

பூரணி — 5 வகைச் சத்திகளுள் ஒன்று.

**பூருவ பக்கம்** — சித்தாந்த விரோதமாக விடயாதிகளை நாட்டி, பிறரால் கூறப்பட்ட வாக்கியம், முன்பக்கம். பூருவம்-முன். பக்ஷம்-கொள்கை.

**பெத்த நிலை** — பாசத்தால் கட்டுப்பட்டு இருக்கும் நிலை. பெத்தம் — பந்தம், கட்டுப்பட்டது. பத்-கட்டல்.

பெத்தர் — பாச பந்தர், பாசத்தால் கட்டுப்பட்டவர்.

பெற்றி — தன்மை.

**பேதவாதி** — மாத்துவன்.

பேதா பேத வாதம் — பாஞ்சராத்திரம்.

பேர் அருள் உடைமை — பெருங்கருணை உடைமை.

பேரானந்தம் — சிவானந்தம், திருஅடி, முதல்வனது 8 வகைக் குணங்களும் ஆன்மாவின் இடத்து மேம்பட்டு விளங்கும் விளக்கம்.

**பைசந்தி** — 4 வகை வாக்குகளுள் ஒன்று. பிச — உருவ மாதல்.

பைசுந்நியம் — குறளை, கோள் வார்த்தை. பிசு + நன். பிச-இல்லாததை உண்டாக்குதல்.

**பொதுவகையான் அறிவு நிகழ்தல்**-நிருவிகற்பமாய் அறிவு உண்டாதல்.

பொது இயல்பு — பொது இலக்கணம்.

பொருவுதல் — ஒத்தல்.

பொற்பு — பொலிவு.

**போகசிவன்** — சதாசிவன்.

போக தத்துவம் — சிவ தத்துவம்.

போகம் — புசிப்பு. புச் - உண்ணல்.

போக ரூபம் — அனுபவ வடிவம்.

போக்கிய காண்டம் — பிருதிவி முதலிய 24 அசுத்த தத்து வங்கள். இவை போக்கியங்களாய் நின்று உதவுதலால் போக்கிய காண்டம் எனப்பட்டன. போக்கியம்-புசிக்கப்படும் பொருள். காண்டம் - திரள்.

போக்கியம் — அனுபவம், புசிக்கப்படும் பொருள் விடய வடியாய் நின்று அனுபவிக்கப்படும் கன்மம். போக + யம் = போக்கியம். புச்–உண்ணுதல்.

போக்தா — புசிப்பவன். புச்–புசித்தல்.

போசயித்திரு — புசிப்பிப்பவன். புச்–புசித்தல். ய–பிற வினை விகுதி. த்ரு–வினைமுதல் பொருள் விகுதி.

போசயித்திரு காண்டம் — கலை முதலிய 7 சுத்தா சுத்த தத்துவங்கள். இவை போகங்களைக் கொடுத்துப் புசிப்பிக் கையால் போசயித்திரு காண்டம் எனப்பட்டன. போசயித்திரு-புசிப்பிப்பவன். காண்டம்–கூட்டம், திரள்.

போத்திருத்துவம் — போக நுகர்ச்சிக்கு வினை முதலாம் தன்மை. போத்திரு–உண்பவன். த்வம்–தன்மை

பௌதிகம் — பூத சம்பந்தம் உள்ளது. பூத + இகம் = பௌதிகம் ‡.

பௌராணிகம் — புராண மதம். புராண + இகம் = பௌராணிகம் ‡.

பௌராணிகன் — புராண மதத்தன்.

பௌத்தம் — புத்த சமயம். புத்த சம்பந்தம் உடையது பௌத்தம் ‡.

மகரத் துவசன் — மகரக் கொடியோன்–மன்மதன். மகரம்–மீன். துவசம்–கொடி.

மகா சிருட்டி — சுத்த மாயையில் நிகழும் படைப்பு.

மகாப் பிரளயம் — மகா சங்காரம்.

மகா மந்திரர் — சுத்த வித்தியா தத்துவத்தில் இருக்கும் ஏழு கோடி மந்திர மூர்த்திகள்.

மகா மாயை — சுத்த மாயை.

மகா ருத்திரர் — பரமசிவன்.

மகா வாக்கியம் — வேதங்களில் சொல்லப்பட்ட 4 சிறப்பு வாக்கியங்கள் : அவை : (1) இருக்கு வேதம் : பிரக்ஞானம் பிரமம் — அறிவே பிரமம். (2) யசுர் வேதம் : அகம் பிரமாஸ்மி–நான் பிரமம் ஆகின்றேன். (3) சாம வேதம் : தத்துவமசி–அது

நீ ஆகின்றாய். (4) அதர்வண வேதம் : அயம் ஆன்மாப் பிரமம்-இந்த ஆன்மாப் பிரமம். மகா-பெரிய. வாக்கியம்-பத சமூகம்.

மகிமா — 8 சித்திகளுள் ஒன்று. அது மகத்தாய் இருத்தல். மகத் + இமா.

மகேசுவர தத்துவம் — சுத்த தத்துவம் 5-ல் ஒன்று.

மகேசை — மகேசுரனுடைய சத்தி.

மங்கல வாழ்த்து — நன்மை பயக்கும் வாழ்த்து.

மங்கி —குறைந்து.

மணி பூரகம் — 6 ஆதாரங்களுள் 3-வது. அது, சுவாதிட்டானத்துக்கு மேலே நாபி இடத்தில் இருப்பது. வடிவம்-4 சதுரம். 6 இதழ்த் தாமரை உடையது. செம்பொன் நிறம். எழுத்து பபமயரல. தேவதை பிரமா. மணிபூர-நாபி.

மண்டலம் — வட்டம், சக்கரம். மண்ட்-சுற்றுதல். அலம்-விகுதி.

மண்டுதல் — நெருங்குதல், மிகுதல்.

மதம் — ஒன்று சொல்லும் இடத்தும் செய்யும் இடத்தும் அகங்காரமாய் நிற்றல். மத்-களித்தல்.

மத்திம சிருட்டி — இடையில் நிகழும் படைப்பு. மத்தியம்-நடு.

மத்திமை — 4 வாக்குகளில் ஒன்று.

மத்தியப் பிரளயம் — நடுவில் நிகழும் பிரளயம்.

மந்ததரம் — அதிக மந்தம்.

மந்தம் — தாமதம், கூர்மை இன்மை, அற்பம்.

மந்திர கலை — ஆகமம் (பார்க்க).

மந்திரம் — கடவுளை நினைத்தற்குக் கருவியாய் உள்ள வாசகம். மந்தர்-நினைத்தல். அ-விகுதி. மந்-நினைத்தல், த்ர-காத்தல் எனப் பிரித்து நினைப்பவனைக் காப்பது என்பாரும் உளர்.

மந்திரம் — வேதாங்கம் 6-ல் ஒன்று. அத்துவாக்கள் 6-ல் ஒன்று.

மமதை — எனது என்கை. மம-எனது. தை-தன்மை.

மயக்கம் — தெளிவு பிறவாமை, மாறுபாடு.

மயக்க வாசனை — திரிபு அறிவு.

மயங்கல் — அறிவு கெடுதல்.

மயூரம் — அங்கயோக ஆசனத்து ஒன்று. அது, முழங்கை இரண்டும் உந்திப்புறத்தில் அழுந்தப் புவியில் கை ஊன்றிக் கால்நீட்டித் தலை நிமிர்ந்து இருத்தல்.

மருட் கேவலம் — அநாதி கேவலம். கேவலாவத்தைத் துரியாதீதத்தில் ஆன்மா இருள் மலத்தோடு கூடி நிற்றல்.

மல வாசனை — மலப் பயிற்சி.

மலைவு — மாறுபாடு, விரோதம்.

மல்குதல் — அதிகரித்தல், நிறைதல்.

மறம் — கோபம், சினம்.

மனம் — அந்தக்கரணங்களுள் ஒன்று. அது தைசத அகங்காரத்தினின்றும் தோன்றியது. மந்-நினைத்தல்.

மனோன்மணி—உமை. சதாசிவரின் சத்தி. மந்+உத்+மநி. உத்மந் - எழுச்சி உண்டாக்குதல். உத்-மேல். மந்-மனம்.

மாத்தியமிகர் — பௌத்தரில் ஒரு பிரிவினர். மத்திய + ம + இகர்.

மாத்திரை — எழுத்தின் உச்சாரண கால அளவு.

மாத்துவர் — பேதவாதிகள். மத்துவர்-மாத்துவர் ‡.

மாந்திரநூல் — சித்தாந்த சாத்திரம்.

மாந்திர வினை — மந்திர உச்சாரம். ஞானநூல் ஓதல் முதலியன செய்தல்.

மாமாயை — சுத்த மாயை. மாயேயம்.

மாயா காரியம் — அசித்துப் பிரபஞ்சம்.

மாயா வாதம் — ஏகான்ம வாதத்தில் ஒரு பிரிவு.

மாயா உபாதி — மாயா காரியம்.

மாயேயம் — மாயா காரியம் ஆகிய தனு முதலாயின. மாயா-பகுதி. ஏய- ‡ விகுதி.

மாவிரதம் — அகப்புறச் சமயம்.

மாற்சரியம் — பொறாமை. மற்சர + யம் ‡. மற்சரன்- பிறர் சுகத்தில் வெறுப்பு உடையன்.

மானதக் காட்சி — இந்திரியக் காட்சி அறிவு, புத்தியின் கண் வந்தபொழுது அதனை அறியும் அறிவு.

மான் — பிரகிருதி மாயை. மகான் - மான் எனத் தற்பவம் ஆயிற்று. மகத்-பெரிய. மஹ்-விரிதல்.

மிச்சிரம் — கலப்பு. மிச்-கலத்தல். ர-விகுதி.

மித்தை உணர்வு — பொய் அறிவு.

(ஸ்) மிருதி — முனிவர் நினைத்துச் செய்யப்பட்ட தரும சாத்திரம். ஸ்மிர்-நினைத்தல். தி-விகுதி.

மீமாஞ்சை—வைதிக நூல்களுள் ஒன்று. புறச்சமயம் 6-ல் ஒன்று.

முடிவில் ஆற்றல் உடைமை — குணங்கள் 8-ல் ஒன்று. அது, அநந்த சத்தி.

முதல் காரணம் — காரியத்தோடு ஒற்றுமைப்பட்டு நிற்கும் காரணம்.

முதல் நூல் — முதல்வன் வாக்கு.

முத்தம் — அங்க யோகாசனத்து ஒன்று. அது இடக் கால் பரட்டால் சீவனியை அழுத்தி வலக்கால் பரடு அப் பரட்டின் கீழ் உந்த இருத்தல்.

முத்தர் — மலம் நீங்கினவர். முச்-விடல். த-விகுதி.

முயங்குதல் — பொருந்துதல்.

முரணுதல் — மாறுபடுதல்.

முற்று உணர்வு — அனைத்தையும் தடை இன்றி அறியும் அறிவு.

முற்று உணர்தல் — சர்வஞ்ஞத்துவம். குணங்கள் 8-ல் ஒன்று.

முனைத்தல் - முற்படல்.

முனைத்திடுதல் — சுட்டி அறியப்படுவதாய் வேறு நிற்றல்.

மூர்த்தி சாதாக்கியம் — வித்தை என்னும் பெயரை உடைய இச்சா சத்தி சுத்த குணமான கலையைப் பொருந்துதலால்

மூர்த்தி என்னும் பெயரையும், காணப்பட்ட வடிவையும். காலாக்கினிக்கு ஒத்த பிரகாசத்தையும் உடைத்தாகி, இலிங்க வடிவு ஆகி, அதனுடைய ஊர்த்துவத்திலே ஒரு திருமுகம், இச்சா ஞானக் கிரியைகள் ஆகிய திருக்கண்கள் 3-ம். கண்டிப்பு அற்ற வடிவும் உடைத்தாய் இருப்பது. இதை இலிங்க மூர்த்தி என்பர்.

மூல கன்மம் — ஆன்மாவின் இச்சா சத்தியின் காரியம் ஆகிய விருப்பு வெறுப்புகள். மூலம்-காரணம். கன்மம்-செயல்.

மூல காரணம் — முதல் காரணம். மூலம்-ஆதி.

மூலப் பிரகிருதி, மூலப் பகுதி — 24-ஆம் தத்துவமாய் உள்ளது. இது அசுத்த மாயையினின்றும் தோன்றி, அசுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமாய் உள்ளது. மூலம்-காரணம். பிரகிருதி-முதலில் உள்ளது. ப்ர-முன். க்ரு-செய்தல். தி-விகுதி.

மூல(மல)ம் — ஆணவ மலம்.

மூலாதாரம்—6 ஆதாரங்களில் முதலாவது. இது, குதத்துக்கு 2 அங்குலத்துக்கு மேலே, குறிக்கு 2 அங்குலத்துக்குக் கீழே உள்ள இடம். 3 கோண வடிவம். 4 இதழ்ச் செந்தாமரை. மாணிக்க நிறம். தேவர்-விநாயகர்.

மெய்ஞ்ஞானம் — வீடு பயக்கும் உணர்வு.

மென்மை — மிருதுத் தன்மை, சாந்தம்.

மேவல் — பொருந்தல்.

மோகநீயம் — குற்றங்கள் 8-ல் ஒன்று. அது, ஆசை உடையவனாய் இருத்தல். முஹ்-மயங்குதல். அநீய-விகுதி.

மோகம் — ஆசை, அஞ்ஞானம், ஆணவ மலம். முஹ்-மயக்கம்.

மோகினி — அசுத்த மாயை. முஹ்-மயக்கம்.

யசு — இரண்டாம் வேதம். யஜ்-நிவேதித்தல், பலியிடுதல்.

யாகம் — வழிபாடு. யஜ் + க = யாக்.

யோகக் காட்சி — சுக துக்கங்களில் வசப்படாது அங்ஙனம் வசப்படுதற்கு ஏதுவாய்த் தடை செய்து நின்ற மல சத்திகளை இயமம், நியமம் முதலிய அட்டாங்க யோக சமாதியால் கெடுத்து, முக்காலத்தும் 3 இடத்தும் உள்ள

பொருள்களை ஓர் காலத்து ஓர் இடத்து இருந்து காணும் உணர்வு.

யோக மதம் — புறச் சமயம் 6-ல் ஒன்று. அது பதஞ்சலி நூலை ஒட்டியது.

யோகம் — கடவுளை நினைத்தல். யுஜ்-சேர்தல், கூடுதல்.

யோகாங்கம் — யோகத்தின் உறுப்புகள். அவை இயமம் நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி.

யோகாசாரர் — பௌத்தரில் ஒரு பிரிவினர்.

யோனி பேதம் — உற்பத்தி இட வேறுபாடு.

**ரோ**தயித்திரி — உரோதயித்திரி (பார்க்க).

**ல**குதை — லகுத் தன்மை.

**லௌ**கிக நூல் — ஆயுள் வேதம் தண்டநீதி முதலாயின, இம்மையில் பலிக்கும் நூல்கள். லோக + இகம் = லௌகிகம்.

**வ**சனம் — பேசுதல். அது கன்மேந்திரியம் 5-ல் ஒன்றாகிய வாக்கின் தொழில். வச்-பேசல். நம்-விகுதி.

வசித்துவம்—சித்திகள் 8-ல் ஒன்று. அது வசஞ் செய்வது. வஶி+த்வம். வஶி-வசப்படுத்தல். த்வம்-தன்மை. வஶ-அவாக் கொள்ளுதல்.

வயின் — இடம்.

வரம்பில் இன்பம் உடைமை — பரமசிவனது குணங்கள் 8-ல் ஒன்று. அது, திருப்தி (நிறைவு).

வழி நூல் — முதல்நூல் வழியே விகற்பித்து உரைத்த நூல். வழி-பின்.

வழி அளவை — கருதல் அளவை, அநுமானம்.

வன்னம் — எழுத்து. வர்ண-எழுத்து, எழுதுதல்.

**வா**சகம் — வசனம், வார்த்தை. வாசக-பேசுதல், சொல். வச்-பேசுதல்.

வாசனா, வாதனா மலம் — பயிற்சிபற்றி வந்த மலம்,

வாசனை — பயிற்சி. வாஸநா - பழைய வினைப் பயிற்சி. வாஸ — மணத்தல், செயல்.

வாசுதேவன்—கண்ணன், கிருஷ்ணன். வசுதேவன் மகன் எனப் பொருள்படும் ‡.

வாட்டம் -- சுற்றத்தை விட்டுப் பிரிந்ததற்கும் பிரிவதற்கும் ஆற்றாமையால் மலர்ச்சி இன்றி வாடுதல்.

வாதனை — பயிற்சி, அழுத்தம்.

வாம மதம் — அகப்புறச் சமயத்துள் ஒன்று.

வாம தேவம் — சதாசிவனுடைய முகங்கள் 5-ல் ஒன்று. அது, மூர்த்தி சாதாக்கிய தத்துவமும், பிரமீச மூர்த்தியும் பொருந்தினது.

வாமை — வாம தேவருடைய சத்தி. வாமா-அழகு.

வாயில் காட்சி — கண் முதலிய இந்திரியங்களால் விடயங்களை அறியும் அறிவு. வாயில் - 5 பொறி.

வாயு — பூதங்கள் 5-ல் ஒன்று. வா-வீசல். யு-விகுதி.

வாய்தல் — அமைதல், பொருந்தல்.

விகற்பித்தல் — வேறுபடுத்தல்.

விகற்பகம் — தன்னை ஒழிய மற்று ஒருவரும் ஒவ்வாதவர் என நிற்றல்.

விசர்க்கம் — கொடுத்தல், விடுத்தல். விஸர்க்க: வி—*. ஸிருஜ்-விடல்.

விசித்திரம் — எச்செயலும் வினையின் வழியாய் நிகழ்வது என்று எண்ணாது, தான் செய்ததாகவும், பிறர் செய்ததாகவும் எண்ணுதல். வி-*. சித்திர-குறைவு, குற்றம். (வி) சிதி-குறைத்தல்.

விசுத்த தேகம் — பரமசிவனுடைய குணங்கள் 8-ல் ஒன்று. அது தூய உடம்பினன் ஆதல்.

விசுத்தம் — சுத்தம். வி-விசேடம்.

விசுத்தி — சுத்தம், ஆதாரங்கள் 6-ல் ஒன்று. அது கண்டத்தில் இருப்பது. வடிவு 6 கோணம். வெண்ணிறமான 16 இதழ்த்தாமரை உடையது. எழுத்து அ ஆ முதலிய 16. தேவதை-மகேசுவரன்.

விஞ்ஞானம் — மேலான அறிவு. வி-விசேடம். ஞானம்-அறிவு.

விஞ்ஞான வாதி — ஞானமே உள் பொருள் என்று சொல்லும் யோகாசாரன்.

விஞ்ஞான ஆன்ம வாதம் — மாயா வாதம்.

விஞ்ஞானகலர் — ஆன்ம வர்க்கங்கள் 3-ல் ஒரு பாலார். அவர் விஞ்ஞானத்தால் கலை அற்றவர். விஞ்ஞான + அகலர்.

விடயம் — பற்றப்படுவது, பொருள்.

விடுத்தல் — தொந்தங் (பற்று)களை விடுத்தல்.

விட்டுணு — நாராயண மூர்த்தி. விஷ-வியாபகம். ணு-விகுதி.

வித்தியா கலை — கலைகள் 5-ல் ஒன்று.

வித்தியேசுரர் — ஈசுர தத்துவத்தில் இருக்கும் அநந்தர் முதலிய 8 பேர். இவர், சுத்த வித்தியா தத்துவத்தில் இருப்பவர்க்குத் தலைவர் ஆதலால், வித்தியேசுரர் எனப்பட்டார். (சித்தாந்தப் பிரகாசிகை).

வித்தை —அறிவு, உண்மை உணர்வு, வித்தியா தத்துவங்கள் 7-ல் ஒன்று. சத்தி வடிவாகிய கலைகள் 5-ல் ஒன்று. அது ஆன்மாக்களுக்குச் சுவானுபூதி ஞானத்தைக் கொடுப்பது. வித்-அறிதல். ய-விகுதி கெட்டது.

விந்து — சுத்தமாயை, விந்து தத்துவம். பிந்த் + உ = துளி. பிந்த்-கூறுபடுதல்.

விபரீதம் — வேறுபாடு, திரிவு.

விபர்யயம் — விபரீதம். வி-*. ப்ர்யய-திரிவு, வேறுபாடு. பரி + அய. பரி-மாறுபாடு, அய-போதல்.

வியஞ்சகம் — வெளிப்படுத்தும் கருவி, துணைக்கருவி. வ்யஞ்ஜ்-வெளிப்படுதல், விளக்குதல்.

வியத்தம், வியக்தம் — வெளிப்பட்டது. வ்யக்த : வ்யஞ்ஜ்-விளக்குதல்.

வியர்த்தம் — பயன் இன்மை, வீண். வி-இன்மை. அர்த்தம்-பயன்.

வியாகரணம் — இலக்கண நூல். வ்யாக்ரு - பகுத்து விளக்குதல். வி + ஆ + க்ரு. வி, ஆ- *. க்ரு-செய்தல்.

வியாச முனிவர் — ஏகான்மவாத நூல் செய்தவர். இவர் பராசர முனியின் மகனார்.

வியாபகம் — நிறைவது, ஏகதேசம் இன்மை. வ்யாப்- முற்றாக நிறைதல். வி- * . ஆப்-பெறுதல்.

வியாபரித்தல் — தொழிற்படுதல்.

வியாபாரம் — தொழில். வ்யாப்ரு-முயற்சியோடு இருத்தல். வி + ஆ + ப்ரு. ப்ரு-முயற்சியாய் இருத்தல்.

வியாப்பியம் — வியாபிக்கப்படுவது. வி + ஆப் + யம்.

வியாவிருதி — அசைவு.

வியானன் — வாயுக்கள் 10-ல் ஒன்று. அது சரீரம் முழுதும் இருப்பது. வி + ஆ + அந. வி-இடையீடு இன்மை. ஆ- எல்லாப் பகுதிகளிலும். அந்-மூச்சு விடுதல்.

வியூகர் — கூட்டமானவர்.

வியூகம் — கூட்டம், வகுப்பு. வி-* . யுஜ்-கூடுதல்.

விரவுதல் — பொருந்துதல், கலத்தல்.

விருத்தி — விரிவு, தொழிற்பாடு, வியாபாரம், வேறு ஒன்றாகத் திரிதல்.

விவர்த்தம் — விபரீத உணர்வு. வி - † . வ்ருத்-போதல்.

விவர்த்தனம் — விபரீத உணர்வு. மாறுபடக் காண்டல். வி + வர்த்தநம். வி- † . வர்த் (வ்ருத்)-போதல். நம்-விகுதி.

விவேக ஞானம் — உண்மையை விரைந்து அறியும் அறிவு.

விவேகித்து அறிதல் — மெய்யாக உணர்தல், பகுத்து அறிதல்.

விழுமம் — சீர்மை, சிறப்பு, நன்மை.

விழுமியது பயத்தல் — நூலின் அழகு 10-ல் ஒன்று. அது, உசிதமான பொருளைக் கொண்டு இருத்தல்.

வினை — ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் (பார்க்க). உலக வினை, வைதிக வினை, அத்தியான்மிக வினை, அதிமார்க்க வினை, மாந்திர வினை (பார்க்க).

**வீடுபேறு** — முத்தி பெறுதல், முத்தியாகிய பயன்.

வீரம் — அங்க யோகாசனத்து ஒன்று. அது வலத்தொடையில் இடக்கால் பரட்டைச் சேர்த்து இறுமாப்பு உற்று இருத்தல்.

**வேண்டல்** — விரும்புதல், யாசித்தல்.

வேதம் — கடவுள் அருளிய முதல் நூல், அறிதற்கருவி. வித்-அறிதல்.

வேதநீயம் — வருத்துதலோடு கூடியது. வேத் + அநீய, வேதநீ-வருத்துவது. வீய-வருத்துதல். அநீய-விகுதி.

வேதாங்கம் — வேதத்துக்கு உறுப்பாய் உள்ள நூல்.

வேதாந்தம் — வேதத்தின் ஞான காண்டமாகிய உபநிடதம். வேத + அந்தம்.

வேற்று இயல்பு — வேறான இயல்பு, பொது இயல்பு.

**வைகரி** — வாக்குகள் 4-ல் ஒன்று.

வைகாரி அகங்காரம் — இராசத குணத்தான் மேம்பட்டு வாக்கு முதலிய கன்மேந்திரியங்கள் தோன்றுதற்குக் காரணமாய் உள்ள அகங்காரம். விகார + இக.

வைசேடிகம் — புறச்சமயம் 6-ல் ஒன்றாகிய தருக்கத்தின் ஒரு பிரிவு. விசேடம் என்னும் பதார்த்தம் ஒன்று அதிகமாய்க் கூறுதலால் வைசேடிகம் எனப்பட்டது. விசேட சம்பந்தம் உடைமையால் வைசேடிகம் என ‡ ஆயிற்று. விசேட+இக = வைசேடிகம்.

வைதிக நூல் — வேதங்களில் கிரியா காண்டத்தை மேற்கொண்டு சோதிட்டோமம் முதலிய புண்ணியங்களால் பெறப்படும் துறக்கம் முதலியவற்றைச் சாதிப்பதாகிய மீமாஞ்சை நூலும், வேதம் ஒரு புருடனால் செய்யப்பட்டதெனச் சாதித்துப் பிரமாணம் முதலிய பதார்த்தங்களை ஆராய்ச்சி செய்யும் முனிவரால் செய்யப்பட்ட நியாய நூலும், வைசேடிக நூலும் ஆகிய 3-ம். இவை இம்மையினும் மறுமையினும் பலிக்கும் நூல்கள். வேத + இக = வைதிகம் ‡.

வைதிக வினை — வேள்வி முதலியன செய்தல்.

வைபாடிகர் — பௌத்தரில் ஒரு சாரார். விபாடை போலும் என வினாயினார் ஆதலின் வைபாடிகர் எனப்பட்டார். விபாடை-மாறுகோளுரை. விபாஷா-விபாடை எனத் தமிழ் ஆயிற்று. விபாஷா + இக = வைபாடிக ‡.

வைரவ மதம்—அகப்புறச் சமயத்துள் ஒன்று.

வைராக்கியம் — விடயங்களில் பற்று இன்மை. இது விராகம் என்பதினின்று வந்த ‡. ய-விகுதி.

---

**இணைப்பு :**

## தமிழ் நாட்டில் சாத்திரப் படிப்பு முறை

தமிழில் தத்துவத் துறை நூல்கள் பல உள்ளன. தமிழ் இலக்கியத்தில் மெய்யறிவு நூல்களே அதிகமாக இடம் பெற்றிருக்கின்றன. தமிழில் மெய்யறிவுக் கருத்து வளர்ந்த நெறி முறைகளை, சமய சாத்திர நூல்களைப் படிக்கப் புகும் மாணவர்க்குத் துணை செய்ய வரலாற்றை ஒட்டி, ஒருங்கே தொகுத்து உணர்த்த வேண்டுவது இன்றியமையாதது. தமிழ் நாட்டில் வழங்கும் தத்துவக் கருத்துகள் நான்கு. அவை (1) சங்கரர் அறிவித்த அத்வைதம் (2) இராமானுஜர் (உடையவர்) விளக்கிய விசிஷ்டாத்வைதம் (3) மத்வாச்சாரியார் காட்டிய துவைதம் (4) மெய்கண்டார் கண்ட சைவ சித்தாந்தம் என்பன.

இவைகளில் மத்வர் கொள்கையை விளக்கும் தமிழ் நூல்கள் இல்லை. சங்கரர் கொள்கைக்கு மூல நூல்கள் வடமொழியில் உள்ளன. தமிழில் உள்ள நூல்களும், வடமொழி நூல்களை மொழிபெயர்த்தும், தழுவியும் வந்தவை ஆகும். விசிஷ்டாத்வைதக் கொள்கையை விளக்குவனவும் பெரிதும் வடமொழி நூல்களே. சில தமிழ் நூல்களும் உண்டு. அவை பெரும்பாலும் வடமொழியில் உள்ள மூலங்களையும் விரிவுரைகளையும் தழுவி மணிப் பிரவாள நடையில் அமைந்தவை. அவைகள், படிப்பதால் மட்டுமே அறியக் கூடியன அன்று. அவைகள் மரபை ஒட்டியே கேட்டல் வழியாக சிறப்பாக வளர்ந்து வந்திருக்கின்றன. ஆனால் சைவ சித்தாந்தத்தை விளக்கும் நூல்கள் வளமான தமிழில் இனிய நடையில் உயர்ந்த கருத்துகளைத் தாங்கி உள்ளன. இவற்றை நாம் படித்து மகிழலாம். ஆனால் செவிவழிக் கேட்டுவந்த நுண்ணிய கருத்துகள் நாட்டில் மறையும் நிலையில் இருக்கின்றன. சித்

தாந்தத் தத்துவ நூல்களின் வளர்ச்சிக்கு மடங்களே தாயகமாய் இருந்தன. பல மடங்களின் தலைமை ஞானாசிரியர்களும், அவர்களின் மாணவர்களுமே இத்துறை நூல்களுக்கு ஆசிரியர்கள் ஆவார்கள்.

தமிழ் நாட்டில் சங்கரர் கொள்கைக்கு முறையாகப் பெரிதும் பயின்று வரும் தமிழ் நூல்கள் வருமாறு : (1) நாஞ சீவவாதக் கட்டளை (காளத்தி-சேஷாத்திரி சிவனார்) (2) கீதா சாரத் தாலாட்டு (ஆமாத்தூர்-வேங்கடநாதர்) (3) சசிவந்ந போதம் (இது மோகவதைப் பரணியின் ஒரு பகுதி) (4) மகா ராஜா துறவு (திருமுதுகுன்றம்-குமார தேவர்) (5) வைராக்கிய சதகம் (6) வைராக்கிய தீபம் (5, 6 பேரூர்ச் சாந்தலிங்க அடிகள்) (7) இலட்சணாவிருத்தி (பிரம்ஹ நாமாவலி, இது சங்கரர் வடமொழியில் அருளியதைக் காரைக்குடியை அடுத்த கோயிலூர் மடம்-சிதம்பர ஞானதேசிக சுவாமிகள் மொழி பெயர்த்தது) (8) வேதாந்த சூடாமணி (இது கன்னட மொழியில் நிஜகுண யோகீசுவரர் அருளிய விவேக சிந்தாமணியின் வேதாந்த பரிச்சேதத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு – துறைமங்கலம் சிவப்பிரகாசர்) (9) கைவல்ய நவநீதம் (நன்னிலம்-தாண்டவராய சுவாமிகள்) (10) விவேக சூடாமணி (உலகநாத சுவாமிகள்) (11) அஞ்ஞைவதைப் பரணி (12) பஞ்சதசி (நித்தியானந்தர்) (13) ஈசுவர கீதை (14) பகவத் கீதை (சேமநகர் – பட்டர்) (15) பிரம கீதை. நூல்கள் (3, 11, 13, 15-ன் ஆசிரியர் சிதம்பரத்தை அடுத்த எறும்பூர்-தத்துவராய சுவாமிகள்) (16) ஞானவாசிட்டம் (ஆளவந்தார்).

இவற்றில் 7, 8, 10, 12 முதல் 16ஆம் நூல்கள் மொழி பெயர்ப்பு நூல்கள். இவைகளே தமிழ்நாட்டில் சங்கரரின் அத்வைதம் படிப்பதற்கு ஆளப்பட்டு வருபவை. இந்நூல்களைப் படிப்பதற்குமுன் ஒன்பது நூல்கள் அடங்கிய **"வேதாந்தக் கட்டளைகள்"** என்ற சிறு தொகுப்புநூல் பயிலப்பட்டு வருகிறது. அவை (1) நாஞசீவவாதக் கட்டளை (2) ஞானக் கட்டளை (3) தத்துவாமிர்தக் கட்டளை (4) வேதாந்த தத்துவக் கட்டளை (5) வேதாந்த தச அவத்தைக் கட்டளைச் சுருக்கம் (6) வேதாந்த தச காரியக் கட்டளை (7) உபதேச சித்தாந்தக் கட்டளை (8) உபதேச உண்மைக் கட்டளை (9) பிரமோபதேசக் கட்டளை என்பன. இவை சைவ சித்தாந்தக் கட்டளைகளுக்கு வேறானவை. இவற்றை 1914-ல் ரிப்பன் அச்சகத்தார் வெளியிட்ட **கட்டளைக் கொத்தில்** காணலாம். இந்நூல்களின் ஆசிரியர்களில் குமாரதேவரும் துறைமங்கலம் சிவப்பிரகாசரும்

வீரசைவ மரபினர்ஆவர். அத்வைதக் கொள்கையினர் பலர், பின்னர் வீரசைவராக மாறினர் என்பதற்கு, மதுரைத் தமிழ்ச் சங்கப் **பெருந்திரட்டு** ஏட்டில் குறிப்பு இருக்கிறது.

உடையவர் வகுத்த விசிஷ்டாத்வைதக் கொள்கைக்கு மறைவாகக் கேட்டு உணரத்தக்க 18 வைணவ மணிப்பிரவாள உரைநடை நூல்கள் உள்ளன. இவற்றின் ஆசிரியர் **பிள்ளை லோகாசாரியார்.** அவை **'அஷ்டா தச ரகஸ்யங்கள்'** என வழங்கும். அவை வருமாறு :

(1) **முமுக்ஷுப்படி :** திருமந்திரம், துவயம், சரம சுலோகம் ஆகிய மந்திரங்களின் விளக்கவுரை.

(2) **தத்வத் திரயம் :** தத்துவங்களான சித்து, அசித்து, ஈசுவரன் பற்றி வைணவ மரபுப்படி கூறுவது.

(3) **அர்த்த பஞ்சகம் :** (1) இறைவன் இயல்பு (2) உயிர் இயல்பு (3) உயிர் இறைவனை அடையாமல் தடுத்து நிற்கும் வினை இயல்பு (4) அத் தடையைப் போக்கி இறைவனை அடைவதற்கு உரிய உபாயத்தின் இயல்பு (5) இறைவனை அடைந்த பெரும் பயன் என்ற 5 கருத்துகளை, வீடுபேற்றை விரும்புவோர் அறியவேண்டி விளக்குவது.

(4) **ஸ்ரீ வசன பூஷணம் :** வேதம், ஆழ்வார் அருளிச் செயல்கள், பூர்வ ஆசாரியர் ஒழுக்கங்கள் இவற்றிலிருந்து அறிதற்கு உரிய நுண் பொருள்களைத் தொகுத்து உரைக்கின்ற சிறந்த நூல்.

(5) **அர்ச்சிராதி :** மேல் உலகை அடையும்போது வைணவர்கள் செல்லும் வழி, ஆங்காங்கு எய்தும் சிறப்புகள் ஆகியவற்றைக் கூறுவது.

(6) **பிரமேய சாகரம் :** இறைவன் அருள் தொடங்கி வீடு பேறு முடிவாக, உய்தற்கு உரிய மக்கள் அடையும் நிலைமைகளைக் கூறுவது.

(7) **பிரபந்ந பரித்ராணம் :** வீடு பேற்றிற்கு, தன் முயற்சியை விட்டு இறைவனையே தஞ்சமாக அடைந்த ஒருவனுக்கு, இறைவனைத் தவிரப் பிறர் எவரும் காப்பாளர் ஆகார் என்பதை விளக்குவது.

(8) **சார சங்கிரகம் :** திருவாய்மொழியின் 10 பகுதிகளுக்கு துவய மந்திரத்தின் 10 பொருள்களை அமைத்துக் கூறுவது.

(9) **சம்சார சாம்ராஜ்யம் :** உடம்பை இராஜ்யமாகவும், அறியாமை முதலிய தீக்குணங்களை அங்கங்களாகவும், உயிரை அரசனாகவும் உருவகப்படுத்திக் கூறி, பின்னர் உயிர் நல்வழி அடையும் வழியைச் சொல்வது.

(10) **நவரத்ன மாலை :** இறைவன், அடியார், உலக மக்கள், பிறர் இவர்களை எவ்வாறு கருத வேண்டும் என்பது பற்றி 9 கருத்துகளைக் கூறுவது.

(11) **நவவித சம்பந்தம் :** கடவுளுக்கும் உயிர்க்கும் உள்ள 9 வகையான தொடர்புகளை 8 எழுத்து மந்திரம் காட்டிக் கூறுவது.

(12) **யாத்ருச்சிகப் படி** (13) **பரந்த படி** (14) **ஸ்ரீய : பதிப் படி :** இம் மூன்றும் மேற்காட்டிய மூன்று மந்திரங்களைப் பற்றி கூறுவது.

(15) **தத்வ சேகரம் :** வேதம் முதல் பல நூல்களில், திருமாலே முழுமுதற் கடவுள் என்பதற்கு மேற்கோள் காட்டி நிறுவுவது.

(16) **தனித் துவயம் :** (17) **தனிச் சரமம் :** (18) **தனிப் பிரணவம் :** இவை முறையே துவய மந்திரம், சரம சுலோகம், பிரணவம் இவற்றின் விரிவுரை.

1, 2, 4ஆம் நூல்களுக்கு மணவாள மாமுனிகளின் விரிவுரை உண்டு.

இந்த 18 நூல்களும் தென்கலை வைணவர்களால் பயிலப்பட்டு வருவது. வடமொழிக்குச் சிறப்பிடம் கொடுத்துத் தமிழைத் தழுவிக்கொள்ளும் வடகலையினர் வேதாந்த தேசிகர் பிரபந்தத்தை ஒட்டிப் பயின்று வருவது வழக்கமாக இருந்து வருகிறது. (இதன் விரிவு, ஸ்ரீதேசிகப் பிரபந்த உரை. பதிப்பு 1958 பார்க்க)

சைவ சித்தாந்தத்தை வளர்த்த சுத்த சைவ ஆதீனங்கள் 18 என்பர். அவை (1) திரு ஆவடுதுறை (நமச்சிவாய தேசிகர்) (2) காஞ்சிபுரம் (ஞானப்பிரகாசர்) (3) தருமபுரம் (குருஞான சம்பந்தர்) (4) சூரியனார் கோயில் (சிவாக்கிர யோகிகள்) (5) சிதம்பரம் (ஆகமச்சிவப்பிரகாசர்) (6) பெருங்குளம் (திருநெல்

வேலி மாவட்டம் - செங்கோல் மடம்) (7) மதுரை (ஞான சம்பந்தர்) (8) திருஅண்ணுமலை (குன்றக்குடி) (9) இராமேச்சுரம் (10) நீலப்பாடி (தஞ்சாவூர் வட்டம்) (11) அன்னப்பன் பேட்டை (தாயுமான சுவாமிகள்) (12) திருச்சி (சாரமாமுனி) (13) சொர்க்கபுரம் (அம்பர் மாகாளம்) (14) வேளாக்குறிச்சி (திருஆரூர் வட்டம் - திருப்புகலூர்) (15) சீகாழி (வள்ளலார்) (16) வேதாரண்யம் (வருணை) (17) நாச்சியார் கோயில் (குடந்தை வட்டம்) (18) துழாவூர் (காரைக்குடி வட்டம்-நிரம்ப அழகிய தேசிகர்).

சைவ சித்தாந்தக் கொள்கைகள், கோயில் பூசை, தனிப் பட்டோர் தம்பொருட்டுச் செய்யும் பூசை இவைகளில் இணைத்துத் தத்துவக் கொள்கையை விளக்கிக் காட்டுகின்றன. சங்கரர், இராமானுசர், மத்வர் கொள்கைகளுக்கு உபநிடதங் கள், பகவத்கீதை, பிரம சூத்திரம் (பிரஸ்தானத் திரயம்) மூன்றும் அடிப்படை நூல்கள். ஆனுல் சைவ சித்தாந்தத்திற்கு அவை அடிப்படை நூல்கள் அல்ல. ஆயினும் அவைகளின் முரண்படாத உபநிடதப் பகுதிகள் இதற்குத் தழுவலாக அமைந்துள்ளன. சைவ சித்தாந்த நெறியின் பூசை முறைகளை விளக்கவந்த பத்ததி (ஒழுங்கு முறை) செய்தவர்கள் 18 பேர் ஆவர். அவர் வருமாறு : (1) தூர்வாசம் (2) பைங்களம் (3) உக்ரஜோதி (4) சுபேதம் (5) ஸ்ரீ கண்டம் (6) விஷ்ணு கண்டம் (7) வித்யா கண்டம் (8) ராம கண்டம் (9) ஞான சிவம் (10) ஞானசங்கரம் (11) **சோம சம்பு** (12) பிரம்ம சம்பு (13) திரிலோசன சிவம் (14) **அகோர சிவம்** (15) பிராசாத சிவம் (16) இராமநாத சிவம் (17) ஈசான சிவம் (18) வருண சிவம். இவற்றுள் 11, 14 ல் சொல்லப்பட்டோரின் நூல்கள் வெளிவந்துள்ளன.

இக்கொள்கைக்குப் பயிலப்பட்டு வரும் நூல்கள் மெய் கண்ட சாத்திரம் என்னும் சைவ சித்தாந்த சாத்திரங்கள் 14 ஆகும். இந்நூல்களைப் பல மடங்கள் பல வகையாகப் பாதுகாத்துப் பரப்பி வளர்த்து வந்தன. இந்த நூல்களைத் தவிர ஞானமிர்தம், துகளறு போதம், தத்துவ விளக்கம், தத்துவ ரத்னுகரம், தத்துவப் பிரகாசிகை, பண்டார சாத்திரம், ஞான சாரம், ஞான சாகரம், சதமணிக் கோவை முதலிய நூல்கள் தமிழில் உள்ளன.வடமொழியில் அஷ்ட ப்ரகரணம் (8 நூல்கள் கொண்ட தொகுப்பு) உள்ளது. அகோர சிவாசாரியார் பத்ததி, சோமசம்பு சிவாசாரியார் பத்ததி, நீலகண்ட சிவாசாரியார்

பாடியம், திரிலோசன சிவாசாரியார், அரதத்த சிவாசாரியார் நூல்கள் முதலியன வடமொழியில் உள்ளன. தமிழ்நாட்டில் தமிழ்நூல்களே வடமொழி நூல்களைவிடப் பெரிதும் பயிலப் பட்டு நடை முறையில் உள்ளன. சைவ சித்தாந்தக் கொள்கை இன்று மரபை ஒட்டிய விளக்கம் கேட்க முடியாமல் மறைந்து வருகிறது. இதனைப் போற்றிக் காலத்திற்கு ஏற்றவாறு விளங்க வைத்தல் நமக்கு இன்றியமையாத கடமையாகும்.

நிற்க, இந்த மெய்கண்ட சாத்திர நூல்களைப் பாடம் சொல்லி வந்த படிமுறைகளும், அதற்கு உரிய நூல்களும் பலவாம். திருஆவடுதுறையில் சைவ சித்தாந்தம் கற்கப் புகு வார் முதலில் அறிவதற்கு, வடமொழி நூலாகிய சர்வஆத்ம சம்பு சிவாசாரியாரின் 'சித்தாந்தப் பிரகாசிகை' யினுடைய சிவஞான முனிவரின் மொழிபெயர்ப்பு நூலே முதலில் கற்பிக்கப்படுவது வழக்கம். இதனை அடுத்துத் திருஅருட் பயன், சிவப்பிரகாசம், சிவஞான சித்தியார், சிவஞான போதம் என்று படிப் படியாகப் பயிலப்பட்டு வந்தது.

சித்தாந்த நூல்களைப் படிக்க நுழையும் இளைஞர்கட்குப் பெருந்துணையாய் இருப்பன சைவ சித்தாந்தக் கட்டளைகளாம். அவை ஆலவாய்க் கட்டளை, சித்தாந்த தத்துவ இலக்கணம், சிவப்பிரகாசக் கட்டளை, சித்தாந்த தசகாரியக் கட்டளை, சித்தாந்த சாதனக் கட்டளை, சித்தாந்தக்கட்டளை ஞானமிர்தக் கட்டளை, துகளறு போதக் கட்டளை, சுத்த, சிவப்பிரகாசக் கட்டளை திரிபதார்த்த சிந்தனை, மெய்கண்ட சாத்திரக் கட்டளை (சித்தாந்தம், மலர் – 15 ; பக் –337). தத்துவ அனுபோகக் கட்டளை (மலர் – 11 ; பக்–20). போன்ற கட்டளை நூல்களும், சைவ சித்தாந்தம், சைவ சித்தாந்தசாரம் போன்ற சிறு சாத்திர நூல்களும் உண்டு. செய்யுளில் உள்ள சிறு சாத்திர நூல்களை, பாதுகாக்கப்படாவிடின் இறந்து படும் என்பது துணிபு. இக்கட்டளை நூல்களில் சில முதல் நூல்களைக் கற்பதற்குப் படிமுறையாக அமைந்துள்ளன. ஞானமிர்தம் கற்பதற்கு ஞானமிர்தக் கட்டளையும், துகளறு போதம் கற்பதற்குத் துகளறுபோதக் கட்டளையும் அமைந்திருப்பதை சிந்திக்கவும்.

திருத்தணிகை கந்தப்ப அய்யர் இயற்றிய

# திருத்தணிகைச் சந்நிதிமுறை

சிவஞான போத மாபாடிய சிவஞான முனிவரின் மாணவர்கள் 12-ல் முதல் மாணவர், 'திருத்தணிகை புராணம்' பாடிய கச்சிப்ப முனிவர். இவரது மாணவரே கந்தப்ப அய்யர். இந்நூல் 18ஆம் நூற்றுண்டில் திருத்தணிகை முருகப்பெருமான் மேல் பாடிய 12 தோத்திர நூல்களின் தொகுதி ஆகும். இதில் ஐங்கரமாலே தயாநிதிமாலே, வேலாயுதசதகம் என்பன விநாயகரை, முருகனே, போற்றும் உள்ளம் உருக்கும் பக்திப் பாடல்கள் கொண்டவை. மயில், சேவல், வேல், சீர்பாதம், தணிகை விருத்தங்கள் பதிகமாய் அமைந்தவை. பிள்ளேத் தமிழ், அந்தாதி, உலா, கலம்பகம் ஆகியவை தனி நூல்களாகும். உலாவில் தமிழ் வரலாற்றையும் பிள்ளேத்தமிழ், கலம்பகம் முதலியவற்றில் இலக்கிய நயங்களேயும் காணலாம்.

1880, 1904-ஆம் ஆண்டுகளில் வெளிவந்த அச்சிட்ட நூல்களே அடியொற்றி, பாடல்களே எளிதில் பொருள் உணர்ந்து படிக்குமாறு அமைத்திருப்பது இப்பதிப்பின் தனிச் சிறப்பாகும். பாட்டுகள் சந்திகள் பிரிக்கப்பட்டு பொருளின் போக்கிற்குப் பொருத்தமான குறியீடுகள் இடப்பெற்றுள்ளன. இதனல் இலக்கணம் அறியாதவர்களும் பாடல்களேத் தட்டுத் தடையின்றித் தெளிவாகப் படிக்கமுடியும்.

திருத்தணிகையின் வரலாறு, இலக்கியங்கள், கோயில் விழாக்கள், நூலாசிரியர் வரலாறு, திருத்தணி மலேக்கோயில், ஊரின் வடகிழக்கில் ஓடும் நந்தி ஆற்றின் வடகரையில் உள்ள வீரட்டானர் கோயில், தென்கரையில் உள்ள ஆறுமுகசாமி கோயில், விஜயராகவப் பெருமாள் கோயில் ஆக நான்கிலும் உள்ள கல்வெட்டுகள், அண்மையில் கிடைத்த வேலஞ்சேரி செப்பேடுகள் ஆகியவற்றின் விவரங்களும் படங்களும் இதில் உள்ளன. திருத்தணிகையை வழிபடுபவர்களுக்குச் சிறந்த தரமான ஒரு வழிகாட்டியாக இது விளங்கும். உயர்ந்த தாளில் [illegible]மான அச்சு. கோர்வைக் கட்டு. விலே ரூ. 20

---

கா [illegible] பிள்ளேயின் தமிழ் இலக்கிய வரலாறு, பண்டிதமணியின் தி[illegible] பாசகத் திருச்சதகம்-கதிர்மணி விளக்கம், மு.வ.வின் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், வையாபுரிபிள்ளேயின் சமாஜ வெளியீடுகளான சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி, பண்டித வித்வான்-புருஷோத்தம நாயுடுவின் ஸ்ரீ வசன பூஷண மணவாள் மாமுனிகள் வியாக்கியான தமிழாக்கம், சிதம்பரம் ந. சிவப்[illegible]காச தேசிகரது ஸ்ரீமிருத்யுஞ்சய ஆயுள் ஓம சாந்தி பத்[illegible] பாரதிதாசன் கவிதைகள் இவைகளின் முதற் பதிப்புக[illegible] நா. வின் உதவியால் வெளிவந்தவை.